# வரவு செலவுத் திட்ட உரை - 2016

## அறிமுகம்

1. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 20 ஆவது நிதி அமைச்சர் என்ற வகையில் 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தினை முன் வைப்பதற்குக் கிடைத்தமையானது எனக்குக் கிடைத்த கௌரவம் மாத்திரமல்லாமல் பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றேன். அதி மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும், கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினதும் தனித்துவமான தலைமைத்துவமும் மற்றும் வழிகாட்டலும், அனைத்துத் துறைகளிலும் வெற்றியினைக் காணக்கூடிய வரவு செலவுத்திட்டமொன்றை முன் வைப்பதற்கு வழி வகுத்துள்ளது. நான் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருமித்த ஒற்றுமையான தேசிய அரசாங்கத்தில் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னருள்ள காலப்பகுதியில் அமைதியான சூழ்நிலையில் இடம் பெற்ற தேர்தலின் ஒத்துழைப்புடனே ஒருமித்த ஒற்றுமையான தேசிய அரசாங்கமொன்றிற்கு வழிவகுத்தமையினால், 2016 ஆம் ஆண்டிற்கான இவ்வரவு செலவுத்திட்டமானது, இலங்கை வரலாற்றில் மிகவும் விஷேடமான ஒரு அறிக்கையாக விளங்குகின்றது. மேலும், 2016 ஆம் ஆண்டிற்கானஇவ்வரவு செலவுத்திட்டமானது,சகல இலங்கையருக்கும் புதிய பொருளாதார, மற்றும் சமூக ஒழுங்குகளை உருவாக்கக்கூடியது.

2. “நூறு நாட்களின் புரட்சி” என அறிமுகப்படுத்தப்பட்ட 2015 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி முன் வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டப் பிரேரணைகள், சிரமங்களுக்கும், இடையூறுகளுக்கும் முகங்கொடுத்த பெரும்பாலான இலங்கை மக்களின் பொருளாதாரச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. என்னால் முன்னர் முன் வைக்கப்பட்ட அவ்விடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கிய சலுகைகள் மற்றும் நன்மைகள் தொடர்பாக நான் விளக்கமளிப்பதற்கு விரும்பாததோடு, எதிர்வரும் ஆண்டிற்கு விவேகமுள்ளதும், ஒத்திசைவானதுமான பொருளாதாரக் கொள்கைகளை உபயோகிப்பதன் மூலம் நாட்டு மக்களின் நன்மை கருதி மேலும் சலுகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

3. கௌரவ சபாநாயகர் அவர்களே,கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்களை இலங்கையின் சனாதிபதியாக்குவதற்காக சகலரும் ஒன்றிணைந்து அவர்களது சனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் தமது உறுதியான தீர்மானத்தினை வழங்கிய இலங்கை மக்களுக்கு நான் தலை வணங்க வேண்டியது அவசியமாக உள்ளதோடு, கடந்த ஆட்சிக் காலத்தில், துன்பங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு நலன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பதிலாக பொருளாதார சொல்லாட்சிகளின் தொடர்ச்சியான அலைகளின் மூலமே எமது காதுகள் நிரப்பப்பட்டமையினை எம்மால் நினைவு கூரக் கூடியதாக உள்ளது. கௌரவ சபாநாயகர் அவர்களே,எமது தேசத்தின் 2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கலாச்சார, தேசிய பாரம்பரிய உரிமைகளுக்கான திருப்புமுனையாக 2015 ஜனவரி 8 ஆம் திகதி இடம் பெற்ற தேர்தலைக் குறிப்பிடலாம். 2015 ஆகஸ்ட் மாதத்தில் இடம் பெற்ற மற்றுமொரு அவ்வாறான சனநாயக பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் மீண்டும் அவ்வரத்தினை ஒப்புவிப்பதன் மூலம் இலங்கை மக்களின் ஒத்துழைப்பினை மையமாகக் கொண்ட தேசிய அரசாங்கமொன்றினை உருவாக்குவதற்கான வாய்ப்பொன்றினை வழங்கியுள்ளனர். கௌரவ

ரனில் விக்கரமசிங்க அவர்களின் கருத்தொருமித்த அரசியல், மாற்றமடையாத கொள்கை ஒன்றிற்கான அர்ப்பணிப்பு ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்ட அர்ப்பணிக்கப்பட்ட தலைமத்துவத்தின் இயக்கவியல் மூலம் இலங்கை மக்களுக்கு தொடர்ச்சியான சனநாயக வெற்றிகளை அடைவதற்கு வழிவகுத்தது.

4. கடந்த பத்துமாத கால குறுகிய காலப்பகுதியில், இலங்கையின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகக் குறிப்பிட முடியும். மிக மோசமான "போலி முதலாளித்துவத்தின் கேந்திரங்கள்" மீண்டும் உருவாக்கப்படாதவாறு உடைத்தெறியப்பட்டுள்ளதோடு, பயங்கரமான "வெள்ளை வான் முறைமையும்" அழித்தொழிக்கப்பட்டுள்ளதோடு, அருவருப்பான குடும்ப வாதம் அடியோடு எடுத்தெறியப்பட்டது. இன்று, இலங்கையின் சராசரி மக்கள் கவர்ச்சிகரமான பொருளாதார நன்மைகளிலிருந்து பயன்களை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பது மாத்திரமல்லாமல் கடந்த ஆட்சிக் காலத்தில் கனவொன்றாகக் காணப்பட்ட சனநாயக சுதந்திரத்தினையும் அனுபவிப்பதனை இப்பாராளுமன்றத்தில் அமர்ந்துள்ள சகலருக்கும் தெரிந்த உண்மையாகும். அரச நிர்வாக நோக்கில், கடந்த பத்து மாத காலப் பகுதியானது கடப்பதற்கு மிகவும் கடினமான ஒரு கால கட்டமாக விளங்கியது. நெருக்கடிக்குள்ளாக்கப்பட்ட பொருளாதாரம், அதிக அளிவலான பாரபட்சங்கள் மற்றும் நாட்டின் சிறுபான்மை அதிகாரத்தைக் கொண்ட அரசியல் ஆட்சியொன்றிற்குள் நாம் பெற்றுக் கொண்ட குறிப்பிடத்தக்க வெற்றியும், மற்றும் குறிப்பிடத்தக்க மைல்கற்களும் புதிய இலங்கையொன்றினை உருவாக்குவதற்கு வழிதந்துள்ளது.

5. எக்டன் பிரபு அவர்களின் பிரபல்யம் வாய்ந்ததும், கவர்ச்சிகரமானதுமான வசனங்களான "அதிகாரம்ஊழல் நிறைந்ததாகும். முழுமையானஅதிகாரம்ஊழலை முற்றுமுழுதாக்கி விடுகின்றது" என்பதை பிரதிபலிக்கும் ஒரு ஆட்சியின் துஷ்பிரயோகங்கள் வாழைப்பழ குடியரசை இலங்கையில் உருவாக்கியிருந்ததுடன் அவ்வாட்சிக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் இலங்கைபல நட்பு நாடுகளினால் ஒதுக்கப்படும் ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டது. இக்காலப்பகுதியில், ஒரு தேசத்தவர் என்ற ரீதியில் நாம் எமது கௌரவத்தினை இழந்துள்ளதோடு, பல்வேறு நாடுகளால் வழங்கப்பட்ட ஜீஎஸ்பீ (GSP+) வசதியளிப்பின் கீழான சலுகைகள் முடிவுறுத்தப்பட்டமை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன்களின் இறக்குமதிகள் தடை செய்யப்படல் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கும் முகங் கொடுக்க நேரிட்டது. கடந்த சில மாத காலங்களாக நாம் விஜயம் செய்த நாடுகளில் எமக்குக் கிடைத்த வரவேற்பானது மிகவும் சாதகமாக அமைந்ததோடு, அவை எம்மால் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட சிறந்த சனநாயக பின்னணியின் காரணமாகவே கிடைக்கப் பெற்றன.

6. 2015 ஜனவரி மாதத்தில் பெற்றுக் கொண்டது என்னவென்றால், ஒரு நெருக்கடிக்கு அண்மிய மரபுரிமையாகும். இந்நெருக்கடியானது, பொருளாதாரமொன்றுக்கு மாத்திரமல்லாமல் வெளிநாட்டு அலுவல்கள், நலன்புரி விடயங்கள், நல்லாட்சி, சட்டமும் ஆணையும் தொடர்பான கொள்கைப் பிரச்சினைகளையும் நோக்கி விரிவாக்கப்பட்டதோடு, இந்நிலைமையானது தொடர்ந்து காணப்படுமாயின் அந்நிலைமையானது நாட்டு மக்களுக்கும், எதிர்காலப் பரம்பரைக்கும், பாதகமான விளைவுகளைக் கொண்டு வந்திருக்கக் கூடும். நாம் மிகுந்த திறமையுடன் நெருக்கடியான நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளதோடு, இனி மேலும், அவ்வாறான

சவால்களுக்கு தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் முகங்கொடுக்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும். கௌரவ சபாநாயகர் அவர்களே, “நூறு நாட்களின் புரட்சியானது” எமது நடைபாதையில் எதிர்மறையான நிலைமைகளை சாதகமான நிலைமைக்கு மாற்றுவதும் நெருக்கடியான நிலைமையை நிவர்த்தி செய்யும் முறைமையையும் சித்தரிக்கின்றது.

7. கடந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் அடிப்படையில் தோல்வியடைந்ததாகவே காணப்பட்டது. தாங்கிக் கொள்ள முடியாத கடன் சுமையொன்றை இப்பொருளாதாரம் கொண்டிருந்திருந்தது. அரசிறை வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 1990 ஆம் ஆண்டின் அரசிறை வருமானத்துடன் ஒப்பிடுகையில், அரைப்பங்கை விட வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும்,உற்பத்தித் திறனற்ற முதலீடுகள் அரசாங்க நிதிக் கட்டமைப்பினை பலவீனப்படுத்தியுள்ளதுடன், வினைத் திறனற்ற அரசுடைமை தொழில்முயற்சிகளுடனும், மற்றும் ஊழல் நிறைந்த பெறுகைச் செயன்முறைகள், முறையற்ற வெளிநாட்டுக் கடன் பெறுகைகள், ஒப்பந்தங்களின் வழங்கல்கள் போன்றன நல்லாட்சிக்கும், வெளிப்படைத் தன்மைக்கும் கேலிக் கூத்தாக அமைந்துள்ளது. ஒரு நாட்டின் பொருளாதாரம் தவறாக வழிநடாத்தப்படும் போதும், தவறான முறையில் கையாளப்படும் போதும், அந்நாட்டின் எதிர்காலம் அபாயகரமான ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்க நேரிடுவதோடு, கடந்த ஆட்சிக் காலத்தின் போதான பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக இலங்கையும் அவ்வாறான பயங்கரமான வலயமொன்றுக்குள் பிரவேசித்திருந்தது.

8. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறைபாடுகளைக் கொண்டு காணப்பட்டதோடு, நாம் கடும் பொருளாதாரத் தடைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமைக்கும் உள்ளாக வேண்டியிருந்ததுடன் முன்னர் எமக்கு ஆதரவளித்த நாடுகள் கூட வரையறுக்கப்பட்ட உதவிகளை வழங்கவே முனைந்தமையினால், நாம் எமது பொருளாதாரச் செயற்பாடுகளைத் தனியாகவே மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அரசாங்க கொள்கையானது வீண்விரயம் மற்றும் ஊழல் என்பன முன்பு அறிந்திருக்கப்படாத மட்டங்களை எட்டக்கூடியவாற அபாயகரமான விளைவுகளை தருவனவாக இருந்ததுடன் எதிர்மறையான செயன்முறைகள் பெரும்பாலும் சட்டத்துக்கு முரணான பின்னணியொன்றில் நடைமுறைப்படுத்தப்பட்டன. வறுமையை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அரசியல் ரீதியாக ஊக்குவிக்கப்பட்டதோடு, அந்நன்மைகள் வறுமையினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களைச் சென்றடையவில்லை. நாட்டின் சட்டமும், சமாதானமும் கோத்திர யுகமொன்றிற்கு மாற்றப்பட்டு வந்ததோடு, இந்நாடு படிப்படியாக நிலப்பிரபுத்துவ முறைமைக்கும் மாற்றமடைந்து வந்தது. இராஜபக்ஷ நிர்வாகமானது இலங்கையில் நிலவிய நெருக்கடி மற்றும் பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்கு அர்ப்பணித்திருந்தது. அவர்கள் படையினரின் உதவியுடன் தாய்நாட்டினை பயங்கரவாத பயத்திலிருந்து விடுவிப்பதில் வெற்றி பெற்றிருந்தமைக்காக அவர்களை நாம் பாராட்டியாக வேண்டும். எவ்வாறாயினும் இத்தகைய நிலைமைகளை முற்றுமுழுதாக மாற்றியமைத்த காரணியையும் நாம் மறந்து விடக்கூடாது. 2001 இன் இறுதிப் பகுதியானது இலங்கைக்கு எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி, யுத்தச் சூழல், மற்றும் பொருளாதார கேந்திரஸ்தானங்கள் மீதான தாக்குதல்கள் காரணமாக மிக நெருக்கடியான ஒரு கால கட்டமாகவே விளங்கியது. ஆட்சிக்கு வந்த பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உள்ளடக்கிய அரசாங்கத்தினது இயைபான கொள்கைகள் காரணமாக மேற்படி பொருளாதார சரிவு தடுத்து நிறுத்தப்பட்டதுடன்பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது

மாத்திரமல்லாமல் முப்படையினரினதும், மற்றும் பொலீஸாரினதும் யுத்த நடவடிக்கைகளுக்கு அவசியமான யுத்த உபகரணங்கள், ஆயுதங்கள் மற்றும் பல்வேறு வகையான ரவைகளின் தேவைகளும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தமையானது, அவர்களது தைரியத்திற்கு மறுமலர்ச்சியளிப்பதாக இருந்தது. நாம் "எதிர்ப்பினை எதிர்ப்பின் மூலம் ஒழிக்க முடியாது, மாறாக கருணையின் மூலமே ஒழிக்க முடியும்" எனும் கௌரவ ஜே.ஆர் ஜயவர்தன அவர்கள் சென் பிரான்சிஸ்கோ நகரத்தில் மேற்கோள் காட்டிய தம்ம பதத்திலிருந்தான வசனங்களை நினைவு கூறல் வேண்டும். இவ்வார்த்தைகள் எமக்கு எக்காலத்திற்கும் பொருத்தமானதாகவே உள்ளது. பயங்கரவாதத்தினை ஒழித்தாலும் கூட, இலங்கையின் சகல மக்களினதும் இதயங்களையும் உள்ளங்களையும் அவர்களால் வெற்றி கொள்ள முடியாமல் போயிற்று. எமது அரசின் நோக்கம் எமது காலஞ்சென்ற தலைவர் கூறியது போல கருணையை அடிப்படையாகக் கொண்டு நிபந்தனைகள் அற்றவாறு சகல மக்களினதும் உள்ளங்களை வெற்றிப் பெறுவதாகும்.

9. நாம் சனநாயகத்தை மாத்திரம் நிலைப்பெற செய்யாது, பயம் மற்றும் அநீதி அற்ற சுதந்திரத்தின் புதிய பரிமாணமொன்றையும் கொண்டு வந்துள்ளோம். கொள்கைகளையும் மறுசீரமைத்துள்ளோம். அரசியல் அமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட பிரதான ஏற்பாடுகள் 19 ஆவது திருத்தத்தின் மூலம் மீளக் கொண்டு வரப்பட்டது. அதன் பிரகாரம், அரசியலமைப்புச் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதோடு, சுயாதீன ஆணைக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் சகல சமூகங்களும் உணரக் கூடிய வகையில் "நல்லாட்சி" இன் நன்மைகளை பொதுமக்களுக்குக் கிடைக்கப் பெறச்செய்வதே எமது குறிக்கோளும், எதிர்பார்க்கையுமாக உள்ளதோடு, அதனை அவ்வாறே நிறைவேற்றுவதற்கும் உறுதி பூண்டுள்ளோம்.

10. மேலும் வானவில் போன்று பிரகாசிக்கக் கூடிய பொருளாதாரச் செழிப்புள்ள அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக எமது நாட்டை மாற்றியமைப்பதே எமது கனவாகும். எமது தேசம் சாதகமானதும், மிக உயர்வானதுமான மகிழ்ச்சிச் சுட்டெண்ணைக் கொண்டிருத்தல் வேண்டும். எமது தேசம் நற்குணத்தையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் செழிப்பான ஒரு நாடாக மிளிர வேண்டும். எமது எதிர் காலச் சந்ததியினர் அர்ப்பணிப்புக்களின் விளைவுகளை அனுபவிக்கக் கூடிய வகையில், நாம் பொருளாதாரச் சுதந்திரமொன்றினை ஏற்படுத்திக் கொடுப்பது எமது பொறுப்பாகும். மேல் நடுத்தர வருமானப் பொருளாதாரமொன்றினை நோக்கி மாற்றமடைவதற்கான குறிக்கோள்களுடன் குறுகிய, நடுத்தர, மற்றும் நீண்ட கால உபாயங்களை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட அபிவிருத்திச் சவால்களை கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடைவதே எமது எதிர்பார்ப்பாகும். நாம் ஒரு சில கோடீஸ்வரர்களுக்கு மாத்திரம் தளத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதனை நோக்கமாகக் கொள்ளவில்லை. மில்லியன் கோடீஸ்வரர்களை உருவாக்குவதற்கான வழியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

11. இந்நிலைமையின் கீழ், கௌரவ பிரதம அமைச்சரினால் 2015 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி இச்சபையில் முன்வைக்கப்பட்ட கொள்கைக் கூற்று 2016 ஆம் அண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கு அடித்தளமாக அமைந்தது. அதன் மூலம் பின்வரும் இடைக்கால உபாயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

அ) ஒரு மில்லியன் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.

ஆ) வருமான மட்டங்களை விருத்தி செய்தல்.

இ) கிராமியப் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல்.

ஈ) கிராமிய மற்றும் தோட்டத் துறைகளிலும், நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களினதும் மற்றும் அரசாங்க ஊழியர்களினதும் ஆதன உரிமையை உறுதிப்படுத்தல்.

உ) பரந்த மற்றும் உறுதி வாய்ந்த நடுத்தர வகுப்பினரை உருவாக்குதல்.

12. கௌரவ சபாநாயகர் அவர்களே, இக்கொள்கைக் கூற்றானது குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குவதோடு, இவ்வரவு செலவுத்திட்டத்துக்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளது. இலங்கையின் பொருளாதாரத்திற்கு நீண்ட கால சாதகமான பெறுபேறுகளைக் கொண்டு வரக் கூடிய தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விரிவான கொள்கைகளையும் உள்ளடக்கியுள்ளது. பொருளாதார மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான சரியான பொருளாதார அடித்தளமொன்றின் தேவையினை இதன் மூலம் தெளிவாகக் காட்டப்படுகின்றது. அவ்வாறான உறுதியான அடித்தளமொன்றின் ஊடாக மாத்திரமே குறிப்பிட்ட இலக்குகளையும், குறிக்கோள்களையும் அடையக் கூடியதாக உள்ளது. எனவே தான், வெற்றிகரமான முன்நோக்கிய பயணமொன்றினை இலக்காகக் கொண்ட பொருளாதார இலக்கொன்றுக்கு பிரதான வேறுபாடுகளை மேற்கொள்வதானது, இன்றியமையாததாகும் என்பது இப்பொருளாதாரக் கூற்றின் மூலம் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதாக உள்ளது.

13. எனவே, எமது அரசாங்கத்தின் கொள்கையானது, சந்தைகளில் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான தடைகளை நீக்குவதனை மையமாகக் கொண்டுள்ளது. கொள்கைக் கூற்றின் சீர்திருத்தங்கள் இக்கூற்றில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. முன்மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் தனியார் துறையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது மாத்திரமல்லாது முழுமையான பொருளாதாரச் செயன்முறையில் அவர்களின் பங்கையும் உறுதிப்படுத்துவதாகவும் காணப்படுகின்றது.

14. முன்மொழியப்பட்ட இக்கொள்கையானது சீர்திருத்தங்களின் ஊடாக விஷேடமாக பல ஆண்டுகளாக வழிகாட்டலின்றி ஒதுக்கப்பட்டிருந்த அரசுடமை தொழில்முயற்சிகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் போன்ற நடவடிக்கைகளின் மீது விஷேட கவனம் செலுத்தப்படுகிறது. இலங்கையின் வர்த்தகச் சமூகத்தின் மீது மோசமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த கடந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட மரபு முறைகளிலிருந்து வெளியே வருவதற்கும் இச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். பொருளாதார முகாமைத்துவத்தில் எதிர்வு கூற முடியாத ஒழுங்கற்ற பொருளாதாரக் கொள்கைகளும், ஒழுங்கற்ற நடைமுறைகளும் முன்னைய இராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதியில் காணக்கூடியதாக இருந்ததோடு, முன்மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்களும், ஒழுங்கான பொருளாதாரக் கொள்கைகளும் எமது அரசாங்கத்தினை அவ்வாறான எதிர்மறையான செயன்முறைகளிலிருந்து நகர்வதற்கு உதவின.

15. இவ்வாறான சீர்திருத்தங்களின் ஊடாக உள்நாட்டுப் போட்டித் தன்மை, சர்வதேச வர்த்தகம், முதலீடுகள், திறன்கள் மற்றும் எமது நாட்டு மக்களின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதன் மூலம் சர்வதேச பொருளாதாரத்தின் அபிவிருத்திகள் தொடர்பாக கவனம்

செலுத்தப்படும். மேலும், எமது அறிவை மையமாகக் கொண்ட சமூக சந்தைப் பொருளாதாரமானது சமூக நீதிக் கோட்பாடுகளின் மீது நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

16. பொருளாதாரத் துறையில் மாத்திரமன்றி அரசியல், சமூக, கல்வி, மற்றும் சுகாதாரம் போன்ற ஏனைய பல துறைகளையும், பலப்படுத்துவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றினை ஸ்தாபிப்பதுவும் எமது திட்டமாகும். எனவே தான் கௌரவ பிரதமர் அவர்களால் முன்வைக்கப்பட்ட கொள்கைக் கூற்றில் இவ்விடயங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

17. சுதந்திரத்திலிருந்து அமைந்திருந்த ஆட்சி அதிகாரங்களால் கடைபிடிக்கப்பட்ட பொருளாதார கொள்கைகளினை மீளாய்வு செய்வது ஆரோக்கியமானதாக அமையலாம். சமகால நிலைமைகளுக்கு வழிவகுத்த நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய அம்சங்களை புள்ளிவிபர அடிப்படையில் வெளிப்படுத்துவதே பொருத்தமானதாக இருக்கலாம்.

18. நாங்கள் எமது நாட்டின் பிரதான முயற்சியாண்மையான விவசாயத்தை மையமாக் கொண்டே தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். எமது பொருளாதாரம் காலம் காலமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. நாம் ஆசீர்வாதம் பெற்ற ஒரு தேசத்தினராக உள்ளோம். மேன்மைதங்கிய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் விவசாய துறை மீதான புதிய அணுகுமுறையானது இலங்கை உணவுப் பாதுகாப்படைவது மாத்திரமல்லாமல் விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதியை நாடியும் எடுத்துச் செல்கின்றது. அப்போது எமக்கு இலங்கையை வரலாற்றில் குறிப்பிட்டுள்ள படி "கிழக்கின் தானியக் களஞ்சியம்" என அழைக்கக் கூடியதாக இருக்கும். எமது அதிமேதகு சனாதிபதி அவர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பானது இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்தில் இலாபங்களை அனுபவிப்பதற்கு வழிவகுக்கும்.

## 2016 வரவு செலவுத் திட்டத்திற்கான பின்னணி

19. கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வரவு செலவுத்திட்டத்தினை முன் வைப்பதற்குஅடிப்படையாக அமைந்த பல விடயங்கள் மீது உங்கள் கவனத்தைஈர்க்க விரும்புகின்றேன். 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்று வரை முதலாளித்துவவாத, சோசலிச வாத நலன்புரி பொருளாதாரப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக நாம் மாறி மாறி பயணம் செய்திருக்கின்றோம்.

## சுதந்திரம் அடைந்ததிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை

20. 1948 ஆம் ஆண்டில் இலங்கை பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்டமையானது ஒரு மிருதுவான மாற்றமாக காணப்பட்டது என்பதை விளக்குவமாக இருந்தால் எமது பெரிய வரலாற்றுப் பேராசிரியர்களுள் ஒருவரான கே.எம். டீ. சில்வா அவர்கள் எமது நாட்டை "உறுதிப்பாடு, சமாதானம் மற்றும் அமைதிக்கான ஒரு பூஞ்சோலை" என்று வர்ணிக்குமளவுக்கு எமது நாடு அமைதியான ஒரு நாடாகக் காணப்பட்டது. ஆயினும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், சுதந்திரத்திற்காகப் போராடிய அவ்வாறான ஏனைய பல நாடுகளின் சுதந்திரத்திற்கான போராட்டமானது வன்முறை அழிவுகள் நிறைந்தவையாகவே அமைந்திருந்தன.

21. இலங்கையின் அரசியல் வரலாற்றில், தற்போதைய ஒன்றிணைந்த தேசிய அரசாங்கத்திற்கு முன்னர் இவ்வாறு உருவாக்கப்பட்ட ஒன்றிணைந்த ஒரே தேசிய அரசாங்கம் எமது தேசத்தின் தந்தை காலம்சென்ற கௌரவ டீ.எஸ். சேனாநாயக்கா அவர்களால் சிங்கள மகா சபா மற்றும் தமிழ் காங்கிரஸின் ஆதரவுடன் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தினைக் குறிப்பிடலாம். அக்காலத்தில், இலங்கையின் பொருளாதாரமானது, சமூக சந்தைப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு விவசாயப் பொருளாதாரமாக காணப்பட்டதோடு, தேயிலை, இறப்பர், மற்றும் தென்னை ஆகியன பிரதான உற்பத்திப் பொருட்களாகவும், மற்றும் பிரதான ஏற்றுமதிகளாகவும் விளங்கின. இரட்டைப் பொருளாதார முறைமையானது அக்காலத்தில் நாட்டு மக்களின் தேவைப்பாடுகளை போதிய அளவில் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் உணவுப் பயிர்களையும் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டது. அக்கால கட்டத்தின் பிரதான பொருளாதாரச் சுட்டிகளாக 120 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்த தலா வருமானத்தினையும், ஒரு பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்த பொருளாதாரத்தினையும் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதாக உள்ளது.

22. இக்கால கட்டத்தின் போது பொருளாதார ஒழுங்கு விதிகள் மிகக் குறைவாக இருந்ததோடு, அந்நிலைமையானது, திறந்த ஒரு சந்தைப் பொருளாதாரம் உருவாவாதற்கு வழிவகுத்தாலும், சர்வதேச வர்த்தகத்திற்கான வாய்ப்புக்களும் மற்றும் குறைந்த மட்டங்களிலான ஏற்றுமதிகளும், நலன்புரித் திட்டங்கள் மீதான தொடர்ச்சியான ஈடுபாடும் அவற்றின் தாங்கிக் கொள்ள முடியாத செலவீனமும் எமது நாட்டின் பொருளாதாரத்தினைமோசமான முறையில் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது. அரசியலினால் உந்தப்பட்ட நலன்புரித் திட்டங்கள் பொருளாதார சுபீட்ச அடைவுகளை எதிர்மறையான முறையில் பாதித்துள்ளதோடு, தேசியவாத பிரச்சினைகள் பல்வேறு வளங்களும் திட்டமிடப்படாது தேசியமயமாக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது, பொருளாதாரக் கொந்தளிப்புக்களையும் பெருகச் செய்திருந்தது.

23. எழுபதாம் ஆண்டுகளின் ஆரம்பம் மூடப்பட்ட, கட்டுப்பாடுகளுடனான, பங்கீட்டுப் பொருளாதாரமொன்றினைத் தோற்றுவித்தது. அவ்வாறான பொருட்களுக்கான தடைகள் நிலவிய காலத்தில் வாழ்ந்தவர்கள் அதனை நினைவு கூரும் போது அதனை “அரிசித் தடைக்காலம்” (எடுத்துச் செல்லக் கூடிய அரிசியின் அளவு வரையறுக்கப்பட்டிருந்தமை) “பாண் வரிசை” (பாணானது பங்கீட்டுக்கு உட்பட்டிருந்ததோடு, அட்டைகளின் மூலம் வழங்கப்பட்டமை), என்றே நினைவு கூறுவர். அது மாத்திரமல்லாமல், துணிகள் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளும் பங்கீட்டு வரையறைக்குள் மையப்படுத்தப்பட்டு இருந்தமையினால் மக்கள் பொருளாதாரச் சுதந்திரத்தினை அடைவதில் சிரமம் காணப்பட்டது. அக்காலப்பகுதியானது பல்வேறு நுகர்வுப் பொருட்களை நகர்த்துவதில் தடைகள் நிரம்பிய ஒரு காலமாகக் காணப்பட்டதோடு, கட்டுப்படுத்தப்பட்ட அந்த யுகமானது, 1997 ஆம் ஆண்டில் இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான காலஞ்சென்ற கௌரவ ஜே.ஆர் ஜயவர்தன அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் “திறந்த பொருளாதாரக் கோட்பாடுகளை” அடிப்படையாகக் கொண்ட சீர்த்திருத்தங்களை உள்ளடக்கிய காலப்பகுதியுடன் நிறைவு பெற்றது.

24. 1977 ஆண்டளவில் எமது பொருளாதாரமானது 4.1 பில்லியன் ஐ.அ. டொலர்களையும் 294 ஐ.அ. டொலர் தலாவருமானத்தையும் கொண்ட ஒரு சிறு பொருளாதாரமாகும். இந்த முப்பது

வருட காலப்பகுதியில் தலா வருமானது வெறுமனே 174 ஐ.அ. டொலர் அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

### 1977: புதிய சிந்தனை

25. 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும் வெற்றியுடன் 1977 ஆம் ஆண்டானது கொள்கைப் புரட்சியொன்றிற்கு வழிவகுத்ததோடு, இலங்கையின் பொருளாதாரமானது, பெரும்பாலும் ஒரே இரவிலேயே திறந்து விடப்பட்டதோடு, அவ்வாறான ஒரு புரட்சியை மேற்கொண்ட ஒரே ஒரு ஆசிய நாடாகவும் இலங்கை விளங்கியது. கட்டுப்பாடுகளற்ற திறந்து விடப்பட்ட பொருளாதார நோக்கானது, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த கருத்திட்டங்களில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததோடு, அக்காலத்தில் நிலவிய சோசலிஸ வரையறைகளை நீக்கி இலங்கை உள்நோக்கிய பொருளாதார முறைமையிலிருந்துவிடுபட்டு உயர்ந்த அளவிலான பொருளாதார வளர்ச்சியொன்றினை நோக்கி நகர்ந்தது.

26. இறக்குமதிக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல், கடன் சந்தைகளை விடுவித்தல், ஒன்றிணைக்கப்பட்ட செலாவணி விகித முறைமைகளின் அறிமுகம், அரச நிறுவனங்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள வர்த்தக தனியுரிமைகளை இல்லாதொழித்தல், விலைக் கட்டுப்பாட்டு முறைமைகளை நீக்குதல், மற்றும் அரசுடமை தொழில் முயற்சிகளை தனியார்மயப்படுத்தல் போன்ற இன்னோரன்னவைகளே இக்கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான சீர்திருத்தங்களாகும். இப்பொருளாதார சீர்திருத்தச் செயன்முறையின் பிரதான எண்ணக்கருவாக "எந்தவொரு அரசாங்கமும் வியாபாரம் செய்வதற்கான வியாபாரத்தில் ஈடுபட முடியாது" என்பதையும், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பொறிமுறை தனியார் துறையாக இருக்க வேண்டும் என்பதையும் பிரதானமாகக் குறிப்பிட முடியும்.

27. மேன்மை தங்கிய காலஞ்சென்ற ஜே.ஆர் ஜயவர்தன அவர்களின் அமைச்சரவையானது, மேன்மை தங்கிய காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாச அவர்கள், கௌரவ ரொனி டி மெல் அவர்கள், காலஞ்சென்ற கௌரவ காமினி திசாநாயக்கா அவர்கள், எனது சொந்த வழிகாட்டியும், குருவும் காலஞ்சென்ற கௌரவ லலித் அதுலத் முதலி அவர்கள் மற்றும் எழுபதுகளில் வளர்ந்து வரும் ஒரு அரசியல் நட்சத்திரமாக விளங்கிய தற்போதைய பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க போன்ற பல முக்கிய அரசியல் புள்ளிகளை உள்ளடக்கியிருந்தது. இவ்விஷேட அரசியல்வாதிகள் இலங்கையின் பொருளாதாரத்தினை சிறந்த வழியில் எடுத்துச் சென்றதோடு, பொருளாதார வளர்ச்சி வேகத்தினை சுமார் 6 சதவீத சராசரி நிலைமைக்கு அடைவதற்கு மாத்திரமல்லாமல் வெளிநாட்டு உதவியானது, பாரிய அளவிலான முதலீடுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை உருவாக்குவதற்கும் உட்பட்டிருந்தது.

28. 1983 ஆம் ஆண்டில் உருக்கொண்ட உள்நாட்டுக் கலவரம், பொருளாதார வளர்ச்சி வேகத்தின் பின்னடைவுக்கு ஓரளவுக்கு வழிவகுத்ததோடு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பொருளாதார விருத்திகள் 1994 ஆம் ஆண்டு வரை தொடரப்பட்டது. 1994 ஆம் ஆண்டு மேன்மை தங்கிய திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் "மக்கள் முன்னணி"யில் இலங்கையின் முதல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

### 1994 – 2001 : “மக்கள் முன்னணியின் ஆட்சிக் காலம்”

29. 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளை தொடர்ச்சியாக எடுத்துச் சென்றதோடு, அரசுடமை தொழில்முயற்சிகளை தனியார்மயப்படுத்தும் செயன்முறையையும் துரிதப்படுத்தியது. மேலும் உள்நாட்டுக் கலவரத்தின் விரிவாக்கமும்,குறிப்பிட்ட பொருளாதார இலக்குகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதிகளின் தாக்கங்கள் பொருளாதார முன்னேற்றத்தினைத் தடுத்ததோடு, பொருளாதாரத்தின் கவனத்தினை வேறுபக்கம் திருப்பியது. இதற்குப் பிரதான காரணம் பொருளாரத்தினை விருத்தி செய்வதல்லாமல் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் அரசாங்கத்தின் கவனத்தைச் செலுத்துவதாகும். 2000 ஆம் ஆண்டளவில், இலங்கையின் தலா வருமானம் 869 ஐக்கிய அமெரிக்க டொலர்களை கொண்ட குறைந்த வருமானத்தைக் கொண்ட பொருளாதாரமாகக் காணப்பட்டதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 16.6 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்ததோடு, வேலையின்மையானது 10 சதவீதத்துக்குக் கிட்டிய பெறுமதியினைக் கொண்டிருந்தது. சுதந்திரம் அடைந்ததிலிருந்து முதல் தடவையாக வளர்ச்சி வேகமானது 2001 ஆம் ஆண்டில் எதிர்மறையான வளர்ச்சி வீதமொன்றினைப் பதிவு செய்தது.

### 2001 – 2004 ஓர் இரு வருட மீள் திருப்பம்

30. தற்போது பதவியிலுள்ள பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமைத்துவத்தின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கக் காலப்பகுதியில் இவ்வெதிர்மறையான போக்கினை மாற்றியமைத்து மீண்டும் ஒரு முறை சாதகமான வளர்ச்சியொன்றிற்கு வித்திட்டது. இவ்வரசாங்கத்தின் தொலைநோக்கு பல்வேறு தொழில்முயற்சியாளர்களுக்கு விஷேட வாய்ப்புக்களை வழங்கியதோடு, புதிய முதலீடுகள் பலவற்றை பொருளாதாரத்திற்கு நல்லாட்சியுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் ஏற்படுத்திக் கொடுத்தது. ஏற்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் மூலம் பல்வேறு உயர் நன்மைகளை மக்களுக்கு வழங்கியதோடு, மீண்டும் ஒரு முறை இலங்கையின் பொருளாதாரத்தை சாதகமான வளர்ச்சிப் போக்கிற்கு எடுத்துச் சென்றது.

*31.* இவ்வாறான தைரியமான அணுகுமுறைகளின் ஊடாக பின்தங்கிய பொருளாதாரத்திற்கு புதிய உத்வேகமொன்றினை வழங்கியதோடு, கடந்த ஆட்சிக் காலத்தின் போதான மந்தப் போக்குடைய பொருளாதார நடவடிக்கைகளை சிறந்த நிலைமைக்கு துரிதமாக மாற்றுவதற்கு ஒரு புதிய அணுகுமுறை ஈடுபடுத்தப்பட்டது. ஆயினும், இக்காலப்பிரிவின் ஆரம்பத்தை பின்வரும் எதிர்வுகூறல் மூலம் குறிப்பிட முடியும்.

> *“இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியிலுள்ளது. அதன் உண்மை என்னவென்றால், எமது ஆழமான படுகடன் சுமையே இந்நெருக்கடிக்குக் காரணமாக உள்ளது. மேலும், பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இலங்கையின் எதிர்கால சந்ததியினர் வேலையின்மைக்கும், குறைந்த வருமான மட்டத்திற்கும் முகங்கொடுக்க வேண்டியேற்படலாம். எனவே, இலங்கையை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல வழிவகுக்காது பாதுகாப்பதற்காக நிதானத்துடனும், புதுப்பிக்கப்பட்ட தொலைநோக்குடனும் செயல்பட வேண்டியுள்ளது. மேலும் தற்போது நடைமுறையில் உள்ள செயல்முறைகளைப் பின்பற்ற முடியாதுள்ளதோடு, பொருளாதாரத்தினை சீர்திருத்த வேண்டியுமுள்ளது”.*

32. கௌரவ சபாநாயகர்அவர்களே, எனது கூற்றினை மற்றுமொரு பக்கம் திருப்புவதற்கு உங்கள் அனுமதியினை வேண்டுகின்றேன். ஏனெனில், அன்று குறிப்பிடப்பட்டவைகள் இன்றைக்கும் பொருத்தமாகவுள்ளது என்பதை கருத்தில் கொள்ள வேண்டியதனாலாகும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பதங்களின் கருத்தோட்டம் மீண்டும் மீண்டும் ஆராயப்பட வேண்டுமென்பது என்பது எனது எண்ணமாகும்.

33. 2001 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இரண்டரை வருட ஆட்சியில் குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் விஷேட சட்டங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தியது. அவை அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்)சட்டம், நுகர்வோர் விவகார அதிகார சபைச் சட்டம்,தொழிலாளர் சட்டத்தில் வேலை முடிவுறுத்தல் மீதான நிலுவையிலுள்ள திருத்தங்கள், தொழில் பிணக்குச் சட்டம், பெண்கள், இள வயதினர், சிறுவர்கள் மற்றும் தொழிலில் அமர்த்தும் சட்டம், நலனோம்பு பிரதிஉபகாரச் சட்டம்போன்றனவாகும்.மேலும், புரட்சிகரமான பிரேரணைகளாக முன்வைக்கப்பட்ட புதிய மத்திய வங்கிச் சட்டம், மற்றும் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னரே இவ்வரசாங்கமானது கலைக்கப்பட்டது.

34. அரச துறை சீர்திருத்தங்களின் ஊடாக பொருளாதார வரையறைகளை இறுக்கமற்றதாக்குவதனை மையமாகக் கொண்டு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கும் மற்றும் மாற்றீட்டு நடவடிக்கைகளின் ஊடாக பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் இக்காலப்பகுதியில் கவனம் செலுத்தப்பட்டது.

35. இம்முற்போக்கான படிமுறைகள் அரசியல் ரீதியாக பிரபல்யம் வாய்ந்தவையாக இல்லாவிட்டாலும், அரசாங்கம் கட்டுப்பாடான நிதி ஒழுங்குகளையும், சந்தைக்கு நட்புறவான கொள்கைகளையும் பேணக் கூடியதாக இருந்தது. இக்குறுகிய காலப்பிரிவில் எமக்குப் பல்வேறு வெளிநாடுகளுடன் இணைந்து அவர்களது ஒத்துழைப்பையும் உதவிகளையும் பெற்றுக் கொண்டு பொருளாதார விருத்தியொன்றிற்கான புதிய தொலை நோக்கொன்றை உருவாக்கக் கூடியதாக இருந்தது. இதன் விளைவாக, பொருளாதாரமானது கிடைக்கப் பெற்ற முதலீடுகளின் காரணமாக விருத்தியுற்ற உற்பத்தித் திறனின் காரணமாகவே மீண்டும் வளர்ச்சியடைந்ததோடு, பொருளாதார வளர்ச்சி வேகமானது 6 சதவீதமாக அதிகரிப்பதன் மூலமும், பணவீக்கம் 2 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. ஆயினும், 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம் பெற்ற அரசாங்க மாற்றத்தின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியையும், பொருளாதார மறுமலர்ச்சியையும் அடைய முடியாமல் போனது.

## 2005 – 2014 இராஜபக்ஷ ஆட்சிக்காலம்

36. 2005 இலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியானது வரலாற்றில், மக்களின் எதிர்பார்ப்புக்கள் மிகவும் உச்ச நிலையில் காணப்பட்டாலும் அவைகளின் அடைதலானது சாதாரண மட்டத்தையும் அடையவில்லை.

37. 2009 ஆம் ஆண்டு யுத்த முடிவுடன்,மூன்று தசாப்தங்களாக நாட்டில் காணப்பட்ட யுத்த சூழ்நிலையுடன் கூடிய அனைத்து தரப்பினராலும் கண்டிக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இலங்கை மக்கள் அனைவரும் செழிப்பான மற்றும்

சந்தோஷமானதொரு எதிர்காலத்தை எதிர்பார்த்தனர். யுத்தத்தின் உச்ச கட்டத்தில் நாட்டு மக்களுக்கு தமது வயிற்றைக் கட்டிக் கொள்ளும் படி வேண்டிக் கொண்ட ஆட்சியாளர்கள் கட்டை அவிழ்ப்பதற்கு எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லைஎன்பது தெளிவு. அதிகரித்து வந்த கடன் சுமையின் காரணமாக நாட்டின் பொருளாதாரமானது, நாளுக்கு நாள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. ஆட்சியாளர்களின் கையாட்களினால் விளம்பரப்படுத்தப்பட்ட கோயபல்ஸ் நியாயத்தினூடாக பொருளாதாரச் சொல்லாட்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டதுமல்லாமல், ஆட்சியாளர்களின் புகழ்பாடுபவர்களின் மூலம் இலங்கை எனும் நாடு முன்நோக்கிச் செல்ல முடியாது படு பாதாளத்துக்கே சென்றது. எவ்வாறாயினும், ஜனவரி 8 ஆம் திகதி இக்குமிழி வெடித்து மாற்றத்தை ஏற்படுத்தியது.

38. 2009 ஆம் ஆண்டிற்குப் பிந்திய காலப்பகுதியானது நாட்டில் அனைத்து மக்களிடத்திலும் இன, மத, மற்றும் சாதி வேறுபாடுகள் அகன்று மக்கள் அனைவரும் ஒற்றமையுடன் அன்னியோன்ய நம்பிக்கை மற்றும் நட்புடன் கூடிய ஒரு காலப்பகுதியாக எழுச்சி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.அத்துடன் பொருளாதார மீட்சியும் எதிர்வு கூறப்பட்டது.

39. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த இடத்தில் நாட்டை மிகவும் மோசமான பயங்கரவாதிகளிலிருந்து மீட்டெடுத்த முப்படையினருக்கும் மரியாதை செலுத்துவது எனது முதற்கண் கடமை எனக் கருதுகிறேன். முப்படையினர் அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களினால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்கள் என்றும் நாம் மறவோம். அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை அவர்களுக்காக எத்தனை நினைவுத் தூபிகள் அல்லது ஞாபகார்த்த நினைவுகளை மேற்கொண்டாலும் அதனை ஈடு செய்ய முடியாது. அவர்களினால் பெற்றுத்தரப்பட்ட சமாதானம் எனும் பரிசை பாதுகாப்பது எமது கடமையாகும். நாம் வென்றெடுத்த சுதந்திரமானது நிலை நிறுத்தப்பட்டு பாதுகாக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நாம் வாழும் உலகில் காணப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். அதே போல் பயங்கரவாதத்தின் மாறுபட்ட தோற்றம் தொடர்பாக மிகவும் கரிசனையோடு உள்ளோம். தனியார் கொள்கைகளுக்குப் பதிலாக பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு எமது அயல் நாடுகள் மற்றும் உலகளாவிய நட்பு நாடுகளுடன் உபாய அணுகு முறையுடன் செயற்பட வேண்டும். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் நவீன தொழில்நுட்பமானது முக்கிய பங்காற்றுகின்றது. நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன், நாட்டின் பாதுகாப்பு என்ற விடயத்தில் விட்டுக் கொடுப்புக்களுக்கு ஒரு போதும் இடம் கிடையாது.

40. ஒரு நாட்டின் பொருளாதாரமானது, ஆட்சியாளர்கள் தொடர்பில் வெறும் வார்த்தை ஜாலங்கள் மற்றும் புகழ்பாடுகைகளின் முகாமை செய்ய முடியாததாகும். நாட்டின் சுற்றுலாத்துறையானது,முன்னேற்றமடையத் தொடங்கியது. முதலீட்டாளர்கள் நாடு தொடர்பாக சாதகமான முறையில் உற்று நோக்கி மீண்டும் திரும்பி வந்தனர். தனியார் மற்றும் பொதுத் துறை முதலீடுகளுக்கு சர்வதேச மூலதனச் சந்தையில் புதிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. ஆகவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது துரித கதியாக முன்னேற்றமடைந்தது. இது இலங்கையானது நடுத்தர வருமானத்தைக் கொண்ட பொருளாதாரம் என்ற அந்தஸ்தை அடைவதற்கு வழிவகுத்தது. இச்சந்தர்ப்பத்தில் தென் பகுதியைச் சேர்ந்த தமக்குச் சாதகமான பிரதேச அரசியல்வாதி தனது கையாட்களுடன் மேற்கொண்ட நாசகார நடவடிக்கையின் காரணமாக நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதோடு, சுற்றுலா மேற்கொண்டிருந்த

இரண்டு சுற்றுப் பிரயாணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினூடாக நாட்டின் சுற்றுலாத்துறைக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியது. அதே போல், நீங்கள் அனைவரும் அறிவீர்கள், எக்காரணமும் இன்றி, சட்ட நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் நாட்டின் அரசாங்கமானது தலையிட்டு சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன.

41. 2009 இற்குப் பிந்திய காலப்பகுதியில் கடந்த ஆட்சியின் பொது பொருளாதார வளர்ச்சிப் போக்கானது துரிதமாக வளர்ச்சியடைந்தது எனக் காட்டப்பட்டது. எவ்வாறாயினும், இவ்விலக்கங்கள் பிரதிபலிப்பதைப் போன்று நாட்டின் சராசரிப் பிரஜைகள் நன்மையடைந்ததாக தெளிவில்லை. ஓரு புதிய பொருளாதார மைல்கல்லை அடைவதற்கான பிரதான சுலோகமாக காண்பிக்கப்பட்ட விடயம் என்னவெனில், 2016 ஆம் ஆண்டில், நடுத்தர வருமானம் என்ற அந்தஸ்தை அடைவதாகும். ஆனால், சர்வதேச கண்டனங்கள் மற்றும் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் அரசியல்வாதிகளின் வாய்ப்பேச்சுக்களானது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமையினால் கடந்த அரசாங்கத்தினால் இலங்கையானது, முதலீட்டாளர்களின் உரிய விருப்பத்தேர்வாக இருக்கவில்லை இதனால், இலங்கையானது வியாபாரம் செய்வதற்கு சாதகமான நாடுகளின் பட்டியல் தரப்படுத்தலில் பின்தள்ளப்பட்டதோடு நிலைமையும் பாதிப்படைந்தது. நாட்டின் அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் ஐக்கிய நாடுகள் சபை காரியாலயத்திற்கு முன்பு சாகும் வரை உண்ணா விரதம் இருப்பதாக அச்சுறுத்தலை மேற்கொண்டதையும் அவரது உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முன்னாள் தலைவர் இளநீரை கொண்டு வந்ததையும் நாட்டு மக்கள் கண்டு கொண்டனர். அதுமிகச் சிறந்த அரசியல் நாடகமாக இருக்கலாம். ஆனால்,அதன் மூலம் நாடு மிகவும் பாதிப்படைந்தது. எதிர்பார்த்த வெளிநாட்டு முதலீடுகள் அடையப்படவில்லை மற்றும் நட்பு நாடுகளினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட ஜீ.எஸ்.பீ (GSP+) போன்ற சலுகைகளும் நீக்கப்பட்டன. நாட்டின் பொருளாதாரமானது, மெதுவாக ஓர் இருண்ட நிலைக்கு இழுத்துச் செல்லப்பட்டதோடு, சர்வதேச பொருளாதாரத் தடைகளும் குறுகிய தூரத்தில் காணப்பட்டன.

42. முன்னைய அரசாங்கத்திற்கு நாட்டின் அபிவிருத்தியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அவசியமான உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமொன்று காணப்பட்டது. சரியான தூர நோக்கு, அரசியல் மற்றும் பொருளாதார வழிகாட்டலினூடாக நாடானது உயர் நடுத்தர வரமான அந்தஸ்தை அடைவதற்கு உரிய வழிகாட்டலை பெற்றிருக்கும். ஆனால் பிழையான பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக வழி நடாத்தப்பட்ட அரசியலினால் இலங்கையானது, பல வர்த்தகப் பங்காளிகளினால் மற்றும் முதலீட்டாளர்களினால் கைவிடப்பட்டது. இது திறைசேரிக்கு மேலும் சுமையை அதிகரித்ததோடு, பல்வேறுபட்ட பேரினப் பொருளாதார சமமின்மையையும் ஏற்படுத்தியது.

43. நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால், கடந்த அரசாங்கமானது நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளான வீதிகள்,துறைமுகங்கள், மற்றும் விமான நிலையங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இதற்காக கடந்த அரசாங்கமானது, அதி உயர் வட்டியில் கடன்களைப் பெற்று அரச பெறுகைகள் தொடர்பான விலை மனுக்கோரல்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் வரையறைகளை மீறி ஒப்பந்தங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. கௌரவ சபாநாயகர் அவர்களே, உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறிப்பாக நிதி முகாமைத்துவம், நிர்வாகம்,

மற்றும் பொருளாதாரத்திற்கான பாதகமான தாக்கங்கள் என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது இவை நாட்டின் பொருளாதாரத்தை கடுமையாக தாக்கின.

44. கடந்த அரசாங்கத்தின் திட்டமிடப்படாத உட்கட்டமைப்பு வசதிகளான அதி வேகப்பாதைகள், துறைமுகங்கள், மீது சீனாவிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அதி கூடிய வட்டியிலான படுகடன்கள் நாட்டிற்குப் பாரிய படுகடன் சுமையை ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல், பாரிய அளவிலான படுகடன் தீர்ப்பனவுகளையும் ஏற்படுத்தியது. இந்த அதி செலவு கூடிய படுகடன்களானது முதிர்ச்சியடையும் படுகடன்களை திருப்பிச் செலுத்துவதற்குப் பதிலாக நீண்ட கால முதலீடுகளானது மேற்கொள்ளப்பட்டதோடு, சில முதலீடுகள் எவ்வித வருமானத்தையும் உழைக்கப் போதியதாக இல்லை. இவ்வகையான முதலீடுகளானது இலங்கைக்கு மாத்திரம் பொதுவான அனாவசியமான முதலீடுகள் எனக் குறிப்பிடலாம். ஏனென்றால், அவ்வரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட விமான நிலையத்தில் உள்ளூர் விமானங்கள் கூட, தரை இறக்கப்படுவதில்லை. ஹம்பாந்தோட்டை துறைமுகம் கூட எதிர்பார்க்கப்பட்டது போல கப்பல் துறை நடவடிக்கைகள் தொடர்பாக மத்தியப்படுத்தப்பட்டதில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். அத்துறைமுகத்திற்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைவு என்பது நாம் அறிந்த உண்மையாகும். எது எவ்வாறு இருப்பினும், அத்துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானத்திற்குப் பங்களிப்புச் செய்த அரச தலைவர்களின் பெயர்களானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பார்வையிட அங்கு சுற்றுலா செல்பவர்களுக்கு மாத்திரமே காணக்கிடைக்கின்றது.

45. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமக்குத் தெரிந்த வகையில் கடந்த அரசாங்கத்தில் குறிப்பிட்ட ஒரு குழுவினரே பலன்களை அனுபவித்தனர். அதாவது அரசியல் நண்பர்கள் மற்றும் தலைவரின் புகழ் பாடியவர்களுக்கு விஷேட சலுகைகள் மற்றும் நன்மைகள் செய்து கொடுக்கப்பட்டன. கௌரவ சபாநாயகர் அவர்களே, பல்வேறுபட்ட அதிகாரபூர்வமான மற்றும் உத்தியோகப்பற்றற்ற மூலங்களில் இருந்து நாம் அறிந்து கொண்டவை மிகவும் கொஞ்சமாகும். இவை மீதான விசாரணை செயன்முறையானது மிகவும் நீண்ட காலம் செல்லலாம். ஆனால் காணப்படும் சாட்சிகளானது யாராலும் மறுதலிக்க முடியாதுள்ளது. தேசப்பற்றுள்ள அனைத்து நாட்டுப் பிரஜைகளிடமும் கேட்டுக் கொள்வது என்னவென்றால், நாட்டில் காணப்படும் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு உண்மை நிலைநாட்டப்படும் வரையில் பொறுமையாக இருக்கும் படி வேண்டுகிறேன். மேலும், நான் இச்சந்தர்ப்பத்தில் தாய்நாட்டின் பிரஜைகளிடம் வேண்டிக் கொள்வதென்னவென்றால், வெளிநாடுகளில் நீங்கள் வைத்திருக்கும் பணங்களை இங்கே முதலீடு செய்யுங்கள். இச்சந்தர்ப்பத்தில் நாடானது, அத்தகைய பணத்தின் அவசியத்தை வேண்டி நிற்கின்றது.

46. கடந்த அரசாங்கத்தின் போது நாட்டின் வரி வருமான வீதமானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதத்தில் தொடர்ச்சியாக குறைவடைந்து அது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதத்தில் 10.2 சதவீதத்தை அடைந்து இலங்கையை இத்தகைய மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்றாகப் படிப்படியாக மாற்றியது. இன்று எமது வரி வருமானமானது சேவைகள் கொடுப்பனவுகளைக் கூட மேற்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை. ஆனால் நாங்கள் ஆசியாவின் ஆச்சர்யமாக திகழ விரும்பினோம். ஆம் நாம் நடைமுறைப் பொருளாதார

நிலைமைகள், மற்றும் உண்மை நிலைமைகளில் இருந்து விலகி பொருளாதாரம் முற்றாக நிலைகுலைந்தது எனலாம். மேலும், நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், கடந்த அரசாங்கத்தின் பொருளாதார விற்பனர்கள் எவ்வகையான பொருளாதாரக் கோட்பாட்டின் கீழ் செயற்பட்டார்கள் என்பதாகும்.

47. எங்களுக்கு உறுதியாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என்னவென்றால், சில உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்ட போதிலும் அரசாங்கத்தின் பொருளாதாரத் தீர்மாங்களினூடாக கிராமிய மற்றும் பிராந்திய மக்களுக்கு உரிய பலன்கள் எதிர்பார்த்ததைப் போன்று சென்றடைய வில்லை என்பதாகும். மக்களின் வாழ்க்கை மட்டம் மற்றும் நாட்டின் மிகவும் பெறுமதியான வளங்களின் வளர்ச்சியானது கடந்த தசாப்த காலத்தில் எதிர்பார்த்த அளவில் காணப்படவில்லை. வருமான ஏற்றத்தாழ்வு குறிகாட்டியான கினிக் குணகமானது நாட்டின் வருமானத்தின் பெரும் பகுதியானது ஒருகுறிப்பிட்ட சிலரிடையே குமிந்திருப்பதைக் காட்டுகின்றது.

## 2015: தேசிய ஐக்கிய அரசாங்கம் - அரசியலில் இலங்கையின் புதிய பரிணாமம்

48. 2015 சனவரியில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தெரிவு மற்றும் கௌரவ பிரதம ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கவர்ச்சிகரமான தலைமைத்துவத்தின் கீழ் ஐ.தே. கட்சியினால் தலைமைத்துவம் வழங்கப்பட்ட புதிய தேசிய அரசாங்கம் ஒன்று தாபிக்கப்பட்டமை இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றிலும் சமகால அரசியலிலும் புதிய அத்தியாயம் ஒன்றினை உருவாக்கியது. 2009 இல் நாம் மேற்கொண்ட விடயங்களும் அதனை போன்ற ஏனைய சந்தர்ப்பங்களிலும் நாம் இன்னொரு முறை தவறவிடப்படாத சந்தர்ப்பங்களுக்கு முன்னர் எதிர்கால சுபீட்சத்தினை உறுதிப்படுத்துவதற்கு உரிய பொருளாதார உபாயங்களுடன் நாட்டின் நலனுக்கான சிறந்த வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி கொடுத்தது. மறைந்த தலைவர் ஜோன் எப். கென்னடியின் “நாட்டுக்காக நீங்கள் எதனை செய்ய முடியும் என்பதை பாருங்கள் நாடு உங்களுக்கு என்ன செய்கின்றது என்பதை பார்க்காதீர்கள்” என்ற பிரபலமான கூற்றினைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

49. நாம் தெரிவு செய்யப்பட்டதுடன் சமூகத்திலுள்ள பல்வேறு குழுக்களிடம் இருந்து எம்மை நோக்கி வந்த பல்வேறு கேள்விகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எமது தலா வருமானம் நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற அந்தஸ்தினை அடைகின்ற அளவுக்கு மிக உயர்வாக காணப்படுகிறது எனின், பெரும்பாலான மக்கள் ஏன் இன்னும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்? உயர் பொருளாதார வளர்ச்சி காணப்படுமாயின், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஏன் நாளுக்கு நாள் மாற்றமடைவதுடன் நாளாந்த வாழ்வினை சிரமத்துக்கு உள்ளாக்கியுள்ளது? சர்வதேச சந்தையில் எண்ணெய்யின் விலைகள் வீழ்ச்சி அடைந்து இருக்குமாயின், ஏன் எரிபொருளுக்கான விலை எதிர்பார்த்த அளவு குறைவடைய வில்லை? எமது குறுகிய கால ஆட்சியில் நான்காவது முறையாக சாதகமான விலைக் குறைப்பினை நாம் முகாமை செய்துள்ள போதிலும் சில கேள்விகள் விடை காணாது தொடர்ந்தும் காணப்படுகின்றன.

50. புள்ளி விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாயின், ஏன் எமது பிள்ளைகள் தொழில் வாய்ப்பு அற்றவர்களாக இருப்பதுடன் வெளிநாடுகளுக்கு அதனைத் தேடிச் செல்கின்றனர்? பொருளாதார கண்ணோட்டத்தில் எவ்வித விளைவினையும் பெற்றுத் தராத பொருத்தமற்ற இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட பெருந்தெருக்கள் மற்றும் விமான நிலையங்களின் பயன்தான் என்ன? மிகவும் சிரமப்பட்டு கடுமையாக உழைக்கும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குடும்பம் சிறிய கார் ஒன்றினை கொள்வனவு செய்வது எவ்வாறு? பொருளாதாரம் வளர்ச்சியடைவதாயின் வரி வருமானம் வீழ்ச்சியடைவது ஏன்? சுருக்கமாக, இலங்கை பொருளாதாரத்தின் உண்மையான நிலை என்ன? என்பது சமூகத்தில் பெரும்பாலானவர்களின் கரிசனையாகக் காணப்படுகின்றது.

51. நாம் முன்னைய அரசாங்கத்திடம் இருந்து மரபுரிமையாக எதனைப் பெற்றிருக்கின்றோம் என்பதே இங்கு எழுகின்ற கேள்வியாகும். பொருளாதாரத்தினை பொறுத்தவரையில் நாம் மரபுரிமையாக பெற்றிருக்கின்ற பலவீனங்கள் மற்றும் பாதிப்புக்கள் எண்ணிலடங்காதவை. இவை கடந்த காலங்களின் போது எடுத்து காட்டப்பட்ட வளர்ச்சி தொடர்பான புள்ளி விபரங்களுக்கு மாற்றமாக தொடர்ந்தும் எமது பொருளாதாரத்தின் கட்டமைப்பில் ஆழமாக வேரூன்றியுள்ளது. பொருளாதார வளர்ச்சியானது பிரதானமாக வர்த்தகமல்லாத துறைகளினால் ஏற்படுவதுடன் நிலையான வளர்ச்சி மூலங்களினால் ஏற்படுவதற்கு பதிலாக அரசிறைத்துறையில் பிரதான கட்டமைப்பு பலவீனங்களை மறைக்கின்ற “வியக்கத்தக்க அரசிறை” வளர்ச்சிகளுக்கு மாற்றமாக அதிகரித்து வரும் நெகிழ்ச்சியற்ற மீண்டெழும் செலவின அர்ப்பணிப்புகளுக்கமைய மனித மூலதன அபிவிருத்திக்கான முதலீடாக நீண்டகால உற்பத்தித்திறன், வினைத்திறனற்ற வள ஒதுக்கீடு என்பன காரணமாக வருமான மட்டத்தில் சமமின்மை காணப்பட்டதினால் தலைக்குரிய வறுமைச்சுட்டியானது அதிகரித்தது.

52. பொருளாதார ஏற்றத்தாழ்வானது பெரும்பாலும் அதிகரித்து காணப்பட்டது. கௌரவ சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை உருவாக்குவதற்கு மிக அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் எம்மை நோக்கி வந்த பெரும்பாலான கேள்விகளுக்கு 2016 இற்கான கொள்கை ஆவணம்/ தேசிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தீர்வினை வழங்குவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

## அரசாங்க நிதி மற்றும் பொருளாதாரத்தின் தற்போதைய நிலைமை

53. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமக்கு முன் இருக்கின்ற பணியை நான் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன். இலங்கையின் பொருளாதாரமானது பாரிய படுகடன் சுமையில் சிக்கியுள்ளதுடன், உயர்ந்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினையும் எதிர்நோக்கியுள்ளது. எவ்வாறாயினும் படுகடன் மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது எமக்கு எவ்வித சம்பந்தமும் இன்றி எம்மீது சுமத்தப்பட்டதுடன், இந்நிலைமையினை எவ்வித நிபந்தனையும் இன்றி நாம் ஏற்றுக்கொள்வதற்கு தயார் இல்லை என்பதனை நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இதனை பொருளாதார கண்ணோட்டத்தில் மாத்திரமின்றி சமுதாய அரசியல் நோக்கிலும் பார்ப்பதுடன் புத்தாக்கம் மிக்க பல்வேறுபட்ட மற்றும் விளைவினைத் தரக்கூடியதான சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. வரவு செலவுத்திட்ட திருத்தம் என்ற சாதாரண மரபுவழி

முறையொன்றின் ஊடாக பொருளாதார நெருக்கடி காணப்படுகின்ற காலப்பகுதியில் விரிவாக்கப்பட வேண்டிய பாரியதொரு பணி காணப்படுகின்றது.

54. ஒவ்வொரு தேசமும் அதன் வருமானத்திற்குள் வாழ்வது அவசியமாகும். இலங்கையும் அதற்கு விதி விலக்கானது அல்ல. அந்தவகையில், வருமானம் திரட்டுவதற்காக வரி சேகரிப்பு தொடர்பான முயற்சிகளை முன்னெடுக்கின்ற நிலையில் நாம் இல்லை. அதேபோன்று, நியாயமான சேமிப்பு என்ற விடயத்திற்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் வெளிப்படையாக செயற்படவேண்டியுள்ளது. கௌரவ சபாநாயகர் அவர்களே, சமூகத்தின் நன்மைக்கான பாரிய அக்கறையொன்றுடன் வரி செலுத்துனரின் பணத்தினை நாம் முதலீடு செய்ய வேண்டுமென்ற கொள்கையினை பின்பற்றுவதற்கு நான் விரும்புகின்றேன். கடந்த சில வருடங்களின் போது வளங்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் வீணாகுவதனை கவனத்திற் கொள்கின்ற இந்த கொள்கையினை பின்பற்றுவதற்கான பொருளாதார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பது தொடர்பில் ஐயம் காணப்படுகின்றது.

55. அரசிறைத் துறையில் கட்டமைப்பு பலவீனமானது உடனடியான கவனத்தினை வேண்டுவதுடன் நீண்ட காலத்தில் நிலையான வளர்ச்சி காணப்படாமையானது யதார்த்தமாக இருக்க மாட்டாது. உண்மையற்ற முன்னுதாரணங்கள் காலத்துக்கு காலம் தோன்றுகின்ற பொருளியலாளர்களுக்கான சிறந்த வாசிப்பாக அமையமாட்டாது. அரசிறைப் பற்றாக்குறையானது 2001 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% இலிருந்து 2014 இல் 5.7% ஆக வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த படுகடன் 2002 இல் மொ.உ.உற்பத்தியில் 102% இலிருந்து 2014 இல் மொ.உ.உற்பத்தியில் 72% ஆக சில அரசிறை வளர்ச்சி இடம்பெற்றிருப்பதனை நாம் நம்பும் வகையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

56. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினம் மீதான அதிக வரையறையினை விதிப்பதானது அனைத்து அரசாங்க வருமானங்களிலும் படுகடன் வழங்கலுக்கு பயன்படுத்தப்படுகின்றது. படுகடன் துறையினை விரிவாக்கும் விடயத்தில் படுகடன் ஆற்றல்கள் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. வெளிநாட்டுப் படுகடன் நிலுவையில் வர்த்தக கடன்களின் பங்கு கடந்த காலங்களின் போது ஆற்றலினைப் பெற்றுள்ளது.

57. தனியார் துறை பொருளாதார செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதுடன் சுதந்திர சந்தைகளின் சிறந்த தொழிற்பாட்டிற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற பல்வேறுபட்ட தடைகளை நீக்குகின்ற கொள்கைசார்ந்த வெளிப்படையான சந்தை முறையினை பினபற்றுவதற்கு எமது அரசாங்கம் முனைந்துள்ளது. அரசிறைத்துறையுடன் ஆரம்பமாகும் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளுக்கும் பாரிய மறுசீரமைப்புகளை இது வேண்டி நிற்கின்றது. பொருளாதார போக்கிற்கான பிரதான முன்னேற்றமொன்றினை ஏற்படுத்துவதற்கு புதிய முயற்சியொன்றாக வியாபாரத்தினை இலகுவாக மேற்கொள்ளல் சுட்டி (Ease of Doing Business Index) இனை முன்னேற்றுவதற்கு நாம் கவனம் செலுத்துதல் வேண்டும்.

58. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டின் அரசிறை முறைமை தொடர்பான சில தீவிர பிரச்சினைகள் காணப்படுவதுடன் இலங்கையர் அனைவரும் அவற்றின் முக்கியத்துவத்தினை அறிந்திருக்க வேண்டும் என்ற வகையில் இங்கு விரிவாக சமர்ப்பிக்க விரும்புகின்றேன். இவற்றினை நாம் பல வருடங்களாகவும் கடந்த 11 மாதங்களும் கலந்துரையாடி வருவதுடன்

நாடு எதிர்நோக்கும் அரசிறை பிரச்சினைகளின் உண்மையான விடயங்களை கண்டறிவதற்கும் அவதானிப்பதற்குமான சந்தர்ப்பத்தினை நான் பெற்றுக்கொண்டேன். இலங்கை மக்களின் நன்மைக்காக வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி இப்பிரச்சினைகளினை தீர்ப்பதற்கு நானும் நிதியமைச்சின் அலுவலர்களும் ஆர்வத்துடன் இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வரி வருமானம்*

59. திட்டமிடப்பட்ட அத்தியாவசிய செலவினங்களை ஈடுசெய்வதற்கு போதிய வருமானத்தினை உருவாக்குவதற்கான ஆற்றலினை ஏற்படுத்ததுகின்ற ஏதேனும் அரசிறை முறைமையினை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். துரதிஷ்டவசமாகஇலங்கையில் இம்முறைமை காணப்படவில்லை.இந்நிலைமை கடந்த தாசாப்தத்தின் போது தூண்டப்பட்டதுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவ்வித அர்த்தமுள்ள விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை.

60. அரசிறை வருமான வீழ்ச்சியானது நாட்டின் பாரிய பேரண்ட பொருளாதாரத்தை எடுத்துக்காட்டுவதற்கு அதன் போக்கு முன்னுரிமை அடிப்படையில் திருத்தப்பட வேண்டியுள்ளது. இலங்கையின் வரி வருமானம் 1990 இல் மொ.உ. உற்பத்தியில் 19% ஆக காணப்பட்டதுடன் 2014 இல் மொ.உ. உற்பத்தியில் 10.2% ஆக வீழ்ச்சியடைந்தது. 2014 இல் முழு காலப்பகுதிக்கும் வரி வருமான வளர்ச்சி 4.4% ஆக காணப்பட்டது. இது சாதாரண மொ.உ. உற்பத்தி வளர்ச்சி விகிதமான 7.3% இனை விட குறைவாகக் காணப்பட்டது. இந்த வகையில் வரி வருமானம் பொருளாதார விரிவாக்கத்திற்கான உத்வேகத்தினை வழங்கமுடியாது போனதுடன் கடந்த வருடங்களில் ஏற்பட்ட மோசமான நிலைமைக்கு சான்றாக அமைந்தது. அரசிறை வருமானத்தினை அதிகரிப்பதற்கு முன்னைய காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் அக்காலத்தில் காணப்பட்ட வீழ்ச்சி நிலையினை போக்குவதற்குத் தவறியது. வரி முறைமையில் ஏறக்குறைய 35 வரிகளும் அறவீடுகளும் காணப்படுவது நம்பமுடியாததொன்றாகும். இச்சட்டங்களில் சில காலாவதியானதுடன் வரி செலுத்துனர்களினால் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாது காணப்பட்டது. அவற்றுள் சில மாத்திரம் வரிச் சட்டங்கள் பற்றி விளங்கிக்கொள்ள முடியுமாகக் காணப்பட்டன.

61. பெறுமதி சேர் வரியின் சேகரிப்பின் வீழ்ச்சியானது கடந்த வருடங்களில் வரி வருமானத்தில் வீழ்ச்சியேற்படுவதற்கு பிரதான காரணமாக இருந்தது. 2005 இல் மொத்த வரி சேகரிப்பில் 41 சதவீதமாகக் காணப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானம் 2016 இல் 26 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. மேலும் மொ.உ. உற்பத்தியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பு 2004 இல் 5.8 சதவீதத்திலிருந்து 2014 இல் 2.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வருமான வரி வீழ்ச்சியானது 2006 இல் 2.7 சதவீதத்திலிருந்து 2014 இல் மொ.உ. உற்பத்தியில் 1.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. தேசிய வருமானம் அதிகரித்த போதிலும், அதற்கு நேர் விகிதமாக வரி வருமானம் அதிகரிக்கப்படவில்லை. வரி வருமானம் வீழ்ச்சியடைந்ததற்கான காரணம் பல்வேறு விடயங்கள் தொடர்ந்து மரபுவழியாக வந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. வரி நிர்வாக முறைகேடுகள் காரணமாக இணக்கப்பாட்டில் காணப்பட்ட பலவீனம் பிரதான காரணமாக அமைந்தது. பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வரி விலக்களிப்புகளும் வரி நிர்வாகத்தினை முறையாக செயற்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்தது.

62. வருமானத்தில் பெரும்பகுதி மறைமுக வரிகளிலிருந்து பெறப்படுவதுடன் நேரடி வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவானதாகும். அதேவேளை, வரி செலுத்துவதற்கு முடியுமான பலரும் வரி செலுத்துவதற்கு கடப்பாடுடையவர்களும் வரி முறைமையில் முழுமையாக உள்வாங்கப்படவில்லை. வரி ஏய்ப்பினை இல்லாதொழிப்பதற்கான முயற்சிக்கு வரி இணக்கப்பாட்டு முறைமையினை மேம்படுத்துவது அவசியமாகும். மேலும் வரி நிர்வாகம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

63. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த சில மாதங்களின் போது வரி விதிப்பனவில் புதிய செயற்திட்டங்களை கடைப்பிடிப்பதன் மூலம் இப்பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான சில முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். எவ்வாறாயினும், தற்காலிக தீர்வுகளிலிருந்து விலகி முன்னெடுத்துச் செல்வதற்கான உறுதியான மறுசீரமைப்புகளின் அடிப்படையில் வரி முறைமையினை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதுடன் குறித்த மறுசீரமைப்புகள் நாட்டின் நன்மைக்காக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

***நடைமுறைச் செலவினம்***

64. கௌரவ சபாநாயகர் அவர்களே, வருமானத்தினை அதிகரிப்பதற்கான தனிப்பட்ட வரி மறுசீரமைப்புகள் அரசிறை வருமானத்தினை உறுதிப்படுத்துவதற்கு பங்களிக்கப் போவதில்லை. இது உரிய முறையிலான அதிக முக்கியத்துவம் செலுத்தப்பட்ட செலவினக் குறைப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இந்தத் தேவையினை எவ்வாறு நாம் உணர்ந்து கொள்கின்றோம் என்பதே எம்முன் உள்ள கேள்வியாகும். அதேபோன்று கடந்த ஆட்சியில் செலவினமானது சகல மட்டங்களிலும் அதிகரித்திருந்த வேளையில் இடம்பெறக்கூடாத விடயங்களிலிருந்து நாம் நிறைய பாடங்களை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

65. நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அவற்றினது நடைமுறைச் செலவின மட்டத்தினை குறைத்துள்ளன எனநான் உறுதியாக நம்புகின்றேன். இதனை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கான நேரம் வந்துள்ளதுடன், வரையறுக்கப்பட்ட நேரடி வரி செலுத்துநர்கள் மற்றும் சமூகத்திலுள்ள மிக வறிய பிரிவினர் உள்ளடங்கலாக மறைமுக வரிகளின் வருமானம் என்பவற்றிலிருந்து மேற்கொள்ளப்படும் வீண் செலவினங்களைக் குறைப்பதற்கும் தேவைக்கதிகமான நிர்வாக செலவினங்களை இல்லாதொழிப்பதற்கும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செலவினத் தேவைகளை மதிப்பிடுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

66. தேசிய வரவு செலவுத் திட்டத்தினை தயாரிப்பதில் பூச்சிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பு எண்ணக் கருவினை நான் உறுதியாக ஆதரிக்கின்றேன். 2016 வரவு செலவுத் திட்டத்தில் பூச்சிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பு எண்ணக்கருவிற்கு முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு செலவிடல் நிறுவனங்களும் அவற்றின் நிதி ஒதுக்கீடுகளுக்கான வேண்டுகோள்களை விடுப்பதற்கு முன்னர் அவற்றினது வரவு செலவுத் திட்ட தயாரிப்பினை நியாயப்படுத்துதல் வேண்டும். இச்செயன் முறையானது இதன் பின்னரான வரவு செலவுத் திட்டங்களிலும் கடுமையாகப் பின்பற்றப்படும். கௌரவ சபாநாயகர் அவர்களே கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பூச்சிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பானது தேசிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பின் போது பல்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இந்த பூச்சிய வரவு செலவுத் திட்ட தயாரிப்பினை

செயற்படுத்துவதற்கு நாம் இவ்வளவு காலம் தாமதித்தது எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது. இந்தவகையில், பொதுத் திறைசேரியானது உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கான ஒதுக்கீடுகளை மீளாய்வு செய்தல் தொடர்பில் 2016 சனவரியிலிருந்து பின்னூட்டல் நடவடிக்கைகளை எடுக்கும்.

67. பொறுப்புக் கூறத்தக்க அரசாங்கமென்ற வகையில் மக்களின் துயரங்களை தெளிவாக உணர்ந்துள்ளதுடன் நாம் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியத்தினை குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததன் மூலம் எமது உறுதிமொழியினை பேணுவதற்கு முடியுமாக இருந்தது. அதேவேளை, அரசாங்கத்துறை தொழில்வாய்ப்பானது கடந்த பல வருடங்களாக நான்கு மடங்காக அதிகரித்து இருந்ததனை எம்மால் உணரமுடிந்தது.

68. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த மோசமான சூழ்நிலையின் வெளிப்படையான விளைவு சம்பள செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை ஏற்படுத்தியதுடன் இது ஆகக்கூடியளவு அதிகரிக்கப்படுவதுடன் நியாயப்படுத்த முடியுமான அளவினைவிட அதிகமானதாக இருந்தது. இந்தவகையில், அரசாங்கத்துறை வேதனாதிகளின் நிலைபெறு தன்மையினை பேணுவதற்கான உரிய வழிமுறைகளை நாம் தேட வேண்டியுள்ளது. இவற்றுடன் அரசாங்கத்துறை சேவை வழங்கலின் வினைத்திறன், பயன்வலுத்தன்மை மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றினையும் ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

69. அதேபோன்று, படிப்படியாக அதிகரித்து பாரிய சவாலாக வளர்ந்துவரும் மற்றுமொரு முக்கிய விடயம் அரசாங்கத்தின் ஓய்வூதிய பொறுப்பாகும். வயது முதிர்ந்தோர் சனத்தொகை மற்றும் எதிர்காலத்தில் அதிகரித்துவரும் பொறுப்பினை எதிர்கொள்ளும் வகையில் வளங்களை அதிகரிக்க வேண்டிய தேவை என்பவற்றினை முகாமை செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் கடந்த 2005 - 2014 வருடங்களின் போது ஓய்வூதியச் செலவினம் 170 சதவீதத்தினால் அதிகரித்தது. ஓய்வூதியம் பெறும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் மீதான நிதிச் செலவினம் ஆகியன குறைந்தது இந்த மட்டத்திலாவது தீர்க்கப்படாவிட்டால் சிக்கலான பல நெருக்கடிகளுக்கு உட்படவேண்டிய நிலையேற்படும்.

70. நடைமுறையிலுள்ள நிதியளிக்கப்படாத தன்மையிலான ஓய்வூதியத் திட்டத்தின் இயல்பினால் மேலதிக நேரத்தினை மேலும் அதிகரிக்கின்ற செலவு என்பன பாரிய பொறுப்புக்களை ஏற்படுத்துவதுடன் எதிர்கால வரி செலுத்துனர்களுக்கு மேலும் சுமையாக அமையும். இந்தவகையில், ஓய்வூதியச் செலவினத்தினை இந்நாட்டின் மக்கள் தாங்கிக்கொள்ள முடியுமான ஒன்றாக மாற்றுவதற்கான புதிய உபாயங்களை கண்டறிய வேண்டியது அவசியமாகும். கௌரவ சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே இளைப்பாறியவர்கள் மற்றும் தற்பொழுது சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு எவ்வித வரையறையுமின்றி ஓய்வூதியச் செலவினத்தினை தாங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என்பதனை நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஆனால், அரசாங்க சேவைக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் ஓய்வூதியம் தொடர்பில் நாம் எவ்வாறு திட்டமிடுவது என்பது தொடர்பில் புதிய உபாயமொன்றினை உருவாக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அந்தவகையில், ஓய்வூதிய முறைமையினை நிலைபேறானதொன்றாக மாற்ற முடியும்.

71. இதுதொடர்பான மற்றுமொரு விடயம் மானியங்கள் மற்றும் மாற்றல்களின் வழங்கல் என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளமையாகும். இது வரவு செலவுத் திட்டத்தில் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 21 சதவீதமாகக் காணப்படுகின்றது. முன்னேற்றகரமான

இலக்கிடல் உதவுதொகையினைக் குறைத்தல் என்பன நடைமுறைச் செலவினத்தினை குறைப்பதற்கு சிறந்த வெளிப்படைத்தன்மை மற்றும் வகைகூறல்களுடன் பின்பற்றவேண்டிய தேவை காணப்படுகின்றது. இதன்மூலம் அதிகமான முதலீட்டினை சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பிற்காக பயன்படுத்த முடியுமென்பதுடன் உயர் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமுமாகும். அதேவேளை, எமது சமூகத்தில் விசேட தேவையுடைய மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய பாதிப்புக்குள்ளான பிரசைகள் காணப்படுகின்றனர் என்பதனை நாம் நன்கறிவோம். ஏதேனும் பாதிப்புக்குள்ளானவர்களை பாதுகாப்பதற்கான சிறந்த வழிமுறைகளையும் அதற்கான காரணங்களையும் கண்டறிவதுடன் தொடர்ந்து ஒத்துழைப்பினையும் வழங்கும்.

### *பொது முதலீடு*

72. கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் பொது முதலீடு என்ற விடயம் பெருமளவு பேசப்பட்டதுடன் பொது முதலீடானது நாட்டின் அபிவிருத்திக்கான மிக முக்கிய தேவைப்பாடாக மாறியிருந்தது. பொது முதலீடானது தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு நாட்டுக்கு மிக முக்கியமானதொன்று என்பதனை வலியுறுத்திக்கூற நான் விரும்புகின்றேன். இக்கொள்கையில் எவ்வித கருத்து முரண்பாடுகளும் இருக்க முடியாது. எவ்வாறாயினும், பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நாம் மதிப்பீடு செய்யும் பொழுதும் அவற்றினைத் தெரிவுசெய்யும் பொழுதும் நியாயமான விளைவினை ஏற்படுத்தக்கூடிய வகையில் எமது முன்னுரிமைகள் மற்றும் சாத்தியவள மதிப்பீடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

73. கடந்த காலத்தின் போது, தனியார் முதலீடானது அரசாங்கத்தின் மிகை தலையீடு காரணமாக வெளித்தள்ளப்பட்டது.தனியார் முதலீடானது கடந்த வருடங்களில் மொ.உ. உற்பத்தியில் 22 சதவீதமாக தொடர்ந்து காணப்பட்டதுடன் 2011 இல் 24 சதவீதத்திலிருந்து படிப்படியாக பரிணாமம் அடைந்து வளர்ச்சிப் போக்கினை மாற்றமடையச் செய்துள்ளது. 2005 இல் மொ.உ. உற்பத்தியில் 4 சதவீதமாகக் காணப்பட்ட அரசாங்க முதலீடானது கடந்த 10 வருடங்களின் போது மொ.உ. உற்பத்தியில் ஏறக்குறைய 6 சதவீதமாக காணப்பட்டது. அத்தகைய அதிகரிப்பானது பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முதலீடாக இருக்கமுடியுமாயினும் உண்மையான விடயம் என்னவெனில் அத்தகைய முதலீட்டுக்கான நியாயப்படுத்த முடியுமான விளைவினை எந்தளவு ஏற்படுத்துகின்றது என்பதாகும். அண்மைக்கால பொது முதலீடுகளின் வழமையான மதிப்பீடானது அதிக வட்டி விகிதங்களுடன் பெருமளவிலான வெளிநாட்டுப் படுகடனை கொண்டிருந்த அதேவேளை, படுகடன் சுமையினை அடிப்படையாகக் கொண்ட இருண்ட மந்த பொருளாதாரமொன்றினை ஏற்படுத்தியது.

### *பொதுப் படுகடன் முகாமைத்துவம்*

74. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாங்கள் யாவரும் அறிந்தது போன்று பொதுப் படுகடன் முகாமைத்துவமானது பேண்தகு நிலையினை உறுதிப்படுத்துவதற்கு இறுக்கமான உபாயங்களுடன் அவசரக் கவனத்தினை வேண்டிநிற்கின்றது. தற்பொழுது பொதுப் படுகடனானது மொ.உ. உற்பத்தியில் விகிதமான ஏறக்குறைய 72 சதவீதமாகக்

காணப்படுகின்றது. இது சர்வதேச தரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதத்தினை விட அதிகமானதாகும்.

75. படுகடன் பேண்தகு நிலையினை நாம் எவ்வாறு உறுதிப்படுத்துவோம் என்பது விடை காணப்பட வேண்டிய மிக முக்கியமான விடயமாகும். அரசிறை முகாமைத்துவத்தில் கடுமையான நடைமுறைகளை வேண்டிநிற்கின்ற வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை குறைக்கின்ற ஆற்றல் மற்றும் அர்ப்பணிப்பில் இதற்கான தீர்வு தங்கியுள்ளது என்பது வெளிப்படையானதாகும். படுகடன் முகாமைத்துவத்தினை மேம்படுத்துகின்ற கோட்பாடானது படுகடன் சேவையினை தாங்கிக்கொள்ள முடியுமான மட்டத்தில் பேணுவதுடன் எமது உபாயம் மற்றும் நோக்கு என்பன அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

### *அரச உடமைத் தொழில் முயற்சிகள்*

76. பிரதான அரச உடமைத் தொழில் முயற்சிகளின் நட்டத்தில் இயங்கும் இயல்பானது தேசிய வரவு செலவுத் திட்டத்தில் பாரிய அழுத்தத்தினை ஏற்படுத்தியது மாத்திரமல்லாமல் நாட்டின் நிதி முறைமை முழுவதிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையினை எதிர்கொள்வதற்கான புதிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாமை ஆபத்தான போக்கு என்ற நிலையினை அடைய முடியும். இந்தவகையில், நட்டத்தில் இயங்கும் தொழில்முயற்சிகள் என்ற நிலையிலிருந்து அவற்றினை வர்த்தகரீதியில் சக்திமிக்க தொழில்முயற்சிகளாக மாற்றுவதற்கான முன்னுரிமை அடிப்படையிலான மறுசீரமைப்பு நடவடிக்கைகளினை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

77. இந்த பலவீனமான நிலையினை நீக்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொது தொழில்முயற்சி அபிவிருத்திக்கான புதிய அமைச்சொன்றினை உருவாக்கியமை இது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பிரதான நடவடிக்கையாகும். அரசாங்க தொழில்முயற்சிகளின் முகாமைத்துவ மாதிரியினை மீள் கட்டமைப்பு செய்வதற்கு நாம் கவனம் செலுத்தியுள்ளதுடன் தெரிவு அடிப்படையில் பொதுப் பயன்பாடுகளில் சந்தை அடிப்படை விலையிடல் நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல், தற்பொழுதுள்ள ஊழியப் படையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பின்பற்றுகின்ற அதேவேளை ஆட்சேர்ப்பினைக் குறைத்தல் மற்றும் தனியார் துறை ஒத்துழைப்பு உள்ளடங்கலாக அரசாங்க தொழில்முயற்சிகளின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை கண்டறிதல் என்பனவும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

### *பொருளாதாரம் தொடர்பான அபிவிருத்திகளும் ஏனைய விடயங்களும்*

78. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஒரு வருடத்திற்கு குறைந்த ஆட்சிக் காலப்பகுதியினைக் கொண்ட எமது காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அடைவொன்றாக பணவீக்கத்தினை வெற்றிகொள்வது காணப்படுகின்றது. 30 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியில் முதற் தடவையாக இவ்வருடம் பணச்சுருக்கமொன்று பதிவாகியுள்ளது. இந்த வீழ்ச்சியானது என்னைப் பொறுத்தவரையில், கட்டமைப்பு ரீதியான மாற்றமொன்றினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்நிலை தொடருமாயின் பணவீக்கமானது இவ்வருடத்தின்

இறுதியில் 2 - 3 சதவீதமாக தொடர்ந்திருக்குமென நாம் எதிர்பார்க்க முடியும். நடுத்தர காலத்தின் போது எமது இலக்கானது பணவீக்கத்தினை கீழ் மட்ட ஒற்றை இலக்கத்தில் பேணும் அதேவேளை, இந்த இலக்கினை அடைந்துகொள்வதற்கு மிகவும் சுதந்திரமாக செயற்படும் வகையில் இலங்கை மத்திய வங்கியினை இயலச் செய்வதும் எமது இலக்காகும்.

79. கௌரவ சபாநாயகர் அவர்களே, முன்னைய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு விட்டுவிடப்பட்ட பிரச்சினைகளில் நாம் இன்னும் சிக்கியுள்ளோம். வெறும் வார்த்தைகளினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார செயலாற்றுகை தொடர்பான அவர்களது பிரச்சாரம் அக்காலத்தில் உச்ச நிலையில் காணப்பட்டதுடன் அவை வெற்றுப்பாத்திரம் பாரிய சத்தத்தை ஏற்படுத்துவது போன்றதாகவே மாத்திரம் இருந்தது. இந்த ஆவணத்தில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் புதிய பொருளாதார வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிபரங்களை வெளியிட்டுள்ளதுடன் அவை, முற்றுமுழுதாக மாற்றமானதொரு தோற்றத்தினைக் காட்டியது. உண்மையில், பொருளாதாரமானது 2013 இல் 3.5 சதவீதத்தினாலும் 2014 இல் 4.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. ஒப்பீட்டு ரீதியில் இவை உருமாற்றப்பட்ட புள்ளிவிபரங்களாக இருந்தது கவலைக்குரியதாகும். இப்பின்னணியில், 2015 இல் பொருளாதார வளர்ச்சியானது ஏறக்குறைய 6 சதவீதமாக இருக்குமென நாம் எதிர்பார்க்கின்றோம். எமது அடைவுகளையும் வெற்றிகளையும் நாம் விட்டுவிடப் போவதில்லை. ஆனால், புதுப்பிக்கப்பட்ட தொழில் முயற்சியுடன் போலிகள் இல்லாதாக்கப்பட்டு அடுத்த சில வருடங்களின் போது வருடாந்த வளர்ச்சியினை 7 - 8 சதவீதமாக மாற்றுவது எமது இலக்காகும். இந்த ஆவணமானது அடையப்பெற்ற வளர்ச்சி மட்டங்களை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடாக அமைவதுடன் அதற்கான சக்தியினையும் வழங்கும்.

80. வேலையின்மைச் சுட்டியானது நாட்டில் ஊழிய சனத்தொகையில் ஏறக்குறைய 4.6 சதவீதமாக காணப்படுகின்றது. ஆனால் வயதினை அடிப்படையாகக் கொண்ட பகுப்பாய்வானது கல்விகற்ற வேலையற்ற இளைஞர்கள் 20 சதவீதத்திற்கு அதிகமாகக் காணப்படும் உண்மையான நிலைமையை வெளிக்கொணர்ந்தது. இது ஒரு ஆபத்தான நிலைமையாகும். இந்நிலையினை எதிர்கொள்வதற்கு உடனடியான மாற்று நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டுமென்பதுடன் இந்நிலை மேலும் மோசமடைவதற்கு அனுமதிக்கப்பட முடியாது. நாம் கல்வியின் பெறுமதியினை உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதுடன் கல்வி தராதரங்களை அடைந்துகொள்வதற்கு முடியுமான இளைஞர்களுக்கான வாய்ப்புகளையும் வழங்குதல் வேண்டும்.

81. கௌரவ சபாநாயகர் அவர்களே, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின்படி வறுமைச் சுட்டியானது 6.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், இலங்கையின் வறுமைச் சுட்டிகளில் உண்மையான மதிப்பீடு மற்றும் பண்பானது நாளொன்றுக்கு 2 ஐ.அ. டொலர்களைவிட குறைவான சம்பாத்தியத்தினை பெறும் மக்களின் எண்ணிக்கை 20 சதவீதத்தினை அண்மித்துள்ளதுடன் இதில் பெரும்பங்கு வறிய சனத்தொகையினர் என்பது தெரியவந்துள்ளது. அத்தகைய நிலைகுறித்து நாம் திருப்தியடைய முடியுமா? இலங்கையில் பிறந்த அனைத்து பிரசைகளும் உணவு, உறைவிடம் மற்றும் ஆடைபோன்ற அடிப்படைத் தேவைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சரியான தீர்வுகளை வழங்குவதற்கான முயற்சியொன்றாக தொடர்புடைய பிரச்சினைகளை தீர்ப்பது சம்பந்தப்பட்ட

அனைவரினதும் பொறுப்பாகும். வருமானப் பகிர்வில் ஏற்றத்தாழ்வு காணப்படுவது குறித்து நாம் கூடியகவனம் செலுத்த வேண்டியுள்ளது.

82. எனவே, பொருளாதாரக் கொள்கை முன்னெடுப்பானது அபிவிருத்திச் செயன்முறையில் சமூகத்திலுள்ள வறிய பிரிவினர் உள்ளடக்கப்பட்டுள்ள முறைமை நன்றாக வடிவமைக்கப்படுதல் முக்கியமான விடயமாகும். இந்த முன்னெடுப்புக்கள் சிறந்த முறையில் இலக்கிடப்பட வேண்டுமென்பதுடன் அரசாங்க நிதிக்கான ஏதேனும் தேவையற்ற சுமையினை குறைக்கும் வகையில் அவை கண்காணிக்கப்படுதலும் வேண்டும். பேண்தகுநிலைக்கான புதிய வழிகளைத் தேடும் சமூகத்திலுள்ள வறியவர்களில் சிறு தொழில்முயற்சியாளர்களுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்பதுடன் அவை சிறுநிதி கைத்தொழிலாளர்களுக்கு சில சாதகமான வாய்ப்புகளை வழங்குவதுடன் பெருமளவிலான முன்னேற்றத்துக்கான பாதையினைக் காட்டுமென நான் உறுதியாக நம்புகின்றேன்.

83. ஆரோக்கியமான தேசமொன்றினை உருவாக்கும் வகையில் இலங்கையின் சிறுவர்கள் மற்றும் தாய்மார்களிடம் காணப்படும் கடும் போசாக்கின்மையை இல்லாதொழித்தல் அத்தியாவசியமானதாகும். சுகாதார சேவைகள் மற்றும் பாடசாலைகளின் ஊடாக பொது மக்களுக்கான கல்வியினை வழங்குதல் மற்றும் தேவையுடையவர்களுக்கு போசாக்குணவினை வழங்குவதற்கான உறுதியான கொள்கை இதுதொடர்பான முயற்சிகளை உறுதிப்படுத்துவது அத்தியாவசியமாகும். எமது எழுத்தறிவு மட்டத்தில் நாம் சர்வதேச தரத்தினை அடைந்துள்ளோம். தெற்காசிய நாடுகளின் தரவுகளுடன் மட்டும் எமது போசாக்கின்மை சுட்டியினை ஒப்பீடு செய்தல் திருப்திகரமானதாக அமையாது. நாம் எமது தரத்தினை இப்பிராந்தியத்திற்கு வெளியே சர்வதேச மட்டத்தில் ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும்.

84. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்த முயற்சியானது உறுதியான பொருளாதாரமொன்றினை கொண்டுவருவதுடன் எமது வெளிவாரி நிலைமையினையும் சென்மதி நிலுவை மீதியினையும் முன்னேற்றுவதற்கு மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. ஏற்றுமதிகளை அதிகரித்தல், இறக்குமதிகளைநியாயப்படுத்தல், நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய உட்பாய்ச்சல்களை தூண்டுதல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தேவையான மறுசீரமைப்புகளை உரிய நடவடிக்கை பரப்புக்களினூடாக இச்செயன் முறையானது அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

85. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கையானது உயர் வர்த்தகப் பற்றாக்குறையினைக் கொண்ட நாடொன்றாகும். எமது ஏற்றுமதிகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் தற்பொழுது மொ.உ. உற்பத்தியில் 14 சதவீதம் என்ற ஆபத்தான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இறக்குமதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அவை மொ.உ. உற்பத்தியில் 27 சதவீதமாக காணப்படுகின்றது. நாட்டின் வர்த்தகப் போக்கானது மொ.உ. உற்பத்தியில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளின் சதவீதம் 2000 களின் நடுப்பகுதியில் காணப்பட்ட ஏறக்குறைய 60 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 41 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சியானது கடந்த அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட குறுகிய பார்வையுடைய கொள்கைகளால் ஏற்பட்டதுடன் ஒரு தசாப்த காலமாக விரிவடைந்தது. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாட்டின் பொருளாதாரமானது திறந்த பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தூரமாகிய பொருளாதாரக் கொள்கைகளை கொண்டுள்ளதுடன் பல வருடங்களாக மூடப்பட்ட பொருளாதாரமாகக் காணப்பட்டுள்ளது. தற்பொழுது காணப்படும் பாதகமான நிலை

ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான தேவையினை ஏற்படுத்தியுள்ளதுடன் மிகவும் புத்தாக்கமிக்க செயன்முறைகளினால் முறையாக பூரணப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

86. இறக்குமதி செலவினத்தினை பேண்தகு நிலையான மட்டத்தில் குறைப்பதற்கான சாத்தியப்பாட்டினை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏற்றுமதி ஊக்குவிப்பானது உற்பத்தி மற்றும் மீள் ஏற்றுமதிக்காக இடைநிலை, முதலீட்டு பொருள் மற்றும் உயர்வருமான வகுதியினரின் தேவைகள் சார் இறக்குமதிகளையும் வேண்டி நிற்கின்றது என்பதனை நான் அறிவேன். இந்நிலைமையில்,விரிவான ஏற்றுமதிச் சந்தைகளை அடைந்துகொள்ளும் நோக்கத்துடன் எமது உள்நாட்டு தயாரிப்புத் துறையினை ஊக்குவிப்பதற்கும் விவசாய உணவுப் பொருட்களின் விளைச்சலினை மேம்படுத்துவதற்கும் தேவையான உதவிகள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதே எமது அக்கறையாகும்.எமது இறுதி நோக்கம் யாதெனில், புதிய ஏற்றுமதி சந்தைகளை திரட்டிக் கொள்வதுடன் தற்பொழுது காணப்படும் ஏற்றுமதி சந்தைகளை விரிவாக்குதல் மற்றும் ஏற்றுமதி பொருட்களை பன்முகப்படுத்தும் அதேவேளை, உணவு தன்னிறைவின் ஊடாக நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுமாகும்.

87. வெளிநாட்டு ஊழிய வருமானம் நாட்டின் சென்மதி நிலுவை மீதியில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. அரசாங்கம் என்ற வகையில் எமது பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்துவதற்கு தமது கடுமையான உழைப்பின் மூலம் பெறுகின்ற வருமானத்தினை எமக்கு அனுப்பிவைக்கின்ற வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையர்கள் அனைவருக்கும் மிகவும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். அதேவேளை, எவ்வித நிபந்தனைகளும் இன்றி அவர்களது பங்களிப்பினை பாராட்டுகின்ற அதேவேளை, எமது தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் பெண் பிள்ளைகளை திறமையற்ற ஊழியர்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பிவைப்பதனை குறைப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுத்தல் வேண்டும். அத்தகைய இடம்பெயர் ஊழியத் தேவைக்கான மாற்றுவழியாக எமது சொந்த நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இந்த நோக்கத்தினை அடைந்துகொள்வதற்கு அனைத்து வழிகளையும் நாம் கண்டறிதல் வேண்டும். எமது ஊழியர்களின் திறன் ஆற்றலினை விருத்திசெய்யும் முயற்சியில் மாற்று உபாயமாக இலங்கைக்கு வெளியே தொழில்வாய்ப்புக்காக அதிக ஆற்றல்கள் மற்றும் பயிற்சிகளைப் பெற்றவர்கள் மற்றும் அனுப்பிவைக்கப்படுவர். அத்தகைய நடைமுறையானது வெளிநாட்டு தொழில்வாய்ப்பினை எதிர்பார்த்திருக்கும் பலருக்கு பெறுமதி சேர்ப்பாக அமையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

88. கௌரவ சபாநாயகர் அவர்களே, வெளிநாட்டுச் செலாவணியினை குறிப்பிடத்தக்களவு ஈட்டித்தருவதுடன் பொருளாதாரச் செயற்பாடுகளை ஊக்குவித்து நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தினை நீங்கள் நன்கு அறிவீர்கள். எமது நாடு சுற்றுலா மையமொன்று என்ற வகையில் முழுமையான ஆற்றல்களையும் கொண்டிருப்பது என்பதனை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தற்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருப்பது என்ன என்பதனை நாம் மிகவும் ஆழமாக நோக்க வேண்டியுள்ளது. முன்னைய அரசாங்கத்தின் சிறு பிள்ளைத்தனமான வெறும் சுலோகங்கள் மாத்திரம் எம்மை உலக தரத்திற்கு உயர்த்தக்கூடிய சுற்றுலா மையமொன்றாக மாற்றுவதற்கு உதவ மாட்டாது. தற்பொழுது நாம் அங்குமிங்கும் அலைந்து திரிவதனை நிறுத்திவிட்டு இலங்கையினை “இந்து சமுத்திரத்தின் முத்து” என்ற அடிப்படையான நிலைக்கு கொண்டுவருவதற்கான விடயங்களில்

கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தொழிற் துறையினை விருத்தி செய்வதற்கான சிறந்த கொள்கை வேலைச் சட்டகமொன்றினை நாம் தயாரிக்க வேண்டிய அவசியம் காணப்படுவதுடன் வரலாற்று புகழ்மிக்க புராதனச் சின்னங்கள் மற்றும் வனப்புமிக்க காட்சிகளைக் கொண்ட சிறப்புமிக்க எமது நாட்டின் என்னிலடங்காத ஆற்றல்களை கண்டறிய வேண்டியுள்ளது.

89. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் செயலாற்றுகை கடந்த தசாப்தங்களின் போது மந்தநிலையில் காணப்பட்டதுடன் மூன்று தசாப்த உள்நாட்டு பிணக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னணியில் கூட நாம் எமது ஆற்றல்களைவிட கீழ் நிலையில் இருக்கின்றோம். கடந்த பத்து வருடங்களின் போது ஆண்டொன்றுக்கு 919 மில்லியன் ஐ.அ. டொலரை மாத்திரம் நாம் பெற்றிருப்பதுடன், கடந்த அரசாங்கத்தின் அரசியல் இயக்கத்தின் மூலம் சர்வதேச தலைவர்களை இலக்காகக் கொண்ட வார்த்தை ஜாலங்களின் மூலம் வெளிநாட்டுக் கொள்கையானது அலங்கரிக்கப்பட்டிருந்தது. இது பல்வேறு கண்ணோட்டங்களின் அடிப்படையில் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாததாகும். குறிப்பாக, ஏற்றுமதி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதேவேளை, உள்நாட்டு சேமிப்புகளில் ஏற்படும் பற்றாக்குறையின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியினை பேணுவதற்கு தேவையான முதலீட்டு மட்டத்தினை அதிகரிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டு பாய்ச்சலினை உருவாக்குகின்ற படுகடனற்ற நிலையினை கவர வேண்டியுள்ளது. கௌரவ சபாநாயகர் அவர்களே, பெரும்பாலான ஆசிய நாடுகளின் பொருளாதாரங்கள் குறிப்பாக நீண்டகால உள்நாட்டு யுத்தத்திலிருந்து மீண்ட நாடுகள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் அதிகரிப்புக் காரணமாக பொருளாதார சுபீட்சத்திற்கான பாதையினை அமைத்தது. நாம் ஏற்கனவே பின்தங்கிய நாடு என்ற வகையில் தடைகளை உடைத்தெறிந்து பொருளாதாரத்தினை உயர்த்துகின்ற முதலீட்டாளர்களை அழைத்து பொருளாதார வளர்ச்சி விகிதத்தினை துரிதப்படுத்துவதற்கு தற்பொழுது சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

90. நாட்டின் வெளிநாட்டுத்துறையின் அபிவிருத்தியை இவ்வாறு தூண்டுதல் இலங்கையின் அந்நியச் செலாவணி ஒதுக்குகளை பெருக்குவதற்கு வழிவகுப்பதுடன் நாணய மாற்றுச் சந்தையில் ரூபாவை உறுதிப்படுத்தவும் வழிவகுக்கும்.

91. உற்பத்தித்திறன் மேம்பாடானது அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மிக முக்கியமானதாகும். உற்பத்தித்திறன் முன்னேற்ற போக்கில் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளில் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்ற அதேவேளை, விவசாயத்துறைக்கு விசேட கவனம் செலுத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது.

92. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் முன்னேற்றமானது நாட்டின் வெற்றிக்கான மிகவும் முக்கியமாகக் காணப்படுகின்றது. இந்தவகையில் மிக முக்கிய துறையின் அபிவிருத்திக்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறையின் மொ.உ. உற்பத்திக்கான பங்களிப்பு ஏறக்குறைய 70 சதவீதமாகக் காணப்படுவது திருப்திகரமாக இருப்பினும், பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் இத்துறையின்பால் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த காலத்தின் அரசாங்க நிறுவனங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்காக வழங்கிய ஒத்துழைப்பு போதியதாகக் காணப்படாததுடன் தனியார் துறையானது இத்துறையின் வளர்ச்சிக்கு போதியளவு

ஒத்துழைப்பு வழங்கியுள்ளதனையும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரை கடந்த அரசாங்கம் போதியளவு கவனம் செலுத்தியதா என்ற விடயம் தெளிவற்றதாக காணப்படுவதுடன் அத்துறையின் அபிவிருத்திக்கு மிகக் குறைந்தளவு பங்களிப்பினையே வழங்கியுள்ளது.

93. விதைகள் மற்றும் நாற்றுப் பொருள்களின் தரம், குறைந்த நுட்பமுறை, விரிவாக்கல் சேவைகள் காணப்படாமை, அறுவடைக்குப் பின்னரான அதிகரித்த நட்டம், குறைந்த பண்ணை விலைகள் அதேபோன்று, களஞ்சிய மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் காணப்படாமை போன்ற பிரச்சினைகளின் காரணமாக விவசாய உற்பத்தித்திறன் மற்றும் தொடர்புடைய விளைவுகள் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. விவசாயத் துறையினை விருத்தி செய்வதற்கு உதவுதொகைகளை வழங்குவதன் மூலம் நாட்டில் பெருமளவு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முக்கியமான தேவைகள் மற்றும் தற்பொழுது நிலவுகின்ற குறைபாடுகளை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்ய வேண்டியது மிக முக்கியமான விடயமாகும். அத்தகைய செயன்முறை ஒன்றின் மூலம் விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை மேலும் தரமுயர்த்த முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

94. கௌரவ சபாநாயகர் அவர்களே,இலகு கைத்தொழில் உற்பத்திகளினை உயர் தொழில்நுட்ப உற்பத்திகளாக மாற்றுகின்ற பெறுமதி சேர்ப்பில் தயாரிப்புத் துறையின் உயர்தர மேம்பாட்டின் மீது நிலைபேறுடைய கைத்தொழில் கொள்கையினை வலியுறுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.தொழில்நுட்பத்தினை பின்பற்றுதல் அதேபோன்று புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தல் என்பன முறையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினால் பலப்படுத்த வேண்டியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கவனிக்கப்பட வேண்டுமென்பதுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு பாரிய தொழில்முயற்சிகளுடன் இணைக்கும் வகையில் வசதியளிக்கப்படுதலும் வேண்டும். இது பாரிய வழங்கல் சங்கிலி மூலம் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கும். வழங்கல் தொடர் முகாமைத்துவத்தின் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் போட்டித்தன்மை மிக்க நிலையிலிருந்து அடுத்த மட்டத்திற்கு எமது கைத்தொழில்களை தரமுயர்த்தும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். உரிய வசதிகளை வழங்கி உள்நாட்டு முயற்சியாண்மைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக உள்நாட்டு கைத்தொழில்களை முன்னேற்ற வேண்டும் என்பதில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கவனம் எடுத்துள்ளார்.

95. நுண்பாக நிதித் துறையானது நிதியியல் ரீதியாக சிறிய மட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு உதவி வழங்குவதற்கான மிக முக்கிய பொருளாதார அம்சமாக உருவாக்கப்பட வேண்டியுள்ளது. சிறிய நிதித் துறையானது கடந்த சில வருடங்களில் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்கு நுண்நிதித்துறையின் பங்களிப்பானது வறுமையைக் குறைப்பதில் ஒரு நேர்க்கணிய தலையீட்டினை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் சாதகமான அபிவிருத்தி மேலும் அதிகரிக்கும் வகையில் உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அடிப்படையில் சிறு நிதித் துறையானது ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

96. விசேடமாக சந்தை தாராளமயமாக்கல் அறிமுகப்படுத்தல் சிறியளவிலான பல்வேறு சேவைகளிலிருந்து தகவல் தொழில்நுட்ப மற்றும் நிதிச் சேவைகள் போன்ற உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் உயர் தொழில்நுட்ப ஆற்றலினைக் கொண்ட உயர்ந்த

செயற்பாடுகளினை அறிமுகப்படுத்தலின் மூலம் சேவைகள் துறையின் முக்கியத்துவம் மற்றும் அதன் தன்மை என்பன கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன. இப்பின்னணியில் குறிப்பாக துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் தொடர்பான செயற்பாடுகள், சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் போன்ற துறைகளில் கொள்கை முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மிக நீண்ட காலமாக வியாபார நடவடிக்கைகளுக்காக வெளியார் சேவையினை பெற்றுக் கொள்ளல் (Business Process Outsourcing - BPO) என்ற விடயம் காணப்படுவதுடன் இத்துறையானது வருடத்திற்கு வருடம் வளர்ச்சியடைந்துள்ளது. ஆயினும், இத்துறையில் எமது ஊழியர்களது உயர்ந்த ஆற்றல் உலக தரத்தின் அளவுக்கு குறிப்பிடத்தக்களவு காணப்படாததுடன் மொ.உ. உற்பத்திக்கு இத்துறையானது போதியளவு பங்களிப்பினையும் வழங்கவில்லை.

97. வேலையின்மைச் சுட்டியானது தொடர்ந்து குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் அடிப்படையில் ஊழிய உற்பத்தித்திறனை அதிகரிப்பதும் மூலதனச் செறிவை அதிகரிப்பதும் அவசியமானதாகும். மூலதனச் செறிவை அதிகரிக்கும் பொழுது தனியார் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். தொழிலின்மை மற்றும் ஊழியப் படையின் பங்குபற்றல் என்பவற்றை நோக்கும் பொழுது பெண்களின் சனத்தொகை சமமற்ற முறையில் பாதிக்கப்பட்டுள்ளது எனவே, இந்த சமநிலையற்ற பாதிப்புக்கு தீர்வாக சிறுவர் பராமரிப்பு வசதிகளை அதிகரித்தல் மற்றும் நம்பக்கூடிய பொதுபோக்குவரத்து வசதிகள் போன்ற சேவைகளை வழங்குவதின்பால் கவனம் செலுத்துதல் வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு இலங்கைப் பெண்கள் வழங்குகின்ற உயர்ந்த பங்களிப்பு நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். ஆகவே நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் முகமாக எமது தாய்மார் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தொடர்ந்தும் பேணுவதற்கான அவர்களுக்கு அதிகபட்ச வசதிகளைச் செய்வதற்கு உரிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டியுள்ளது.

98. கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பழமையான தொழில் சட்டங்கள் காலத்திற்கேற்றவாறு திருப்தியமைக்கப்பட்டது. எவ்வாறாயினும், நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் சமூக தடைகளினால் தற்போது காணப்படும் திறன்கள் மற்றும் தேவைப்படும் திறன்களுக்கிடையில் காணப்படும் அசாதாரண நிலை காரணமாக தொழில் நிகழ்ச்சித் தன்மையானது கீழ் மட்டத்திலே காணப்படுகின்றது. கல்வி மறுசீரமைப்புக்களின் ஊடாக புதிய பாடவிதானங்கள் அறிமுகம் செய்யப்படுவதினூடாக இவ் அசாதாரண நிலைமைகளுக்கிடையில் ஒரு இணக்கப்பாட்டை உருவாக்கும் நடவடிக்கைகளை கல்விசார் வல்லுனர்களிடத்தில் சாட்டப்பட வேண்டியுள்ளது. அதேபோல் இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் அத்துறையில் ஏற்பட்டுள்ள எதிர்மறை காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

99. இதற்கு மேலதிகமாக விசேட திறன்களைக் கொண்டவர்களை தொழில்படையினுள் உள்வாங்குவதற்காக பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூகப் பொருளாதார நடைமுறைகள் மேம்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். இச்சந்தர்ப்பத்தில் தேவைப்படுவது என்னவென்றால் விசேட திறன்களைக் கொண்டவர்களுக்கு நிலையான தொழில்

வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே அன்றி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதல்ல.

100.கௌரவ சபாநாயகர் அவர்களே, நீங்கள் அறிந்ததன் படி ஆட்சியிலிருந்த அனைத்து அரசாங்கங்களும் கல்வி தொடர்பாக பல கொள்கைகளை அமுல்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலைமையை தொடர்ந்தும் நிலையாகப் பேணுவதற்கு அவசியமான மனித வளத்தை உருவாக்குவதற்காக இலங்கைக் கல்வி முறைமையில் முழுமையானதொரு நவீனமயமாக்கல் அவசியமாகின்றது. இலங்கையின் கல்வி முறையானது சிறார்களின் வாழ்க்கைத்திறன் அபிவிருத்தி மற்றும் சுதந்திரமான சிந்தனை சக்தியை ஊக்குவிக்கும் முகமாக தற்போது காணப்படும் பரீட்சையைக் கேந்திரமாகக் கொண்ட பாடவிதானங்களுக்கு மாற்றமாக தகைமைகளை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானங்களைக் கொண்டதாக சீர் செய்யப்பட வேண்டியுள்ளது. குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு சமமான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக அத்தியாவசிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் அப்பாடசாலைகளின் துப்பரவேற்பாட்டு வசதிகள் வாசிகசாலை மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடங்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் துரித கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

101.கடந்த காலங்களில் கல்வித்துறை தொடர்பாக அரச முதலீடானது தொடர்ந்தும் குறைவடைந்து சென்றமை சிறப்பானதொரு விடயமல்ல. இவ் எதிர்மறை நிலைமை தொடர்பாக மீளாய்வு செய்வதற்குரிய காலம் மலர்ந்துள்ளதென நான் நினைக்கிறேன். கௌரவ சபாநாயகர் அவர்களே, மாணவர்களுக்கு மாத்திரமல்லாமல் வினைத்திறனான மற்றும் செயற்திறனான சேவையாளர்களை எதிர்பார்க்கும் தொழில் கொள்வோருக்கு உரிய மாற்றத்தை உருவாக்குவதற்கும் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் எமது நல்லாட்சி அரசுக்கு இயலுமை காணப்படுகின்றது என நான் நம்புகின்றேன்.

102.இளைஞர்களிடத்தில் காணப்படும் தொழிலின்மை மற்றும் கீழ் உழைப்பு என்பவற்றைக் குறைக்கும் நோக்கில் பட்டதாரிகளின் தகைமைகள் மற்றும் தொழிற்சந்தையின் தேவைகள் என்பவற்றுக்கிடையில் காணப்படும் சமமின்மையை இல்லாதொழிப்பதற்காக இலங்கையின் பல்கலைக்கழக உயர் கல்வி கட்டமைப்புக்கும் உரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

103.மாறிவரும் சனத்தொகை கட்டமைப்பானது அதிகரித்துவரும் வயோதிப சனத்தொகைக்கு அவசியமான வசதிகளை பெற்றுக் கொடுப்பதோடு முழுமையான சுகாதார சேவைகளினதும் அபிவிருத்தியை வேண்டிநிற்கின்றது. நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு முதிர்வடைந்துவரும் மனிதவள தொகுதியை உரிய முறையில் நாட்டின் நலனுக்கு பயன்படுத்தக்கூடிய வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படுவதோடு அவர்களது விருப்பு வெறுப்புக்களும் கருத்திற்கொள்ளப்படல் வேண்டும். அதேபோல் அடையாளம் காணப்படாது பரவிவரும் சிறுநீரக நோய் துரிதமாக அதிகரித்துவரும் புற்றுநோய் மற்றும் பெருகிவரும் டெங்கு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைளும் எடுக்கப்படல் வேண்டும். அதிமேதகு சனாதிபதி அவர்கள் அதிகரித்து வரும் சிறுநீரக நோயினை இல்லாதொழித்து இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத்துன்பத்திலிருந்து விடுதலை அளிப்பதற்கு அர்ப்பணிப்புடன் அயராது உழைத்து வருகின்றார்.

104.மந்தகதியில் இடம்பெற்றுவரும் சனத்தொகை வளர்ச்சி காரணமாக உருவாகிவரும் முதியோர் சனத்தொகையினால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் சுகாதார சேவையினை நவீனமயப்படுத்துவதோடு கவர்ச்சிகரமான ஓய்வூதிய முறைமையொன்றும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். தனியார் தொழிலாளர்களுக்கு ஒரு ஓய்வூதிய முறைமையொன்று உருவாக்கப்படுவதன் தேவையானது இன்றியமையாததாகும். ஏனெனில் அதன்மூலம் முதியோர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கும் அவர்களது எதிர்காலத்தை பாதுகாப்பதற்கும் உதவும்.

105.இலங்கை சனத்தொகை கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்துடன் முதியவர்கள் மற்றும் ஆயுட்கால எதிர்பார்க்கையில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு மற்றும் ஓய்வுபெறும் சனத்தொகையின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சேமிப்பு மற்றும் ஓய்வூதிய மாற்று முறைமைகள் உருவாக்குவது இன்றியமையாததாகும். சந்தையில் காணப்படும் குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களில் பெரும்பாலோனோர் வட்டி வருமானத்தை நம்பியிருப்பதன் காரணமாக இப்புதிய முறைமைகள் உருவாக்கப்படுவதை துரிதமாக வேண்டிநிற்கின்றது.

106.சனத்தொகை வளர்ச்சி மற்றும் மேம்பட்டுவரும் சமூக பொருளாதார நிலைமைகள் காரணமாக காலமாற்றத்தோடு சிறந்த தரத்திலான விலைக்கு வாங்கக்கூடிய வீடுகளின் தேவையும் அதிகரித்துள்ளது. விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் உள்நாட்டு குடிபெயர்வு காரணமாக இது பெரும் சிக்கலான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய ஆட்சிக் காலத்தில் விசேடமாக காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி அவர்கள் மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதில் மிகவும் கவனம் செலுத்தினார். அச்செயல் முறையை மீண்டும் ஆரம்பிக்கக் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

107.நடுத்தரமட்ட வருமானம் உழைப்போர்களின் வீட்டுத் தேவையானது பல வருடங்களாக அதிகரித்துச் சென்றுள்ளது. அதிகூடிய விலை காரணமாக தனியார் துறையினால் அமுல்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களிலிருந்து உரிய வீடுகளை இவர்களால் பெற்றுக் கொள்வதில் இயலாத விடயமாகும். ஆகவே, நடுத்தர வருமான வகுதியினருக்கு வசதிசெய்து கொடுக்கும் முகமாக கிரயத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடிய மட்டத்திலான வீட்டுத் திட்டங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கத்தின் தலையீடு இன்றியமையாதது. இது அரச தனியார் பங்குடமையாக அமுல்படுத்தப்பட முடியும்.

108.அதே போல் தற்போது காணப்படும் மின்சாரம், குடிநீர் விநியோகம், வடிகாலமைப்பு மற்றும் கழிவகற்றல், தொலைத்தொடர்பு, இணையதள வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியன நவீன பொருளாதாரமொன்று வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் செயற்படுவதற்கு போதுமானதன்று ஆகவே, மேல் மாகாணத்தில் காணப்படும் மேற்கூறப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யு முகமாக மாநகரக் கோட்பாடனாது ("Magapolis") உரிய தீர்வாகக் கருத முடியும்.

109.வினைத்திறனற்ற பொதுப் போக்குவரத்து துறை காரணமாக குறைந்த பிரயாணிகளைக் கொண்ட தனியார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் வாகன நெரிசல் அதிகரித்து அது குடித்தொகுதியில் மற்றும் முழுப் பொருளாதாரத்தினதும் எரிபொருளுக்கான விரயத்தை அதிகரித்துள்ளதோடு குறிப்பிடத்தக்களவான மனித மணித்தியாலங்களை வீணாக்குகின்றது.

உயர் தரத்திலான மற்றும் நம்பகமான பொதுப் போக்குவரத்து வசதி காணப்படாமையினால் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அதிகூடிய முதலீடுகளை மேற்கொண்டாலும் தொடர்ந்தும் வாகன நெரிசல் காணப்படுகின்றது. ஆகவே தற்போது நகரப் பிரதேசங்களில் காணப்படும் வீதிப் போக்குவரத்து மற்றும் புகையிரதப் போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதில் உரிய நடவடிக்கைளை எடுப்பது முக்கியமானதாகும். கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி அளவுகோலாகக் காணப்பட்ட பிரதான வீதிகள் மற்றும் தார் இடப்பட்ட வீதி வலையமைப்பு மாத்திரம் நாட்டின் போக்குவரத்து அபிவிருத்தியை மதிப்பீடு செய்ய முடியாது. மிகவும் பிரதான விடயம் என்னவெனில் தனிப்பட்ட வாகனங்களின் பாவனையை குறைப்பதற்கு நாட்டின் அனைத்து மக்களும் பயன்படுத்தக்கூடிய பொதுப் போக்குவரத்து முறைமை உருவாக்கப்படுவது இன்றியமையாததாகும்.

110.உபாய ரீதியான இலங்கையின் அமைவிடம் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் சர்வதேச தொடர்பு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் இடத்து உட்கட்டமைப்பு வசதிகளை வினைத்திறனாகப் பயன்படுத்தும் நோக்கில் தனியார் துறை வர்த்தக நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுவது இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமானதாகும். கடல்கடந்து தமது சேவைகளை விரிவுபடுத்தக்கூடிய நிதி நிறுவனங்களை உருவாக்குவதற்கு தனியார் துறை ஊக்குவிக்கப்படும். இதன்மூலம் திறன்களைக் கொண்ட தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதோடு அது பொருளாதார நடவடிக்கைளின் அதிகரிப்புக்கும் ஆதரவளிக்கும். அதேவேளை, நிதிப்பாய்ச்சலை ஊக்குவிக்கும் நோக்கில் உலகளாவிய வர்த்தக மையமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு செயற்படுவதற்கு அவசியமான சட்டரீதியான வசதிகள் செய்து கொடுக்கப்படும். காலவதியான பொருளாதார தேர்வுகளிலிருந்து விலகி பல அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினால் வெற்றிகரமாக கைக்கொள்ளப்பட்டுள்ள புதிய மற்றும் நுட்பமான முறைகளை பின்பற்றுவதற்குரிய காலம் இதுவாகும்.

111.அபிவிருத்தித் தேவைகள் மீதான கண்ணோட்டமானது சுற்றாடலுடன் இணைந்து செல்லல் வேண்டும். இதனடிப்படையிலே அனைத்து உட்கட்டமைப்பு கருத்திட்டங்களின் அமுலாக்கலின் முன் தேவையான உரிய சுற்றாடல் தொடர்பான அனுமதிகளை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தும் முகமாக சிறந்ததொரு பொறிமுறையினை உருவாக்குவதன் அவசியம் தேவையேற்பட்டுள்ளது. பல பாரிய கருத்திட்டங்களில் சூழல் மற்றும் சூழலியயல் பிரச்சினைகள் சரியான முறையில் காணப்படவில்லை என்பதற்கும் நாம் பல உதாரணங்களை நிலுவையாக வைத்திருக்கின்றோம்.

112.நிலை நிற்கும் அபிவிருத்தி செய்முறை தொடர்பில் சுற்றாடலுக்கு உகந்ததும் வினைத்திறனானதுமான சக்தி பாவனையை ஊக்குவிப்பதும் எமது வலியுறுத்தலாக அமைகிறது. மின்வலு போக்குவரத்து மற்றும் தொடர்புடைய துறைகளில் கணிய எண்ணெய் அடிப்படையிலான சக்தி பயன்பாட்டிற்கு பதிலாக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சூரியஒளி மற்றும் உயிரியல் திண்மக்கழிவுகள் அடிப்படையிலான சக்தி வழங்கலை பயன்படுத்துவதனை அதிகரித்தல் இன்றியமையாதது.

## புதிய பொருளாதார ஒழுங்கு

113. கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ் அரசாங்கத்திற்கு மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதில் மற்றும் இவற்றில் பலவற்றை நாட்டின் எதிர்காலப் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குரியஒரு உறுதியான அடிப்படையினை உருவாக்குவதிலும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. எமது இலக்கானது தெரிவுச் சுதந்திரத்தினை பொருட்படுத்தக் கூடிய வகையில்பொருளாதார சனநாயகத்துடன் கூடிய பெறுமதி சேர்ப்பு மற்றும் புதிய வாய்ப்புக்களை உருவாக்குவதாகும்.

114. நாங்கள் முதன்மைப்படுத்தும் முன்னேற்றங்கள் சர்வதேச சுட்டிகளில் இலங்கையினை முன்னேற்றகரமான நிலையில் பிரதிபலிக்கக் கூடியது. சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நிலையை மேம்படுத்துவதற்கு வியாபாரம் செய்யும் சுட்டி (Doing Business Index), உலகளாவிய போட்டித்தன்மை சுட்டி (Global Competitiveness Index), உலகளாவிய புதுமை உருவாக்கும் சுட்டி (Global Innovation Index), வலைபின்னல் தயார் நிலை சுட்டி (Network Readiness Index) மற்றும் உலகளாவிய பொருளாதார அறிக்கை (Global Economic Report) என்பவற்றில் எமது நிலையை மேம்படுத்துவது இன்றியமையாததாகும்.

115. ஆகையால் அரசாங்கமானது சந்தை நோக்கிய கொள்கைகளை பின்பற்றி தனியார்துறை பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல் மற்றும் சந்தை பொருளாதாரத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு இடையூறாக உள்ள பல்வேறுபட்ட தடைகளை நீக்குவதிலும் அரசாங்கம் முழுமையாக அர்ப்பணித்துள்ளது. அரசாங்கத்தின் புதிய பொருளாதார ஒழுங்கானது இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக முக்கியத்துவம் பெறுவதோடு மற்றும் கடந்த கால தவறுகள் மற்றும் பக்கச் சார்புகளிலிருந்து விலகி இதனை பூச்சியத்தை அடிப்படையாகக் கொண்ட தளத்திலிருந்து தயாரிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

116. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாங்கள் பல இழந்த வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றோம். காலஞ்சென்ற கௌரவ டட்லி சேனாநாயக்க அவர்கள் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வகையில் யாழ்ப்பாணத்திற்கு ஒருபாதையை நிர்மாணிப்பதற்குரிய அபிவிருத்தியை கொண்டிருந்தார். ஆனால் மாற்று வழியாக மக்களுக்கு அரிசி வழங்குவதனை விரும்பியிருந்தார். 1967 இல் “ஆசியான்” (ASEAN) அமைப்பில் உறுப்புரிமை பெறுவதற்கான வாய்ப்பினை இலங்கைக்கு தட்டில் வைத்து வழங்கப்பட்டிருந்தது. கௌரவ சபாநாயகர் அவர்கள், ஆசியான் மாநாட்டில் பங்குபெறும் நோக்குடன் விமான நிலையத்திற்கு சென்றிருந்த போதும் சில இடதுசாரி கட்சிகளின் எதிர்ப்பினால் அதனை கைவிட்டு திரும்பினார். பின்னரான காலப்பகுதியில் உயர்நிலையான இந்த பிராந்திய அமைப்பில் அங்கத்துவம் பெற முயற்சி செய்யப்பட்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை என்பது வருந்ததக்கதாகும். இவ்வாறு பல சந்தர்ப்பங்களை நான் எடுத்து கூற முடியும் என்பதுடன் இவற்றிலிருந்து நாம் கசப்பான பாடங்களை கற்றுக்கொள்கிறோம்.

117. நாங்கள் மேலும் அத்தகைய சந்தர்ப்பங்களை தவறவிடும் நிலையில் இல்லை. நாங்கள் இன்று சமர்ப்பித்தவைகள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துகிறோம் என்பதுடன் மகிழ்ச்சியும் சுபீட்சமும் உடைய ஒரு எதிர்காலத்தினை எதிர் நோக்கியுள்ளோம். எமது அர்ப்பணிப்பான குறிக்கோள் என்பது எதுவித வேறுபாடும் அற்றவாறு சகல இலங்கையர்களுக்கும் சிறந்த ஒரு

எதிர்காலத்தினை வழங்குவதாகும். எமது தாய்நாட்டினதும் எதிர்கால சந்ததியினதும் நலனைக் கருத்தில் கொண்டு நாம் யாவரும் ஒருமித்து முன்நடப்போம்.

118.கௌரவ சபாநாயகர் அவர்களே, கீழே குறிப்பிடப்பட்டுள்ள எமது நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு தேவையான தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு எங்களால் முடியும் என்பதுடன் அதற்கு நாம் தயாராக இருப்பதுடன் விருப்பமும் கொண்டுள்ளோம். கடந்த காலங்களை மறந்து இந்த முக்கியமான பணியில் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

119.இந்த இடத்தில் அதிமேதகு சனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, ஏனைய அமைச்சரவை சகாக்கள் மற்றும் எமது அரசாங்கம் சார்பில் நான் எமது தாயகத்தினை சுபீட்சம் நோக்கிய பாதையில் முன்னெடுத்து செல்வதற்கு ஒன்றினையுமாறு பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கும் நட்புக்கரம் நீட்டுகின்றேன். நான் எமது பொருளாதாரத்தின் சரியான நிலைமைகளை தெளிவுபடுத்தியுள்ளேன். வருடங்களாக நிலவும் இந்த சீரழிவு நிலையிலிருந்து மீளுகைப் பெறுவதற்கு நாம் ஒன்றினையாது விடின் நாம் முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புகள் தேய்வடையும். “இருட்டினைச் சபிப்பதனை விடுத்து ஒரு மெழுகுவர்த்தியினை ஒளியேற்றி இருட்டினை விளக்கி விடுவோம்”.

120.இந்தப் பின்னணியில் எமது அரசாங்கத்தின் கன்னி வரவு செலவுத் திட்டத்திற்கு உட்பட்டுள்ள முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு விரும்புகிறேன். எமது அரசாங்கம் இன, மத அல்லது சமூக இடையூறுகளை களையும் அரசாங்கமாகவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நன்னிலைக்காக ஒற்றுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு அரசாங்கமாகவும் உள்ளது.

# வரவு செலவுத்திட்டப் பிரேரணைகள்

## சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல்

121. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாட்டின் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் முக்கியத்துவமானது, அவ்வியாபாரங்களானது வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் போதும், வருமான விநியோகத்தின் போதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் போன்றனவற்றின் போதும் பிரதேச அபிவிருத்தியின் போதும், சமூக ஒன்றிணைப்பின் போதும் பெரும் பங்காற்றுகின்றது. இன்று நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை எமது பொருளாதார உபாயங்களில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. பொருளாதாரத்தில் பெரும் பங்கைக் கொண்டுள்ள பிரதான துறைகளாக மரத் தளபாடங்கள், தகவல் தொழில்நுட்பம், பால் சார்ந்த உற்பத்திப் பொருட்கள், வீட்டுத் தோட்டம், உணவுக் கைத்தொழில், காய்கறிகள், பழங்கள், நன்னீர் மீன் வளர்ப்பு, அழகுக் கலை, அலங்கார மீன் வளர்ப்பு போன்ற இன்னோரன்ன துறைகளே விளங்குகின்றன.

122. நுண், சிறிய, மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளினால் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, இத்தொழில் முயற்சியாளர்கள் மூலதனத்தினையும், கடனையும், பெற்றுக் கொள்ளும் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளின் காரணமாக இவ்வியாபாரத்தினை விரிவடையச் செய்தலானது, சிரமமான ஒரு விடயமாக உள்ளது. எனவே, எமது அரசாங்கம் இத்தொழில் முயற்சியாளர்களின் வளர்ச்சியின் போது பங்காளர்களாவதற்கு கவனம் செலுத்துகின்றது. எனவே, ஏற்கனவே எம்மால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் ஒட்டு மொத்தப் பிரச்சினைகளையும் உள்ளடக்கக் கூடிய வகையில் அவை தொடர்பான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் நுண் நிதி வர்த்தகத்தினை நிர்வகிப்பதற்காக, இப்பாராளுமன்றத்தில் சட்ட மூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு, இத்துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவசியமான ஒழுங்கு முறை அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்படும். அதே போல சகல நுண் நிதி நிறுவனங்களும் இவ்வதிகார சபையின் கீழ் ஒரு அலகுக்கு ரூபா 25,000/= வீதம் வருடாந்தக் கட்டணத்துக்குப் பதிவு செய்ய வேண்டுமெனப் பிரேரிக்கின்றேன். கௌரவ பிரதமர் அவர்களால் 2015 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி முன் வைக்கப்பட்ட கொள்கைக் கூற்றில் காட்டப்பட்டவாறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரப் பிரிவினால் முகங் கொடுக்கப்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனைக் குழுவொன்று ஸ்தாபிக்கப்படும். அதே போல, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரப் பிரிவின் எதிர்கால நடவடிக்கைகள் அவர்களின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

123. இத்துறையில் காணப்படும் உயர்வான நிர்வாகச் செலவு மற்றும் இடர் காரணமாக நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு தற்போது உள்ள வங்கிகள் உள்ளடங்கலாக நிதி நிறுவனங்களினால் கடன் வழங்கும் போது அதிக விருப்பக் குறைவு காட்டப்படுகின்றது. அதே போன்று தற்போது காணப்படும் நிதி நிறுவனங்கள் பிணையை அடிப்படையாகக் கொண்டு நிதியியல் தொடர்பாக அதிக நம்பிக்கை வைப்பதனால் புதிய தொழில் முயற்சியாளர்களும், தற்போது உள்ள தொழில் முயற்சியாளர்களும் இப்பிணையை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே, 2016 ஆம் அண்டில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூபா 500 மில்லியன் அடிப்படைத் தொகையொன்றை தெரிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் உதவியுடன் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன் மொழிகின்றேன்.

இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடனைச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அடிப்படைக் கடன் தொகையில் 75 சதவீதமான கடனுக்கு உத்தரவாதமளிக்கப்படும். இதன் மூலம் இத்துறையில் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒப்பீட்டளவில் மலிவான நீண்ட கால நிபந்தனைகளின் கீழ் **பதில் நிதி** நிறுவனத்திற்குப் பிரவேசிப்பதற்கான வசதிகள் விரிவாக்கப்படும். இது தொடர்பாக இத்துறைக்கு சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தின் கீழ் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் கடன் வரிசையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பெற்றுக் கொள்வதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக்கு உதவுவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக்ய திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்-நிதிக் கருத்திட்டம் ஆகிய கடன் பிரேரணைத் திட்டங்கள் பாரிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வசதியளிப்பொன்றாக அதனுடன் இணைக்கப்படும்.

124. கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு இன்று காணப்படும் பொதுவான ஒரு நிதி முறையாக பிணையை அடிப்படையாகக் கொண்ட படுகடன் நிதியீட்டினைக் குறிப்பிடலாம். ஆயினும், வியாபாரமானது மிக விஷேடமான அபிப்பிராயங்களுடன் ஆரம்பிக்கப்படுவதனால், பிணையாக வைக்கக் கூடிய அளவுக்கு தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் அவர்களிடமில்லை. எனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான பங்குரிமை நிதியீட்டு வசதிகளை வழங்குவதற்காக வங்கிப் பாதுகாப்புக் கம்பனி, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் வெளிநாட்டு நிதியை உள்ளடக்கிய “நிதியத்தின் நிதி” யினை ஸ்தாபிப்பதன் ஊடாக வியாபார மூலதனப் பிரவேசத்திற்கு ஆரம்பம் ஒன்றினை வழங்குவதற்கு முன் மொழிகின்றேன். இங்கு நான் இதற்கான நிதி உதவியினை வழங்குமாறு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்திடமும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் வேண்டிக் கொள்கின்றேன். அதேபோன்று, தனியார் துறை வியாபாரங்களுக்கும் இந்நிதியத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இந்நிதியத்தின் ஊடாக பொறுப்பு வாய்ந்த வியாபார மூலதனக் கம்பனிகளுக்கு குறைவான திரும்பலொன்று கிடைக்கக் கூடிய வகையில் கடன் வசதிகள் வழங்கப்படும். அதன் பிரகாரம், அவ்வியாபாரக் கம்பனிகளினால் இச்சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு அவசியமான பங்குரிமை முதலீட்டினை மேற்கொள்ளப்படும். இப்பங்குரிமை முதலீடுகளுக்கு மேலதிகமாக நீண்ட காலத்திற்கான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக இக்கம்பனிகளினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமாகவுள்ள சேவைகளான நிதித் திட்டமிடல், தகவல் தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் உபாயங்கள் போன்றன வழங்கப்படும். இப்பூர்வாங்க வேலைகளை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான மூலதனக் கம்பனிகளுக்கான நிறுவன வருமான வரி 5 வருட காலப்பகுதிக்கு 50 சதவீதத்தினால் குறைப்பதற்கு முன் மொழிகின்றேன். இது 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

125. கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறிய கைத்தொழில் பூங்காக்களை மொனராகலை, புத்தளம், யாழ்ப்பாணம், வன்னி மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில் ஸ்தாபிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். இச்செயற்பாட்டில் இணைந்து கொள்ளுமாறு தனியார் துறையையும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இம்முதலீடுகள் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் ஊக்குவிப்பதற்காக இலாபம் உழைக்கும் ஆண்டிலிருந்து 3 வருட காலப் பிரிவிற்குள் குறிப்பிட்ட வரி வீதம் 50 சதவீதத்தினால் குறைப்பதற்கும் முன் மொழிகின்றேன். இதற்காக,ரூபா 150 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் பிரேரிக்கின்றேன்.

126. மேலும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். சந்தைப்படுத்தலுக்கும் காட்சிப்படுத்தலுக்கும் நிதி பற்றாக்குறையாக இருப்பதனால், அவர்களின் சிறப்புச் சந்தைகள் மற்றும் சில்லறைக் கடைகள் என்பவற்றுக்கு தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான அலுமாரிகளை நியாயமான விலைக்கு வழங்குவதன் மூலம் அவர்களுக்குக் கைகொடுக்குமாறு நான் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

**விவசாயம்**

127. கௌரவ சபாநாயகர் அவர்களே, விவசாயத்துறையானது, எமது பொருளாதாரத்தின் சமூக நிலையிலும், வரலாற்றிலும் அடித்தளமாக விளங்குகின்றது. ஆயினும், கிடைக்கின்ற புள்ளி விபரம் இத்துறை பற்றிய வேறுபட்ட கதையொன்றைச் சொல்கின்றது. எமது விவசாய இறக்குமதிகள் சுமார் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன்களாகும். எமது விவசாயிகள் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களினாலும், இடைத்தரகர்களின் சுரண்டலினாலும், தமது அறுவடைகளுக்கு நியாயமான விலையொன்றினைப் பெற்றுக் கொள்ள முடியாத நெருக்கடியான ஒரு நிலைக்கு இன்னும் தள்ளப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் எமது நுகர்வோரும் தரம் குறைந்த விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமற்ற விலைகளைச் செலுத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. எனவே, இப்போக்கிற்கு உடனடியாகத் தீர்வு எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை நாம் உணர்கிறோம். இது தொடர்பாக விரிவான ஒரு கோணத்தில் பார்க்க வேண்டியதன் அவசியத்தினையும் நாம் உணர்கின்றோம். இந்நிலைமையின் கீழ் புதிய விவசாயக் கொள்கையொன்றினை தயாரிப்பதற்காக எமது புதிய அரசாங்கத்திற்கு தலைமைத்துவத்தினை வழங்கும் அதி மேதகு ஜனாதிபதி அவர்களும், கௌரவ பிரதமர் அவர்களும், அவர்களது கவனத்தினைச் செலுத்தியுள்ளனர்.பயிர்களைப் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் ஆகியனவற்றின் ஊடாக 2018 ஆம் ஆண்டளவில் எமது நாடு சோளம், அவரை, மிளகாய், உருளைக் கிழங்கு, மற்றும் பெரிய வெங்காயம் ஆகியனவற்றின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், தங்கியிருக்கும் விவசாய முறைமையிலிருந்து விவசாய வர்த்தகம் வரை விருத்தி செய்வதற்கும் அதன் மூலம் 2020 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதிச் சந்தைக்குள் பிரவேசிக்கக் கூடிய வகையில் எமது விவசாயக் கொள்கை தயாரிக்கப்படும்.

128. மேலும், விவசாயத் துறையின் அறுவடையினை அதிகரிப்பதற்கான உகந்த உபாயத்தினை அரச மற்றும் தனியார் துறையின் உறுதியான ஒருங்கிணைப்பின் மீது தங்கியுள்ளதை நாம் இனங்கண்டுள்ளதோடு, அதன் மூலம் விவசாயத் துறையின் நிரம்பல் சங்கிலியைப் பலப்படுத்துவதன் மூலம் முகாமைத்துவம் செய்யக் கூடியதாக உள்ளது. இங்கு நாம் தலைமைத்துவத்தினை ஏற்பதற்கு தனியார் துறையினை ஊக்குவிப்போம். விதைகள், நாற்றுப் பொருட்கள், போன்றனவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வசதிகளை அளிக்கக் கூடிய நிதிச் சூழல் ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பயன்டுத்தப்படாத, குறை பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட அரச காணிகளை கேள்விகளுக்கு ஏற்ப வழங்குவது உள்ளடங்கலாக பல்வேறு செயற்பாடுகளை எடுப்பதற்கு முன் மொழிகின்றேன்.

129. கௌரவ சபாநாயகர் அவர்களே, விவசாயத் துறைக்கான முதலீடானது, விஷேடமாக உற்பத்தித் திறனின் விருத்தி என்பது மிக முக்கியமான ஒரு தேவைப்பாடாகும். மிகச் சிறந்த உற்பத்தித் திறனொன்றினை உறுதிப்படுத்துவதற்காக உயர் தரத்திலான விதைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளமையானது மிக முக்கியமானதாகும். அதன் பிரகாரம், உயர் தரத்திலான விதைகளையும், நாற்றுப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கு அரச மற்றும் தனியார்

துறைகளின் சிறந்த ஒருங்கிணைப்பினை ஊக்குவிப்பதற்கு பயன்படுத்தப்படாத,குறைவாகப் பயன்படுத்தப்பட்ட அரசாங்கக் காணிகள் வெகுமதியாக தனியார் துறைக்கு வழங்கப்படும். இதற்காக,ரூபா 1000 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

130. சொட்டு நீர்ப்பாசன முறைமைகளையும், பச்சை இல்ல தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தும் மற்றும் உயர் விளைச்சலைத் தரக் கூடிய விதைகளை அறிமுகப்படுத்தும் கம்பனிகளுக்கு அரைவாசி வரி விடுமுறை (Half Tax Holidays) வழங்கப்படும். உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான பொறிமுறைப்படுத்தலின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி தொடர்பான இறக்குமதி வரிகளை நீக்குவதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

131. அதே நேரம், ஒருங்கிணைந்த பங்கேற்பொன்றுடான நிரம்பல் சங்கிலி இணைப்புக்களை பலப்படுத்துவதற்காக விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் அறிவினை அவர்களது நாளாந்த கடமைகளுக்கு மேலதிகமாக தனியார் துறையின் பண்ணைகளிலும் கட்டணமொன்றினை அறவிடுவதன் மூலம் வழங்குவதற்கு அனுமதி வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

132. கௌரவ சபாநாயகர் அவர்களே, களஞ்சியப்படுத்தலும், சந்தைப்படுத்தலும் எமது விவசாயத் துறையில் நிலவி வரும் பிரதான ஒரு பிரச்சினையாகும். சுமார் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவுள்ள அறுவடைக்குப் பின்னர் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைப்பதற்காக நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட முழுமையான களஞ்சியங்களை ஸ்தாபிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். விவசாய அறுவடையின் போது விலை குறைவடைந்து செல்வதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக விவசாயிகளின் நெல், சோளம், எள்ளு, மிளகு, உழுந்து போன்ற பயிர்களின் விளைச்சல்களையும் களஞ்சியப்படுத்தக் கூடிய வகையில் விவசாயிகளுக்கு உயர் தரத்திலான களஞ்சிய வசதிகள் வழங்கப்படும். இக்களஞ்சிய வசதிகளின் போது தமது அறுவடைகளை களஞ்சியப்படுத்தும் போது களஞ்சியத்தினால் வழங்கப்படும் சிட்டை வர்த்தக வங்கியொன்றுக்கு வழங்குவதன் மூலம் விவசாயிகள் தமது உடன் பணத் தேவையை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அறுவடைகளின் பெறுமதியில் 50 சதவீதம் பெறுமதியான கடன் நிதித் தொகையொன்றை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆயினும், விலை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் விவசாயிகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தமது அறுவடைகளை சந்தையில் நிலவும் உயர்வான விலைக்கு விற்பனை செய்யக் கூடியதாக இருக்கும். இச்செயன்முறைக்குள் விவசாயி இடைத் தரகர்களின் சுரண்டலுக்கு உள்ளாகமலிருப்பதோடு, பருவமல்லாத காலப்பகுதியில் தமது அறுவடைகளுக்கு உயர்வான விலையொன்று கிடைக்கப் பெறுவதையும் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. ஏற்கனவே, அரசாங்கம் அனுராதபுரம், மொனராகலை மாவட்டங்களில் இவ்வாறான களங்சிய வசதிகள் நிர்மாணித்துள்ளதோடு, மன்னார் மாவட்டத்தில் களஞ்சியமொன்று நிர்மாணிக்கப்பட்டும் வருகின்றது. இம்முறைமையின் ஊடாக விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் இறுதி நுகர்வோனுக்கு அனுப்பும் போது இடையில் ஏற்படக்கூடிய செலவுகள் குறைவடைவதனால், சாதாரண விலையொன்றினைச் செலுத்துவதன் மூலம் நுகர்வோருக்கும் பயனுள்ளதாய் அமைகின்றது. அதன் பிரகாரம் பொலனறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி (எம்பிலிபிட்டிய) மாவட்டங்களில் இவ்வாறான களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கும், மன்னார் மாவட்டத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் களஞ்சியத்தின் எஞ்சியுள்ள வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன் மொழிகின்றேன்.

133. கௌரவ சபாநாயகர் அவர்களே, விவசாயிகளின் உற்பத்திச் செலவினையும், நுகர்வோருக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தினையும் கருத்திற் கொண்டு, கீரி சம்பா அரிசி ஒரு கிலோ ரூபா 50/= இற்கும், சம்பா அரிசி ஒரு கிலோ ரூபா 41/= இற்கும் நாடு அரிசியினையும்,ஏனைய வகை அரிசியினையும் ஒரு கிலோ ரூபா 38/= எனும் அடிப்படையில் நெல்லிற்கு உத்தரவாத விலையொன்றினை வழங்குவதற்கு முன் மொழிகின்றேன். இதன் பயனாக நுகர்வோர் ஒரு கிலோ அரிசியினை சராசரியாக 65/= விற்கு பெற்றுக்கொள்ள முடியும்.

134. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டின் அரிசி உற்பத்தி அதிகரித்துள்ளது. போசணைக் குறைப்பாடு அதிகமுள்ள சமுர்த்தி பயனுகரிகளுக்கிடையே கையிருப்பிலுள்ள அரிசியினை விநியோகிப்பதனூடாக அதனைப் பயன்படுத்துவோம். முன்மொழியப்பட்ட இத்திட்டம் போசணை மட்டத்தை உயர்த்தும். இதற்காக ஏறத்தாழ 44,000 மெற்றிக் தொன் அரிசியை பயன்படுத்தவுள்ளோம்.

135. நாம் எமது அரிசியை ஏற்றுமதி செய்வதற்கான பொருத்தமான காலம் இப்போது தோன்றியுள்ளதாக நான் எண்ணுகின்றேன். ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழையக் கூடிய அரிசி வகைகளை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவிப்போம். இலங்கை அரிசிக்கான வர்த்தக இலச்சினையொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கும் எமது அரிசிக்கான வெளிநாட்டுச் சந்தைகளை இனங்காண்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினை ஊக்குவிக்கின்றேன்.

136. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் விவசாய சமூகத்தின் நன்மை கருதி பல்வேறு நன்மைகளை வழங்கியுள்ளன. இப்பாராளுமன்றத்தினால், உர மானியம், காணி, தொழில்நுட்ப உதவிகள், விதைகள் மற்றும் பல்வேறு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும், இன்று எம்மிடம் என்ன உள்ளது? விவசாயத் துறையிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்குக் கிடைத்த பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது. ஒரு ஹெக்டேயருக்கு கிடைக்கப் பெற்ற விளைச்சல் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதனால், எமக்கு சர்வதேச ரீதியாக போட்டி போட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பிரதான நெல்லுற்பத்திப் பிரதேசங்களில் சமூகப் பிரச்சினையாக மாறியுள்ள சிறுநீரக நோயானது அதிக அளவிலான உரப் பாவனையின் காரணமாக ஏற்பட்டுள்ளதென்பது விவாதத்துக்கு வழிவகுத்துள்ளது. அதே போன்று, நீர் மற்றும் மண் மாசுபடுவதற்கும் வழிவகுத்துள்ளதோடு, அதன் மூலம் சுகாதாரப் பிரச்சினைகள் பலவற்றிற்கும் சுற்றாடல் அழிவுகளுக்கும் அவை காரணமாக அமைந்துள்ளன. நாம் இன்று முகங் கொடுத்துள்ள இப்பிரச்சினையானது எமது விவசாயக் கொள்கையின் எதிர்காலத்தினைத் தீர்மானிப்பதற்கு எந்த அளவிற்கு தாக்கத்தினை ஏற்படுத்தும்? உரப் பாவனைக்கும், நெல்லுற்பத்தியின் உற்பத்தித் திறனுக்கும் இடையில் நேரடியான நேர் மறையான தொடர்பு இல்லையென்பது ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. நெல் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவிகள் வழங்கப்பட்டாலும் கூட, அவர்கள் எமது நாட்டில் இன்னும் தங்கியிருப்போரினிடத்தில் வாழும் ஒரு பிரிவினராகவே உள்ளனர். அதே போல, நுகர்வோருக்கும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்கப்பெறவில்லை. விவசாயகளுக்கோ அல்லது நுகர்வோருக்கோ எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்காவிட்டால், விவசாயி மற்றும் நுகர்வோன் எனும் இரு தரப்பினரும் அதிக அளவில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் எமது விவசாய உபாயங்கள் தொடர்பாக மீண்டும் சிந்திப்பதற்கு உங்களை நான் வலுப்படுத்துகின்றேன். எனவே. தற்போது வழங்கப்படும் உர மானியத்தினை சிறிய அளவிலான நெற்செய்கைப் பண்ணும்

விவசாயிகளுக்கு மாத்திரம் வழங்குமாறு முன்மொழிகின்றேன். அதன் பிரகாரம், நெல் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேயர் வரை சிறு போகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரண்டு போகங்களும் உள்ளடங்கக் கூடிய வகையில் வருடாந்தம் கூடியது 25,000 ரூபாவிற்கு உட்பட்டு காசு நன்கொடை ஒன்று வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் தமது விவசாயத்திற்கு அவசியமான உள்ளீடுகளைத் தீர்மானிப்பதற்கு பெருமளவிலான சுதந்திரமொன்று கிடைப்பதோடு, அதன் மூலம் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்படலாம் என நான் நம்புகின்றேன். இதற்காக, ரூபா 37,500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிவதோடு, இத்தொகையானது 2015 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 35,000 மில்லியனை விட அதிகமான தொகையாகும்.

**பழங்கள் மற்றும் காய்கறிகள்**

137. கௌரவ சபாநாயகர் அவர்களே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்குப் பிரவேசிக்கக் கூடிய வகையில் பழங்கள் மற்றும் காய்கறிக்கைத்தொழிலானது போதிய அளவிற்கு வர்த்தக ரீதியாக அபிவிருத்தியடைவில்லை.

138. நீரகற்றப்பட்டதும், தகரங்களில் அடைக்கப்பட்டதுமான பழங்களின் கைத்தொழிலானது இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளதோடு, இன்னும் அபிவிருத்தியடையாத நிலையிலுமுள்ளது. இக்கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக இக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் தமது கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களுக்கு அறவிடப்படும் வட்டியின் 50 சதவீத வட்டிச் சலுகையொன்றை வழங்குவதற்குமுன் மொழிகின்றேன். இக்கைத்தொழிலுக்கு அவசியமான இயந்திரங்களுக்கான இறக்குமதி வரியிலிருந்து விடுதலை செய்யப்படும் என்பதுடன் தேய்வுக்கு மேலதிகமாக கணிசமான கொடுப்பனவு கழிவும் வழங்கப்படும்.

139. தொழில்நுட்பம், உயர்ந்த அளவிலான விளைச்சலைத் தரக்கூடிய நாற்றுப் பொருட்கள், மற்றும் விதைகளின் பாவனை, மற்றும் ஊடுபயிர்களின் ஊடாக காணிப்பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கும் நான் தனியார் துறையினை ஊக்குவிக்க விரும்புகின்றேன். குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அரசாங்கக் காணிகளை பழங்கள் மற்றும் காய்கறி விவசாயிகளின் வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டு குத்தகைக்கு வழங்குவதற்கும் முன் மொழிகின்றேன்.

140. நுவரெலியா, தம்புள்ளை, எம்பிலிபிட்டிய, கெப்பிட்டிப்பொல, மற்றும் தம்புத்தேகம பிரதேசங்களில் அமைந்துள்ள பொருளாதார நிலையங்களுக்கு அருகாமையில் பழங்கள் மற்றும் காய்கறிகளை களஞ்சியப்படுத்துவதற்காக தனியார் துறை மூலம் நிர்வகிக்கப்படும் 5 குளிரறைகளை நிறுவுவதற்கு நான் முன் மொழிகின்றேன். இதன் மூலம் சந்தை விலைகளில் ஸ்திர நிலையை ஏற்படுத்துவதோடு, அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக ரூபா 2,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

**பாற்பண்ணைக் கைத்தொழில்**

141. கௌரவ சபாநாயகர் அவர்களே, சந்தையில் உள்நாட்டுப் பாற்பண்ணைக் கைத்தொழிலின் பங்கானது மிகக் குறைவாகும். உள்நாட்டு பால் உற்பத்தியினை விருத்தி செய்வதற்கும்,பால் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியைத் தடுப்பதற்கும், முன்னைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நாம் மதிக்கின்றோம். பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் கொள்கையாகும். அதன்

பிரகாரம்,உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் பால்மா பக்கட்டுகளுக்கு கூடிய சில்லறை விலை ரூபா 325 /= இலிருந்து ரூபா 295/= வரை குறைப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன். அவ்வாறு விற்பனை செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கட்டொன்றுக்கு அரசாங்கத்தினால் ரூபா 30/= மானியமொன்றினை உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கும் அதற்காக ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன் மொழிகின்றேன். இது வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கும் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும் உதவும்.

142. பாற்பண்ணைக் கைத்தொழில் துறை மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் பங்களிப்பானது மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும், அதனை வளர்ச்சியுறச் செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. எனவே,அரச மற்றும் தனியார் துறைகளின் பங்கேற்பின் கீழ் வர்த்தக அளவிலான பாற்பண்ணை முறைமையினை ஊக்குவிப்பதற்காக குறைந்தது ரூபா 25,000 மில்லியன்களுக்கு முதலீடு செய்பவர்களுக்கு குறைவாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத அரசாங்கக் காணிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அவ்வாறான குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அரசாங்கக் காணிகளை வெளி வளர்ப்பாளர்கள் மூலம் உயர் விளைச்சலைத் தரக் கூடிய புல் வகைகளை வளர்ப்பதற்கும்,அரச மற்றும் தனியார் துறைகளின் பங்கேற்புகளின் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நான் மொழிகின்றேன். மேலும், பாற்பண்ணைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான இறக்குமதி வரிகளைக் குறைப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

143. நாட்டில் திரவப்பால் நுகர்வானது இன்னும் உத்வேகத்தினை அடையாததனால், திரவப்பால் நுகர்வு தொடர்பாக பாரிய ஒரு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றினை மலைநாட்டு புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன் நாடளாவிய ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**கடற்றொழில்**

144. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு ஒரு தீவாக இருந்தாலும் கூட, நாம் இன்னும் வருடாந்தம் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியன் பெறுமதியான மீன்களையும், மீன் உற்பத்திப் பொருட்களையும் இறக்குமதி செய்கின்றோம் என்ற செய்தியை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது உள்நாட்டு மீனவர்கள் பிரதானமாக பருவ கால நிலைமைகளின் காரணமாக ஏற்படும் விலை ஏற்றத் தாழ்வுகளினாலும், பற்றாக்குறையான களஞ்சிய வசதிகளினாலும், ஒழுங்கு முறைச் சட்டகங்களின் மாற்றங்களினாலும், பற்றாக்குறைவான நிதி வசதிகள் மற்றும் அவர்களது வர்த்தகங்களை விரிவாக்குவதற்கான புதிய சந்தைகளுக்குப் நுழைவதற்குள்ள குறைவான வாய்ப்புக்கள் போன்றனவற்றின் காரணமாக இன்னும் தாக்கங்களுக்கு உட்படக்கூடிய நிலைமையிலேயே உள்ளனர்.

145. மீனவர்களின் தொழில்சார்ந்த பாதிப்புகள் மற்றும் தாக்கங்கள் என்பவற்றிற்கான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பின்பால் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பாக கடலில் அவர்கள் சந்திக்கும் விபத்துகளிற்கு சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுட் காப்புறுதி வழங்கப்படும். இக்காப்புறுதி தேடுதல் மற்றும் உயிர்காப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகளையும் உள்ளடக்கும்.

146. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு காலமாக எமது நாட்டில் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 5000 மில்லியன் பெறுமதியான தகரத்திலடைக்கப்பட்ட மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கைத்தொழிலிலுள்ள வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் மீன்

தகரத்திலடைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு தனியார் துறையினை ஊக்குவிக்கின்றேன். இக்கைத்தொழிலுக்கு வெகுமதிகளை வழங்குவதன் மூலம் லக் சதொச லிமிட்டட்டின் ஊடாக உற்பத்திப் பொருட்களை மீண்டும் கொள்வனவு செய்வதற்கான பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்குப் முன் மொழிகின்றேன். அதனூடாக ஒரு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் 125 ரூபா எனும் சலுகை விலைக்கு விற்க முடியும். இது வாழ்க்கைச் செலவினை குறைப்பதற்கு உதவும். நான் ரூபா 300 மில்லியன் லக் சதோச நிறுவனத்துக்கு ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

147. மேலும் இந்நிலைமையில், மீன்கள் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான இறக்குமதிகளுக்கு விஷேட பொருட்களுக்கான வரியை ரூபா 50/= ஆக அதிகரிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். மேலும் மீன்பிடி வலைகளுக்கான இறக்குமதித் தீர்வையும் குறைக்கப்படும்.

148. கடற்றொழில் கைத்தொழிலுக்கு வசதியளிப்பதற்காக, குளிரறைகளைக் கொண்ட களஞ்சியங்களுடனான நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட உள்நாட்டு மீன்பிடித்துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கும், தரமுயர்த்துவதற்கும் நான் முன் மொழிகின்றேன். மேலும், சிலாபம், மிரிஸ்ஸ, கல்முனை, வல்வெட்டித் துறை, காரைநகர் மற்றும் புராணவெல்ல ஆகிய இன்னோரன்ன மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 750 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் மொழிகின்றேன். இத்துறைமுகங்கள் மீன்பிடிப்படகுகளைத் திருத்துவதற்கும், தயாரிப்பதற்குமான வசதிகளையும் மேற்கொள்ளும்.

149. விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களுக்கு அண்மையில் அதனுடன் இணைந்தவிவசாய மற்றும் மீன் பதப்படுத்தும் வசதியளிப்புக்களை உருவாக்குவதற்கும் முன் மொழிகின்றேன். இவ்வசதியளிப்புக்களைப் பகிர்ந்து கொள்வதனால் அவை கிரய வினைத்திறனை உடையதாக இருக்கும். மேலும், அனுராதபுரம், வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை இணைத்து விவசாய கால்நடை மற்றும் மீன் பதப்படுத்தும் பூங்காக்களை உருவாக்குவதற்கும் முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

150. கௌரவ சபாநாயகர் அவர்களே, நன்னீர் மீன் வளர்ப்பானது உணவுப் போஷாக்கினை வழங்குவதோடு, வருமானத்திற்கான ஒரு மூலமாகவும் விளங்குகின்றது. இத்துறையானது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு துறையாகவும் விளங்குகின்றது. எனவே, மீன் இனப்பெருக்கத் திறனை விருத்தி செய்யவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

151. மேலும் சுற்றாடலுக்கு எந்த வித அழிவுகளும் நிகழாத படி கரையோர மீன் வளர்ப்பினை (நீரியல் வளங்களை) அபிவிருத்தி செய்வதற்கு சாத்தியமான தனியார் துறை முதலீட்டாளர்களுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரியல் பூங்காவொன்றினை உருவாக்குவதற்கும் முன் மொழிகின்றேன். வர்த்தக ரீதியான நீரியல் வளச் செயற்பாடுகளை உருவாக்குவதற்கான தேவையை உடைய நிறுவனங்களுக்கான "முதலீடு தயார்" தளமொன்றினை இந்நீரியல் வளப் பூங்கா ஏற்படுத்தும். இந்நீரியல் வளப் பூங்கா அபிவிருத்தி செய்யப்படவுள்ளதோடு, அரச மற்றும் தனியார் பங்கேற்பொன்றாக இது நிர்வகிக்கப்படும். இது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளுக்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

152. கடந்த அண்மைக் காலத்தில் இறால் கைத்தொழிலானது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளதோடு, அவை இன்னும் தீர்க்கப்படாத நிலையிலேயே உள்ளன. ஆயினும், இறால் கைத்தொழிலிலுள்ள வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் முன் மொழியப்பட்டுள்ள

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன் வரிசையின் ஊடாக இரால் வளர்ப்போருக்கும், இரால் குஞ்சுப் பொரிப்பகங்களை செயற்படுத்துவோர் மற்றும் பதப்படுத்துவோரின் மூலதனம் மற்றும் தொழில் மூலதனத் தேவைப்பாடுகளை வழங்குவதற்கு நான் முன் மொழிகின்றேன். இரால் பண்ணைகளை செயற்படுத்தி வருவோருக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன் உத்தரவாதங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வழங்குவதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

153. ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள சந்தைகளுக்கு எமது மீன்களை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்துள்ளமையானது,எமது உள்நாட்டு மீனவர்களை மோசமான முறையில் பாதித்துள்ளது. எனவே, உணர்வு பூர்வமான ஒரு அரசாங்கம் என்ற வகையில், எமது சில மீனவர்கள் எதிர்நோக்கி வரும் சிரமங்கள் எமக்குத் தெரியும். அதன் பிரகாரம், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எமது மீன்களை ஏற்றுமதி செய்வதிலுள்ள தடையினை நீக்குவதற்கும் மீண்டும் அச்சந்தைக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் அரசாங்கம் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. அரசாங்கமானது, சர்வதேச தேவைப்பாடுகளுக்குப் பொருந்தக் கூடிய வகையில் மீன்பிடிப் படகுகளுக்கு கண்காணிப்பு கருவி (ட்ரான்ஸ்பொன்டர்)களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

154. கடற்றொழில் துறையினால் பொருளாதாரத் துறைக்கு கிடைக்கக் கூடிய பங்களிப்பினை உயர்வடையச் செய்யும் நோக்குடன் ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதோடு, அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு மீனவரும் மீனவ சமூகத்தில் குறைந்தது 100 மீனவர்களை இத்தொழிற்பாட்டில் ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

### கோழிப் பண்ணை

155. கௌரவ சபாநாயகர் அவர்களே, உள்நாட்டு கோழிப்பண்ணைக் கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளின் தரத்தினையும், உற்பத்தித் திறனையும் விருத்தி செய்வதற்கு அவசியமான முதலீடுகளை விரிவடையச் செய்தலை நான் ஊக்குவிக்கின்றேன். மேலும், இலங்கை பறவைக் காய்ச்சலிலிருந்து விடுதலை பெற்ற ஒரு நாடாக விளங்குவதனால் கிடைக்கும் நன்மையானது விஷேடமாக மத்திய கிழக்கு நாடுகள் உள்ளடங்கலாக வெளிநாட்டுச் சந்தைகளில் நுழைவதற்குள்ள வாய்ப்புக்களைப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நான் ஊக்குவிக்கின்றேன். அரசாங்கத்தினால் இது தொடர்பாக பூரண ஆதரவு வழங்கப்படும்.

### பெருந்தோட்டப் பொருளாதாரம்

156. கௌரவ சபாநாயகர் அவர்களே, 1992 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட காலமானது ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளன. எனவே, சகல பிராந்திய பெருந்தொட்டக் கம்பனிகளை கொழும்புப் பங்குச் பரிமாற்றச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக மாற்றக் கூடிய வகையில் அவற்றை முகாமைத்துவம் செய்யக் கூடிய வகையில் சிறு அலகுகளாக மீள்கட்டமைப்பதன் ஊடாக புத்துணர்ச்சி ஊட்டுவதற்கான காலம் தோன்றியுள்ளது. அதே போல பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் காணிகளில் பல்வேறு பயிர்களை பயிரிடுவதற்காகப் பயன்படுத்துவதற்கான வரையறைகளை நெகிழ்வாக்குவதற்கும் நான் முன் மொழிகின்றேன். எவ்வாறாயினும், மீள் பயிர்ச்செய்கை, மற்றும் நவீனமயப்படுத்தலுக்கான நீண்ட கால முதலீடுகளுக்கு பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு பிணைந்துள்ள குத்தகைக் காலத்தினை மீண்டும்

கருத்திற் கொள்ள வேண்டிய முகாமைத்துவக் கட்டணமொன்றுடன் 50 வருடங்களுக்கு நீடிப்பதற்கும் பிரேரிக்கின்றேன்.

### தேயிலை

157. கௌரவ சபாநாயகர் அவர்களே, தேயிலையானது இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிராக இன்னும் காணப்பட்டாலும் கூட, அதன் பெறுமதி சேர் பெறுமானம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடையக் கூடிய அளவுக்குப் போதுமானதாக இல்லை. இக்கைத்தொழிலானது, தற்போது சர்வதேச சந்தையில் அதிக அளவிலான பின்னடைவொன்றுக்கு முகங்கொடுத்துள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தேயிலை பயிரிடுவோரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரச மற்றும் தனியார் துறையை உள்ளடக்கிய செயற்குழுவொன்றை நியமிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன்.

### தேயிலைத் தூளாக்கல்

158. இலங்கை, உலகின் பிரதான தேயிலை உற்பத்தியாளராக உள்ளபோதிலும் பெறுமதிச் சேர்க்கையைப் பொறுத்தவரை டுபாய் போன்ற சந்தைகளை இழந்துள்ளது. கடந்த சில மாதங்களுக்குள் தேயிலைக் கைத்தொழில் நிறுவனங்களினால் இலங்கைக்குத் தேயிலை இறக்குமதிகளை நெகிழ்வாக்குவதற்கான உறுதியான ஒரு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை தேயிலைக்கான கேந்திரஸ்தானமாக தேயிலைக் கலப்பினை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக சேர்க்கப்படும் பெறுமதியினை அதிகரிக்கும் நோக்குடனும் விருத்தி செய்வதற்கான நோக்குடனும், இலங்கைக்குத் தேயிலையை இறக்குமதி செய்வதற்கான ஒழுங்கு முறைச் சட்டகத்துக்குள் இறுக்கமற்றதாக்க முன் மொழிகின்றேன். அதன் மூலம் "Ceylon Tea" எனும் இலச்சினைப் பெயர் மாறாது வைத்திருப்பதற்காக பெயரிடுவதனைக் கட்டாயப்படுத்துகின்றேன்.

### இறப்பர்

159. கௌரவ அமைச்சர் அவர்களே, இறப்பர் துறை தொடர்பான சாத்திய வள ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இறப்பர் துறையுடன் தொடர்புடைய பங்குதாரர்கள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு ஒன்றிணைந்து பிரதான திட்டமொன்று (Master Plan) தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் தொழில்நுட்ப உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஊடாக இத்துறையினால் முகங்கொடுக்கப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படுவதோடு, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளையும் இனங்கண்டுள்ளது. அதேபோன்று, கைத்தொழிலாளர்களுக்கு இறக்குமதியை இறுக்கமற்றதாக்குவதை விட உள்நாட்டு இறப்பரைப் பயன்படுத்துமாறு நான் தயாரிப்பாளர்களிடம் வேண்டிக் கொள்கின்றேன். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் நோக்குடன் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சுக்கு ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

### தெங்குக் கைத்தொழில்

160. தெங்குக் கைத்தொழிலும் ஏற்கனவே பெறுமதிசேர் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளது. இதற்கான காரணம் தேங்காய் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவிலான பங்கு உணவு தயாரிப்பதற்காக வீடுகளில் பயன்படுத்துவதேயாகும். தெங்குக் கைத்தொழிலாளர்களின் வேண்டு கோளுக்கிணங்க, குறிப்பிட்ட அரசாங்க நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் துறைக்குள் மேற்கொள்ளப்படும் இனங்காணப்பட்ட பெறுமதிசேர் செயற்பாடுகளுக்கு தேங்காய்களை

இறக்குமதி செய்வதற்கு முன்மொழிவதோடு, இவ்வுற்பத்திப் பொருட்கள் பின்னர் ஏற்றுமதி செய்யப்படும். இவ்வாறு பிரேரிக்கப்படும் தேங்காயை இறக்குமதி செய்வதற்கான அனுமதியானது மிகவும் கடுமையாக ஆராயப்பட்டு தேவை அவசியம் கருதியே மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு தெங்கு மேம்பாட்டு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக தெங்குப் பயிர்ச்செய்கையின் புனருத்தாரண நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 250 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

161. தேயிலை மற்றும் இறப்பர் துறைகளுக்கான சலுகைகளை வழங்குவதற்காக இப்பெருந்தோட்டத் துறைகளிலுள்ள கம்பனிகளுக்கு 02 வருட வரிவிலக்கு வழங்கப்படும்.

162. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குக் கைத்தொழிலினை விருத்தி செய்வதற்காக மிகவும் விரிவான முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு அவசியமாக உள்ளதோடு, அக்கண்டுபிடிப்புக்கள் வாயிலாகத் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களை பலப்படுத்துவதற்கும் அதன் மூலம் அந்நிறுவனங்களினால் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பயிர்களைப் பன்முகப்படுத்தல் ஆகியன தொடர்பாக ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கும் ஊக்குவிக்கின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 200 மில்லியன்களை 2 ஆண்டு கால பிரிவுக்குள் ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

**ஏனைய பயிர்கள்**

163. இக்கைத்தொழிலுக்கு உதவுவதற்காக சீனி ஆராய்ச்சி நிறுவகம், பனை ஆராய்ச்சி நிறுவகம் என்பன வலுப்படுத்தப்படுவதுடன் அதற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்ய நான் முன் மொழிகின்றேன்.

164. அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்காமையினால் கடந்த தசாப்தத்தில் பாக்கு உற்பத்தியானது புறக்கணிக்கப்பட்டிருந்தது. எனவே, இக்கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான ஆற்றலைக் கருத்திற் கொண்டு வர்த்தக ரீதியாக பாக்கினைப் பயிரிடுவதற்கு ஊக்குவிப்பதோடு, பாக்கினைச் சேகரிக்கும் வலயங்களையும் நிறுவுவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**வாசனைத் திரவியங்களும், அவை சார்ந்த உற்பத்திப் பொருட்களும்**

165. இலங்கையின் வாசனைத் திரவியங்களின் வர்த்தக வரலாறானது 7 ஆம் நூற்றாண்டு வரை பழைமையானது. ஆயினும், இலங்கையின் வாசனைத் திரவியங்களின் வர்த்தகம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை அடையாமையினால் அதன் மூலம் நாட்டிற்கு பெறுமதியான ஏற்றுமதி வருவாய்கள் கிடைப்பதற்கான வாய்ப்புக்களையும் இழந்துள்ளோம்.

166. வாசனைத் திரவியங்களின் கைத்தொழில் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்தினால் வாசனைத் திரவியங்கள் சபையின் ஒருங்கிணைப்புடன், இலங்கையின் வாசனைத் திரவியங்கள் உலகளாவிய ரீதியில் வர்த்தக இலச்சினையொன்றினை பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்படும். இதற்காக,ரூபா 150 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன். உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடனும், அதிகளவிலான ஏற்றுமதி வருவாயினை உருவாக்கும் நோக்குடனும் அரசாங்கத்திற்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத வளமான நிலங்களைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக தனியார் துறைக்கு விஷேடமாக கறுவா, மிளகு, ஏலக்காய், ஜாதிக்காய் போன்ற இன்னோரன்ன வாசனைத் திரவியங்களின்

பயிர்ச்செய்கைக்கு குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்குவதற்கு முன் மொழிகின்றேன். விஷேடமாக மிளகு, ஜாதிக்காய் போன்ற வாசனைத் திரவியங்களை பயிரிடுவதற்காக பெருந்தோட்ட ஒப்பந்தப் பயிர்ச்செய்கைகளுடன் தொடர்புபடும்படியும் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளை ஊக்குவிக்கின்றேன். மேலும், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திலுள்ள கறுவா ஆராய்ச்சிப் பிரிவினை பலப்படுத்துவதற்காக ரூபா 50 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

167. உலகச் சந்தையில் 85 சதவீத தூய கறுவாவிற்கு இலங்கையில் தனியுரிமை பெற்றுள்ளது. கறுவாப் பயிர்ச் செய்கையின் பெறுமதிச் சங்கிலி பல்வேறு நிறுவனங்களின் கீழே உள்ளதோடு, அதன் மூலம் இக்கைத்தொழிலின் வளர்ச்சியானது வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, தனியார் துறையின் பங்கேற்புடன் பெறுமதிச் சங்கிலியின் சகல நடவடிக்கைகளையும் கொண்டு வருவதற்கு கறுவா அபிவிருத்தி அதிகார சபையொன்றினை உருவாக்குவதற்கு முன் மொழிகின்றேன். அதற்காக ரூபா 50 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

168. மேலும் கறுவாக் கைத்தொழிலுக்குத் தேவையான திறன்களை விருத்தி செய்யும் நோக்குடன் கறுவாப் பயிற்சிப் பாடசாலை விரிவாக்கப்படும். இதற்காக ரூபா 50 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

169. கறுவாக் கைத்தொழிலின் பெறுமதிச் சேர்க்கையானது மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதனைக் கருத்திற் கொண்டு தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் கறுவாக் கைத்தொழில் மற்றும் அக்கைத்தொழில் சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்காக அந்நிறுவனத்திற்கு ரூபா 50 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

170. வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக மிளகு,கிராம்பு, மற்றும் ஜாதிக்காய் ஆகியனவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள செஸ் வரி நீக்கப்படும்.

**கிராமியப் பொருளாதார மீளெழுச்சி**

171. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பொருளாதாரக் கொள்கையின் மைல்கற்களில் ஒன்றாக விளங்குவது கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதாகும். இது தொடர்பாக கிராமியப் பொருளாதார அலகுகளைப் பூர்த்தி செய்வதற்காக 14,022 கிராம அலுவலர் பிரிவுகள் 2,500 கொத்தணிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படும். அதற்கிணங்க, கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் இக்கிராமங்களின் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். விவசாயிகளும் அங்கத்தவர்களாகக் கூடிய பாரிய அளவிலான கருத்திட்டங்களும் இவ் அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்ளடக்கப்படும். இக்கிராமிய பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூபா 1.5 மில்லியன் வீதம் ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன். இதற்குச் செலவாகும் மொத்த நிதி ரூபா 21,000 மில்லியன்களாகும்.

172. அதேபோல, வவுனியாவில் புதிய பொருளாதார வலயமொன்றினையும் ஸ்தாபிப்பதற்கு முன் மொழிவதோடு, அதற்காக, கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு ரூபா 200 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

173. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பொருளாதாரத்தில் வாழ்வாதாரத்தை வழங்குவதில் கிராமிய விவசாயம் வலிமையான பங்கை வகிக்கின்றது. அவர்களுடைய நீர்ப்பாசன தேவைகளைப் பூர்த்தி செய்பவையான சிறிய குளங்கள் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்களை புனரமைப்பதற்கான உடனடித்தேவை எழுந்துள்ளது. எனவே, சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைப்புச் செய்து கிராமியப் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்காக ரூபா 2000 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்

174. கௌரவ சபாநாயகர் அவர்களே, அனைத்து உயிர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 3 ஆண்டுகளுக்கான தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பிரதான செயற்பாடுகளுக்குள் வன வளங்களைப் பாதுகாத்தலும், அபிவிருத்தி செய்தலும், சுற்றாடல் மாசுபடலைக் கட்டுப்படுத்தலும், நிலையான நில முகாமைத்துவம், உயிர் வளங்களின் பாதுகாப்பு போன்றனவும் உள்ளடக்கப்படுகின்றன. இந்நடவடிக்கைகளுக்காக ரூபா 2,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

175. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கையில் நூற்றுக் கணக்கான தாவர இனங்களும், விலங்குகளும் உள்ளதோடு, அவற்றை இலங்கையுடன் சமமான பரப்புள்ள பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் அவை ஏனைய நாடுகளிடமில்லாத அளவிற்கு விஷேடத்துவம் நிறைந்தவைகளாக விளங்குகின்றன. ஆயினும், மனித நடவடிக்கைகளும், திறனற்ற முகாமைத்துவ நடைமுறைகளும் இவ்வுயிர்களுக்கு அச்சுறுத்தல்களை எற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளன. எனவே, வன விலங்குகளைப் பாதுகாப்பதனையும், மனித-யானை மோதலுக்குத் தீர்வு காண்பதனையும் குறிக்கோளாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு 3 வருட காலப்பகுதிக்குள் பயன்படுத்தக் கூடிய வகையில் ரூபா 4,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

### அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழில்

176. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாம் முன்னோடிகளாக விளங்கும் அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலை பாரிய அளவில் அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. நான் தனியார் துறையை, விஷேடமாக இந்நாட்டின் இளைஞர்களை இக்கைத்தொழிலில் ஈடுபடுமாறு ஊக்குவிக்க விரும்புகின்றேன். அதே போல, இக்கைத்தொழிலில் வியாபாரத்தினை ஆரம்பிப்போருக்கு சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளை வழங்குவதற்கும் முன் மொழிகின்றேன்.

### இரத்தினக்கற்களும், ஆபரணங்களும்

177. இலங்கையின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் கைத்தொழிலுக்கு 2,500 ஆண்டுகளுக்கும் அதிகமான நீண்ட ஒரு வரலாறு இருந்தாலும் கூட, இக்கைத்தொழிலிலுள்ள இயலளவுகள் பூரணமாகப் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. இப்பின்னணியின் கீழ் இக்கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக, அரச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் பயிற்சி நிறுவனத்தினால் பயிலுனர்களுக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்குமான பயிற்சிப் பாடநெறிகளை தற்போதைய கேள்விகளுக்குப் பொருந்தக் கூடிய வகையில் தரமுயர்த்துவதற்கு நான் முன் மொழிகின்றேன். இந்நிறுவனங்களில் இணைந்துள்ள பயிற்றுவிப்பாளர்களுக்கு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளிலான வெளிநாட்டு அனுபவங்கள் வழங்கப்படும்.

அதே வேளை, இப்பாடநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு இப்பாடநெறிகளை வெற்றிகரமாகத் தொடர்வதற்காக புலமைப்பரிசில்களும் வழங்கப்படும்.

178. கௌரவ சபாநாயகர் அவர்களே, இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் விற்பனைகளை மேம்படுத்துவதற்கும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதற்கும் இலங்கையில் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் "இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் மற்றும் வைரங்களின்" ஏல விற்பனைகளை நடாத்துவதற்கு முன் மொழிகின்றேன். மேலும், சுற்றுலாத் துறையினால் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இரத்தினபுரியில் தனியார் துறையினரால் "இரத்தினக்கல் வர்த்தக ஸ்தலம்" ஒன்றினை ஸ்தாபிப்பதற்கும் நான் பிரேரிப்பதோடு, விமான நிலையத்திலும் தீர்வையற்ற இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கடைகளைத் திறப்பதற்கும் இத்துறையினரை ஊக்குவிக்கின்றேன்.

179. உள்ளூர் கைவினைஞர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இறக்குமதி செய்யப்படும் ஆபரணங்களின் மீது 10 சதவீத செஸ் வரியொன்று விதிக்கப்படும்.

180. இவ்வனைத்து ஆதரவுகள் மற்றும் ஊக்குவிப்புக்களுடன், 2018 ஆம் ஆண்டளவில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதித்துறை மூலம் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை அடைவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

**தங்கம்**

181. கௌரவ சபாநாயகர் அவர்களே, தங்க ஆபரணக் கைத்தொழில் துறை விரைவான நடவடிக்கையை, முக்கியமாக தங்கத்தின் விலை தொடர்பாக எதிர்பார்க்கின்றது. இதனால் நான் மத்திய வங்கிக்கு சுமார் 50 இறக்குமதி வரிச் சலுகையுடனான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் திட்டமொன்றை முன்னெடுக்குமாறு பரிந்துரைக்கின்றேன்.

**ஆரம்பக் கைத்தொழில்கள்**

182. கௌரவ சபாநாயகர் அவர்களே, முதன்மைக் கைத்தொழில்கள் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக ஏற்படக் கூடிய விலை ஏற்றத்தாழ்வுகளுக்கு உள்ளாகின்றது. எனவே, இக்கைத்தொழிலிலுள்ள நிபுணர்களை உள்ளடக்கிய முதன்மைக் கைத்தொழில் சபையொன்றினை (Primary Industry Council) நிறுவுவதற்கு முன் மொழிகின்றேன்.

183. கௌரவ பிரதமரின் கொள்கைக் கூற்றில் கூறியது போன்று, நாட்டில் விஷேட விவசாய மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்கள் உருவாக்கப்படும். முன் மொழியப்பட்ட விவசாய மீன்பிடி ஏற்றுமதி வலயங்களை ஸ்தாபிப்பதற்காக முதன்மைக் கைத்தொழில் அமைச்சுக்கு ரூபா 2,000 மில்லியன்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**பொருளாதாரத்தினை டிஜிடல்மயப்படுத்தல்**

184. கௌரவ சபாநாயகர் அவர்களே, டிஜிடல்மயப்படுத்தல் இன்று பல நாடுகளில் பிரபல்யமடைந்துள்ள ஒரு செயன்முறையாகும். இது தரவுகளை சேகரித்தல், தரவுகளை நிரற்படுத்தல் முறைமைகளின் ஊடாக மேலதிக வருமானங்களை உழைப்பதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளது. ஆகவே, இச் செயல்முறையின் ஊடாக இலங்கையானது தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகின் ஏனைய பல்வேறுபட்ட அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஒத்ததாகவே தொழில்நுட்ப முன்னேற்றத்தில் அடுத்த கட்டத்தை அடைவதற்கான நிலையில் உள்ளது. இத்தகைய அபிவிருத்தி முறைமைகள் முறைமைகள் மற்றும்

கட்டுப்பாடுகளை வழிப்படுத்துவதனூடாக அனைவருக்கும் நேரான நன்மைகளை பெற்றுக் கொடுக்கும். மிக எளிமையாகக் கூறுவதாயின் இணையத்தள தொடர்பானது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சாதகமான விளைவுகளைக் கொண்டுள்ளது.

185. எமது அரசாங்கத்தினால் வாக்களித்த படி எமது தகவல் தொழில்நுட்பப் பரிமாற்ற உபாயப் பிரிவொன்றாக எம்மால் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட இலவச Wifi வசதிகள் தெரிவு செய்யப்பட்ட பொது இடங்களில் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று, எமது சகல அரச துறை பல்கலைக்கழகங்களிலும்,இலவச Wifi வசதிகள் வழங்கப்படும். எதிர்வரும் மூன்றாண்டு காலப்பகுதியில் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய முழுமையான எண்ணியல் அபிவிருத்தி உபாயமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

186. அதன் படி, 2018 ஆம் ஆண்டின் இறுதியில், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள், பிரதேச சபைகள், உப தபால் நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள் உள்ளடங்கலாக சகல அரசாங்கக் கட்டடங்களும் இலத்திரனியல் ரீதியாக இணைக்கப்படும். இதன் மூலம், அவர்களின் நாளாந்த வேலைகளில் 70 சதவீதத்தினை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

187. கௌரவ சபாநாயகர் அவர்களே, தேசிய எண்ணியல் அடையாள அட்டைகளை (NDI) அறிமுகப்படுத்துவதற்கும் நாம் முன் மொழிகின்றோம். அதன் மூலம் சகல நிதிசார் மற்றும் நிதி சாராத எண்ணியல் கொடுக்கல் வாங்கல்களை மிகவும் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளலாம் என்பதை உறுதிப்படுத்த முடியும். கடவுச்சீட்டு, வரிக்கோவை, சுங்கப் பத்திரங்கள், வாகனப்பதிவு, வாக்காளர் பதிவு, நலன்புரி பதிவுகள், வங்கித் தகவல்கள் மற்றும் பொதுப்பயன்பாட்டு பற்றுச்சீட்டுக்கள் என்பவற்றைக் கொண்டதாக தேசிய எண்ணியல் அடையாள அட்டை தனித்துவமான இலக்கத்தினை கொண்டதாக இருக்கும். இது வரி சேகரிப்புக்கு பயன்படுவதற்கு மேலதிகமாக ஊழல், தாமதம், வீண் விரயம் என்பவற்றை குறைப்பதோடு வினைத்திறனைக் கூட்டுவதுடன் நலன்புரிக் கொடுப்பனவு போன்ற ஏனைய முறைமைகளையும் சீர்படுத்த உதவும். (இங்கு அமர்ந்துள்ள அனைவரினதும் வசதி கருதி அடிப்படைத் திட்டத்தினை VI இல் இணைத்திருக்கின்றோம்).

188. எமது எண்ணியல் உபாயமானது, தேசிய கொடுப்பனவுத் தளமொன்றினை (NPP) அறிமுகப்படுத்தலை உள்ளடக்குவதோடு, இதன் மூலம் அவர்களது தேசிய எண்ணியல் அடையாள அட்டையினைப் பயன்படுத்துவதன் மூலம் தனது கையடக்கத் தொலைபேசியின் ஊடாக தான் பெற்றுக் கொண்ட பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தமது வங்கிக் கணக்குகளின் ஊடாக பணத்தினைச் செலுத்துவதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. தேசிய கொடுப்பனவுத் தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் சந்தையின் பணப் புழக்கமும், பண மிதப்பும் குறைக்கப்படுவதன் மூலம் வினைத்திறனை விருத்தி செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கான சேமிப்புக்களைக் கொண்டு வர முடிகின்றது.

189. தொலைத்தொடர்பு வளங்களை வினைத்திறனான முறையில் பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் காற்றலைகளையும், மற்றும் சுற்றாடலையும் பாதுகாப்பதற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அதிகார சபையின் கீழ் விஷேட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கம்பனியொன்றினை உருவாக்குவதற்கு முன் மொழிகின்றேன். இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை புகையிரதத் திணைக்களம் உள்ளடங்கலாக தொலைத் தொடர்புக் கம்பனிகளுக்குச் சொந்தமான சகல கம்பி வடங்களும், அதே போல அலை வரிசைகள், தொலைபேசிக் கோபுரங்கள் போன்றனவும் இக்கம்பனிக்குள் கொண்டு வரப்படும்.

190. கௌரவ சபாநாயகர் அவர்களே, மருத்துவமனை சேவைகள், காணி விடயங்கள், சமுர்த்திக் கொடுப்பனவு உள்ளடங்கலாக பொது மக்களை அடிப்படையாகக் கொண்ட பொதுச் சேவைகளை வழங்குவதில் தேசிய எண்ணியல் அடையாள அட்டையுடன் ஒன்றிணைப்பதற்கான ஒரே கூரையின் கீழான எண்ணக் கருவினை (Single Window Concept) நடைமுறைப்படுத்த நாம் எண்ணுகின்றோம். அரச காணிகளை முகாமைத்துவம் செய்யும் முறைமை மற்றும் காணிக் கேந்திர முறைமை ஆகியனவற்றையும்இன் ஒரே கூரையின் கீழான எண்ணக் கருவின் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தப்படும்.

191. வகுப்பறைக்குள் கற்பிக்கும், படிக்கும் செயற்பாடுகளுக்குத் தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதனை பலப்படுத்தும் நோக்குடன் கல்வி அமைச்சினால் கருத்திட்டங்கள் பல திட்டமிடப்பட்டுள்ளன. இங்கு பிரதான நடவடிக்கையாக 2016 ஆம் ஆண்டில், 200 ஸ்மார்ட் எண்ணியல் வகுப்பறைகளும், 2017 ஆம் ஆண்டில் 1000 வகுப்பறைகளும் ஆரம்பிக்கப்படும்.

192. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் “திறந்த அரச பங்கேற்பிற்காக” (Open Government Partnership-OGP), தன்னை அர்ப்பணித்துள்ளதோடு, தேசிய தரவுத் தளமொன்றினை (National Big Data Platform) நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு திறந்த அரச பங்கேற்பிற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு மேலும் ஆதரவளிக்கும்.

193. பொருளாதார எண்ணியலாக்க முறைமைக்காக ரூபா 10,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் பிரேரிக்கின்றேன்.

### முதலீட்டு ஊக்குவிப்பு

194. கௌரவ சபாநாயகர் அவர்களே, 2014 ஆம் ஆண்டில், வெளிநாட்டு நேரடி முதலீடு ஐக்கிய அமெரிக்க டொலர் 1.7 பில்லியன்களாக இருந்ததோடு, இது சந்தேகத்துக்கு இடமின்றி வலயத்தின் சமனான நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது. கடந்த சில மாதங்களாக எமது நாட்டில் முதலீட்டுப் போக்கானது ஆராயப்பட்டுள்ளதோடு, தற்போது எமது முதலீட்டுக் கட்டமைப்பினை விருத்தி செய்வதற்கும், மறுசீரமைப்பதற்கும் உபாய ரீதியான வரைபடத்தினைத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றோம்.

195. இம்முயற்சியில், எமது அரசாங்கம் செயற்பாட்டு வினைத் திறனை விருத்தி செய்தல் மற்றும் முதலீடுகளுக்கு வசதியளித்தல் போன்ற இன்னோரன்ன நோக்கங்களுடன் முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகியனவற்றை மீள்கட்டமைக்கவுள்ளது. மீள்கட்டமைப்புச் செயன்முறையானது முடிவுறும் வரை “அபிவிருத்திக்கான நிறுவனம்” என்ற பெயரின் கீழ் ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்படும்.

196. கௌரவ சபாநாயகர் அவர்களே, புதிய உலக வர்த்தக போட்டித் தன்மைகளுடன் இலங்கையில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களை இணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இன்று உலகளாவிய மட்டத்தில் உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதி சேர்க்கப்படுகின்றது. உலகளாவிய பெறுமதி முறைமையின் மூலம் பல்வேறு நாடுகளில் பல்வேறு மூலப்பொருட்கள் மற்றும் திறன்கள் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகின்றன. இம்முறைமைக்கு இலங்கையில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய முதலீட்டாளர்களுடன் தொடர்புபடுத்துவதற்கு நாம் முயற்சியெடுப்போம்.

197. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு இப்போது வர்த்தகத்திற்காகத் திறந்து விடப்பட்டுள்ளது. கௌரவ பிரதமர் அவர்களினால் இப்பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கூற்றின் பிரகாரம், நாட்டின் முதலீட்டுச் சூழ்நிலையை விருத்தி செய்வதற்கு அவசியமான சட்டங்கள் ஏற்கனவே வரையப்பட்டு வருகின்றன. நல்லாட்சிக்கான எமது அர்ப்பணிப்புக்களின் காரணமாக பிரதான முதலீட்டாளர்கள் இந்நாட்டில் முதலீடு செய்வதற்கு மிகுந்த ஆர்வத்தைக் காட்டியுள்ளனர்.

198. ஐக்கிய அமெரிக்க டொலர் 2 பில்லியன்களுக்கு அதிகமான முதலீடு கிடைக்கக் கூடிய விஷேட துறைகளாக பின்வரும் துறைகளை நாம் இனங்கண்டுள்ளளோம்:

- எண்ணெய் சுத்திகரிப்பு
- புத்தாக்கச் சக்தி
- ஒன்றிணைக்கப்பட்ட மோட்டர் வாகனங்களின் தயாரிப்பு
- பிராந்தியத்திற்கான உருக்குப் பாலங்களின் தயாரிப்பு
- உரம், ட்ரிபில் சுப்பர் பொஸ்பேட் தயாரிப்பு
- செயற்கைக்கோள் தொழில்நுட்பம்
- விமானங்களின் திருத்தங்களும், அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆதரவுச் செயற்பாடுகளும்
- ஒன்றிணைக்கப்பட்ட சீனிக் கைத்தொழில்

199. இந்நிலைமையில் முதலீடுகளைக் கவர்வதற்குள்ள ஒரு சில தடைகள் பின்வருமாறு:

- வெளிநாட்டவர்களுக்கு காணியைக் குத்தகையாக வழங்கும் போது விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்குவதற்கும் நான் பிரேரிப்பதோடு, காணிகள் கைமாற்றல் வரையறைச் சட்டத்தின் ஊடாக விதிக்கப்பட்ட இனங்காணப்பட்ட முதலீடுகள் மீதான உரித்தின் மீதான தடைகளை நீக்குவது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கும் முன் மொழிகின்றேன்.
- செலாவணிக் கட்டுப்பாடுகள், முதலீடுகளைக் கவர்வது தொடர்பான கருத்து மிக முக்கியமான புள்ளியாகும். எனவே, பழைமையானதும், கடுமையானதுமான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை இரத்துச் செய்வதற்கும், முதலீட்டுக்கு நட்புறவான வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டு முகாமைத்துவ சட்டமூலத்தினை (FEMB), அறிமுகப்படுத்துவதற்கும் பிரேரிக்கின்றேன். இதன் மூலம் சார்க் மற்றும் உலகின் ஏனைய நாடுகளினால் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்படலாம்.
- வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களை மேம்படுத்தும் நோக்குடன், உள்நோக்கிய வெளிநாட்டு வருவாயின் ஊடாக வதியாதோர் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளினால் பட்டியலிடப்பட்ட பங்குகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் மீதான பங்கிலாபங்களிலிருந்தான வருமானங்கள், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
- முதலீட்டுச் சபைகளுக்குப் பதிலாக நிறுவப்படும் அபிவிருத்திக்கான நிறுவனம் வெளிநாட்டு முதலீட்டுக்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 50 நாட்களுக்குள் வர்த்தகத்தினை ஆரம்பிப்பதனை உறுதிப்படுத்தும். முதலீட்டு மேம்பாட்டிற்கு இது சந்தேகமின்றி நெகிழ்வான ஒரு பிரவேசமாக அமையலாம்.

200. கௌரவ சபாநாயகர் அவர்களே, அதிகளவிலான முதலீடுகளைக் கவர்வதற்கும் தக்க வைத்துக் கொள்வதற்கும் தற்போது உள்ள ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை நவீனமயப்படுத்தல் அத்தியாவசியமாக உள்ளது. எனவே, இவ்வலயங்களை முகாமைத்துவம் செய்வதற்காக, தேவையான நிபுணத்துவமுள்ள தனியார் துறை முகாமைத்துவக் கம்பனிகளுக்கு ஒப்படைப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். முதலீட்டுச் சபையும் புதிய ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் இப்புதிய வலயங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகளும் தனியார் துறைக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்படும்.

201. அதி கூடிய சுற்றாடல் தாக்கங்களுடைய கைத்தொழில்களை புத்தளம், அம்பாந்தோட்டை மற்றும் கிளிநொச்சி போன்ற தெரிவு செய்யப்பட்ட இடங்களில் செயற்படுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

202. நாட்டின் பின் தங்கிய பிராந்தியங்களில் முதலீட்டாளர்களுக்கு அரச காணிகள் மற்றும் முதலீடு தொடர்பான வரிச் சலுகைகளும், பெற்றுக் கொடுக்கப்படும். இதன் மூலம் அரசாங்கத்தின் கொள்கையினை நாடு முழுவதும் சமநிலையான அபிவிருத்தியைப் பெறுவது உறுதிப்படுத்தப்படும். இப்பிராந்தியங்களில் முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் முகமாக இப்பிராந்தியங்களில் குறைந்த பட்சம் 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க முதலீட்டை மேற்கொள்ளும் (காணி கட்டடம் நீங்கலாக) அல்லது 500 புதிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் (புதிய ஊழியர் சேமலாப நிதிக் கணக்குகளுடன்) முதலீட்டாளர்களுக்கு 5 வருடங்களுக்கு 50 சதவீத வரிக் குறைப்பை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கையானது 800 ஐத் தாண்டுமிடத்து இவ்வரிக் குறைப்பானது 8 வருடங்களாக அதிகரிக்கப்படும். மேலும் பல்வேறு மட்ட சலுகைகளும் நியாயப்படுத்தப்படும்.

203. **உராய்வு நீக்கி (Lubricant)** - தற்போது உராய்வு நீக்கிச் சந்தையானது ஒரு சில கம்பனிகளினாலேயே முகாமை செய்யப்படுகின்றது. ஆகவே, நான் உராய்வு நீக்கிச் சந்தையை திறந்து விடுவதற்கு முன் மொழிகின்றேன். கூடிய பெறுமதிச் சேர்ப்புடன் அதிகூடிய முதலீடுகளை மேற்கொண்டு தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கு நான் ஊக்குவிக்கின்றேன். மேலும், உராய்வு நீக்கியினை முதலீட்டுச் சபையின் எதிர்மறைப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் முன் மொழிகின்றேன்.

204. **தார் (Bitumen) -** வீதிகள் மற்றும் அதிவேக வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் நிர்மாணத்தை விரைவுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் இதற்கான சந்தையை திறந்து விடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

205. தற்போதுள்ள வர்த்தக நிலையங்களை விரிவாக்கம் மற்றும் நவீன மயப்படுத்துவதற்கு இயந்திரங்களில் செய்யப்படுகின்ற முதலீட்டிற்கும் புதிய வேலை வாய்ப்பு உருவாக்கத்தினால் ஈட்டுகின்ற இலாபம் 3 வருடங்களுக்கு அரைவாசி வரிச் சலுகையை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

206. கௌரவ சபாநாயகர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்கத்தைக் கொண்ட தொழில் முயற்சிகள் மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்களை மீளெழுச்சி செய்யும் சட்டத்தை மீளாய்வு செய்து உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இச்சட்டமானது கடந்த அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு பல முதலீட்டாளர்கள் பாதிக்கப்பட்டனர். நான் மேலும், இவ்வரசாங்கமானது அவ்வாறான அரசியல் சார்பான விரும்பத் தகாத எந்தவொரு செயலையும்

மேற்கொள்ளாது என உறுதியளித்துக் கூறுகின்றேன். இவ்வரசாங்கமானது இதற்குப் பதிலாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை பாதுகாக்கக் கூடிய புதிய சட்டங்களை அறிமுகம் செய்யும்.

207. கடந்த அரசாங்கத்தினால் உபாய அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெற்றுக் கொண்ட கம்பனிகளுக்காக தொடர்ந்தும் அமுலில் இருக்கும். புதிய முதலீடுகளுக்காக உபாய கருத்திட்ட முதலீட்டுச் சட்டத்திற்குப் பதிலாக "புதிய முதலீடுகள்" சட்டம் இயற்றப்படும். நாட்டின் பௌதீகத் தோற்றத்தில் குறிப்பிடும் படியான மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய கலப்புக் கருத்திட்டங்களில் முதலீடு செய்யும் தனியார் துறை கம்பனிகளுக்கும் வரி ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். ஆனாலும் ஏற்கனவே சலுகைகளுக்கு விண்ணப்பித்துள்ள கம்பனிகளுக்கு புதிய சட்டவாக்கம் நிலுவையிலுள்ளபடியால் இடைக்காலத்திற்கு சலுகைகள் வழங்கப்படும். நாம் சிறப்பு இலாபங்களின் மீது அதி ஈட்ட வரியை விதித்தோம். பல கம்பனிகள் முறையிட்டன. இதை ஒரு முறை மாற்றம் செலுத்தும் வரியாக அறிமுகம் செய்தோம். எதிர்காலத்தில் அவ்வாறான அதி ஈட்ட வரி விதிக்கப்பட மாட்டாது என்பதை இச்சபைக்கு அறியத் தருகின்றேன்.

208. **உள்வரும் மாற்றல்கள் மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்கள்** - கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த தசாப்தத்தில் நாட்டில் காணப்பட்ட சட்ட ஒழுங்கற்ற நிலையும், ஊழல், நல்லாட்சியின்மை, என்பவற்றுடன் கூடிய சூழலானது நாட்டில் வியாபாரங்களின் செயலாற்றுகையை பெரிதும் பாதித்தது. ஆட்சி மாற்றத்துடன் இந்நாடானது வியாபாரங்களுக்காக சாதக நிலையைக் கொண்டுள்ளது. தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் நல்லாட்சி நிலவுகின்றடையால் பலர் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர். இவ்வாறான முதலீட்டாளர்களின் முதலீடுகளுக்கும் மற்றும் உள்நோக்கிய மாற்றல்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் காப்புறுதி வசதிகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன். அதே போன்று பல்வேறு காரணங்களுக்காக தமது நிதிகளை வெளிநாடுகளில் வைத்திருக்கும் இலங்கையர்கள் தங்களது பணங்களை தாய் நாட்டிற்குக் கொண்டு வந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு தளர்த்தலுக்கேற்றவாறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீட்டை நாட்டிற்குக் கொண்டு வருமாறு கேட்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கை இல்லாமலாக்க நான் முன்மொழிகின்றேன். உரிய வங்கிகளின் ஊடாக கொண்டு வரப்படும்போது எந்தவொரு அரச நிறுவனத்தினாலும், கேள்விகள் கேட்கப்பட மாட்டாது. ஆகவே இந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்துமாறு நிறுவனங்களை நான் ஊக்குவிக்கின்றேன்.

209. கௌரவ சபாநாயகர் அவர்களே, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான கடல் வழியினூடாக வருடாந்தம் ஏறத்தாழ 35,000 கப்பல்களும் 4500 எண்ணெய்த் தாங்கிக்கப்பல்களும் செல்கின்றன. எவ்வாறாயினும், எங்களுடைய எண்ணெய்க் குதங்களின் ஊடாக தற்போது ஒரு சில கப்பல்களுக்கு மட்டுமே வருடாந்தம் எரிபொருள் வழங்கப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆழ்கடல் எரிபொருள் குதமிடல் கைத்தொழிலில் தனியார்த்துறையினர் ஈடுபடுவதை நான் ஊக்குவிக்கின்றேன். அதற்கான அனுமதிப் பத்திரங்கள் வெளிப்படையான போட்டித் தன்மையுடைய விலை மனுக்கோரல்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

210. கௌரவ சபாநாயகர் அவர்களே, கப்பல் கட்டுதல், கப்பல் உடைத்தல் மற்றும் கப்பலைத் திருத்துதல் போன்ற நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலையிலுள்ள அரச காணிகளை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

211. மேலும் நாம் நாட்டில் முக்கூட்டு சுபர் பொசுப்பேற்றை உற்பத்தி செய்வதற்கு பொதுத் துறையோடு தனியார் துறையை பங்காளர்களாகால்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் பசளை இறக்குமதி குறைவடைவதனால் வெளிநாட்டு நாணய சேமிப்பு அதிகரிக்கின்ற வேளையில் விவசாயிகளுக்கும் இலகு விலையில் உரங்களை பெறக்கூடியதாக இருப்பதனால் பெரும் நிவாரணம் பெறுவர்.

### ஏற்றுமதி ஊக்குவிப்பு

212. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த தசாப்தமானது நாட்டின் ஏற்றுமதித் துறையினை பின்னோக்கித் தள்ளிய ஒரு காலப்பகுதியாகும். அரசாங்கத்தின் குறுகிய நோக்கான கொள்கைகளினால் சந்தைகளை இழக்க வேண்டியேற்பட்டதினால் நாடு உயர்ந்த பாதகமான மீதியைக் கொண்டதாகியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கில் 2000 ஆம் ஆண்டில் 33.3 சதவீதமாகக் காணப்பட்ட இலங்கையின் வர்த்தக ரீதியான ஏற்றுமதியானது 2014 ஆம் ஆண்டில் 14.1 சதவீதமாகக் குறைவடைந்தது. அதே வேளை, உலகச் சந்தையில் இலங்கையின் ஏற்றுமதியின் பங்கானது 0.09 சதவீதத்தில் இருந்து 0.06 சதவீதமாகவும் இக்காலப்பகுதியில் குறைவடைந்துள்ளது. இந்நிலைமையானது, இரு தரப்பு மற்றும் பல தரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்தி எமது நிலையை உறுதிப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை வேண்டி நிற்கின்றது. வெளிவாரியான உறுதிப்பாட்டிற்கு நிலைபேறான ஏற்றுமதித் துறை வளர்ச்சி இன்றியமையாததாகும். நாட்டின் முழு மொத்தமான பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் அபிவிருத்திக்கும் கீழ்வரும் பல முக்கிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

213. கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் தடங்கல்கள் மற்றும் இடையூறுகளை நீக்கக் கூடியதுமான ஒரு உயர்மட்ட நிர்வாகம் உருவாக்கப்பட்டு அதனூடாக நாட்டின் ஏற்றுமதி உபாயங்கள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதோடு, மாத்திரம் அல்லாமல் கண்காணிக்கப்பும் செய்யப்படும். ஆகவே, அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையிலான கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் உரிய அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்திப் பேரவை உருவாக்கப்படும். இதன் மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்பு, அபிவிருத்தி மற்றும் வசதியளிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து பங்காளர்களினதும் சக்தியானது ஒருமுகப்படுத்தப்படுவதோடு, நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் இரட்டை மாதிரி வேலைகள் நீக்கப்படுவதோடு, ஏற்றமதித்துறை முன்னேற்றம் தொடர்பாக தொடர் கண்காணிப்பு உறுதிப்படுத்தப்படும். இதன் மூலம் ஏற்றுமதித் துறையின் நீண்டகால மற்றும் நடுத்தர கால இலக்குகளை சிறப்பாக அடைந்து கொள்வதற்கான வழிகாட்டல்களையும் வழங்க முடியும்.

214. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை கட்டாயமாக உள்நோக்கிய உபாயங்கள் மாத்திரமல்லாமல் வெளிநோக்கிய உபாயங்களை பின்பற்றல் வேண்டும். எமது உள்ளூர் கைத்தொழில் துறைகளான வங்கித் துறை, நிர்மாணத் துறை, கல்வித் துறை, போன்றன நாடடின் எல்லைகளுக்கு வெளியிலான புதிய சந்தைகளை அடையக் கூடிய இயலளவைக் கொண்டதாகும். ஆகவே, இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய முறையில் வசதிகளை செய்து கொடுப்பதற்காக அரசாங்கம் மற்றும் கைத்தொழில் துறையின் பங்களிப்புடன் ஆரம்ப முதலீடாக ரூபா 25 பில்லியன் முதலீட்டுடன் ஏற்றமதி இறக்குமதி வங்கியை (EXIM) உருவாக்குவதற்கு முன்மொழிகின்றேன். இவ்வேற்றுமதி இறக்குமதி

வங்கியானது 2016 ஏப்ரில் 01 ஆம் திகதியில் இருந்து செயற்படும். இது கம்பனியாக கொழும்புப் பங்குச் சந்தையில் நிரல் படுத்தப்படும்.

215. உள்ளூர் தனியார்த்துறை கம்பனிகள் குறிப்பாக மின்சார உற்பத்தியுடன் தொடர்புபட்ட கம்பனிகள் தமது செயற்பாடுகளை வெளிநாடுகளுக்கு விரிவுபடுத்தியுள்ளமையை நான் மிகவும் மகிழ்ச்சியாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அதே போல், இலங்கை மின்சார சபையும், மின் உற்பத்தி, மின்மாற்றல் மற்றும் மின்சார விநியோகம் என்பவற்றில் தமது செயற்பாடுகளை வெளிநாடுகளில் வியாபிப்பதற்கு ஊக்குவிக்கப்படும். ஏற்கனவே பல உள்நாட்டு கம்பனிகள் தமது செயற்பாடுகளை உகண்டா மற்றும் தன்சானிய போன்ற நாடுகளில் மின்சார உற்பத்தி தொடர்பில் வியாபித்துள்ளது.

216. இலங்கை தூதுவராலயங்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பில் பிரதான பங்காற்றக் கூடியன என்பது நாங்கள் அனைவரும் அறிந்த விடயமே. ஆகவே, வெளிநாட்டு தூதுவராலயங்களில் காணப்படும் வர்த்தக அலகை உறுதிப்படுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன். இலங்கைத் தூதராலயங்களில் காணப்படும் வர்த்தக அலகை உறுதிப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இலங்கைத் தூதுவராலயங்களில் காணப்படும் வர்த்தக அலகானது உள்ளூர் வியாபாரிகள் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் சந்தை வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதை கட்டாயப்படுத்துவதோடு, அவை வர்த்தகத் திணைக்களம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இணையத் தளங்களில் பிரசுரிக்குமாறும் முன் மொழிகின்றேன்.

217. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் வகையில் உறுதிப்படுத்தப்படுவதோடு, இலங்கை ஏற்றுமதிப் பொருட்களுக்கான புதிய சந்தைகளை அறிமுகம் செய்வதற்கு மிகவும் சுறுசுறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதோடு குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், வாசனைத் திரவியங்கள், மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பவற்றின் வர்த்தகநாம ஊக்குவிப்பு மற்றும் புதிய சந்தைகளை கண்டு பிடித்தல் என்பவற்றில் ஈடுபடல் வேண்டும் எனவும் நான் முன் மொழிகின்றேன்.

218. இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது, ஏற்றுமதிக் காப்புறுதி எல்லைகளை விரிவுபடுத்தி மேம்படுத்துவதன் ஊடாக எமது ஏற்றுமதியாளர்கள் புதிய சந்தைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமான சூழலை உருவாக்க நான் முன்மொழிகின்றேன். விஷேடமாக அதாவது, சர்வதேச சந்தையில் நுழையக் கூடிய சாத்தியங்களாகக் கூடிய எமது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களக்கு உரிய ஆதரவுகளை பெற்றுக் கொடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

## உத்தியோக பூர்வ ஒதுக்குகள்

219. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பொருளாதாரத்தின் முகாமை சக்தியை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டு நாணய இருப்பினை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை நான் மீண்டும் வழியுறுத்த வேண்டியதில்லை என நினைக்கின்றேன். பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் மேம்பாடு மற்றும் முதலீட்டு உள்வருவாய்கள் மூலம் கூடிய அளவிலான வெளிநாட்டு மாற்றல் உருவாக்கப்படும். மேலும், 2016 ஆம் ஆண்டின் ஜுன் மாத முடிவில் அதிகார பூர்வமான நாணய இருப்பானது ஐக்கிய அமெரிக்க டொலா 10 பில்லியன்களாக இருக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

220. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஏற்றுமதியாளர்கள் தமது இலங்கைக்க வெளியிலான தனது ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 30 சதவீதத்தினை அல்லது ஐ.அ.டொ. 3 பில்லியன்களை வெளிநாடுகளில் நிறுத்தி வைத்து விட்டு குறைந்தளவு வருமானத்தையே உள்நாட்டுக்கு

அனுப்புகின்றனர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாங்கள் தற்போது நெகிழ்வான நாணயமாற்று வீத கொள்கையை நோக்கி முன்னேறியுள்ளோம். ஆகவே, ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி வருமானத்தை நாட்டுக்குள் கொண்டு வராமல் இருப்பதற்கான எவ்வித காரணங்களையும் கூறமுடியாது. ஆகவே, நான் அனைத்து ஏற்றுமதியாளர்களிடத்திலும் கேட்டுக் கொள்வது என்னவென்றால், தமது முழுமையான ஏற்றுமதி வருமானங்களையும் நாட்டுக்குள் கொண்டுவரும்படி வேண்டிக் கொள்கின்றேன். அரசாங்கமானது ஏற்றுமதியாளர்களின் வியாபாரங்களின் முன்னேற்றத்துக்கு அவசியமான சாத்தியமான தளத்தை உருவாக்கியுள்ளமையினால் இதனை ஒரு பணிவான வேண்டுகோளாக முன்வைக்கின்றேன்.

221. எமது பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கு வெளிநாட்டு ஒதுக்குகளை ஸ்திரப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை. பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி வருமானம் மற்றும் அதிகரித்த முதலீட்டு உட்பாய்ச்சல்களினால் 2016 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் 10 பில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகாரபூர்வ ஒதுக்குகள் அதிகரிக்குமென நான் எதிர்பார்க்கின்றேன்.

**சர்வதேச வர்த்தகம்**

222. கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்போதுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமானது அனுமதிப்பத்திர முறைமையை உருவாக்கியுள்ளதுடன் அதனால் நாட்டை தரம் குறைந்த பொருட்களை குவிக்கும் தளமாக மாறிக் கொண்டிருப்பதை தடுக்க முடியாதுள்ளது. தற்போதுள்ள சட்ட வரைவுகளை நீக்கி புதிய சட்டத்தினை அறிமுகப்படுத்த நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சமநிலையான தளத்தை வழங்குவதோடு, நாட்டில் ஒரு செயற்றிறனான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி முறைமையும் உருவாக்கும்.

223. எமது சர்வதேச வர்த்தகக் கொள்கை வேலைச்சட்டகத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் சர்வதேச வர்த்தக முகவராண்மையை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, சீனா, தென் கொரியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியத் தன்மையை கண்டறியுமாறு வேண்டிக் கொள்வதோடு, ஜீ. எஸ். பீ பிளஸ் முறைமையினூடாக ஐரோப்பாவுக்கான ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன் மொழிகின்றேன்.

**காணி**

224. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரச காணிகளின் பயன்பாட்டை உச்சப்படுத்தும் மற்றும் அரச காணிகள் தொடர்பாக முறையற்ற கொடுக்கல் வாங்கல்களை ஒழிக்கும் நோக்கில் ஒரு "காணி வங்கியை" அறிமுகம் செய்வதற்கு முன் மொழிகின்றேன். இது அரசுக்கு உரிமையான காணிகள் தொடர்பான இலத்திரனியல் தரவுத் தளத்தையும் கொண்டதாகும். இந்நடவடிக்கைகளுக்காக நான் ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன். தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் இலத்திரனியல் தரவுத் தளத்திற்கு இத்தகவல்கள் உடனடியாக மாற்றப்படுவதை உறுதி செய்யும். அதன் பின்பு இத்தரவுத் தளம் தனியாருக்குச் சொந்தமான காணிகளின் தரவுகளை உள்வாங்கிக் கொள்ள முடியும்.

**வீடமைப்பு**

225. கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வரசாங்கம் அனைவருக்கும் இருப்பிட வசதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. இந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாத மற்றும் குறை பாவனையுடைய அரச காணிகள் விடுவிக்கப்படும்.

226. சேரி வாழ் மக்கள் எதிர்கொள்ளும் வெளிப்படுத்தப்படாத கஷ்டங்களை நான் நன்கு அறிந்தவன். இப்பிரச்சினையானது சாதி, இனம், மதம் மற்றும் பொருளியல் என்பவற்றுக்கும் அப்பால் சுகாதாரம், கல்வி, சமூக அபிவிருத்தி, என்பவற்றில் மட்டுமல்லாமல் அரசியலிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. ஆகவே, நாட்டின் பிரஜைகளான அவர்களது பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்வது எமது கடமையாகும். ஆகவே, எதிர்வரும் 5 ஆண்டுகளில் அரச, தனியார் பங்குடமையின் கீழ் சேரி வாழ் மக்களுக்கு 100,000 வீட்டு அலகுகளை நிர்மாணித்து வழங்குவதற்கு முன்மொழிகின்றேன். அதே வேளை, மீள் குடியமர்த்தலின் போது அவர்களது வாழ்வாதாரம் மற்றும் சமூக வலையமைப்பு பாதிப்புக்குள்ளாகாது என்பதும் உறுதி செய்யப்படும்.

227. தனியார் துறையின் பங்களிப்புடன் நடுத்தர மட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு 150,000 வீட்டு அலகுகளையும் அரசாங்கத்தின் சிரேஷ்ட ஊழியர்களுக்காக 5,000 வீட்டு அலகுகளையும் நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட சங்கற்பம் பூண்டுள்ளது. இவ்வீடுகளானது கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி,மாத்தறை, மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்படும். அரச ஊழியர்கள் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகள், செய்து கொடுக்கப்படுவதோடு, தனியார் துறை முதலீட்டயாளர்களுக்கு அரை வரி விடுமுறை பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வீட்டு அலகுகளைச் சுற்றி ஏனைய சமூக அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

228. கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் எமது அரசாங்கம் புதிய கிராமிய வீடமைப்புத் திட்டங்களை அமுல்படுத்தும் அரசாங்கமானது செலவினை குடியிருப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும். 500 சதுர அடி நிலப்பரப்பைக் கொண்ட வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு அரசாங்கமானது அதிக பட்சமாக ரூபா 300,000 ரூபாவை கட்டம் கட்டமாக பெற்றுக் கொடுக்கும். அரசாங்கமானது, ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் குறைந்த பட்சம் 5,000 வீடுகளையாவது நிர்மாணிக்கும் . இதற்காக ரூபா 4,500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

229. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், சுவர்ண பூமி மற்றும் உதாகம ஆகியனவற்றின் கீழ் காணி மற்றும் வீடுகளை பெற்று அனுமதிப்பத்திரத்துடன் 10 வருடங்களுக்கு மேல் குடியிருந்தவர்களுக்கு அவற்றின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தேவையான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இவ்விதி விலக்கானது 10 வருடங்களுக்கு மேல் அரச வீடுகள் மற்றும் பெருந்தோட்டத்துறை வீடுகளில் வாழ்பவர்களுக்கும் விரிவாக்கப்படும்.

230. கௌரவ சபாநாயகர் அவர்களே, வெவ்வேறு உள்ளூராட்சி சபைகள் வெவ்வேறு வகையான சொத்து வரிகளை அமுல்படுத்துவது வரி செலுத்துபவர்களுக்கு மிகுந்த பாதிப்பினை கொடுக்கின்றது. எனவே உள்ளூராட்சி சபைகளின் வரி அறவீடுகள் வருடாந்த வர்த்தக பெறுமதியில் 15 சதவீதத்தை மீறுதல் கூடாது என்பதனை நான் முன்மொழிகின்றேன். மேலும் வருடாந்த சொத்து மதிப்பு ரூபாய் 500 அல்லது அதற்கு குறைந்ததாக இருந்தால் வரி விலக்கு அளிக்கவும் நான் பரிந்துரைக்கின்றேன்.

231. மின்சக்தி சேமிப்பினை ஊக்கப்படுத்துவதற்காக வீட்டுரிமையாளர்களை சூரிய சக்தியை பயன்படுத்துவதற்கும் அதன் மூலம் வரித் தேவைகளிலே கணிசமான வரிக் குறைப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நான் ஊக்கப்படுத்துகிறேன்.

232. தற்போதைய நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் நடைமுறையில் உள்ள வாடகை மற்றும் வீட்டு ஆதனங்கள் மீதான வரையறை தொடர்பான சட்டங்கள் மீளாய்வு செய்யப்படும்.

233. மேலும் கூட்டு ஆதனங்களில் முதலிடும் வெளிநாட்டவர்களுக்கு உள்ளூர் வங்கிகளினூடாக உள்ளூர் பணத்தில் ஆதனத்தின் 40 சதவீத பெறுமானமுள்ள கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

**நிர்மாணத் துறை**

234. கௌரவ சபாநாயகர் அவர்களே, உள்ளூர் நிர்மாணக் கைத்தொழில் துறையின் கடந்த தசாப்தத்தில் அவர்களின் செயலாற்றுகை தொடர்பாக பாராட்டுகிறேன். இக்கைத்தொழில் துறையானது வெளிநாடுகளில் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய அளவில் முதிர்வு அடைந்துள்ளது. எமது அரசாங்கமானது இவ்வாறான தொழில் முயற்சிகளில் பங்கு கொள்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது. ஆகவே, வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முயலும் கம்பனிகளுக்கு அவை இலங்கைக்கு வெளியில் உழைக்கும் வருமானங்களுக்கு பாதி விகிதம் உட்பட பல வரி நலன்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. மேலும், இலங்கையின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக உள்வரும் எந்த ஒரு வெளிநாட்டுக் கம்பனியும் உள்ளூர் நிர்மாணக் கம்பனிகளுடன் கட்டாயம் கூட்டு முயற்சியை உருவாக்குதல் வேண்டும்.

235. நிர்மாணத் துறை கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீட்டினை நீக்குவதற்கு முன் மொழிகிறேன். இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்படுவதோடு, அனைவருக்கும் சமமான ஒரு தளம் உருவாக்கப்படும். முன் மொழியப்படவுள்ள தேசிய வீடமைப்பு வங்கியானது அவசியமான உத்தரவாதத்தினை வழங்குவதுடன் மத்தியப்படுத்தப்பட்ட செயலாற்றுகையினூடாக நிர்மாணத் துறைக் கைத்தொழிலுக்கு ஆதரவும் அளிக்கும்.

236. கௌரவ சபாநாயகர் அவர்களே, நிர்மாணக் கைத்தொழில் துறையானது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது கடும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இதனால், சிறிய நிறுவனங்களின் தொடர் செயற்பாடுகள் பாதிப்படைந்து வங்குரோத்து நிலையை எதிர்நோக்குகின்றது. ஆகவே, நான் கொடுப்பனவு உத்தரவாத பாதுகாப்புச் சட்டத்தை முன் மொழிகின்றேன். இது அவர்கள் நிலுவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு போதுமான உறுதியை அளிக்கும்.

237. நிர்மாணக் கைத்தொழில் துறையானது மணல் போன்ற மூலப்பொருட்களின் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. ஆகவே நிர்மாணத்துறைக்கு அவசியமான தரமான மணலைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆழ்கடல் மணலைப் பெற்று அதனைக் கழுவுவதற்கு அவசியமான இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு ஊக்குவிக்கப்படும். அத்தகைய இறக்குமதிகளின் செலவீனங்கள் இரட்டைக் கழிவு பெறும் வரியாகக் கருதப்படுவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

238. இரும்பு, பீங்கான், ஓடு, சுகாதார உபகரணங்கள் போன்ற கட்டட நிர்மாணப் பொருட்கள் உயர் விலை மற்றும் பற்றாக்குறையை நீக்கும் முகமாக இவற்றின் இறக்குமதியுடன் தொடர்பான கட்டணங்கள் கீழ் நோக்கிச் சீராக்கம் செய்யப்படும். மேலும், இலங்கை முதலீட்டுச் சபையின் எதிர்மறை நிரலில் இருந்து பீங்கான், ஓடு, கூரைத் தகடு, மற்றும் மலசல கூட உபகரணங்கள் நீக்கப்படும். பாரம் தூக்கிகள், கொங்கிறீட் கலவை இயந்திரங்கள், மீதான இறக்குமதிக் கட்டணங்கள் நீக்கப்படும். மேலும், அதிக பாரம் கூடிய நிர்மாணத் துறை இயந்திர சாதனங்கள் மீதான இறக்குமதி வயதுக் கட்டுப்பாடு தற்போது 7 வருடங்களிலிருந்து 10 வருடங்களாக அதிகரிக்கப்படும்.

239. ரூபா 50 மில்லியனுக்கும் குறைவான அரசாங்க பெறுகை ஒப்பந்தங்கள் மீதான சிறிய மற்றும் நடுத்தர நிர்மாண ஒப்பந்தங்களுக்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை அதிகரிப்பதற்கு முன் மொழிகின்றேன். இதன் மூலம் அவர்களது காசுப்பாய்ச்சலை மேம்படுத்த முடியும்.

240. கௌரவ சபாநாயகர் அவர்களே, கட்டட நிர்மாணத் துறையில் திறன் கொண்ட தொழிலாளர்களுக்கு உயர் கேள்வி காணப்படுகின்றது. ஆகவே, அரச தனியார் பங்குடமை அடிப்படையில் தனியார் துறை நிர்மாணக் கைத்தொழில் நிறுவனங்களினால் தொழில்சார் நடைமுறைப்பயிற்சி அளிக்கப்படும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூபா 10,000 அரசாங்கத்தினால் மூன்று மாதங்களுக்கு பயிற்சிக் காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படும். இதன் கீழ் ஒவ்வொரு காலாண்டிலும் மேசன், தச்சு, குழாய், பொருத்துகை மின்னியல், மற்றும் அலுமினியம் இணைப்புத் துறைகள் சுமார் 7,500 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவர். இதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**சுற்றுலா**

241. கௌரவ சபாநாயகர் அவர்களே, சுற்றுலாத்துறையானது நாட்டின் பொருளாதாரத்தில் மிகவும் உறுதியான ஒரு துறையாக தொடர்ந்து காணப்படுகின்றது. இது 2015 ஆம் ஆண்டின் முதல் 10 மாத காலப்பகுதியில் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 18 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், எமது நாட்டை நாம் உரிய முறையில் சந்தைப்படுத்தப்படாமையையிட்டு நான் கவலைப்படுகிறேன்.

242. இது தொடர்பில் கடந்த சில வருடங்களாக நாங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டும் அவை ஏதும் சாத்தியப்படவில்லை. இப்பிராந்தியத்தில் காணப்படும் போட்டித்தன்மையை கருத்திற் கொள்ளும் போது இலங்கை விரும்பத்தகு சுற்றுலாத் தளமாக தொடர்ந்தும் பேணப்படல் வேண்டுமாயின் இலங்கையில் சிறப்பாக குறிப்பிடப்படல் வேண்டும். அதற்காக, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகமானது புதிய சந்தைகளை கண்டு பிடிப்பதற்காக குறிப்பாக தூர கிழக்கு நாடுகளின் சந்தையைக் கவரும் வகையில் சிறப்பான மேம்படுத்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும்.

243. கௌரவ சபாநாயகர் அவர்களே, சுற்றுலாத் துறையில் தகுதியான ஆளணியினருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தனியார் துறையின் பங்களிப்புடன் இளைஞர்களுக்கு உபசரிப்புத் துறையில் பயிற்சியளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். ஒவ்வொரு காலாண்டிலும் 3000 இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கும் வகையில் 3 மாதங்கள் நிலையான பயிற்சிக் காலமாகக் கொண்ட ஒரு பயிற்சி நெறிக்கு அதி கூடிய தொகையாக ரூபா 15000 வரையில் 50 சதவீத பயிற்சிக் கட்டணத்தை அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

244. மேலும், தனியார் துறை ஹோட்டல்கள் இத்தகைய பயிற்சிப் பாடசாலைகளை உருவாக்குவதற்கு ஊக்குவிப்பு வழங்கும் வகையில் திறன் அபிவிருத்தி துறைக்கு வழங்கப்பட்டுள்ள மும்மடங்கு கழிவு வரிச்சலுகையை இந்நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

245. கூட்டங்கள் ஊக்குவிப்புக்கள், மாநாடுகளும் கண்காட்சிகளும் அல்லது (MICE) என அழைக்கப்படும் துறையை ஊக்குவிக்கும் முகமாக பண்டார நாயக்கா ஞாபகார்த்த மண்டபம், நெலும் பொக்குன அரங்கு மற்றும் புதிய நகர மண்டபத்திற்கு அருகாமையில் நவீன வசதிகளடன் கூடிய கண்காட்சிக் கூடம் அமைக்கப்படும். இது 7000 இருக்கை வசதிகளுடன்

தனியார் துறை பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படும். இவ்வாறான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் MICE துறையில் ஈடுபடுவதற்காக விஷேடமாக உருவசாக்கப்பட்ட கம்பனிகளுக்கு மூன்று வருடங்களுக்கு 50 சதவீத விடுமுறை அளிப்பதற்று முன் மொழிகிறேன். அத்தோடு நான் இதற்காக ரூபா.3,000 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

246. சுற்றுலாப் பிரயாணிகளினால் கூடுதலான அளவு பணத்தை செலவளிப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் இலங்கையை பிராந்தியத்தில் ஆடம்பரப் பொருட் கொள்வனவு தளமாக மாற்றுவதற்கும் உடைகள்,இலத்திரனியல், மற்றும் மின்சார உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைப் பொருட்கள் மீதான வரிகளை சீராக்கம் செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

247. நாணய மாற்றாளர்கள் - மத்திய வங்கியின் அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வழிகாட்டல்களுக்குட்பட்டு அந்நிய நாணயமாற்று வியாபாரத்தை மேலும் இலகுபடுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

248. இலங்கையானது, கலாசார, மத, சூழலியல், மற்றும் மருத்துவத்தை நோக்காகக் கொண்ட சுற்றுலாப் பிரயாணிகளை கவர்வதில் அதி கூடிய சாத்தியத் தன்மையைக் கொண்டதாகும். கலாசார முக்கோண பிராந்தியம், கிழக்கு கடற்கரை, நுவரெலியா, பதுளை மற்றும் மலைநாடு என்பன கவர்ச்சியான சுற்றுலாத் தலங்களாக மாற்றப்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தனியார் துறை பங்களிப்புடன் பெந்தோட்டை, தேதுவ, மிறிஸ்ஸ, மற்றும் கொழும்புக் கோட்டை, என்பன விஷேட சுற்றலா வலயங்களாக அபிவிருத்தி செய்வதில் விஷேட கவனம் செலுத்தப்படும். மேலும், காலி கோட்டையானது பாதுகாக்கப்பட்டு காலி நகரமானது வரலாற்று நகரமாக அபிவிருத்தி செய்யப்படும். இந்நடவடிக்கைளுக்கு ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

249. கௌரவ சபாநாயகர் அவர்களே, மருத்துவ சுற்றுலா, குறிப்பாக எமது சுதேச வைத்தியத்துறையானது நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய ஒரு முக்கிய காரணியாகும். எவ்வாறாயினும், உயர் தரத்தினை பராமரிப்பு மிகவும் முக்கியமானதாகையால் ஏற்றுக் கொள்ள முடியாத நடைமுறைகள் அனுமதிக்கப்பட மாட்டாது. ஆகவே, இத்துறையை சரியான முறையில் வழி நடாத்துவதற்கு அவசியமான பொருத்தமான சட்ட விதிகளை அறிமுகம் செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

250. மோசமான முகாமை காரணமாக அரச உடமையான விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் மிகவும் பாதிப்புற்றுக் காணப்படுகின்றன. அனைத்து உரித்தாளர்களையும் பங்குதாரார்களாகக் கொண்ட ஒரு முகாமைத்துவ கம்பனியின் கீழ் இவ்வனைத்து சுற்றுலா விடுதிகளையும் கொண்டு வருவதற்கு முன் மொழிகிறேன். இவைகள் தொழில் வல்லுனர்களால் செயற்படுத்தப்படுவதோடு, மாத்திரமல்லாது நியாயமான விலையில் சிறப்பான வசதிகளும் வழங்கும் வகையில் தரமுயர்த்தப்படும்.

251. நாம் மேலும் கண்காட்சி கூடம் ஒன்றை அரச தனியார் பங்களிப்பினூடாக பாராளுமன்ற கட்டிடத்திற்கு அருகில் நிர்மாணிக்க உள்ளோம்.

252. நான் மேலும் பின்தங்கிய பிரதேசங்களில் கருப்பூங்காக்களை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கின்றேன். அத்துடன் அதற்காக அரச காணிகளை வழங்குவதற்கும் அரைவாசி வரி விடுமுறைகளை 10 வருட காலத்திற்கும் முன் மொழிகின்றேன். இது அப்பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான சுற்றுலா மற்றும் ஓய்வுநேர களிப்பு செயற்பாடுகளை விரிவுபடுத்தல்கள் மூலமான நன்மைகளை ஏற்படுத்தும்.

253. நாட்டில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுற்றுலா விடுதிகளில் 60 சதவீதமானவை பதிவற்றதாகும். இது நாட்டில் உபசரிப்புத் துறையில் உரிய தரங்களைப் பேணுவதில் பல சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, 2016 மார்ச் 31 அம் திகதியில் அனைத்து சுற்றுலா விடுதிகளும் சுற்றலா அபிவிருத்தி அதிகார சபையில் கட்டாயம் பதிவு செய்யப்படல் வேண்டும்

என முன் மொழிகிறேன். பதிவு செய்யப்படாமல் இயங்கும் சுற்றுலா விடுதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையானது மேற்கொள்ளல் வேண்டும் எனவும் முன் மொழிகிறேன்.

254. நட்சத்திர வகுப்பு வகைப்படுத்தலுக்கு அமைவாக சுற்றுலா விடுதிகள் புரள்வின் மீது அதிக பட்சமாக 3 சதவீதம் கட்டணம் விதிக்கப்படும். இதற்காக வர்த்தக சபைகளின் கூட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகள் வர்த்தக சம்மேளனத்தினால் வகைப்படுத்தப்பட்டுள்ள நட்சத்திர வகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டவையாக அமைய வேண்டும்.

255. விடுதி வாகனங்கள், சுற்றுலாப் படகுகள், நீர்ச்சறுக்கு உபகரணங்கள், விசைப்படகுகள் மற்றும் சிறிய சுற்றுலாக் கப்பல்கள் மீதான இறக்குமதி கட்டணங்களை நீக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

**வங்கி மற்றும் நிதியியல்**

**கொழும்பு சர்வதேச நிதி மையம் (CIFC)**

256. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாங்கள் பல வருடங்களாக நிதி மையமொன்று தொடர்பாக கதைக்கின்றோம். ஆனால் அது சாத்தியமாகவில்லை. உலக சனத்தொகையின் நான்கில் ஒரு பகுதியை தன்னகத்தே கொண்டுள்ள சார்க் பிராந்தியத்தில் எமது பௌதீக ரீதியான அமைவிடமானது அத்தகையதொரு முயற்சிக்கு கூடுதல் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. நிதி மையமானது பொருளாதாரங்களின் வளர்ச்சியை தூண்டும் சக்தியைக் கொண்டுள்ளது. இது உண்மையில் எங்களிடமிருந்து சில முதிர்வுகளை வேண்டி நிற்கின்றது. அதாவது விசேடமாக பௌதிக மற்றும் எண்ணிம கட்டமைப்பு வசதிகள் மனிதவளம் ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்ட நிதி உட்கட்டமைப்பு வசதிகளாகும். இவ்வரசாங்கமானது சாத்தியமான விடயங்களில் பணத்தை முதலிடுவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்தப் பின்னணியில் நாங்கள் கொழும்பு சர்வதேச நிதி மையத்தினை உருவாக்குவோம்.

257. இக்குறிப்பிட்ட வலயம் டுபாய் சர்வதேச நிதி மையம் மற்றும் உலகின் பல பாகங்களில் காணப்படும் கரைகடந்த நிதி மையங்களின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படும். இவ்வலயமானது வரையறுக்கப்பட்ட டி.ஆர் விஜயவர்தன மாவத்தைக்குள் உள்ளடக்கப்படுவதுடன் 300,000 சதுர அடிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதியும் நிர்மாணிக்கப்படும். நிதி மைய ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டிற்கு அமைய நிதிமையத்திற்கே உரித்தான முறையில் வர்த்தக ரீதியான பிணக்குகளை மிக விரைவாகவும் மற்றும் நியாய முறையில் தீர்ப்பதற்காக அது வர்த்தக நீதி மன்றத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும். இம்முயற்சியானது கடந்த அரசாங்கத்தின் கசினோ சூதாட்ட எண்ணக் கருவினை ஒரு சிறப்பான நிதி மையமென்ற வியாபார முயற்சியாக மாற்றியுள்ளதென்றே நம்புகின்றோம். அது பல எண்ணிக்கையிலான தொழில் முயற்சிகளை உருவாக்கும். நாங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச வங்கிகளை இந்நிதியத்திலிருந்து இயங்குமாறும் இந்நிலையத்தின் ஒரு பகுதியாக அழைக்கின்றோம். 2016 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

**வர்த்தக வங்கிகள்**

258. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட 32 வங்கிகளையும் 48 நிதிக் கம்பனிகளையும் நாங்கள் கொண்டுள்ளோம். வங்கிகள் தாங்களாகவே கிடையான விரிவாக்கத்தில் ஈடுபடுவதனால் இலங்கையின் வங்கித்துறையின் ஊடுருவலானது குறிப்பிடும் படியாக அதிகரித்துள்ளது. தற்போது எமது வங்கிகளானது தன்னியக்க காசு மீளப்பெறல் இயந்திர வசதிகள் இலத்திரனியல் வங்கி வசதிகள் மற்றும் ஏனைய வங்கி

வசதிகளை பெற்றுக் கொடுப்பதனால் அவைகள் வங்கிகளை வாடிக்கையாளர்களின் காலடியில் கொண்டு சேர்த்துள்ளன. நான் வங்கித் துறையினரை அவர்களின் விரிவாக்கத்திற்காக மெச்சுகிறேன். அதேவேளை எமது வங்கிகளானது பிணையினை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்குவதில் தம்மை மையப்படுத்தியுள்ளதோடு வியாபார மாதிரியிலான கடன் வழங்கலுக்குப் பினனிற்கின்றதை காணக்கூடியதாக உள்ளது. இது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் உருவாக்கலுக்குத் தடையாக உள்ளது.

- கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது வங்கித் துறையானது முறைமையான முக்கியத்துவமான ஒரு சில வங்கிகளையும் மற்றும் சில சிறிய அளவிலான வங்கிகளையும் கொண்டதாகும். வங்கிகள் சுயேச்சையாக இணைவதை நாங்கள் வரவேற்கின்றோம். ஏனெனில் அதன்மூலம் உறுதியான ஐந்தொகையை உருவாக்கலாம். அது சிறந்த தரப்படுத்தலைப் பெற்றுக் கொடுப்பதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் விரிவான நுழைவுக்கும் வழிவகுக்கும். நான் மீண்டும் வலியுறுத்துவது என்னவெனில் இவ்வாறான இணைவுகளின் போது அனைத்து தரத்திலான ஊழியர்களினதும் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தையும் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியையும் இணைத்து மிகவும் உறுதியான மற்றும் பெரிய அளவிலான தேசிய வீடமைப்பு வங்கியையும் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியை பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இணைத்து இலங்கை தொழில்முயற்சிகள் அபிவிருத்தி வங்கியினையும் உருவாக்குவதோடு இலங்கை சேமிப்பு வங்கியானது தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைக்கப்படும்.
- திவிநெகும வங்கியானது ஏறக்குறைய ரூபா 59 பில்லியன் முதலீட்டுப் பட்டியலைக் கொண்டுள்ளது. ஆனால் இத்தகையதொரு தொகையை முகாமை செய்வதற்கான இயலளவு அவ்வங்கியிடம் இல்லை. இவ்வங்கியில் உள்ள பணத்தின் உரிமையாளர்கள் எமது சமூகத்தில் மிகவும் நலிவானவர்களாகும். ஆகவே அதனைப் பாதுகாப்பது எமது கடமையாகும். ஆகவே, இவ்வங்கியிலுள்ள வைப்புக்களின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டும் தொழில் ரீதியான முகாமையை உறுதிசெய்யும் நோக்கிலும் இவ்வங்கியினை தேசிய சேமிப்பு வங்கியுடன் தொடர்புபடுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

259. கௌரவ சபாநாயகர் அவர்களே, அனுமதிப் பத்திரம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது பிரதான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். குத்தகை வியாபாரமானது வங்கிகளின் பிரதான நடவடிக்கைகளுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இவ்வங்கிகள் 2016 யூன் 1 ஆம் திகதியுடன் குத்தகை வியாபாரத்தில் ஈடுபடுவதை நிறுத்தல் வேண்டும்.
260. இன்று வங்கிகள் நாட்டின் பொருளாதாரத்தில் காணப்படும் சில துறைகள் மீது கடன் வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றன. ஆதலால் இத்துறைகளின் முன்னேற்றமானது பாதிப்படைந்துள்ளது. அனைத்து வங்கிகளும் தனது கடன் பட்டியலில் 10 சதவீதத்தை விவசாயத் துறைக்கும், 5 சதவீதத்தை சிறிய மற்றம் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும், 5 சதவீதத்தை பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கடன்களை பெற்றுக்கொள்வதற்காக ஒதுக்குதல் வேண்டும். சர்வதேச சந்தையில் காணப்படும் தங்கத்திற்கான விலையின் தாக்கம் காரணமாக உள்ளூர் வங்கிகள் மிக விசாலமான நகையீட்டு முதலீட்டுப் பட்டியலையும் கொண்டுள்ளது. நான் வங்கித் துறையிடம் வேண்டிக்கொள்வது யாதெனில், தனது கடன் பட்டியலில் அடகு கடன் பட்டியலை 5 சதவீதத்திற்கு வரையறுத்துக் கொள்ளுமாறும் மேலும்

வங்கிகள் தமது வாடிக்கையாளர்கள் பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கடன் வழங்குவதை நான் ஊக்குவிக்கின்றேன்.

261. நகை அடகு பிடிக்கும் சட்டத்தை திருத்தி அடகு வியாபார பதிவுக்கான கட்டணத்தை ரூபா 25,000 ஆக உயர்த்துவதற்கு முன்மொழிகின்றேன்.

262. தேசிய கொடுப்பனவுகள் பேரவை இது நாட்டில் அனைத்துக் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் தேசிய அமைப்பாகும். நாட்டின் நிதி முறைமை அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பான அரசாங்கத்தின் உபாயத்தின் ஒரு பகுதியாக இந்நிறுவனமும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதுவும் கொழும்பு நிதி மையத்தினை உருவாக்குவதற்கு வசதியளிக்கின்றது.

263. வங்கிக் கணக்குகளில் போதியளவு பணமின்றி முறையற்ற முறையில் வியாபாரம் செய்கின்றனர். இதன்போது ஏற்படும் மறுக்கப்பட்ட காசோலைகள் என்பது ஒரு பாரிய சிக்கலான பிரச்சினையாகும். ஒரு நேர்மையான வியாபாரக் கலாசாரத்தை உருவாக்குவதற்கும் வாடிக்கையாளர்களை பாதுகாக்கும் நோக்கில் மறுக்கப்பட்ட காசோலைகள் ஒரு குற்றவியல் சட்டத்திலுள்ள தவறொன்றாகக் கொண்டு அவ்வாறான குற்றவாளிகளுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்மொழிகின்றேன்.

264. கௌரவ சபாநாயகர் அவர்களே, இரண்டு வங்கிகளைத் தவிர எந்தவொரு உள்ளூர் வங்கியும் சர்வதேச ரீதியில் தமது செயற்பாடுகளை விரிவாக்கவில்லை. ஆனால் சந்தர்ப்பங்களோ அதிகமென நான் நம்புகிறேன் அவ்வாறான சந்தர்ப்பங்களை அடைந்துகொள்வதற்கான இயலவை எமது வங்கிகள் கொண்டுள்ளன. ஆகவே தற்போது காணப்படும் வரி ஊக்குவிப்புகளைப் பயன்படுத்தி வங்கிகள் தமது செயற்பாடுகளை வெளிநாடுகளில் விஸ்தரிப்பதை நான் ஊக்குவிக்கிறேன்.

265. மேலும், உள்ளூர் கம்பனிகள் தமது வியாபார விரிவாக்கல் நடவடிகக்கைளுக்கு அவசியமான மூலதனத்தை தமது ஐந்தொகையை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச மூலதனச் சந்தைகளிலிருந்து கடனாகப் பெறுவதை நான் ஊக்குவிக்கின்றேன். கடனைப் பெறும் கம்பனியானது செலாவணி ஆபத்தை தாங்கிக் கொள்வதோடு கடனுக்கான வட்டி விகிதமானது சந்தையில் காணப்படும் வட்டி விகிதத்துடன் ஒன்றிணைந்து செல்லுதல் வேண்டும். கடன் திருப்பிச் செலுத்தல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளானது மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும்.

266. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது வங்கிகள் தமது கடல்கடந்த நடவடிக்கைகளை விரிவாக்குவதையும் வெளிநாட்டு செலாவணிகளை மத்திய வங்கியில் வைப்புச் செய்வதையும் நான் ஊக்குவிக்கின்றேன். இந்த நாட்டின் அதியுயர் இருப்பினை உறுதிப்படுத்துவதோடு உள்ளூர் வங்கிகளுக்கு வர்த்தக நடவடிக்கைளுக்கு அதிக உள்ளூர் நாணயங்களை பெற்றுக்கொடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

267. கௌரவ சபாநாயகர் அவர்களே, வதிவல்லாப் பிரசைகளுக்கான அரச பிணைகளின் மீதான எல்லை அளவை திறைசேரி முறிகள் மற்றும் கடன் முறிகளின் மொத்த நிலுவை இறுப்பை 12.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன்மூலம் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு அரச பிணைகளில் முதலீடு செய்வதற்கு கூடுதல் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பதோடு வதிவல்லாதவர்களினால் மேற்கொள்ளப்படும் திடீர் மீளப்பெறுதலினால் இடம்பெறும் அன்னியச் செலாவணி ஏற்றத்தாழ்வுகளான அண்மைக் காலத்தில் எதிர்கொண்ட அபாயம் போன்றவை தடுக்கப்படுகின்றன.

268. நாம் மிகவும் நவீன மயமான காசு முகாமைத்துவத்தை நோக்கி மாறிக் கொண்டிருக்கிறோம். வங்கிகளினால் வழங்கப்படும் நவீன வசதிகளின் காரணமாக ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் காசு போக்குவரத்தை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்குடன்

வங்கிகளிலிருந்து காசு மீளப்பெறல்கள் மீது பின்வரும் வகையில் கட்டணம் அறவிட முன்மொழிகின்றேன்.

அ. ஒரு மில்லியனுக்கு குறைவானது: கட்டணம் இல்லை.
ஆ. ஒரு மில்லியன் தொடக்கம் 10 மில்லியன் வரை: 2 சதவீதம்
இ. 10 மில்லியனுக்கு மேல்: 3 சதவீதம்

269. வங்கி வரைவுகள் மீதான கட்டணம் ஒவ்வொரு வங்கி வரைவுக்கும் ரூபா 150 ஐ விஞ்சக் கூடாது.

270. இதே காரணங்களுக்காக அனைத்து தொழில் கொள்வோரும் தமது தொழிலாளர்கள் அனைவருக்கும் வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கும்படி அறிவுறுத்தி அவர்களது சம்பளங்களை அக்கணக்குகளுக்கு வரவு வைக்குமாறு முன்மொழிகின்றேன்.

271. கௌரவ சபாநாயகர் அவர்களே, அனைத்து நிதிச்சட்ட கொடுப்பனவுகளையும் ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு கம்பனியும் பிரத்தியேகமான வங்கிக் கணக்குகளை பேணுதல் வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

272. நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வாகனங்கள் பெறுமதி மதிப்பீட்டு பத்திரங்கள் மீதான கட்டணத்தை 2016 சனவரி 1 முதல் திருத்தம் செய்யப்படும். அதனடிப்படையில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி மீது ரூபா 2,500 உம் மற்றும் மோட்டார் கார் உட்பட அனைத்து வாகனங்கள் மீதும் ரூபா 15,000 கட்டணம் அறவிட நான் முன்மொழிகின்றேன்.

273. கௌரவ சபாநாயகர் அவர்களே, நகரப் பகுதிகளில் அதிகளவில் வங்கிகள் காணப்பட பின்தங்கிய பிரதேசங்களில் குறைந்தளவான வங்கிகளே பிரசங்கமாகியுள்ளன என்பதில் நீங்களும் என்னுடன் உடன்படுவீர்கள். இது நிதி அடைவில் சமமின்மையை ஏற்படுத்தியுள்ளது. இச்சமமின்மையை இல்லாமல் செய்யும் நோக்குடனும் அதேவேளை பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கிலும் அனைத்து வங்கிகளிலும் பின்தங்கிய பிராந்தியங்களில் புதிய கிளைகளைத் திறந்து தமது கிளைகள் வலையமைப்பினை 15 சதவீதத்தினால் அதிகரித்தல் வேண்டும் என நான் முன்மொழிகின்றேன்.

274. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடன் தகவல் பணியகமானது கடன்களுக்கான அடைவை அதிகரித்து கடன் வழங்கலில் உள்ள ஆபத்தை அடிப்படையாகக் கொண்ட விலையிடலை இயலச்செய்து நிதி நிறுவனங்களுக்கு இடையில் போட்டித்தன்மையை உருவாக்கி நிதித் துறையின் சிறப்பான அபிவிருத்திக்கு உதவிசெய்கின்றன. அரச பங்குடமை அடிப்படையில் உருவாக்கப்பட்டதொரு கடன் தகவல் பணியகத்தினை நாடு ஏற்கனவே கொண்டுள்ளது. நிதித்துறையின் எதிர்கால விரிவாக்கத்தினை கருத்திற்கொள்ளும் போது தனியார் துறையும் கடன் தகவல் பணியகமொன்றை உருவாக்குவதை நாம் ஊக்குவிக்கின்றோம். இதில் இலங்கை மத்திய வங்கியானது ஒரு உரித்தாளராக இருப்பதோடு நிதி நிறுவனங்கள் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பொது வசதிகளை வழங்கும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக குறுக்கு தொழிற் பங்குபற்றலுடன் உருவாக்கப்படல் வேண்டும். இந்நோக்கத்திற்காக தேவையான சட்ட திட்டங்களை மேற்கொள்ள நான் முன்மொழிகின்றேன். அதேபோல் காப்புறுதிக் கைத்தொழிலும் தனியார் கடன் தகவல் பணியகத்தை திறப்பதை நான் ஊக்குவிக்கின்றேன்.

275. அதே வேளையில் வணிக வங்கிகளில் உறங்கு நிலையிலுள்ள கணக்குகளில் காணப்படும் பணத்தினை அரச திரட்டு நிதிக்கு 2016 சனவரி 01இல் வரவு வைக்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

**நிதிக் கம்பனிகள்**

276. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த தசாப்தத்தில் பல நிதிக் கம்பனிகள் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்நெருக்கடிகளின் தாக்கமானது சமூகத்தின் அனைத்து பிரிவினராலும் உணரப்பட்டதோடு நிதித்துறை

நிலைபேறானது தளம்பலுக்கு உட்பட்டது. வைப்பாளர்கள் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டனர். இலங்கை மத்திய வங்கியானது ஒழுங்குபடுத்துனர் என்ற தனது செயற்பாட்டினை அரசியல் மயமாக்கலின் காரணமாக சரியான முறையில் ஆற்றவில்லையென்பது மட்டுமல்லாமல் தனது நடுத்தரத் தன்மையினையும் இழந்தது.

277. கௌரவ சபாநாயகர் அவர்களே, நிதி நிறுவனங்களானது மிகவும் பலவீனமாகக் காணப்படுகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அரசாங்கமானது கோல்டன் கீ நிதிக் கம்பனி வைப்பாளர்களுக்கு அதிக செலவில் நிவாரணங்களை பெற்றுக் கொடுத்துள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். இப்பிரச்சினைகளுக்கு நீண்ட கால தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அமெரிக்கா நாடுகளிலுள்ள தீர்மானங்கள் நம்பிக்கை கூட்டுத்தாபன முறையின் அடிப்படையில் நிதி நிறுவனங்கள் மறுசீரமைப்பு முகவராண்மை உருவாக்கப்படும். இதன்மூலம் பலவீனமான நிதிக் கம்பனிகளை மீள் மூலதனமாக்கல் செய்தல் மற்றும் அவற்றின் பிரச்சினைக்குரிய சொத்துக்களை உரிய மறுசீரமைப்புக்காக இம்முகவராண்மையால் கையேற்கப்படும். இந்நிதிக் கம்பனிகளின் வைப்புவீதம் மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் என்பவற்றுக்கிடையில் காணப்படும் பாரிய இடைவெளியானது நிதித்துறையின் குறை செயலாற்றுகையை காட்டுகின்றது. இது அதிக கிரயத்திலான இடைத் தரகர்களை நாட்டின் பொது மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் உருவாக்கியது. அரசாங்கமானது நிதி நிறுவனங்கள் முகவராண்மையை உருவாக்குவதற்கு ரூபா 10 மில்லியன்களை பங்கு மூலதனமாக வழங்குவதற்கு 5 வருட காலத்தைக் கொண்ட ரூபா 25 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகளும் வழங்கப்படும். இம்மறுசீரமைப்பு செய்யப்பட்ட நிறுவனங்கள் மத்திய வங்கியினால் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும். எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட முன்னோடியாக வைப்பாளர்களுக்கு உரிய பாதுகாப்பை உணரச் செய்யும் விதமாக இலங்கை மத்திய வங்கியானது 2016 சனவரி முடிவில் அனைத்து பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினதும் வைப்பாளர்களுக்கு 100 சதவீத உத்தரவாதத்தை வழங்கும்.

278. கௌரவ சபாநாயகர் அவர்களே, வங்கியல்லாத நிதித் துறையில் அதிக வைப்புக்களில் மேற்கொள்ளப்படுவதை தவிர்க்கும் நோக்கில் நிதிக் கம்பனிகளால் வழங்கப்படும் வட்டி வீதங்களுக்கு ஒரு எல்லையை விதிப்பதற்கு முன்மொழிகின்றேன். கடனட்டைகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட வாழ்க்கை முறை கடன்களை பெற்று திருப்பிச்செலுத்த முடியாமையினால் நிதி நிறுவனங்களின் அதிகூடிய வட்டி வீதங்களை மற்றும் தண்டப் பணங்களினால் அவதியுறும் பொது மக்களை நாங்கள் பாதுகாப்போம். இதற்காக இலங்கை மத்திய வங்கியானது நாட்டின் இயங்கும் வங்கிகளுடன் இணைந்து அதனது கடன் ஆலோசனை சேவைகளை விரிவுபடுத்தும். சந்தேகப்பட முடியாத கடன் பெறுநர்களுக்கு வரையற்ற அளவில் அதிக கிரயத்திலான கடன்களை நிதி நிறுவனங்கள் வழங்குவதைக் கட்டுப்படுத்தும் வகையிலான வழிகாட்டல்களை இலங்கை மத்திய வங்கி வழங்கும்.

### சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்பு

279. தற்பொழுது 60 வயதுக்கு மேற்பட்ட சிரேட்ட பிரசைகளின் 1 மில்லியன் வரையிலான வைப்புக்கு வருடத்திற்கு 15 சதவீத வட்டி வழங்கப்படுகின்றது. இவ்வசதியை 55 வயதை அடைந்த பிரஜைகளுக்கும் வழங்குவதற்கும் 15 சதவீத வட்டியை ரூபா 1.5 மில்லியன் வரையும் பெற்றுக் கொடுப்பதற்கும் முன்மொழிகின்றேன். இவ்வசதியானது அனுமதிபெற்ற நிதிக் கம்பனிகளால் பெற்றுக் கொடுப்பதோடு 1.5 சதவீத வட்டி மானியமானது அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும். இதற்காக ரூபா 1,500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். வைப்புக்கள் மீது இலங்கை மத்திய வங்கியின் உத்தரவாதமானது வைப்பாளர்களின் நம்பிக்கையை கட்டாயம் அதிகரித்தல் வேண்டும்.

### ஒரு சேமிப்பு கலாசாரத்தை உருவாக்குதல்

280. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டின் தேசிய சேமிப்பை மேம்படுத்தலை கருத்திற்கொண்டு ஒரு சேமிப்பு கலாசாரத்தை உருவாக்குவது மிகவும் முக்கியமானதாகும். இந்தப் பின்னணியில் ஒவ்வொரு வருடமும் பாடசாலைக்கு அனுமதிக்கும் பிள்ளைகளின் பெயரில் ரூபா 250 ஐ வைப்பிலிட்டு ஒரு வங்கிக் கணக்கினை ஆரம்பிக்குமாறு அனைத்து வங்கிகளிடமும் வேண்டிக் கொள்கின்றேன். வங்கிகளின் சம்மேளமானது அரசாங்கத்தின் கொள்கைக்கு ஆதரவளிப்பதற்காக முன்வருவதோடு அரசாங்கத்தின் இந்தச் சிறப்பான முயற்சிக்கு ஆதரவளிப்பதற்காக வங்கிச் சமூகத்திற்கு நான் ஊக்குவிக்கின்றேன். இது 2016 சனவரி 1 இலிருந்து ஆரம்பமாகும்.

### வளர்ச்சியைத் தூண்டுவதற்கான மூலதனச் சந்தை

281. மூலதனச் சந்தையானது தொடர்ந்து பயன்பாட்டுக்கு வராத வளமாகவே காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த மூலதனச் சந்தையானது வியாபாரங்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கலுக்கு மிகவும் அவசியமான குறைந்த கிரயத்திலான நீண்ட கால நிதியினை பெற்றுக் கொடுக்கின்றது. எமது மூலதனச் சந்தையானது வரையறுத்த மட்டத்திலான தொழில்நுட்ப பாவனை மற்றும் போதுமான மட்டத்திலான நிர்வாகத் திறமைகள் காணப்படாமையினால் பாதிக்கப்பட்டுள்ளது. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழுவானது பங்கு பரிமாற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தை பங்கு பற்றுனரிடத்தில் உரிய ஒழுக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதற்காக கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்டதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எமது அரசாங்கமானது இந்நிலைமையினை சரிசெய்வதை கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. கடந்த சில மாதங்களில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையானது உண்மையில் உயர்வடைந்துள்ளது.
282. கௌரவ சபாநாயகர் அவர்களே, கொழும்பு பங்குச் சந்தையானது இன்னும் ஒரு உறுப்பினர் உடைமையான மற்றும் இலாபம் உழைக்காத நிறுவனமாகும். யாராவது உலக பங்குச் சந்தைகளை உற்று நோக்கினால் அவைகள் விடுவிக்கப்பட்டுள்ளதோடு சிறப்பாக செயற்படுவதையும் காணலாம்.
283. பங்குச் சந்தை விடுவிப்பானது உண்மையில் நிதி இடைத்தரகர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதை விட சந்தை பங்கு பற்றுனர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தும். இது பாரியளவிலான வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்வதோடு சிறப்பான தொழில்நுட்ப பாவனையினூடாக மேலும் வெளிப்படைத் தன்மை மற்றும் குறைந்த வர்த்தக கிரயத்தையும் உறுதிசெய்யும். அதேபோல் அனைத்து பங்கு பற்றுனர்களினதும் நலன் கருதி அரசாங்கமானது நியாயமான மற்றும் வினைத்திறனான சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்பாக உள்ளது. ஆகவே கொழும்பு பங்குச் சந்தையை 2016 ஆம் ஆண்டின் போது முழுமையாக விடுவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
284. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கமானது கொழும்பு பங்குச் சந்தையானது வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் செயற்படக்கூடிய ஒரு சிறப்பான சூழலை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்துள்ளது. பங்குச் சந்தையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதற்கு ஒரு சிறந்த ஒழுங்குபடுத்தல் வேலைச்சட்டகம் இன்றியமையாததாகும். ஆகவே பங்குச் சந்தையில் காணப்படும் ஒழுங்குபடுத்தல் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமானது திருத்தியமைக்கப்படும்.
285. கௌரவ சபாநாயகர் அவர்களே, வியாபார நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டுமாயின் அவ்வியாபாரங்கள் குறைந்த கிரயத்திலான நீண்ட கால மூலதனத்தின் அவசியம் மிகவும் முக்கியமானதாகும். கம்பனிகளின் தொகுதிக் கடன் பிணையங்கள்

சந்தையானது இலங்கையில் மிகவும் சுறுசுறுப்பானதாகும். இது 2014 ஆம் ஆண்டில் ரூபா 50 பில்லியன்களை பெற்றுக்கொள்வதோடு அது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு அதிகமாகும். ஆகவே கம்பனிகளின் தொகுதிக் கடன் பிணையங்கள் விரிவாக்கத்திற்கு உறுதியளிக்கும் வகையில் 2016 ஆம் ஆண்டில் இந்நடவடிக்கைகளுடன் தொடர்பான வருமான வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரியிலிருந்து விலக்களிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

286. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்க பிணையங்களை விற்பனை செய்வதற்காக விசேட விற்பனைத் தளம் எம்மிடம் இல்லை. ஆரம்பமாக அரச பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களுக்கான முறிகள் தீர்வு நிலையத்தை உருவாக்குவதற்கு முன்மொழிகின்றேன். இது பிற்காலத்தில் நிதி உபகரணங்களான தனியார் தொகுதிக் கடன் பிணையங்கள் அதாவது தொகுதிக் கடன் பரிமாற்றல்கள் உள்ளடங்கலாக ஏனைய நிதி உபகரணங்களுக்கும் விரிவாக்கப்படலாம். முறிகள் தீர்வு நிலையமானது இலங்கை மத்திய வங்கியினால் உருவாக்கப்படும். இந்நிலையமானது முழுமையாக இயங்கும் போது அது சுதந்திரமான ஒரு இயக்குனர் சபையினால் நிறுவகிக்கப்படும். மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் ஒரு வர்த்தக தளமொன்றை உருவாக்குவதற்கு ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

287. அதேவேளை, பங்கு விற்பனை மற்றும் கொள்வனவின் போது விற்கப்படும் பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடான 0.3 சதவீத அறவீடானது நீக்கப்படும். இதன்மூலம் பங்குச் சந்தை நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுவதோடு இது மந்தகதியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பங்குச் சந்தை செயற்பாடுகளை துரிதப்படுத்துவதோடு பங்குச் சான்றிதழ் மீதான முத்திரைக் கட்டணமும் நீக்கப்படும்.

288. கௌரவ சபாநாயகர் அவர்களே, பங்குச் சந்தையில் காணப்படும் நிலையற்ற தன்மையானது பல பங்கு தரகர்களிடத்தில் பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. மூலதனச் சந்தையின் நீண்டகால அபிவிருத்தியை உறுதி செய்வதில் பங்குச் சந்தை தரகர்களின் நிலைபேறானது இன்றியமையாததாகும். ஆகவே பங்குச் சந்தை தரகர்கள் சுயேட்சையாக இணைவதை நான் ஊக்குவிக்கிறேன்.

289. கௌரவ சபாநாயகர் அவர்களே, வர்த்தக மற்றும் நிதிச் சந்தையில் தகவல்களின் உண்மைத் தன்மையானது சந்தையின் சிறப்பான செயலாற்றுகைக்கு மிகவும் முக்கியமானதாகும். வழங்கப்படும் தகவல்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்வதில் கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியதிகள் முக்கிய பங்காற்றுகின்றன. பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நாட்டில் காணப்படும் அனைத்து வியாபார முயற்சிகளும் பயன்படுத்தப்படும் இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியதிகளை தயாரிப்பதில் ஈடுபடும் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியதிகள் கண்காணிப்பு சபையானது நாட்டில் உறுதிசெய்யப்படவுள்ள பல நிறுவனங்களில் ஒன்றாகும். கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியதிகள் கண்காணிப்பு சபையின் நடவடிக்கைகளானது தொழில்நுட்ப பற்றாக்குறை மற்றும் நிதி பற்றாக்குறையினால் தடைப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கமானது இந்நிறுவனங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தவில்லை. இந்நிறுவனத்தின் நோக்கெல்லையை விரிவாக்கும் நோக்கில் உரிய சட்ட விதிகள் துரிதப்படுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்படும். இந்நிறுவனத்தை உறுதி செய்வதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

290. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஆதன விற்பனை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அவசியமான மூலதனத்தை பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஆதன விற்பனைத் துறையில் வளர்ச்சியின் மூலம் சிறிய முதலீட்டாளர்கள் நேரடியாக நன்மையடைவதை உறுதிசெய்யும் நோக்கில் பட்டியலிடப்பட்ட ஆதன விற்பனை நம்பிக்கை நிதியம் உருவாக்கப்படும். ஆதன விற்பனைகளில் அனைத்து சொத்துக்களும் ஆதன விற்பனை நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றம்

செய்யும் போது 90 சதவீதமான வருமானமானது ஆதன விற்பனை நம்பிக்கை நிதியத்தின் அலகுகளை வைத்திருப்பவரிடம் பங்கீடு செய்யப்படுவதோடு அவர்கள் முத்திரை தீர்வையிலிருந்தும் விலக்களிக்கப்படுவர்.

291. மேலும் சனத்தொகை கட்டமைப்பு மாற்றத்துடன் "பின்நோக்கிய அடைமானம்" முறைமையை அறிமுகம் செய்வதை சிறந்ததெனக் கருதுகிறேன்.

292. கௌரவ சபாநாயகர் அவர்களே, சர்வதேச சந்தையில் இலங்கையானது தற்போது ஐ.அ.டொலர்களில் தீர்மானிக்கப்பட்ட முறிகளின் மூலம் மாத்திரம் நிதியைத் திரட்டுகின்றது. எமது கடன் நிதிகளின் கிரயத்தைக் குறைக்கு முகமாக சீன யுவான், மற்றும் சுகுக் முறிகள் உள்ளடங்கலாக மரபு ரீதியற்ற முறிகள் சந்தைகளையும் நாம் பரிசீலனை செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

293. கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பங்குச் சந்தையின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்ய முடியாமையின் காரணமாக பட்டியலிடப்படுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றன. அது அவ்வாறாயின், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் குறைந்த கிரயத்திலான நீண்டகால மூலதனங்களை பெற்றுக்கொள்வதை தடுத்து நிறுத்தும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் நீண்டகால நிதியினை பெற்றுக்கொள்வதற்காக சந்தர்ப்பங்களை விரிவாக்கும் நோக்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்காக குறைந்த கட்டுப்பாடுகளுடன் கூடிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான விசேட வர்த்தக தளமொன்றை கொழும்பு பங்குச் சந்தையில் உருவாக்க முன்மொழிகின்றேன். இதன்மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் முதலீடு செய்துள்ள வியாபார முதலீட்டு நிறுவனங்களுக்கு ஒரு சொகுசான வெளியேறு உபாயத்தை அளிக்கும்.

294. கொழும்பு பங்குச் சந்தையானது வெளிநாட்டுக் கம்பனிகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதை ஊக்குவிப்பதில் ஒரு சிறப்பானதொரு பங்கையாற்ற வேண்டுமென பிரேரிக்கின்றேன். உள்ளூர் கம்பனிகள் கொழும்பு பங்கு சந்தையில் பட்டியலிடப்படுமெனின் அவைகள் இரண்டு வருட வரிச் சலுகைகளை பெற்றுக் கொள்ளும். அதேவேளை, அக்கம்பனிகள் வெளிநாட்டு பங்குச் சந்தைகளான லண்டன், சிங்கப்பூர், கொங்கோங், மும்பாய் போன்றவற்றில் பட்டியலிடப்பட்டிருப்பின் அவ்வரிச் சலுகையானது மூன்று வருடங்களுக்கு நீடிக்கப்படும். வெளிநாட்டுக் கம்பனிகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்படுவதை (டொலரில் பட்டியலிடல்) நான் ஊக்குவிக்கின்றேன்.

295. தற்போதைய சந்தை மூலதனமாக்கல் ரூபா 28 மில்லியனாகும். முன்மொழியப்பட்டுள்ள அனைத்து நடவடிக்கைகள் ஊடாகவும் சந்தை மூலதனமாக்கலை ரூபா 50 மில்லியனாக அதிகரிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

**பண்டங்கள் பரிமாற்றம்**

296. கௌரவ சபாநாயகர் அவர்களே, தேயிலை இறப்பர் தெங்கு மற்றும் விசேட ஏற்றுமதிப் பொருட்கள் என்பன எமது ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும். ஆனால் எம்மிடம் பண்டங்கள் பரிமாற்றம் சந்தையில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். பிணையங்கள் மற்றும் பரிமாற்றல் ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தக்கூடிய பண்டங்கள் பரிமாற்று சந்தை ஒன்றை உருவாக்குவதற்கான சரியான தருணம் இதுவென்று நான் கருதுகின்றேன்.

**அனைவருக்கும் சம வாய்பளிக்கக்கூடிய சிறப்பான தொழிற்சந்தை**

297. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டின் சனத்தொகை கட்டமைப்பில் காணப்படும் மாற்றம் முதிர்ச்சியடைந்துவரும் சனத்தொகை என்பன காரணமாக நாட்டின் தொழிற்படையின் வகுதியானது மிகவும் விரைவாக மாறிவருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் எங்களுக்கு இரண்டு தெரிவு காணப்படுகின்றது. எங்களால் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். அல்லது ஒரு தொழிலாளருக்கான வெளியீட்டு அளவை அதிகரிக்கலாம். நான் கைத்தொழில் சங்கங்களுடன் மேற்பட்ட கலந்துரையாடல்களின் படி நான் இரண்டு விடயங்கள் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பது கண்கூடாகும்.

298. நாட்டில் அதிகரித்துவரும் முதியோர் சனத்தொகையுடன் நடைமுறையிலுள்ள குறைந்த மட்டத்திலுள்ள வேலையின்மை மற்றும் தொழிற்சந்தை பங்குபற்றல் மட்டம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது நிரந்தரமான தொழிலில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள 40 மணித்தியாலங்கள் வேலைசெய்ய விரும்பாத குறைந்த நேரம் வேலைசெய்ய விரும்பும் திறன்களைக் கொண்ட தொழிலாளர்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக பகுதிநேர தொழில் கலாச்சாரமொன்றை உருவாக்குவது பொருந்தும் என்று நான் கருதுகின்றேன். ஆகவே நாட்டில் பகுதிநேர தொழிற் கலாச்சாரமொன்றை உருவாக்குவதற்கு சாதகமான சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். அதனால் அரச தனியார் துறையினர் திறன்களைக் கொண்ட தொழிலாளர்களை உள்வாங்கி அவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்திக் கொள்ளும்.

299. கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் அறிந்தவகையில் அரசாங்கமானது வியாபார செய்முறை வெளியார்சேவை (BPO) மற்றும் அறிவு செய்முறை வெளியார்சேவை வழங்கல் (KPO) துறைகளைக் கவர்வதற்கு நாட்டில் காணப்படும் பழமையான தொழில்சட்டங்கள் இதற்கு தடையாக உள்ளமையினால் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இந்நிலையை மாற்றியமைப்பதற்கு இதுவே தருணமாகையால் அரசாங்கம் தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்தும்.

300. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் வேலைப்படையில் ஆண்களின் பங்களிப்பானது 65 சதவீதமாகக் காணப்படும் போது வேலைப்படையில் பெண்களின் பங்களிப்பானது 35 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றமையால் இது தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு உதவியாக இருக்கும்.

301. தற்போது ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்கள் அனைவரையும் அவர்களின் தொடர்ச்சியான 6 மாதகால வேலைக்கு அமர்த்தலின் பின் நிரந்தரமாக்கப்படல் வேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன். இதன்காரணமாக பெரும்பாலான தொழில் வழங்குநர்கள் ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதற்கு தயங்குகின்றனர். இதன்மூலம் இவர்களில் பெரும்பாலான இளைஞர்கள் அவர்களின் இளமைக்காலத்தில் வருமான உழைப்புக்களிலிருந்து தடுக்கப்படுகின்றனர். ஆகவே அவ்வாறான தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கான காலத்தினை தற்போதைய 6 மாதத்திலிருந்து ஒருவருடமாக அதிகரிப்பதற்கு தேவையான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்த முன்மொழிகின்றேன்.

302. தனியார் துறையினர் ஒரு ஐந்து நாள் கிழமை வேலைக் கலாசாரத்தை பின்பற்றுவதை நான் ஊக்குவிக்கின்றேன். இதன்மூலம் தொழிலாளர்களுக்கு கூடுதலான ஓய்வு நேரம் மற்றும் தமது குடுமப்பத்தினரின் ஊதிய நேரத்தைக் கழிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஐந்து நாள் கிழமை முனைப்பானது கம்பனிகளின் நிறுவாகச் செலவுகளை குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்யுமென நான் நம்புகின்றேன்.

303. கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வரசாங்கத்தினால் அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 10,000 சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். தனியார் துறை ஊழியர்களினதும்

சம்பளத்தை குறைந்த பட்சம் ரூபா 2,500 இனால் அதிகரிக்குமாறு நான் வேண்டிக்கொள்வதோடு அதில் ரூபா 1,500 ஐ 2015 ஆம் ஆண்டில் வழங்குவதோடு,ரூபா 1,000 இனை 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொடுக்க முடியும். இதற்கு தொழில்கொள்வோர் சம்மேளனம் இணங்கியுள்ளதோடு தேவையான சட்டவாக்கங்கள் கொண்டுவரப்படும்.

304. தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தை உறுதிசெய்யும் வகையில் ஒரு தொழில் பேரவை உருவாக்கப்படும். இப்பேரவையானது சிவில் சமூகம் மற்றும் வர்த்தக மன்றங்களினால் முகாமை செய்யப்படும்.

**கல்வித்துறை**

305. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த காலத்தின் போது கல்வியின் மீதான பொது முதலீடானது போதியதாகக் காணப்படவில்லை. இதனால் எமது பாடசாலைகள் நீர் மற்றும் துப்புரவு ஏற்பாடு, நவீன வகுப்பறைகள், ஆய்வு கூடங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் போன்ற அடிப்படை வசதிகள் அற்றுக் காணப்படுகின்றன. ஆசிரியர்களைத் திரட்டிக்கொள்ளல் மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான முறையான கொள்கைகள் காணப்படாததால் விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு பல வருடங்களாக ஆசிரியர்களைக் கொண்டிருக்காத பாடசாலைகள் காணப்படுகின்றன என்பது உண்மையாகும். கல்வித் துறையில் எமது உபாயமானது கற்பித்தல் தரத்தினை மேம்படுத்துதல் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் மற்றும் பாடசாலை பாடவிதான மேற்பார்வை ஆகிய மூன்று முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

306. கல்வித்தரத்தினை மேம்படுத்துவதில் கற்பித்தல் தரம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. கஷ்டமான சூழ்நிலைகளின் கீழ் சிறந்த முறையில் செயலாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அனைத்து ஆசிரியர்களுக்கும் தொடர்ச்சியான பயிற்சியினைப் பெறும் வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். அரசாங்க மற்றும் அரசாங்க ஒத்துழைப்பு வழங்கப்படும் பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் தொழிலில் இணைந்து 05 வருடத்திற்குள் 02 வருட முழுநேர ஆசிரியர் பயிற்சிநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென நான் முன்மொழிகிறேன். இதற்காக ரூபா 1000 மில்லியனை ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன். எமது அரசாங்கம் ஆசிரியர்களின் திறன் விருத்தியினை அதிகரித்துக் கொள்வதற்காக தொடர்ச்சியான பயிற்சியினை வழங்குவதற்கு ஆர்வமாக உள்ளது.

307. கிராமிய மற்றும் பிராந்தியப் பாடசாலைகளுக்கு விசேடமாக விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கு ஏற்கனவே சேவையில் உள்ள ஆசிரியர்களைச் ஒதுக்கீடு செய்வதற்கு குறித்த காலப்பகுதிக்குள் கல்வி அமைச்சு செயற்றிட்டம் ஒன்றினைத் தயாரிக்கும். இதற்காக கிராமிய மற்றும் பிராந்தியப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் விடுதிகள், ஓய்வு அறைகள் போன்ற வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ரூபா 2000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

308. எமது ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகள் பலவற்றில் முறையான மலசலகூட வசதிகள் இல்லை. 2016 இன் முடிவில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் குழாய் நீர் வசதியுடன் கூடிய முறையான மலசலகூட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அதற்காக ரூபா 4000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

309. மின்சார வசதியில்லாத பாடசாலைகளுக்கு தேசிய மின் கட்டமைப்பின் மூலமாகவோ அல்லது சூரிய சக்தியின் மூலமாகவோ மின்சார வசதியினைப் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 2000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

310. நடுத்தரகால நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் நாட்டில் காணப்படும் 3577 ஆரம்பப் பாடசாலைகளில் அனைத்து வசதிகளுடனும் அபிவிருத்தி செய்வதற்கு ரூபா.10,000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகிறேன்.

311. அதேவேளை, நாட்டில் காணப்படும் 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் அவசியமான செயற்பாட்டு அறைகள் ஆய்வு கூடங்கள் மல்ரிமீடியா அறைகள் இலத்திரனியல் நூலக வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படும். இதற்காக ரூபா 15,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகிறேன்.

312. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் எவ்வித உதவியும் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்ட ஏறக்குறைய 1,360 பாடசாலைகள் காணப்படுகின்றன. அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட பாடசாலைகளின் வசதிகளையும் தரத்தினையும் மேம்படுத்துவதற்கான கருத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு ரூபா 30,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

313. மேலும் பெருந்தோட்டத்துறையில் 25 பாடசாலைகளை சகல வசதிகளும் கூடிய இரண்டாம் நிலைப் பாடசாலைகளாகத் தரம் உயர்த்துவதற்கு ரூபா 250 மில்லியன்களை ஒதுக்கீடு செய்கிறேன்.

314. நிரந்தரமான ஆய்வுகூட வசதிகள் அற்ற பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்காக ரூபா 450 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

315. பாடசாலைகளில் பல் சுகாதார வசதிகளுக்கு ஏற்பாடு செய்யும் வகையில் அதற்கான உபகரணங்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நான் ரூபா 250 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

316. அச்சிடப்பட்ட புத்தகங்கள் சஞ்சிகைகள் மற்றும் நூல்களுக்கான இறக்குமதித் தீர்வைகளுக்கு விலக்களிக்கப்படும்.

317. கௌரவ சபாநாயகர் அவர்களே, பெரும்பாலான எமது பாடசாலைகளில் காணப்படும் காணிகளானது முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது. அத்தகைய நிலங்களை தனியார்துறைப் பங்களிப்புடன் அப் பாடசாலையையும் பங்காளராக இணைத்து பயிர்ச் செய்கைகளில் பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன். அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை பாடசாலையும் முதலீட்டாளரும் பகிர்ந்து கொள்ளல் வேண்டும். இதன் மூலம் உழைக்கப்படும் நிதியானது கல்வியமைச்சின் அங்கீகாரத்துடன் பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கும் அவற்றின் பராமரிப்புக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

318. கௌரவ சபாநாயகர் அவர்களே, கல்வித்துறை மீது இவ்வாறாக அதி கூடிய சேவையை மேற்கொள்ளும் போது அனைத்து மாணவர்களும் பாடசாலையில் அல்லது தொழில்கல்விபயிற்சி நிறுவனங்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகளுக்காக 13 வருடங்கள் கட்டாயம் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

319. பாடசாலைகளில் சிறந்த சூழலை உருவாக்குவதற்கு ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கிடையில் சிறந்த கருத்துப் பரிமாறல்களை ஏற்படுத்துவதற்கும் வகுப்பறையில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை 35 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

320. கௌரவ சபாநாயகர் அவர்களே, வளங்களின் சிறந்த பயன்பாடு மற்றும் நிதி முகாமைத்துவத்தில் வகை கூறும் தன்மை என்பவற்றுக்கு வசதியளிப்பதற்காக ஒவ்வொரு பாடசாலையிலேயும் தனியான செலவுக் கூறு ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என நான் முன்மொழிகிறேன். இது மூல வளங்களை சரியாக பயன்படுத்துவதற்கும் நிதி முகாமைத்துவத்திற்கும் வகை கூறுவதற்கும் இதற்காக திறைசேரியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கல்வியமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்குமென நான் நம்புகிறேன்.

321. கௌரவ சபாநாயகர் அவர்களே, அதிமேதகு சனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன அறிமுகப்படுத்தப்பட்ட இலவச பாடசாலை சீருடை முறைமையானது தற்போது அரசியல்

தலையீடு காரணமாக சிறப்பாக இடம் பெறுவதில்லை. ஆகவே பாடசாலை சீருடை வழங்குவதற்காக ஒரு பற்றுச் சீட்டு முறையை அறிமுகம் செய்வதற்கு முன்மொழிகிறேன். 2016 ஆம் ஆண்டின் போது இத்திட்டத்தினால் அனைத்து சிறுவர்களும் நன்மையடைவதனை உறுதிப்படுத்தும் வகையில் வவுச்சர்கள் வழங்கப்படாத இடங்களில் இடைக்கால ஏற்பாடாக பாடசாலை சீருடைத் துணி வழங்கப்படும்.

**முன்மாதிரி பல்கலைக்கழகங்கள்**

322. கௌரவ சபாநாயகர் அவர்களே, 2015 உடன் ஒப்பிடுகையில் உயர் கல்விக்கான மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டினை ஏறக்குறைய 30 சதவீதத்தினால் அதிகரித்திருக்கின்றோம் என்பதனை இப்பாராளுமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நாட்டில் உயர்கல்வியில் புரட்சியொன்றினை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இதுவாகும்.

323. தொழில்நுட்பத் துறையில் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் முதலாவது தொகுதியினர் எமது பல்கலைக்கழகங்களுக்கு 2016 இல் அனுமதிக்கப்படவிருக்கின்றனர் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பத் துறை இளமாணிப் பட்டத்தினை வழங்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப பீடங்களை மனித வளங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் உபகரணங்களுடன் உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

324. மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் பிரதான விடயமாக விடுதிகள் மற்றும் வீட்டு வசதிகள் காணப்படுகின்றது. எனவே, 2018 இல் அனைத்து மாணவர்களுக்கும் அவர்களது பல்கலைக்கழக காலம் முழுவதும் விடுதி வசதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். பல்கலைக்கழகம் விரிவுரையாளர்களுக்கு கவர்ச்சிகரமானதாக இருப்பதற்கும் அவர்களை பல்கலைக்கழகத்தில் தொடர்ந்திருக்கச் செய்வதற்கும் அவர்களுக்கான வதிவிட வசதிகள் வழங்கப்படும்.

325. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பல்கலைக்கழகங்களுக்கு நாட்டிலுள்ள திறமைசாலிகளில் ஒருசிலர் மாத்திரமே அனுமதிக்கப்படும் அதேவேளை, உள்நாட்டு பல்கலைக்கழகங்களின் பாடவிதானங்கள் தனியார் துறைக்கு எந்தளவு பங்களிப்பினை வழங்குகின்றது என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். இப்பின்னணியில், தரவு விஞ்ஞானம், மெய் விஞ்ஞானம், உயிரியல் தகவல்துறை, வியாபார பகுப்பாய்வு, அளவு அளவியல் போன்ற புதிய பாடநெறிகளை அவற்றினது பாடவிதானங்களில் அறிமுகப்படுத்துவதற்கு சில பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதனை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அத்தகைய முன்னெடுப்புகளை ஊக்குவிப்பதற்கு பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். கட்டிடங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற வசதிகளை வழங்குவதும் இதில் அடங்கும்.

326. எமது பல்கலைக்கழகங்களில் சிறந்த விரிவுரையாளர்களை தொடர்ந்தும் இருக்கச் செய்வது மிக முக்கியமான விடயமென்பதனை இப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்கள் தலைமை அல்லது கௌரவ பேராசிரியர் பதவி வழங்குவதன் மூலம் இப்பிரச்சினைக்கான தீர்வினை கண்டுள்ளது. இவ்வாறான விருதுகள் நாட்டின் பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்க்கின்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரத்தினை விரிவுரையாளர்களுக்கு வழங்குகின்றது. எனவே, நாட்டின் உயர்கல்வி புரட்சியின் பங்காளர்களாக தனியாட்கள் மற்றும் கம்பனிகளினை ஊக்குவிப்பதற்காக எமது தேசிய பல்கலைக்கழகங்களுக்கும் அவ்வாறான வசதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

327. வெளிநாட்டு மாணவர்களை கவர்வதற்கான ஏற்பாடாக விசேடமாக உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டப்பின்படிப்பு பயிற்சி நெறிகளுக்காக அத்தகைய நிறுவனங்கள் உயர் தொழில் தகைமைகளை வழங்கும் நோக்கத்துடன் சர்வதேச உயர் தொழில் நிறுவனங்களின் சான்றுப்படுத்தலினை பெற்றுக்கொள்வதனை ஊக்குவிக்கின்றன என்றவகையில் அத்தகைய நிறுவனங்களுக்கு நிதி உதவியினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

328. **மஹாபொல பல்கலைக்கழகம்** - கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பிரதமர் கல்வி அமைச்சராக இருந்தபோது வர்த்தக அமைச்சரான லலித் அத்துலத்முதலி எமது வரலாற்றில் மறக்க முடியாத சேவையினை ஆற்றியுள்ளார் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டுதல் வேண்டும். அவரது மஹாபொல புலமைப்பரிசில் திட்டமானது பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியினை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அதன்மூலம் உருவான பலர் இலங்கையிலும் வெளிநாட்டிலும் உயர் தொழில்களில் சேவையாற்றி வருகின்றனர். இவ்வாறான ஒரு மனிதனை கௌரவப்படுத்தும் முகமாக மாலபையில் **மஹாபொல பல்கலைக்கழகம்** என்ற பெயரில் பல்கலைக்கழகமொன்றினை தாபிப்பதற்கு இப்பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்குமென நான் உறுதியாக நம்புகின்றேன். இப்பல்கலைக்கழகமானது தகவல் தொழில்நுட்பம், வியாபாரக் கற்கைகள், ஆங்கிலம், முகாமைத்துவம் மற்றும் ஏனைய புதிய சந்தைக்கேற்ற பாடநெறிகளினைக் கொண்டிருக்கும். இதற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

329. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது சமூகத்திற்கான கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்புடனாக கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தையும் வவுனியாவில் விவசாய பீடத்தையும் அமைக்க நான் முன்மொழிகின்றேன்.

330. பாலி மற்றும் பௌத்த கற்கைகளுக்கான பட்டப் பின்படிப்பு நிறுவனத்திற்கு புதிய கட்டிடமொன்றுடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படும். இதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

331. பல்கலைக்கழக மாணவர்களுக்கு 3 வருட வட்டியல்லாத கடன் அடிப்படையில் மடி கணனிகளை வழங்குவதற்கும் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இலவச wi-fi zones வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன். (இதற்காக ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

332. கௌரவ சபாநாயகர் அவர்களே, விளையாட்டுத் துறையில் சாதனைகளைப் படைத்தவர்கள், புதிய பொருள் அல்லது சேவையினை கண்டுபிடித்தவர்கள், Math Olympiad போன்ற சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியின் போது மேலதிக புள்ளிகள் வழங்குவதற்கான புதிய நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

333. கௌரவ சபாநாயகர் அவர்களே, மிக நீண்ட காலமாக எமது மாணவர்களின் வெளிநாட்டுக் கல்விக்காக அதிகளவான வெளிநாட்டுச் செலாவணி வெளிச் செல்கின்றது. இப்போக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். இத்துறையில் எமது ஆற்றலுக்கு விசேட கவனம் செலுத்தும் வகையில் வெளிநாட்டு மாணவர்களை இலங்கையில் கற்பதற்கு தூண்ட வேண்டுமென்பதுடன் அதன்மூலம் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் அதிகரிக்கின்றது. இலங்கை கல்விக்கான மையமொன்றாக மாறுவதற்கான ஆற்றலினைப் பெற்றுள்ளது. இந்தவகையில், மருத்துவத்துறை நீங்கலாக தனியார் பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிறுவகிக்கப்படும் வகையில் இலங்கையில் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்படும். எனினும் மொத்த ஆட்சேர்ப்பில் 10 சதவீதம் உள்நாட்டு உயர்தரப் பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இலவசமாக அனுமதி வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய தொழில்முயற்சிகளின் உள்நாட்டு பங்காளருக்கு வரி ஊக்குவிப்பு வழங்கப்படும்.

334. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக உத்தியோகபூர்வ பணிகளுக்காக வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ளும் போது செலுத்த வேண்டிய பல்வேறு கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில்லை என நான் அறிந்து கொண்டேன். எனவே, அரசாங்கத்தின் அனைத்து சேவைகளிலுள்ள நிறைவேற்று அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளை பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

335. அரசாங்கம் போட்டிப் பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் அரசாங்க சேவைக்கு பட்டதாரிகளை தொடர்ந்தும் ஆட்சேர்ப்பு செய்யும். அரசாங்க ஊழியர்களின் ஆற்றல்கள் நவீன சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் அதிகரிக்கப்படுதல் வேண்டும். எனவே, நடைமுறை தொழில் சந்தை கேள்விக்கேற்ற பட்டப்படிப்பு கற்கை நெறிகளை மையப்படுத்துவதனூடாக ஊக்குவிக்குமாறு எமது பல்கலைக்கழகங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

336. கௌரவ சபாநாயகர் அவர்களே, மேலே குறிப்பிட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கு மேலதிகமாக ரூபா 6,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி – வாய்ப்புகளுக்கான திருப்புமுனை**

337. கௌரவ சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்ட தயாரிப்புக் காலப்பகுதியில் நாட்டிலுள்ள பல்வேறு கைத்தொழில் பேரவைகளுடன் கலந்துரையாடல்களை நடத்தினேன். தொழில் நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட விடயம் யாதெனில் நாட்டில் ஆரம்ப மற்றும் நடுத்தர மட்டத்தில் திறமைபெற்ற பணியாளர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது என்பதாகும்.

338. தொழில்பயிற்சி மற்றும் திறன் விருத்தியினை வழங்குவதற்கு நாட்டில் 400 இற்கு அதிகமான அரசாங்க நிறுவனங்கள் காணப்படுகின்றன. அத்தகைய நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு காணப்படாததுடன் தனியார் துறைக்கும் இந்நிறுவனங்களுக்கும் இடையில் குறைவான தொடர்பே காணப்படுகின்றது. கௌரவ சபாநாயகர் அவர்களே, நிரல் அமைச்சு, மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு என்பவற்றுக்கு ஆலோசனை வழங்கக்கூடிய பல்வேறு கைத்தொழில்களுக்கான கைத்தொழில் துறை பேரவைகளை வலுப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். அதன்மூலம் நாட்டில் தனியார் துறை தேவைக்கான தொழிற்பயிற்சி உபாயமொன்று உருவாக்கப்படும்.

339. கௌரவ சபாநாயகர் அவர்களே, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் (UNIVOTEC) மற்றும் சமுத்திரவியல் பல்கலைக்கழகம் என்பன ஆரம்பிக்கப்பட்டதுடன் பாடசாலைக் கல்வியினை முடித்துக் கொண்டவர்கள் சான்றிதழ்கள், டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புச் சான்றிதழினை பெற்றுக் கொள்வதற்கான மாற்றுவழியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, சமுத்திர உயிரியல், சமுத்திர பொழுதுபோக்கு மற்றும் துறைமுக, கப்பல் கட்டல் ஒருங்கிணைந்த கரையோர வள முகாமைத்துவம் போன்ற புதிய பட்டப்படிப்பு பாடநெறிகளினை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

340. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்நாட்டில் திறமைமிக்க ஊழியப் படையினை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஐந்து பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மிக விரைவில் பட்டனகலயில் மற்றுமொரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட உள்ளது. பொலிமர் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க சக்தி தொழில்நுட்பம், பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பம், ஊடகத்துறை போன்ற பயிற்சி நெறிகளை உள்ளடக்குகின்ற பாடவிதானங்களை இப்பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்துவதற்கும் நடுத்தரமட்ட தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குவதற்கும் தொழில்நுட்ப கல்லூரிகளை பல்கலைக்கழக கல்லூரிகளின் அந்தஸ்திற்கு உயர்த்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன். மேலும் பல்கலைக்கழக கல்லூரிகளில் NVQ 5

மற்றும் 6 என்ற தகைமையினை பெற்ற மாணவர்கள் NVQ 7 வரை தொடர்ந்து பட்டப்படிப்பு கற்கை நெறியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அனுமதிக்கும் வகையில் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் (UNIVOTEC) புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

341. பின்தங்கிய பிரதேசங்களுக்கு விசேட கவனம் செலுத்தும் வகையில் தற்பொழுது காணப்படும் பல்கலைக்கழகங்களுடன் தொழில்நுட்ப அடிப்படை பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் நாம் தாபிக்க உள்ளோம். இந்த தொழில்நுட்ப அடிப்படை வளாகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி பெறும் குறைந்த வருமானம் பெறும் திறமையான மாணவர்களுக்கு வவுச்சர் முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

342. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியினை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கு இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்திற்கான மாணவர் அனுமதியினை இரண்டு வருட காலப்பகுதிக்குள் 200 இனால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனத்தினால் நிதியளிக்கப்பட்ட கிளிநொச்சி தொழில் பயிற்சி நிலையம் அண்மையில் பூர்த்தியடைய உள்ளது. எனவே, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினைப் போன்று சுயாதீன பயிற்சி நிறுவனமொன்றாக இந்நிலையத்தினை அபிவிருத்தி செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

343. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஊழியச் சந்தை, கட்டிடம் மற்றும் நிர்மாணம், ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை, எளிய பொறியியல் மற்றும் தயாரிப்புத் துறைகள் போன்ற துறைகளின் கேள்வியினை ஈடுசெய்வதற்கு திறமையான ஊழியப்படையினை உருவாக்குவது தொடர்பாக இந்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. பயிற்சி நெறிகளை வழங்குதல் மற்றும் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவதற்காக அரசாங்க மற்றும் தனியார் பங்களிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

344. கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நிதிக் கூற்றுகள், வியாபாரத் திட்டங்களை தயாரிப்பதற்கு தேவையான ஆற்றல்களைக் கொண்டிருக்கவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும். சிறிய மற்றும் தொழில்முயற்சித் துறையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளவர்களுக்கு மூன்று மாத பயிற்சியினை வழங்குவதற்கு பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வு நிறுவனங்களை நான் வேண்டிக் கொள்கின்றேன். பயிலுனர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 2,000 ரூபாவினை கணக்காய்வு நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கும். ஒவ்வொரு காலாண்டிலும் 2,500 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்காக ரூபா 30 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

345. மேலும், ஆங்கில மொழித் தேர்ச்சி மற்றும் மென்றிறன் விருத்தி செய்வது ஊழியச் சந்தையில் போட்டியிடுவதற்கு அவசியத் தேவையாகும். ஆங்கில மொழி மற்றும் மென்றிறன் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்கு போதிப்பதற்கு வெளிநாடுகளில் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியினை வழங்குவதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தாபிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. மேலும், தரமான ஆங்கில மொழி பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு தனியார் நிறுவனங்களை நாம் ஊக்குவிக்கின்றோம்.

346. கௌரவ சபாநாயகர் அவர்களே, மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 3,000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**இளைஞர் படை ஊடாக இளைஞர்களை வலுவூட்டல்**

347. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாட்டில் இளைஞர்கள் எதிர்காலத்திற்கு வழியமைப்பவர்கள் ஆவார். இளைஞர்கள் தமது முழு ஆற்றலினையும் வெளிக் கொணர்வதற்கு அவர்களை அனுமதிக்கின்ற வகையில் எமது நாட்டின் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு இந்த அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இப்பின்னணியில் தேசிய இளைஞர் படையை புனரமைப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.
348. சாதாரண தர மற்றும் உயர்தரத்தில் இடை விலகியவர்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்கும் வகையில் தொழில் வழிகாட்டல், ஆள்சார் விருத்தி, தலைமைத்துவ பயிற்சி மற்றும் ஒழுக்க விழுமியம் என்பவற்றினை இளைஞர் படையணியின் ஊடாக இளைஞர்களுக்கு வழங்குவதற்கும் அவர்களை தொழில்நுட்ப கல்விக்காக தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கும் நான் முன்மொழிகின்றேன். அதனால் இலங்கை தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மற்றும் தொழிலிநுட்ப பயிற்சியுடன் சம்பந்தபட்ட இன்னோரன்ன நிறுவனங்களை தேசிய இளைஞர் அணியோடு இணைத்துவிட முன்மொழகின்றேன்.
349. இத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு மேலும் ரூபா 3,000 மில்லியனை மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.
350. கௌரவ சபாநாயகர் அவர்களே, இணைந்த ஆற்றல்கள் மற்றும் தொழிற்பயிற்சி திறமைகளை பயன்படுத்துவதன் மூலம் தமது எதிர்காலத்தை வகுத்தமைத்துக் கொள்வதற்கு இளைஞர்களை ஊக்குவிப்பதற்கான நேரம் இதுவாகும். காலாண் வளர்ப்பு, தளபாடக் கைத்தொழில், மின் நிலையங்கள், உணவுப் பாதுகாப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, பாற்பொருள் கைத்தொழில், தேனீ வளர்ப்பு போன்ற கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு ஆகக் குறைந்தது ஐம்பது உறுப்பினர்களை கொண்ட குழுவொன்றிலுள்ள இளைஞர்களுக்கு கடன் வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளுக்கான நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். வர்த்தக வங்கிகள் அத்தகைய கருத்திட்டங்களுக்கு வட்டி சலுகைக் கடன் அடிப்படையில் கடன் வழங்குவதுடன் அத்தகைய தொழில்முயற்சிகள் விரிவாக்கப்பட்டு நிதி மற்றும் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையினை பெற்றுக் கொள்ளும். கருத்திட்டத்தின் அளவின் அடிப்படையில் இக்கருத்திட்டங்களுக்காக அரசாங்கக் காணிகள் வழங்கப்படும். இந்நோக்கத்திற்காக நாடு முழுவதிலுமுள்ள 6,000 கிராமங்களிலிருந்து ஆகக் குறைந்தது 300,000 இளைஞர்கள் கலந்து கொள்வாரென எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் நிறுவன பொறுப்பு கருத்திட்டமொன்று என்ற வகையில் விசேட கடன் திட்டத்திற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ளுமாறு தேசிய சேமிப்பு வங்கிக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

**சுகாதாரம் - நவீன சுகாதாரப் பராமரிப்பு**

351. கௌரவ சபாநாயகர் அவர்களே, சுகாதாரத் துறையில் முதலீடு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதனை இந்த அரசாங்கம் முழுமையாக உணர்ந்துள்ளது. எமது நாட்டின் பிரசைகளுக்கு இலவச சுகாதார சேவையினை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். இந்தவகையில் எமது உபாயம் பன்முகப்படுத்தப்பட்டு இருப்பதுடன் மனிதவள அபிவிருத்தி, மென் மற்றும் வன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு முதலீடுகள் மேற்கொள்ளப்படும்.
352. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்நாட்டில் காணப்படும் அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் தொடர்பான வாதப் பிரதிவாதங்களும் கலந்துரையாடல்களும் இப்பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளன. எனவே அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் காணப்படும் பிரதேசங்களில் 1,000 சிறுநீரக சிகிச்சை நிலையங்களை உடனடியாக தாபிப்பதற்கு ரூபா 6,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

353. மின்னேரியாவில் சிறுநீரக நோய்க்கான விசேட வைத்தியசாலை ஒன்றினை நிறுவுவதற்கும் அதற்காக ரூபா 2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

354. நல்லூர், கண்டி மற்றும் மாத்தறை ஆகிய பிரதேசங்களில் மூன்று புற்றுநோய் வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

355. சிறந்த சுகாதாரப் பராமரிப்பினை மேம்படுத்துவதற்கு அனுராதபுரம், குருநாகல் மற்றும் யாழ்ப்பாணம் வைத்திய சாலைகளை உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளுடன் தரமுயர்த்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

356. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் சுகாதார வவசதிகளை விரிவாக்கும் நோக்குடனும், அவசர தேவைகளின் போது குறுகிய நேரத்தில் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துவதற்கம் நடமாடும் வைத்தியசாலை எண்ணக்கரு உருவாக்கப்படும். இதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்படும்.

357. கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறுவர் மற்றும் வயோதிபர்களை தாக்குகின்ற தொற்றாத நோய்களின் அதிகரித்து வரும் சவாலை எதிர்கொள்வதற்கு அடுத்த 3 வருடங்களின் போது அரசாங்கம் நோயியல், அவசர சிகிச்சை, முதியோர் மருத்துவம், குழந்தை மருத்துவம் போன்ற விசேட துறைகளில் வைத்தியர்களை பயிற்றுவிக்கவும் வயோதிபர்களை பராமரிக்கும் தாதிமார் மற்றும் துணை மருத்துவ அலுவலர்களுக்கான பயிற்சி என்பவற்றுக்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

358. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாடுமுழுவதிலும் பல்வேறு தள வைத்திய சாலைகளும் பிரதேச வைத்திய சாலைகளும் காணப்படுகின்றன. இவ் வைத்திய சாலைகளில் கட்டில் வசதி, பரிசோதனை உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றது. இவ்வாறான வைத்திய சாலைகளில் முறையான வதிவிட வசதிகள் காணப்படாமையினால் வைத்தியர்களை தொடர்ந்து வைத்திருப்பது சிரமமானதாகும். எனவே, கிராமியப் பிரதேசங்களிலுள்ள வைத்தியர்கள் மற்றும் ஏனைய மருத்துவ அலுவலர்களின் வதிவிட தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு 2 வருடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். தனியார் அரசாங்க பங்களிப்பினை ஊக்குவிப்பதுடன் இவ்வாறான வசதிகளை நிர்மாணித்து பராமரிக்கின்ற தனியார் துறையினருக்கு அரசாங்கம் வாடகையினைச் செலுத்தும்.

359. அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மூன்றாம் நிலை நலன்புரி வைத்திய சாலைகளுடன் இணைந்ததாக சகல வசதிகளும் கொண்ட பத்து மாவட்ட பக்கவாத நிலையங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழிவதுடன் வைத்திய சாலைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை சேவைகளை விரிவாக்குவதற்கும் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 5,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

360. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது சுகாதாரத் துறை உபாயத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முக்கியமான விடயமாகும். இத்துறையிலுள்ள உயர் தொழில்புரிநர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்களது கண்டுபிடிப்புகளுக்கு சிறிதளவான அல்லது எவ்வித ஒத்துழைப்பும் அரசாங்கத்திலிருந்து கிடைப்பதில்லை. 2015 இல் ஜெனீவாவில் இடம்பெற்ற கண்டுபிடிப்பாளர் சர்வதேச கண்காட்சியில் தங்கப்பதக்கம் வென்றவர்களை நான் பாராட்டுகின்றேன். "Footie" உபகரணத்தினை கண்டுபிடித்ததற்காக வைத்தியர் துஷிதா கஹதுவ, புற நரம்பு ஊக்கி ஊசியினை கண்டுபிடித்ததற்காக வைத்தியர் அநுர விக்கிரமசிங்க மற்றும் குரல்வளை ஆய்வு பற்றிய காணொளியினை உருவாக்கியதற்காக WFSA நிறுவனத்தினால் விருது வழங்கப்பட்ட வைத்தியர் அனுர விக்கிரமசிங்க ஆகிய மூன்று இளம் வைத்தியர்களும் ஏற்கனவே நாட்டின் சுகாதாரத்துறையின் தரத்தினை மேம்படுத்தக்கூடிய

வகையில் புத்தாக்க கருவிகளை கண்டுபிடித்தவர்களை பின்பற்றியவர்கள். அவர்கள் அனைவரையும் நான் மீண்டும் பாராட்டுகின்றேன்.

361. சுகாதாரத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் முக்கியத்துவதத்தினை உணர்ந்து நீரிழிவு நோய், டெங்கு, அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் என்பவற்றுக்கான ஆராய்ச்சி ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

362. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை புதுப்பிக்கப்படுவதுடன் தனியார் துறையுடன் போட்டியிடும் வகையில் விரிவாக்கப்பட உள்ளது. அதற்காக ரூபா 1,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.அதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் தகைமைபெற்ற தாதிமாரை வழங்குவதற்கு ஜயவர்தனபுர வைத்திய சாலையுடன் இணைந்த தாதிமார் பாடசாலை வருடமொன்றுக்கு 2,000 தாதிமாருக்கு பயிற்சி வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்காக ரூபா 2,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

363. நிதிப் பயன்பாட்டினை வினைத்திறன் மிக்கதாக கண்காணிப்பதற்கு பணத்தின் பெறுமதியினை உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு வைத்திய சாலையிலும் கண்காணிப்பு அலகொன்றினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

364. வெளிநாட்டுச் செலாவணி நாட்டிலிருந்து வெளியே செல்வதனை குறைப்பதற்கு அரசாங்க தனியார் பங்களிப்பொன்றாக மருந்துப்பொருள் வலயங்களைத் தாபிப்பதற்கான தனியார் தொழில்முயற்சிகளுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். அரசாங்கம் நிலங்களை வழங்குவதன் மூலம் இதற்கு பங்களிப்புச் செய்யும். குறித்த மருந்துப் பொருளுக்கான அரசாங்கத்தின் தேவைக்கேற்ப கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் உடன்பாடு காணப்பட்டுள்ளதுடன் அவை சந்தையில் இடம்பிடிப்பதற்கான ஊக்குவிப்பு வழங்கப்படும்.

### சுதேச மருத்துவத் துறையினை ஊக்குவித்தல்

365. கௌரவ சபாநாயகர் அவர்களே, பாரம்பரிய சிகிச்சை முறையானது பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டுள்ளதுடன் ஆங்கில மருத்துவம் அறிமுகப்படுத்தப்படும் வரை இந்நாட்டில் நிலைத்திருந்தது.

366. எவ்வாறாயினும், பாரம்பரிய மருத்துவம் முழுமையாக அழிந்து போகவில்லை. ஆங்கில மருத்துவத்திலிருந்து எழுந்த அக்கறையானது நாட்டின் சுதேச மருத்துவத் துறைக்கு புத்தூக்கம் வழங்கியது. எனவே, இன்று இலங்கை ஆயுர்வேத சுற்றுலாத்துறைக்கு சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற இடமாக காணப்படுகின்றது.

367. சுதேச மருத்துவத் துறையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்ட போதிலும் மூலிகை மருந்துப் பொருட்கள் அருகிவருகின்றமை பிரதான பிரச்சினையொன்றாகும். இந்தவகையில் கடுவெல்படு, விஷ்னுகாந்தி போன்ற குறுகியகால மூலிகைச் செடிகளை பயிரிடுவதற்கு ஊக்குவிப்பு வழங்குவதற்கு 2,000 விவசாயிகளுக்கு அரச காணிகளை வழங்குவதற்கு முன்மொழிவதுடன் இதற்காக சலுகை அடிப்படையில் நிதி வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

368. இத்தொழிற் துறையின் மதிப்பினை உலக மட்டத்தில் பேணுவதுடன் அதன் முறைமைகளை ஒருங்கிணைப்பதற்கும் அனைத்து ஆயுர்வேத வைத்திய சாலைகளையும் நாடுமுழுவதும் காணப்படுகின்ற மஸாஜ் நிலையங்களையும் ஒழுங்கமைப்பதற்கான முறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்திய கண்டுபிடிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

369. கௌரவ சபாநாயகர் அவர்களே, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் மீதான எமது முதலீடு மொ.உ. உற்பத்தி வளர்ச்சியில் முன்னேற்றத்தினை காண்பதற்கு தவறியுள்ளன. எமது தயாரிக்கப்பட்ட ஏற்றுமதிகளை உயர் தொழில்நுட்ப பெறுமதி சேர்ப்புடன் குறைந்த சதவீதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. (அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளில் காணப்படும் 50 – 75 வரையான சதவீதத்துடன் ஒப்பிடுகையில்) மிகக்குறைந்த தயாரிப்பு பங்களிப்பு மற்றும் எமது பொருளதாரத்திற்கான சேவைக் கைத்தொழிலினை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி என்பன எமது பொருளாதாரத்திற்கான கைத்தொழில் சேவையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. புத்தாக்க கண்டுபிடிப்பினால் முன்நிலைப்படுத்திய எமது பொருளாதாரத்தினை துரித கதியில் மாற்ற வேண்டியுள்ளது. 2020 அளவில் எமது ஏற்றுமதிகளில் ஆகக்குறைந்தது 10 சதவீதம் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியாகக் காணப்படுமென நாம் எதிர்பார்க்க முடியும்.

370. இச்செயன் முறையினை துரிதப்படுத்துவதற்காக புத்தாக்க விரைவுபடுத்துநர் ஒருவரை உருவாக்குவதற்கு நான் முன்மொழிவதுடன் விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான ஒருங்கிணைப்பு செயலகம், தேசிய முன்னோடி ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய விஞ்ஞானப் பேரவையின் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டம் என்பவற்றின் தேசிய புத்தாக்க நிகழ்ச்சித்திட்டத்தினை ஒருங்கிணைப்பதற்கான பேரவையானது பேண்தகு நிலை, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக நீதி மற்றும் சுற்றாடல் தராதரம் என்பன தெளிவான பணிப்புரை வழங்கும் விடயங்களாகும்.

371. கௌரவ சபாநாயகர் அவர்களே, மேற்குறித்த முன்மொழிவுகளை விரைவு படுத்துவதற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் தேசிய புத்தாக்க நிலையமொன்று,புத்தாக்க துரிதப்படுத்தல் நிதியமொன்றை நிர்வகிக்கும் வகையில் அமைக்கப்படும். அதற்காக ரூபா 100 மில்லியனை ஆரம்ப மூலதனமாக மேலதிகமாக ஒதுக்கீடு செய்வதோடு மேலும் ரூபா 3000 மில்லியனை 3 வருடங்களுக்குள் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

372. இந்தப் புத்தாக்கங்கள் இறுதியில் வர்த்தக விளைவுகளாக மாற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு நாம் ஆர்வத்துடன் உள்ளோம். விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான ஒருங்கிணைப்புச் செயலகம் அத்தகைய 25 கருத்திட்டங்களை இனங்கண்டுள்ளதுடன் அவை வர்த்தக ரீதியில் வெற்றிகரமாகக் காணப்படுகின்றது. வினைத்திறன்மிக்க விவசாயப் பொருள் உற்பத்திக்கான கொவிநென கையடக்க தொலைபேசி மென்பொருள் மற்றும் சக்தி சேமிப்பு முறைமை உள்ளடங்கலான சில புத்தாக்கங்கள் இக்கைத்தொழில் துறையில் நேரடித் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன், நிலையான இலக்கு துறைகளுக்கு பங்களிப்புச் செய்கின்றது. அரைவாசி வரி விகிதங்கள், உயர்ந்த உபகரணக் கொள்வனவு என்பன துரிதப்படுத்தப்பட்ட தேய்வுப் பெறுமானத்திற்கு காரணமாக இருந்தமை இந்தப் புத்தாக்கங்களை பணமாக்கக்கூடிய ஏதாவது ஒரு கம்பனியினை பங்காளராக எடுத்துக்கொள்வதற்கு முடியுமாக இருக்கும். கருத்திட்டத்தின் வகையினை அடிப்படையாகக் கொண்டு காணி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதன் மூலம் அரசாங்கம் இவ்வாறான தொழில்முயற்சிகளுக்கு வசதியளிக்கும்.

373. தொழில் முயற்சியாண்மைக்கான பகிரங்க புத்தாக்க நிலையங்களாக நெனசெல நிலையங்களை தரமுயர்த்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். நெனசெல நிலையங்கள் முப்பரிமாண அச்சு இயந்திரங்கள், லேசர் கட்டர்கள் மற்றும் செதுக்கும் பொருட்கள் மற்றும் தயாரிப்பு ஆய்வுகூடமொன்றுக்கான ஏனைய மென்பொருட்களையும் கொண்டிருக்கும் வகையில் தரமுயர்த்தப்படும். எனவே 2016 இல் தெரிவுசெய்யப்பட்ட நெனசெல நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன்.

இவ்வாறு தரமுயர்த்தப்பட்ட நிலையங்கள் அவற்றினது தகவல் தொழில்நுட்ப வசதியளிக்கும் வழமையான பணிகளுக்கு மேலதிகமாக உள்நாட்டு தொழில்முயற்சிக்கு ஊக்கம் வழங்குவதுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பினையும் வழங்கும்.

374. பெறுமதி சேர்க்கப்பட்ட அதிகளவிலான தரமான ஏற்றுமதிப் பொருட்கள், வெளிநாடுகளில் வியாபாரப் பெயரினைப் பதிவு செய்தல் அவசியமானதாகும். பதிவு செயன்முறையினை துரிதப்படுத்துவதற்கும் பதிவுக் கட்டணத்தை குறைப்பதற்கும் இலங்கை உலக புலமைச்சொத்து நிறுவனத்தின் சர்வதேச பணியகத்தினால் நிறுவகிக்கப்படும் அமைப்பொன்றாக மட்றிட் முறைமையின் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டுமென நான் முன்மொழிகின்றேன். இது குறித்த கைத்தொழில் துறையின் வேண்டுகோளாக இருந்தது. இதனால் வியாபார குறியீட்டு சட்டத்தினை திருத்துவதன் மூலம் மட்றிட் முறைமையினை பெற்றுக் கொள்வதற்கான வசதியினை பெற்றுக்கொள்வதற்கும் பௌதீக மற்றும் மனித வளங்களினை தரமுயர்த்துவதற்காகவும் இலங்கை புலமைச்சொத்து அலுவலகத்திற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன்.

375. சர்வதேச ஆக்க உரிமையினைப் பெற்றுக் கொள்வதற்கு இனங்காணப்பட்ட கண்டுபிடிப்புகளை இனங்காணுதல் சர்வதேச ஆக்க உரிமைகளின் நன்மைகள் தொடர்பில் கண்டுபிடிப்பாளர்களுக்கு இடையில் ஊக்குவிப்பு விழிப்புணர்வினை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேச ஆக்க உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பவற்றுக்கான உபாயமொன்றினை உருவாக்குவதற்கு இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினை மேலும் வலுப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்தவகையில் கண்டுபிடிப்பாளர்களினால் உறப்பட்ட செலவினத்தினை ஆகக்கூடியது ஐ.அ. டொலர் 100,000 வரை அரசாங்கத்தினால் செலுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**முதியோர் சனத்தொகையினை பாதுகாத்தல்**

376. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கையின் மொத்த சனத்தொகையில் வயது முதிர்ந்தவர்களின் சனத்தொகை 2000 இல் 9.3 சதவீதமாக இருந்ததுடன், 2020 இல் 20 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளனர். முதியோர் சனத்தொகையானது சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் நெருக்கடிகளை ஏற்படுத்துவதுடன் குறிப்பிடத்தக்க மேலதிக கேள்விகளையும் மிகவும் திட்டமிடப்பட்ட முதியோர் பராமரிப்பு முறை மற்றும் அவர்களுக்கான நிதியளிப்பு மற்றும் சேவை வழங்கல் என்பவற்றையும் வேண்டிநிற்கின்றது. கௌரவ சபாநாயகர் அவர்களே, வயது முதிர்ந்த இலங்கையரின் வளர்ந்துவரும் பன்முகத்தன்மை மற்றும் சேவைகளுக்கான வழங்கல் தொடர்பான பிரச்சினைகள் பற்றி எம்மிடம் தெளிவான நிலைப்பாடு காணப்படுவதில்லை. அத்தகைய சேவைகளின் வளர்ந்துவரும் கேள்வி காணப்பட்ட போதிலும் ஏனைய நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் மட்டத்துக்கு இலங்கையில் வயோதிபர் பராமரிப்பு அபிவிருத்தி அடையவில்லை. இதனால், பின்வரும் முன்மொழிவுகளை உள்ளடக்கியதாக பல்பக்க உபாயங்கள் தேவைப்படுகின்றது:

- வயோதிபர்களுக்கான தேசியப் பேரவை அனைத்து பங்காளர்களிடமும் கலந்துரையாடி வயோதிபர்களுக்கான தேசியக் கொள்கையொன்றினை உருவாக்கும். இதற்கான திரட்டு நிதியத்திலிருந்து ரூபா 10 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன்.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, வயோதிபர் பராமரிப்பு தொடர்பான உயர் தொழில் புரிநர்கள் சர்வதேச ரீதியிலும் அதேபோன்று உள்நாட்டிலும் அதிக சேவையாற்றி வருவதனையிட்டு நான் பாராட்டுகின்றேன். அந்தவகையில், வயோதிபர் பராமரிப்பினை இலக்காகக் கொண்டு பயிற்சிநெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தனியார் துறை

கல்வி நிறுவனங்களிலும் தேசிய பல்கலைக்கழகங்களிலும் ஊக்குவித்தல். வயோதிபர் நலன் தொடர்பான சர்வதேச ரீதியில் சான்றுப்படுத்தப்பட்ட பாடநெறிகளை வழங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் ஐந்து வருடங்களுக்கு 50 சதவீத வரி குறைப்பு வழங்கப்படும்.

- வயோதிபர்களுக்கான வீட்டுத் தேவை மிக அதிகமாகக் காணப்பட்ட போதிலும் நாட்டில் அதற்கான வழங்கல் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. வயோதிபர்களுக்கு பிரத்தியேகமான வீடமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதில் ஈடுபடுகின்ற தனியார் மற்றும் கம்பனிகளுக்கு அரைவாசி வரி விடுமுறை வழங்கப்படும்.
- காப்புறுதிக் கம்பனிகள் சிரேட்ட பிரசைகளுக்கு வைத்தியக் காப்புறுதிகளை வழங்குவதில்லையென்பது எனக்குத் தெரிய வந்தது. இது எமது சமூகத்திலுள்ள ஒரு குழுவினருக்கு எதிரான பாரபட்சமாகக் காணப்படுகின்றது. எனவே, 75 வயது வரைக்குமான அனைத்து பிரசைகளுக்கும் மருத்துவக் காப்புறுதிகளை வழங்குவதற்கு அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளையும் நான் வேண்டிக்கொள்கின்றேன்.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, 65 வயதுக்கு மேற்பட்ட சிரேட்ட பிரசைகள் அனைவரும் தேசிய எண்ணிம அடையாள அட்டை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பொதுப் போக்குவரத்தினை இலவசமாகப் பயன்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும்.

**எமது எதிர்கால சிறுவர்களைப் பாதுகாத்தல்**

377. சிறுவர்கள் நிலையான பேண்தகு அபிவிருத்தியின் அடித்தளங்களாகும். வாழ்க்கையின் இளம் பருவமானது தனி மனிதர்களின் சுகாதாரம் மற்றும் பௌதீக அபிவிருத்திக்கு முக்கியத்துவம் போன்றே சமூக மற்றும் உணர்வு ரீதியான அபிவிருத்திக்கும் முக்கியமானதாகும். இதனைக் கவனத்திற் கொண்டு ரூபா 7,000 மில்லியன் அல்லது 50 மில்லியன் ஐ.அ. டொலர் செலவினத்தில் அரசாங்கம் தற்பொழுது சிறு பராய அபிவிருத்தி தொடர்பான கருத்திட்டமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

378. கௌரவ சபாநாயகர் அவர்களே, கூட்டுக் குடும்பத்திலிருந்து சிறிய குடும்பங்களாக மாறிவரும் எமது குடும்ப கட்டமைப்பானது அதிகளவிலான தொழில்புரியும் பெற்றோரினை கொண்டிருப்பதுடன் நம்பகமானதும் சிறந்த தரத்திலான சிறுவர் பராமரிப்பு காணப்படாமையானது பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. சிறுவர்களை முறையாகப் பராமரிப்பதற்கு தேவையான பௌதீக உட்கட்டமைப்பு குறைவாகக் காணப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் பராமரிப்புக்கு உகந்ததாகக் காணப்படுவதில்லை என்பதுடன் பராமரிப்பாளர்கள் உரிய தொழிலுக்கான முறையான பயிற்சியினை பெற்றிருப்பதில்லை. தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபையினால் ஒழுங்குபடுத்தப்படக் கூடிய சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு தனியார் துறைக்கு நான் ஊக்குவிப்பு வழங்குகின்றேன். எனவே, அத்தகைய செலவினங்களை தகைமை பெறும் கொடுப்பனவாக அனுமதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

379. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த சில மாதங்களில் மாத்திரம் சிறுவர்கள் கடத்தப்பட்டு, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட இளம் சிறுவர்கள் பற்றிய மனதை உருக்கும் செய்திகள் பலவற்றினை நாம் கேள்வியுற்றோம். சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை நான் இங்கு குறிப்பிடாமல் இருக்க

முடியாது. சிறுவர் பராமரிப்பு தொடர்பான இப்பிரச்சினைகளை விலக்கி நோக்க வேண்டுமென யாரும் கருத முடியாது. எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதற்கான முன்மொழிவுகள் பின்வருமாறு:

- குடும்பங்கள் மற்றும் சிறுவர்களின் தேவைகளைப் பாதுகாப்பதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகமொன்றினை உருவாக்குவதற்கும், சிறுவர் பராமரிப்பு வசதிகளை ஊக்குவிப்பதற்கும் சமூகத்தில் சிறந்த பராமரிப்பாளர்களை உருவாக்கும் நோக்கத்துடனும் சிறுவர் கற்றல் வேலைச்சட்டகம் மற்றும் தேசிய சட்டம், தர வேலைச்சட்டகம் என்பவற்றினை தயாரிப்பதற்கான ஆணையினை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கொண்டுள்ளது. இதனால் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பங்களிப்பு கடந்த காலங்களில் பாரியளவில் காணப்பட்டது என்றவகையில் அது மேலும் ஸ்திரப்படுத்தப்படுதல் வேண்டும். இதற்காக திரட்டு நிதியிலிருந்து ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.
- எமது நாட்டில் திறமை மிக்க சிறுவர் பராமரிப்பாளர்கள் குறைவாகக் காணப்படுகின்றனர். இது முழு சமூகத்திலும் தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளது. சிறுவர் பராமரிப்பாளர்களுக்கான சான்றுப்படுத்தப்பட்ட பயிற்சிகளை வழங்குவதற்கு ஆரம்பக் கட்டமாக இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபைக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

380. அதே வேளையில், சிறுவர் பராமரிப்பு தொடர்பான சான்றுப்படுத்தப்பட்ட பயிற்சி நெறிகளை வழங்கும் ஏதேனும் தனியார் நிறுவனங்கள் இரட்டை வரி நன்மை கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

**தபால் சேவைகள்**

381. கௌரவ சபாநாயகர் அவர்களே, மின்னஞ்சல், இணையத்தள பாவனையின் காரணமாக தபால் சேவையானது உலகளாவிய ரீதியில் குறிப்பிடத்தக்களவு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. இன்று எமது தபால் சேவை கூட அவ்வாறான சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்தவகையில், அவ்வாறான சவால்களை எதிர்கொள்வதற்கு தபால் சேவையினை கூரியர் சேவைகளை வழங்கும் வியாபாரமாக மாற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் தமது சேவைகளை இழந்துள்ள உப தபாலகங்கள் அவற்றினது சேவைகளை உறுதிப்படுத்துவதற்கு நிதி ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். வங்கிகளின் சார்பில் சேமிப்புகளை சேகரிக்கின்ற பணியில் ஈடுபடுவதற்கும் அவற்றினை இலாபம் தரக்கூடிய நிறுவனங்களாக மாற்றுவதற்கான மேலதிக வருமானத்தினை பெறக்கூடிய சேவைகளை வழங்குமாறும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**பொது மக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு**

382. கௌரவ சபாநாயகர் அவர்களே, கிராம மட்டத்தில் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கினை மேம்படுத்தும் வகையில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் கலந்தாலோசித்து தற்பொழுது காணப்படும் 428 பொலிஸ் நிலையங்களை 600 பொலிஸ் நிலையங்களாக அதிகரிப்பதற்கு நான் முன்வருகின்றேன். இதற்காக மேலதிகமாக ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

383. கௌரவ சபாநாயகர் அவர்களே, மிக துயரமான சூழ்நிலையில் எமது பொலிஸ் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். அவசர நிலைமைகளின் போது உடனடியாக செயற்படுவதுடன் எமது மக்களுக்கு தேவையான ஏனைய பல்வேறு தேவைகளையும் அவர்கள் வழங்குகின்றனர்.

அவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நவீன வாகனப் போக்குவரத்து முகாமைத்துவ முறைமை உள்ளடங்கலாக முக்கியமான துறைகளில் தொடரான பயிற்சி வழங்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதனால் நாட்டிலுள்ள தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியினை வலுப்படுத்துவதற்கும் அதற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

384. தொலைத் தொடர்பு வலையமைப்பு உருவாக்கமானது அவசரத் தேவைகளின் பொது பொலிஸ் உடனடியாக செயற்படுவதற்கும் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் மக்களுக்கிடையில் தொடர்பாடலினை அதிகரிப்பதற்கும் இது அவசியமானதாகும். இம் முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

385. பொலிசாரினால் வழங்கப்படும் சேவைகளை எமது அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது என்ற வகையில் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் பொலிஸ் சேவையில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக 50 சதவீதமான நிலுவைக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

386. மேலும், சிறந்த நிதி நடைமுறைகளை ஏற்படுத்தும் வகையில் அனைத்து பொலிஸ் நிலையங்களும் தனியான செலவின நிலையமொன்றினை கொண்டிருக்கும்.

### அரச உடைமை தொழில் முயற்சிகள்

387. அரச உடைமை தொழில் முயற்சிகள் நாட்டின் முக்கிய துறைகளான மின்சாரம், எரிபொருள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையம் விமான சேவைகள் மற்றும் நீர் வழங்கள் ஆகியவற்றில் தனி உரிமையாகவோ அல்லது ஒரு குறிப்பிடும் படியான கட்டுப்பாட்டையோ கொண்டுள்ளதன் காரணமாக அரச பொருளாதார உபாயங்களில் ஒர குறிப்பிடத்தக்க பங்கினைக் கொண்டுள்ளன. வருவாயை அதிகரிக்கும் வழியான எந்த ஒரு அரச தொழில் முயற்சியும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது என அரசாங்கம் மீள வலியுறுத்துகின்றது. இதற்கு மாற்றமாக அரச தொழில் முயற்சிகளை உறுதிப்படுத்தவும் மற்றும் சுதந்திரமாக இயங்கக்கூடிய வகையிலான உபாயமான அனுகுமுறைகளை பின்பற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது.

388. முதலில் அனைத்து அரச தொழில் முயற்சிகளும் அரசாங்கத்திற்கு உரிமையான ஒரு கூட்டுக் கம்பனியின் முகாமையின் கீழ் கொண்டு வரப்படும். அது சிங்கப்பூர் தெமாசெக் கூட்டுக் கம்பனிகளை ஒத்ததாகும். இப்பொதுக் கம்பனியானது சிறந்த நிதியியல் கோட்பாடுகள் மற்றும் சந்தை பொருளாதாரத்தின் அடிப்படையில் முகாமை செய்யப்படும். இத் தொழில் முயற்சிகளின் பங்குகளானது “பொதுச் சொத்து நிதியத்திற்கு” மாற்றப்படும். திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் பாதுகாவலராக இருப்பர். இந்நிதியமானது ஒரு இயக்குனர் சபையினால் முகாமை செய்யப்படும். இவ் இயக்குனர் சபையானது அரசியல் அமைப்பு சபையினால் நியமிக்கப்படும். சிவில் சமூகம் வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். இப் பொதுச் சொத்து நிதியமானது பாராளுமன்றத்திற்கு வகைகூறல் வேண்டும். இது அமுலுக்கு வரும் வகையில் புதியதொரு அரச தொழில் முயற்சிகள் சட்டமாக்கப்படும்.

389. அரச தொழில் முயற்சிகளின் இயக்குநர் சபையானது தொழில் வல்லுனர்களை நியமிப்பதன் மூலம் உறுதிப்படுத்தப்படும். முக்கியமான அரச தொழில் முயற்சிகள் சுதந்திரமாக செயற்பட இடமளிப்பதோடு அவைகள் முக்கியமான செயலாற்றுகை சுட்டிகளினூடாக (KPI) கண்காணிக்கப்படும். முக்கியமான அரச தொழில் முயற்சிகள் தரப்படுத்தல் முறைமைகளை

பின்பற்றுவதற்கு ஊக்குவிக்கப்படும். இதன் மூலம் தமக்குமத் தேவையான மூலதனங்களை பல்வேறுபட்ட நிதி மூலங்களினூடாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மூலதனச் சந்தைகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பத்தை அளிக்கும்.

390. சுய நம்பிக்கையுள்ள அரச தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதில் சிறப்பான ஒழுங்குப்படுத்தல் பொறிமுறை மிகவும் முக்கியமானதாகும். இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை விரிவு படுத்துவதற்கும் மற்றும் அவற்றை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான சட்டவாக்கங்களை இயற்றி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றையும் கொண்டுவருவதனூடாக இந்நிறுவனங்கள் கிரயத்தை பிரதிபளிக்கக்கூடிய வெளிப்படையான விலையிடல் பொறிமுறையினை கைக்கொள்ள முடியும்.

391. அரச தொழில் முயற்சிகள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையானது அவற்றின் முதலீடுகள் பொருளாதாரத்தில் காணப்படும் உபாய அமைவைக் கொண்டு வழிநடாத்தப்படும். அரசாங்கத்தின் முதலீட்டு பட்டியலானது முக்கியமான உபாயமான உட்கட்டமைப்பு வசதிகளான மின்சார உற்பத்திஇ மாற்றல், துறைமுகங்கள், நீர் வழங்கல் போன்றவற்றை கட்டுப்படுத்தும் பிரதான அரச தொழில் முயற்சிகளில் மாத்திரமல்லாமல் உபாயமற்ற ஹோட்டல்கள்இ வைத்தியசாலைகள் போன்றவற்றிலும் முதலீடு செய்துள்ளது. கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் இச்சபையில் கூறியதைப் போன்று உபாயமற்ற துறைகளான வரையறுக்கப்பட்ட லங்கா ஹொஸ்பிட்டல் வரையறுக்கப்பட்ட ஹொட்டல் அபிவிருத்திக் கம்பனி (கொழும்பு ஹில்டன்) ஹயாட் வதிவிடம் வோட்டர்ஸ் எட்ஜஸ் கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டல் செலிங்கோ ஹொஸ்பிட்டல் மற்றம் மொபிட்டல் நிறுவனங்களில் காணப்படும் அரச முதலீடுகளில் படிப்படியாக முழுமையாகவோ அல்லது பாதியளவிலோ விடுவிக்கப்படும். 2016 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டு இப்பட்டியலிடல் மூலம் உருவாக்கப்படும் பணமானது கடந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் உயர் கிரயத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களில் இருந்து விடுபடுவதற்காக பயன்படுத்தப்படும். இவ் அரசாங்கத்தின் உபாயமானது ஒருபக்க சார்பானதல்ல என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே அரசாங்கமான இவ் உபாயமற்ற சொத்துக்களில் இருந்து விடுபடுவதற்கு பின்நிற்கப்போவதில்லை. அதேபோல் அரசாங்கமானது சந்தையை அவதானித்து நாட்டின் பொருளாதார கொள்கையுடன் ஒத்துப் போகும் உபாயகரமான உள்நாட்டு வெளிநாட்டுச் சொத்துக்களில் முதலீடு செய்வதற்கும் பின்நிற்பதில்லை.

392. கௌரவ சபாநாயகர் அவர்களே லங்கா சதோச நிறுவனமானது சந்தையில் விலைகளைப் பேணுவதற்கான சிறப்பானதொரு நிறுவனமாகும். ஆயினும் அது இன்று ரூபா 8 பில்லியன்களை திரண்ட நட்டத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்குப் பிரதான காரணம் வங்காளதேசில் இருந்து ஒரு கிலோ ரூபா 75 படி இறக்குமதி செய்து ரூபா 50 இற்குப் விற்பனை செய்தது போன்ற விவேகமற்ற அரசியல் தீர்மாணங்களாவ் ஏற்பட்டதாகும். லங்கா சதொச ஆனது பொது மக்களின் வாழ்கைச் செலவைக் குறைப்பதற்கான ஒரு குழாயாக பயன்படுத்தப்படல் வேண்டும். லங்கா சதொச நிறுவனத்தை மீள் கட்டியெழுப்பும் முயற்சியின் முதற் கட்டமாக அதன் கடன்கள் மீள் ஒழுங்குபடுத்தப்படும். அதேவேளை, பங்கீட்டு வலையமைப்பானது விஸ்தரிக்கப்பட்டு விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை 500 ஆக அதிகரிப்பதற்காக ரூபா 1000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

393. கௌரவ சபாநாயகர் அவர்களே அதி வேகப்பாதை மற்றும் கட்டுநாயக்க அதிவேகப் பாதை என்பவற்றிற்கு ஒரு விசேட நோக்கத்திற்கான நிறுவனம் உருவாக்க முன் மொழிகின்றேன். இவ் விசேட நோக்கத்திற்கான நிறுவனத்தில் (SPV) தனியார் துறையினர் முதலீடு செய்வதற்காக அழைக்கப்படுவர். அவர்களின் முதலீடுகளுக்கான குறைந்த பட்ச திரும்பலுக்கு அரசாங்கம்

உத்தரவாதம் அளிக்கும். இம்முதலீட்டினூடாக உருவாக்கப்படும் நிதியானது நாடு பெற்றுள்ள கடன்களிலிருந்து விடுபடுவதற்காக பயன்படுத்தப்படும்.

394. நுரைச்சேலை நிலக்கரி மின் நிலையத்தினையும் பங்கு சந்தைக்கு கொண்டுவரக்கூடிய வகையில் ஒரு விசேட நோக்கத்துக்கான நிறுவனம் உருவாக்கப்படும். நான் வலியுறுத்துவது என்னவென்றால் இம் மின்நிலையத்தின் உரிமையில் எவ்வித மாற்றமும் ஏற்பட மாட்டாது. ஆனால் இலங்கை மின்சார சபையின் திரவத்தன்மையானது மேலும் மேம்படுத்தப்படும். அதன்மூலம் அதனது நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்யவும் முடியும்.

395. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஏனைய இரண்டு தனியார் தாபனங்களினதும் ஒத்துழைப்புடன் தற்போது குறை பயன்பாட்டில் உள்ள திருகோணமலை எண்ணெய் தாங்கி பண்ணையை முகாமை செய்வதற்கு ஒரு கம்பனி உருவாக்கப்படும். இவ்வசதியானது பிணைக்கப்பட்ட சுங்க களஞ்சியங்களாக செயற்படுத்தப்படும்.

396. கௌரவ சபாநாயகர் அவர்களே, அதிமேதகு சனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அரச தொழில்முயற்சிகள் இயக்குநர் சபை அங்கத்தவர்கள் மற்றும் தலைவர்கள் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வரையறுக்கப்படும். இது தொடர்பில் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அறிவுருத்தல்கள் மீறப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 2016 சனவரி 1 ஆந் திகதி திறைசேரியினால் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகள் கட்டாயம் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**விமான சேவைத்துறை**

397. அரசாங்கமானது சகாய கொள்கையைப் பின்பற்றி எவ்வித கட்டுப்பாடுகளுமற்ற விமானப் போக்குவரத்து சேவைக்கான திறந்த ஆகாயக் கொள்கையை முன்னிறுத்துகின்றது. இதன்மூலம் சர்வதேச விமான சேவைகள் இலங்கையை ஒரு விருப்புத்தளமாகக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

398. உள்ளூர் விமான சேவைகளை உறுதிப்படுத்தும் முகமாக திகன, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் மூன்று உள்ளூர் விமான நிலையங்களை அரச தனியார் பங்குடமையாக உருவாக்கப்படும்.

399. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஆபிரிக்காவுக்கும் கிழக்காசியாவுக்கும் இடையில் குறிப்பிடும்படியான விமானப் போக்குவரத்து இடம்பெறுகின்றது. இது இன்னும் 10 வருட காலத்தில் குறிப்பிடும்படியான அளவில் வளர்ச்சியடையும். ஆகவே இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம் சர்வதேச விமான சேவைகளுடன் இணைந்து இப்பிரயாணிகள் கிழக்கில் இருந்து மேற்கிற்கு பயணிக்கும் போது இலங்கையில் தரித்து செல்லக்கூடிய வகையில் அவர்களைக் கவருவதற்கான உபாயங்களை உருவாக்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

400. உள்ளூர் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில், உள்ளூர் விமான நிலையங்களை பயன்படுத்தும் விமான சேவைகளுக்கு சரக்குகள் மற்றும் பிரயாணிகள் கையால்கை கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்களில் இருந்து விலக்களிக்க முன்மொழிகின்றேன். அவர்கள் வருடாந்தம் ரூபா 1.5 மில்லியன் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

401. கௌரவ சபாநாயகர் அவர்களே, 2016 ஆம் ஆண்டின் சனவரி 1 ஆம் திகதியிலிருந்து வர்த்தக விமானங்கள் மீதான மேலதிக சேவைகள் அறவீடுகளை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

**ஸ்ரீலங்கன் விமான சேவை**

402. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமிரேட்ஸ் இடமிருந்து ஸ்ரீலங்கன் விமான சேவையின் முகாமைத்துவமானது மீண்டும் கையேற்கப்பட்ட பின்பு அது மிகவும் மோசமான முறையில் முகாமை செய்யப்பட்டுள்ளது. அதன் தற்போதைய கடன்களானது ரூபா 158 பில்லியன்களாக

காணப்படுகின்றது. இதில் 72 சதவீதம் கடந்த ஆட்சியில் இறுதி மூன்று ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். இது பிரதானமாக ஊழல் குடும்ப ஆதிக்கம் மற்றும் கீழ்மட்டத்திலான முகாமை என்பவற்றினால் ஏற்பட்டதாகும். இது நாட்டின் வரி செலுத்துனர்களுக்கு செய்யும் அநீதியாகும். மற்றும் அவர்களை தரக்குறைவாக கருதுவதுமாகும். இக்கடன்களின் மூலம் 45,000 பஸ் வண்டிகளுக்கு 25 சகல வசதிகளையும் கொண்ட பல்கலைக்கழகங்கள், 40 சகல வசதிகளுடன் கூடிய வைத்திய சாலைகள் மற்றும் 48,000 புதிய வீடுகளைக் கட்டுவதற்கு நிதியீட்டம் செய்திருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் மீளெழுச்சி செய்யும் முறைகள் மிக மந்தகதியிலே இடம்பெறுகின்றது.

403. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பு செய்து தொழில்வன்மை கொண்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு முகாமை செய்யப்பட்டு இலாபகரமான செயல் இடங்களுடன் பிராந்திய விமான சேவையாக மீள் இணைக்கப்படும்.

404. ஸ்ரீலங்கன் விமான சேவையில் எவ்விதமான அரசியல் தலையீடுகளும் இருக்காதென்று நான் இப்பாருளுமன்றத்திற்கு உறுதியளிக்கின்றேன். இந்நிறுவனத்தை நாங்கள் வெற்றிகரமாக இலாபம் உழைக்கும் மற்றும் பிராந்தியத்தில் முன்மாதிரியான தேசிய விமான சேவையாக மாற்றியமைப்போம். அரசாங்கம் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு அனைத்து பொறுப்புக்களையும் இதய சுத்தியோடு நிறைவேற்றும்.

405. சரக்குகள் மற்றும் பிரயாணிகள் கையால்கை மற்றும் உணவு வழங்கல் செயற்பாடுகள் வெவ்வேறாக கம்பனிகளாக இயக்கப் பெற்று அனைத்து விமான சேவைகளுக்கும் சேவைகளை வழங்கும்.

**மிஹின் லங்கா**

406. மிஹின் லங்கா விமான சேவையானது கடந்த ஆட்சியாளர்களின் இன்னுமொரு நினைவுச் சின்னமாகும். மேலும் அது அரச திறைசேரியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் ஏற்கனவே மீள் கட்டமைப்பு திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். மிஹின் லங்காவானது சுருக்கற்ற குறை கட்டண விமான சேவையாக நிலைபடுத்தப்படும். மிஹின் விமான சேவையானது பிரதானமாக தனது தேவைகளை உள்ளூர் வழிகளில் மேற்கொள்வதோடு தெரிவு செய்யப்பட்ட சர்வதேச வழிகளுக்கு மாத்திரம் தனது செயற்பாட்டை மட்டுப்படுத்திக் கொள்ளும்.

**மத்தளை விமான நிலையம்**

407. மத்தளை விமான நிலையமானது கடந்த அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அநாவசிய முயற்சியாகும். இவ் விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெற்றுக்கொண்ட கடனின் காரணமாக நாடானது கடன் நெறுக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மத்தளை விமான நிலையத்தில் அரச தனியார் பங்குடமையின் கீழ் மீளெழுச்சி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதன் கீழ் விமான நிலையமானது விமான ஓட்டுநர் பயிற்சி விமான சரக்கு களஞ்சியம் மற்றும் சரக்குகள் இடம் நகர்த்தல் சேவைகள் என்பவற்றுக்கு பயன்படுத்தப்படும்.

408. மத்தளை விமான நிலையத்தை விமானச் சரக்குகள் கையால்கை மத்திய நிலையமாக பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக ஒரு கி.கிராமுக்கு 4 சத ஐ.அ. டொலர்களை நிலையான கட்டணமாக அறவிடுவதற்கு முன்மொழிகின்றேன்.

409. மத்தளை விமான நிலையத்தில் தனியார் துறையினர் விமான ஓட்டுநர் பயிற்சிக் கல்லூரி மற்றும் விமான பராமரிப்பு மற்றும் பங்குபார்த்தல் வசதிகளை தனியார் துறையினர் உருவாக்குவதை ஊக்குவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**வினைத்திறனான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு**

410. கௌரவ சபாநாயகர் அவர்களே, பல்வேறு காரணங்களினால் சமூகத்தில் மிகவும் பலவீனமான நிலையில் காணப்படும் அங்கத்தவர்களை பாதுகாக்கும் நோக்கில் இவ் அரசாங்கமானது நாட்டில் ஒரு உறுதியான சமூகப் பாதுகாப்பு மற்றும் வலைபின்னல் பொறிமுறையை உறுதிப்படுத்துவதில் திடசங்கற்பம் பூண்டுள்ளது. குடித்தொகுதிகளுடன் தொடர்புபட்ட அரச மானியங்களானது எப்போதும் அதிகரித்துச் சென்றுள்ளது. 2015 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 383 பில்லியன்களாக காணப்பட்ட மானியங்கள் 2016 ஆம் ஆண்டில் ரூபா 420 பில்லியன்களாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இக்குடித் தொகுதிகளுடன் தொடர்புபட்ட மாற்றல்களாவது சமுர்த்தி, உரமானியம், ஓய்வூதியம் ஆகிய சமூகப் பாதுகாப்பு முறைமைகளையும் உள்ளடக்கியதாகும். பயனாளிகளை அடையாளம் காணப்படுவதிலுள்ள ஒழுங்கற்ற தன்மை இச்சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் முறைகேடுகள் அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளதோடு பயனாளிகள் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கும் காரணமாக உள்ளது.

411. இந்நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்வதற்கான சரியான நேரம் இதுவாகும் என நான் நம்புகின்றேன். கௌரவ சபாநாயகர் அவர்களே, சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படும் இரண்டு முக்கிய சிக்கல்கள் யாதெனில் பொருத்தமான பயனாளிகளை அடையாளம் காணல் மற்றும் தடைகளற்ற முறையில் நன்மைகள் பயனாளிகளைச் சென்றடைவதாகும். இவ்விரண்டையும் சமூக நலச் சட்டத்திற்குள் தீர்த்துக் கொள்ளலாம். இப்பொறிமுறையை உறுதிப்படுத்தும் நோக்கில் எமது சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் உள்வாங்கப்படக்கூடிய உண்மையான பங்காளிகளை அரசாங்கம் அடையாளம் காண்பதற்காக சமூக வலையமைப்பு பொறிமுறைக்குள் கிராம சேவகர்களுடன் சிரேட்ட பிரசைகள் கிராம முக்கியஸ்தர்களையும் உள்ளடங்கச் செய்தல் வேண்டும். அனைத்துக் கொடுப்பனவுகளிலும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கிளைகள் வலைபின்னல் வசதிகள் கொண்டு வங்கி முறையின் ஊடாக மேற்கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன். இம்முறையானது ஓரளவிலான வெளிப்படையான முறைமையாகும். இது நலன்கள் எவ்விதத் தடையீடுகள், கையாடல்கள் மற்றும் ஊழலற்ற முறையில் பயனாளிகளுக்கு கிடைக்கச் செய்வதை உறுதிசெய்யும்.

412. எமது அரசாங்கத்தின் நம்பிக்கை என்னவென்றால் அனைத்து சமூகப் பாதுகாப்பு நிகழச்சித் திட்டங்களும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் ஒரு நிறுவனத்தினால் கண்காணிப்புச் செய்யப்படல் வேண்டும்.

413. இச்செயன்முறையின் ஊடாக எமது சமூகத்தில் காணப்படும் உண்மையான நலிந்தவர்களுக்கு மேலும் நலன்களை பெற்றுக்கொடுப்பதற்கு வழிவகுப்பதோடு மரபு ரீதியாக பலவீனர்களாக கருதப்படும் அங்கக் குறைபாடு, சுகவீனம், கல்விக்கான ஆதரவு மற்றும் முதியோர் நலன் கொடுப்பனவு போன்றவற்றுக்கு மேலதிகமாக எமது சமூகப் பாதுகாப்பு வலையமைப்பில் புதிய காரணங்களால் தோன்றும் அதாவது தொழில்களை இழந்தவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

**அரச நிதி**

414. கௌரவ சபாநாயகர் அவர்களே, அனைத்து அரச கொள்வனவுகள் தொடர்பாகவும் கடுமையான ஒழுங்குவிதிகள் அமுல்படுத்தப்படும். கௌரவ பிரதமரினால் இச்சபையில் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடணத்தின் படி மத்திய பெறுகைகள் செயலகம் உருவாக்கப்படும். இது அனைத்து கேள்வி மனு அளிப்புக்களையும் மேற்பார்வை செய்வதோடு குறிப்பிட்ட பெறுமதிக்கு மேலான அனைத்து கொள்வனவுகளையும் கையாலும்.

415. கடந்த சில வருடங்களாக பல கருத்திட்டங்கள் வெளிப்படையான மற்றம் திறந்த போட்டி அடிப்படையிலான பெறுகை செயன்முறைக்கு மாற்றமாக அழைக்கப்படாத முன்மொழிவுகளாகவே

அமுல்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலை காரணமாக அரசாங்கமானது சில கருத்திட்டங்களுக்கு அதிகூடிய கட்டணங்களை செலுத்தவேண்டி ஏற்பட்டது. அரசாங்க விலை மனுக்களுக்கு விண்ணப்பிப்பது தொடர்பாக தனியார் கம்பனிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை அறிவூட்டுவதற்காக ஒரு குழு அமைக்கப்படும்.

416. கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் மீண்டும் கூற விரும்புவது என்னவென்றால் திறைசேரி செயலாளருக்கு முழுமையாகவோ அல்லது பாரியளவில் உரித்தான எந்தவோரு கம்பனியும் அல்லது அரச தொழில்முயற்சியும் திறைசேரி செயலாளரின் எழுத்திலான அனுமதியின்றி துணைக் கம்பனிகளில் மற்றும் இணைந்த கம்பனிகளில் முதலீடுகளை மேற்கொள்ள முடியாது. அதேபோல் எந்தவொரு அமைச்சும் அல்லது திணைக்களமும் திறைசேரியின் செயலாளரினால் எழுத்திலான அனுமதியின்றி எந்தவொரு கம்பனியிலும் முதலீடு செய்ய முடியாது.

417. கௌரவ சபாநாயகர் அவர்களே, விலை மனுக்கோரல் நடவடிக்கை தொடர்பான கட்டணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த நான் முன்மொழிகின்றேன்.

418. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் காணப்படும் பித்தளை செப்பு மற்றும் இரும்பு மற்றும் பாவிக்கப்படாத அனைத்து பொருட்களும் வெளிப்படையான விலைமனுக்கோரல் அல்லது ஏலமிடல் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும்.

419. பல்வேறுபட்ட அரசாங்க நிறுவனங்களினாலும் விதிக்கப்படும் பல்வேறுபட்டட கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒருமுறை மீளாய்வு செய்யுமாறு அனைத்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தா்களையும் பொதுத்துறை நிறுவனங்களிலுள்ள வருமானக் கணக்கீட்டு அதிகாரிகளையும் வேண்டிக் கொள்கின்றேன்.

420. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங் சொத்துக்களானது முறையாக முகாமை செய்யப்படுவதில்லை. ஆகவே அரச நிதித் திணைக்களத்தில் ஒரு தேசிய சொத்துக்கள் இடாப்பு ஒன்றை பேணுவதற்கு முன்மொழிகின்றேன்.

421. கௌரவ சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத்திட்ட அமுல்படுத்தலானது மேம்படுத்தப்படல் வேண்டும். 2016 ஆம் ஆண்டு சனவரியில் இருந்து அனைத்து அமைச்சுக்களும் வரவு செலவுத்திட்ட அமுலாக்கலை கண்காணிக்கும் படி வேண்டிக் கொள்வதோடு ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக எவ்வித அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளப்படாது என்பதை உறுதி செய்து ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ரூபாவில் இருந்து மக்களுக்கு அதிகபட்ச நன்மையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

422. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் உத்தரவாத வரையறைகளை நடைமுறையிலுள்ள 7 சதவீத மொ.உ. உற்பத்தியினை 10 சதவீமதாக அதிகரிப்பதற்கும், 50 சதவீதத்திற்கு குறைவான அரசாங்கப் பங்குடமையினைக் கொண்ட அரசாங்க தனியார் பங்குடமைகளுக்கு உத்தரவாதங்களை வழங்குவதற்கு முடியுமாக இருக்கும். கட்டண அடிப்படையில் திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் இதற்கான ஒழுங்குவிதிகள் விநியோகிக்கப்படும்.

**திறைசேரி செயற்பாடுகளை மேம்படுத்தல்**

423. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டின் வருமானத்தினை அதிகரிப்பதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். சுங்கம், கலால், உள்நாட்டு இறைவரி மற்றும் விலைமதிப்பு அனைத்து வருமானத்துடன் தொடர்பு விடயங்களையும் பரிசீலனை செய்வதற்காக திறைசேரியில் வருமான வினைத் திறன் மற்றும் பரிசீலனை அலகொன்றை ஸ்தாபிப்போம்.

424. உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, தற்போதுள்ள கட்டடத்தில் காணப்படும். இடப் பற்றாக்குறை காரணமாக தனது நடவடிக்கைகளை விரிவாக்கி செயற்படுவதால் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. அதனை நிவர்த்தி செய்யுமுகமாக இறைவரித் திணைக்களம்

கலால் திணைக்களம், தபால் திணைக்களம் மற்றும் தேசியலொத்தர் சபை என்பவற்றை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருவதற்காக ஓர் நவீனமயமான கட்டடம் திருப்போலி சந்தையில் நிர்மாணிக்கப்படும். இந்நோக்கத்துக்காக ரூபா 2,000 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன் மொழிகின்றேன்.

425. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் படி அரச நிதி தொடர்பான பூரண அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உரியதாகும். பல அரச திரண்ட நிதிக்கு வெளியே அமைச்சர்கள் / திணைக்களங்கள் மற்றும் அரசதொழில் முயற்சிகள் பல நியதிச் சட்டமல்லா நிதிகளை உருவாக்கி அவை தனிப்பட்ட நிறுவனங்களில் முகாமை செய்யப்படுவதோடு, அவற்றின் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

426. அனைத்து அரச நிதிகளும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்பதை ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள நடபடி முறைகளின் கீழ் உறுதிப்படுத்துமுகமாக அனைத்து நியதிச் சட்டமல்லா நிதிகளையும் மீளாய்வு செய்வதற்கு முன் மொழிவதோடு, இத்தகைய நிதிகளில் மொத்தமாக ரூபா 80 பில்லியன்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மீளாய்வின் மூலம் நடைமுறைச் சூழ்நிலையில் இத்தகைய நிதிகளின் இருப்பு அவசியமா என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும், அவ்வாறான நிதிகளின் இருப்பானது இன்றியமையாதது எனக் காணப்படின் அந்நிதிகள் தற்போதைய அவசியம் பிரதிபலிக்கும் வகையில் நியதிச் சட்டம் மாற்றப்படும். இதன் மூலம், அனைத்து நிதிகளினதும் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும்.

427. கௌரவசபாநாயகர் அவர்களே, 2014 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பல வருடங்களாக பல்வகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும், சேவைகளை பெற்றுக் கொண்டதற்காகவும் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் மற்றும் தீர்க்கப்படாத முன்வைப்புக்கள். இவைகள் 2011 ஆம் ஆண்டு போன்ற முன்னைய காலப்பகுதியில் இருந்து அரசாங்க நிறுவனங்களினால் சிறிய அளவிலான நிர்மாணங்களையும், மற்றும் பாரிய அளவிலான நிர்மாணங்களையும், கொண்ட உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய செலுத்தப்பட பன்முகப்படுத்தப்பட வேண்டிய மீதிகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்யுமுகமாக ஓய்வு பெற்ற அமைச்சுக்களுக்கான செயலாளர்களைக் கொண்டகுழுவொன்றைஉருவாக்கஅதன் மூலம் நிலுவையாகவுள்ள ஒப்பந்த அர்ப்பணிப்புக்கள் தொடர்பான பரிந்துரைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நியமிக்க முன் மொழிகின்றேன்.

428. பல காரணங்களுக்காக வெளிநாட்டு நிதிகளின் பயன்பாடானது மிகவும் பின ் தள்ளப்பட்டுள்ளது. செய்முறை பூர்த்தி செய்யப்படுவதற்கு 5 - 6 மாதங்கள் எடுக்கின்றன. இப்பின்னணியில் நிதி அமைச்சுக்கு மேலும் சட்ட ரீதியான உறுதிப்பாட்டைபெற்றுக் கொடுக்கும் முகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மூன்று அதிகாரிகளை நிதி அமைச்சுக்கு விடுவிக்குமாறும் சட்டமா அதிபரிடம் கௌரவமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

429. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கையில் அரச துறை நிதி முறைமையானது தொடர்ச்சியாக சிக்கலான விடயமாக மாறிவருகின்றது. அரச நிதி முகாமையானது அரசாங்கத்தின் மிகவும் முக்கியமான முன்னுரிமையாக மாறி வருகின்றது. அரச நிதித் துறை அதிகாரிகளுக்கு அவசியமான முயற்சிகளை அளிப்பதற்கான ஒரு தொழில் ரீதியான நிறுவனம் காணப்படாமை ஒரு குறைபாடாகும். இன்று வரை எமது நாட்டில் அரச நிதி முகாமைத்துவம் தொடர்பாக தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒரு சரியான பொறிமுறை காணப்படாமையானது மிக முக்கியமான ஒரு குறைபாடாகும். இதன் விளைவாக அரச துறை நிதி முகாமை அதிகாரிகள் தமது தொழில் ரீதியான தகைமைகளை தனியார் துறை நிதி

முகாமையாளர்களுக்கு பயிற்சியளிக்கும் உயர் தொழில்கல்வி நிறுவனங்களிலே பெறவேண்டியுள்ளது.

430. இப்பின்னணியில், அரச துறைக் கணக்காளர்களின் தொழில் ரீதியான தகைமைகளை பெற்றுக் கொடுக்கக் கூடிய கல்வி நிறுவகமொன்றை நிதி அமைச்சின் கீழ் உருவாக்குவதற்கு ரூபா 50 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

431. கௌரவ சபாநாயகர் அவர்களே, திறைசேரியின் நடவடிக்கைகள் தற்போது விரிவாக்கம் அடைந்துள்ளது. அதனால், வினைத் திறனான பங்களிப்புக்களை செய்வதற்கு விசேட திணைக்களங்கள் அவசியமாகின்றது. ஆகவே, நாங்கள் திறைசேரியில் மூலதனச் சந்தை நடவடிக்கைகளை வழி நடாத்துவதற்கும், தனியார் துறைமற்றும் அரசாங்கத்திற்கிடையில் தொடர்பினை உருவாக்குவதற்காகவும் இரண்டு திணைக்களங்கள் உருவாக்கப்படும்.

432. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாட்டிற்கு பொருத்தமான இட முகாமைத்துவக் கொள்கை ஒன்று எம்மிடம் இல்லை. ஆதலால், பொதுத் துறை சேவை வழங்கலானது. பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அகவே, அரசாங்க காரியாலயங்களில் சிறப்பான இட முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் முகமாக இட முகாமைத்துவ அலகினை உருவாக்குவதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**பொது நிர்வாகம்**

433. கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வரசாங்கமானது, நாட்டின் அரசாங்க ஊழியர்கள் சுதந்திரம் மற்றும் கௌரவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு உறுதி அளிக்கின்றது. ஒரு சுதந்திரமான அரச சேவை ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரசியல் மயமாக்கப்பட்ட அரச துறை என்பது இறந்த காலவிடயமாகும்.

434. இலங்கை வரலாற்றில் அரச ஊழியர்களுக்கு அதி கூடிய சம்பள அதிகரிப்பான 10,000 ரூபாவை வழங்குவதாக உறுதி அளித்திருந்தோம். அதே போல நாங்கள் அவ்வுறுதிமொழியை நிறைவேற்றினோம். இது அரசஊழியர்கள் தமது சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான நேரமாகும். எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். நான் கவலையுடன் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அரச துறை சேவை வழங்கலானது, கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றது. இது சீர் செய்யப்படல் வேண்டும். உற்பத்தித் திறனானது தொடர்ந்தும் சிக்கலாகவே காணப்படுகின்றது. அது நாட்டின் முழு மொத்த பொருளாதார வளர்ச்சியையும் பாதித்துள்ளது. உத்வேகமாக செயலாற்றக் கூடிய அரச பணித் துறையே எப்போதும் எதிர்கால செயற்பாடாக இருத்தல் வேண்டும்.

435. இந்தப் பின்னணியில், மேலதிக ஆளணியினரைக் கொண்ட நிறுவனங்களில் இருந்து ஊழியர்களை பெற்று ஒரு அரச ஊழியர் குழுமம் ஒன்றை உருவாக்கி ஊழியர்கள் குழுமம் ஒன்றை உருவாக்கி ஊழியர்கள் பற்றாக்குறையான நிறுவனங்களுக்கு விடுவிக்கபப்படுவர்.

436. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கமானது வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தலுக்கு பெருமளவு பணத்தை செலவு செய்கின்றது. ஆகவே வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு பதிலாக செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு முன் மொழிகின்றேன். இதன் போது குத்தகையில் பராமரிப்புச் செலவு, காப்புறுதி, கட்டணம் மற்றும் வாகனம் தொடர்பான ஏனைய கட்டணங்களையும் அவரே செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், தனது சொந்த வாகனத்தை பாவிக்க விரும்பும் அரச ஊழியர்களுக்கு அதி கூடிய கொடுப்பனவாக எரிபொருள் கொடுப்பனவிற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 50,000 பெற்றுக் கொடுக்கப்படும். இந்த புதிய முறையானது வருடாந்தம் ரூபா 10,000 மில்லியனை சேமிக்க உதவும்.

437. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரச துறை சேவை வழங்கலானது எவ்வித பயனையும் தருவதாக இல்லை. அரச நிறுவனங்களுக்குவரும் கடிதங்கள் பதில் அளிக்கப்படாமல் பல

மாதங்களாக கிடக்கின்றன. ஆகவே, கிடைக்கப் பெற்ற கடிதங்களுக்கு 5 வேலைநாட்களுக்குள் தெரியப்படுத்தல் வேண்டும். இது பொது நிர்வாக மற்றும் பொது முகாமைத்துவ அமைச்சினால் கண்காணிக்கப்படும்.

438. வெளிநாடுகளில் காணப்படும் எமது தூதராலயங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இத்தூதராலயங்கள் சேவைசெய்யும் ஊழியர்களுக்கு விரிவான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன் மொழிகின்றேன். அதே போல தூதுவர் சேவை அதிகாரிகள் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்கான செலவில் 75 சதவீதத்தை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்வதோடு, 25 சதவீதத்தை ஊழியர்கள் தாங்கிக் கொள்ளவேண்டும். முதலாவது குழந்தையின் இரண்டாம் நிலைக் கல்விக்கான முழுச்செலவினையும் இரண்டாவது குழந்தையில் இருந்து 80 சதவீதத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கும் முன் மொழிகின்றேன். இதற்காக ரூபா 150 மில்லியன்களை ஒதுக்கீடு செய்கின்றேன்.

439. அரச துறை பதவியணியானது நவீன உலகில் முன் வைக்கப்படும் பல சவால்களை முகம் கொடுப்பதற்குத் தயார் இல்லை என்பதனை நான் காண்கின்றேன். ஆகவே, அரச துறை பதவியணியானது ஒவ்வொரு 5 வருட காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் என்பது எமது அரசாங்கத்தின் கருத்தாகும்.

440. கௌரவ சபாநாயகர் அவர்களே, மோட்டாரட்சைக்கில்களை கொள்வனவு செய்வதற்காக முற்பணம் செலுத்திய அனைத்து அரச ஊழியர்களுக்கும் அவை பெற்றுக் கொடுக்கப்படும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

441. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஜூலை வேலை பகிஷ்கரிப்பாளர்களுக்கு ஒரு முறைக் கொடுப்பனவாக ரூபா 250,000 ஐ வழங்குவதற்கு முன் மொழிகின்றேன்.

**நீதித்துறை**

442. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நீதி மன்றங்கள் பல வருடங்களாக காணப்படும் வழக்குகளினால் நிரம்பி வழிகின்றன. இந்நிலைமையானது அனைத்து நீதி மன்றங்களிலும் காணப்படுவதோடு, தீர்ப்புகளும் காலதாமதமாகின்றன. "காலதாமதமான நீதி, நிராகரிக்கப்பட்ட நீதியாகும்". நாங்கள் வர்த்தக நீதி மன்றங்களின் செயற்பாடுகளை துரிதப்படுத்தினோம். வர்த்தக நீதி மன்றங்கள் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பை செய்துள்ளது. வழக்குகளை துரிதப்படுத்தி ஆகக் குறைந்தது 6 மாதங்களுக்குள் தீர்ப்பினை வழங்குவதற்கு வர்த்தக நீதி மன்றங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த வகையில் செவிப்புல பதிவுகளைப் பயன்படுத்தி தன்னியக்க வழக்கு முகாமைத்ததுவ முறைமையினையும் நீதிமன்ற நிருவாகத்தினையும் மேம்படுத்துவதற்கும் அதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

443. கௌரவ சபாநாயகர் அவர்களே, தற்போது எமது நீதிமன்றங்கள் ஒரு நாளைக்கு இருமுறை கூடும் முறைமையை கொண்டதாக இல்லை. ஒருநாளைக்கு இருமுறை வழக்குகளை விசாரிக்கும் முறைமையை அறிமுகம் செய்வதன் மூலம் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக தீர்க்கலாம்.

444. தற்போது காணப்படும் சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை அடையாளம் காணும்படி நான் நீதியமைச்சை வேண்டிக்கொள்கின்றேன். சட்ட மறுசீராக்கங்களுக்காக ரூபா 500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்வருகின்றேன்.

445. நீதித்துறை பயிற்சி நிறுவகத்தின் இயலளவை கட்டியெழுப்புவதற்கு ரூபா 500 மில்லியன்களை முன்மொழிகின்றேன். இதன்மூலம் நீதித்துறை ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் சட்ட மா அதிபர் காரியாலயம், சட்ட வரைவுகள் மற்றும் அரச பகுப்பாய்வு திணைக்களம் என்பவற்றின் இயலளவு கட்டியெழுப்பப்படும்.

446. இலங்கை ஒரு மத்தியஸ்த மத்திய நிலையமாக அமைப்பதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றது என நான் நம்புகின்றேன். நான் அதிகாரிகளிடத்தில் வேண்டிக்கொள்வது என்னவென்றால் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி பிணக்கு தீர்வுகள் மற்றும் மத்தியஸ்த செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**ஓய்வூதிய நிதிகள்**

447. ஓய்வுபெற்ற தொழிற்படை அங்கத்தவர்கள் அவர்களின் சுறுசுறுப்பான வேலைக்காலத்தில் அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு செய்த பங்களிப்பை கருத்திற்கொண்டு அவர்களுடைய எஞ்சிய வாழ்க்கைக் காலத்தை மிகவும் சந்தோசமான சூழலில் கழிப்பதை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும். 2014 ஆம் ஆண்டின் போது நாட்டில் 168,900 அங்கத்தவர்களைக் கொண்ட 156 அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதிகள் மற்றும் பங்களிப்பு செய்யும் ஓய்வூதிய முறைகள் காணப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியின் போது இவற்றின் மொத்த சொத்துக்கள் மற்றும் முதலீட்டின் பெறுமதியானது முறையே ரூபா 151 பில்லியன் மற்றும் 115 பில்லியன்களாகும்.

448. தொழில் ஆணையாளரினால் முகாமை செய்யப்படும் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள் மற்றும் பங்களிப்புச் செய்யும் ஓய்வூதியத் திட்டங்களின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைகள் நலிவானதாகக் காணப்படுகின்றது. அதனால் இவ்வாறான நிதிகளின் அங்கத்தவர்களின் சேமிப்புக்களானது ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. ஆகவே, இத்தகைய நிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாக வெளிப்படையான நிருவாக தரங்களுடன்கூடிய புதிய மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் முறைமைகள் தேவைப்படுகின்றது. அதனால் இவ் ஓய்வூதிய நிதியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு இலங்கை ஒழுங்குபடுத்தல் நிறுவகமொன்றிற்கு சாட்ட விரும்புகின்றேன். ஓய்வூதிய நிதியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அவசியமான சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

449. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்தின் தற்பொழுது காணப்படும் நிதியளிக்கப்படாத ஓய்வூதிய முறைமையின் கீழ் ஓய்வூதியத்திற்கான செலவினம் கடந்த வருடங்களின் போது குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. அதிகரித்துவரும் முதியோர் சனத்தொகை மற்றும் அதனுடன் தொடர்பான அபிவிருத்திகள் இவ்விடயத்தினை மேலும் மோசமாக்கியுள்ளது. இதனால் தற்பொழுது காணப்படும் ஓய்வூதியத்தினை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியது முதன்மையானதாகும். எனவே தற்பொழுது காணப்படும் ஓய்வூதிய முறை தற்பொழுது சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 2016 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து புதிதாக அரசாங்கத்துறைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் ஊழியர்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுவதுடன் அவர்களது இளைப்பாறலின் போது ஓய்வூதியம் உறுதிப்படுத்தப்படும். இவ்வாறான பங்களிப்பு அரசாங்க ஓய்வூதிய நிதிக்கு அனுப்பிவைக்கப்படும்.

450. பிரதமர் அவரது பொருளாதார கொள்கைக் கூற்றில் குறிப்பிட்டதன் பிரகாரம் ஊழிய சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகிய இரண்டும் ஒன்றிணைக்கப்பட உள்ளது. அத்தகைய உபாயமொன்று அரசாங்கத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்படும் என்பதனை இப்பாராளுமன்றத்திற்கு நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

451. ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள் மாதமொன்றுக்கு 100 ரூபாவினை பங்களிப்பாக செலுத்துவதன் மூலம் அவர்களது சிறுவர்களுக்கு (18 வயது வரை) விபத்து, தீராத நோய் மற்றும் சத்திரசிகிச்சை என்பவற்றை உள்ளடக்கிய சுகாதார காப்புறுதியாக ஆகக்கூடியது 150,000 ரூபாவினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மகளிர் வலுவூட்டல்**

452. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது சனத்தொகையில் அரைவாசிக்கு அதிகமாகக் காணப்படும் பெண்கள் தேயிலை பறித்தல், ஆடை தைத்தல் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என எமது பொருளாதாரத்தின் பிரதான துறைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் எமது நாட்டிலுள்ள சட்டவாக்க சபைகளில் அவர்களது பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே எமது அரசாங்கம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக அதிகரிப்பதற்கு முன்மொழிந்துள்ளது.

**வியாபார செயன்முறை முகாமைத்துவத்தில் ஆற்றலினை அதிகரித்தல்**

453. கௌரவ சபாநாயகர் அவர்களே, வியாபாரச் செயல்முறை முகாமைத்துவத் துறையானது 2016 இல் ஏற்றுமதி வருமானத்தினை 1 மில்லியன் ஐ.அ. டொலராக கொண்டிருப்பதுடன் 2020 அளவில் 100,000 ஊழியர்களைக் கொண்டிருக்கும் அதேவேளை, ஏற்றுமதி வருமானமாக 5 பில்லியன் ஐ.அ. டொலரை கொண்டிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை உலக தரப்படுத்தலில் கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்தும் முதல் 25 ஆவது இடத்தில் இருப்பதாக எ.ரி கேர்ணி தரப்படுத்தியுள்ளார். கார்ட்னர் இலங்கையினை உலகில் முதல் 30 ஆவது இடத்திலிருப்பதாக தரப்படுத்தியுள்ளார்.

454. மேற்குறிப்பிட்ட இலக்கினை அடைவதற்கு எமது நாடு திறமையுள்ள தகவல் தொழில்நுட்ப தொழில்புரிநர்கள் பலரை வேண்டி நிற்கின்றது. இந்தவகையில் தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் உள்ளடங்கலாக சர்வதேச அங்கீகாரம் பெற்ற தகவல் தொழில்நுட்ப கல்வி நிலையங்களுக்கு நான் அழைப்பு விடுப்பதுடன் அவற்றுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன். இப் பல்கலைக்கழகங்கள் தனியார் அரசாங்க பங்களிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அரசாங்கம் காணி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை பங்களிப்பாக வழங்கும்.

455. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை தகவல் தொழில்நுட்ப, வியாபாரச் செயன்முறை முகாமைத்துவக் கைத்தொழிலினை தரம் குறைவாக செயற்படுத்துகின்றது என்பது பிழையானதாகும். எமது நாடு வியாபாரம் மற்றும் கைத்தொழிலில் உண்மையான ஆற்றலினை வெளிப்படுத்தகின்றது என்பதை நாம் உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும். எனவே, தகவல் தொழில்நுட்ப துறையில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாடு சர்வதேச பிரச்சாரம் மற்றும் முன்னோடி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் ரூபா 100 மில்லியனை அல்லது பிரச்சார நடவடிக்கைகளின் மொத்தச் செலவினத்தில் 50 சதவீதத்தினை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதேநேரம் SLSSCOM மேலும் 100 மில்லியனை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும். SLSSCOM அலுவலர்கள் மற்றும் அரசாங்க அலுவலர்களை உள்ளடக்கிய மேற்பார்வைக் குழுவொன்று இச்செயற்பாடுகளை கண்காணிப்பதில் ஈடுபடும்.

456. கௌரவ சபாநாயகர் அவர்களே, புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியான்மை இன்றி பொருளாதார வளர்ச்சி அடைய முடியாது. புத்தாக்க சிந்தனையுள்ள எமது இளம் பட்டதாரிகள் இலங்கையில் மூலதனத்தினைப் பெற்றுக்கொள்வது கடினமான விடயமாகும். அவர்களில்

பெரும்பாலானவர்களின் கருத்துக்கள் வர்த்தக ரீதியான தொழில்முயற்சிகளாக மாற்றப்படுவதில்லை. எனவே மூலதனப் பற்றாக்குறையினை நீக்குவதற்கும் பல்கலைக்கழக பட்டதாரிகள் தமது சொந்தக் கம்பனிகளை உருவாக்குவதற்கும் ஊக்கமளிப்பதற்காக ஆகக்குறைந்தது 1,000 பட்டதாரிகளுக்கு 3 வருடத்திற்குள் ஆளொருவரின் கண்டுபிடிப்பொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 1.5 மில்லியன் வரை கடன் வழங்குவதற்கு அரசாங்க வங்கிகளின் ஊடாக கடன் வழங்கும் திட்டமொன்றினை முன்னெடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இக்கடன் எவ்வித பிணையுமின்றி வியாபாரத் திட்டங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும். பல்கலைக்கழக பேராசிரியர்கள், கைத்தொழில் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களைக் கொண்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு சபையின் கீழ் தொழிற்படும் குழுவொன்றினால் இந்த வியாபாரத் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்படும். இக்கடனுக்கான உத்தரவாதம் அரசாங்கத்தினால் முழுமையாக வழங்கப்படும். இதன்மூலம் வருடமொன்றுக்கு 100 புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருக்கும்.

457. அரசாங்கம் சூழலியல் முறைமையொன்றினை ஊக்குவிப்பதற்கு அதிக கவனம் செலுத்தியுள்ளது. இதன்மூலம் உள்நாட்டில் தொழிற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகள், முன்னோடி முதலீட்டாளர்கள் குறித்த பட்டதாரிகளின் கம்பனிகளில் பங்காளர்களாக இருக்க முடியுமென்பதுடன் நிதி வழங்குவதன் மூலம் ஏனைய தொழில்முயற்சியாளர்களும், வழிகாட்டல்களை வழங்குவதற்காக இணைந்து கொள்பவர்களும் முதலீட்டுக்கான சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

458. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்தவகையில் அரசாங்கம் குறித்த தொழில் துறையில் பங்காளராக இருக்குமா என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்கு தனியார் துறைக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் அரசாங்கம் அக்கறை செலுத்திவருகின்றது.

**உத்தேச சட்டவாக்க திருத்தங்கள்**

459. கௌரவ சபாநாயகர் அவர்களே, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியினை அடைந்துகொள்வது வேகமும் வினைத்திறனும் அதேபோன்று சரியான தீர்மானம் எடுத்தலும் மிக அவசியமானதாகும். நீதியினை நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய முறையொன்றை தாபிப்பதற்கு தேவையான மறுசீரமைப்பினை ஏற்படுத்தும் வகையில் எமது சட்டங்களையும் சட்ட முறைமைகளையும் மீளாய்வு செய்வதற்கு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. ஏனெனில் பிணக்கு தீர்வு மற்றும் சட்ட ஏற்பாடுகள் ஒருவாரத்திலோ அல்லது மாதங்களிலோ அல்லது வருடங்களிலோ வரையறுக்க முடியாததாகும். எமது சட்ட முறைமைகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பார்ப்பதுடன் அதன் மூலம் தேசிய பொருளாதரத்திற்கு உத்வேகம் வழங்கி எமது அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள முடியும்.

460. எனது அமைச்சானது எமது பணிகளுடன் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்வதற்கான நடைமுறைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இதில் நாணயச் செலாவணிக் கட்டுப்பாடு, வரி விதிப்பனவு, சுங்கம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழிய நம்பிக்கை நிதி, காணி (கைமாற்றல் வரையறை) சட்டம், செயலாற்றுகை குறைந்த தொழில்முயற்சிகள் மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்களின் மீளெழுச்சி சட்டம், நலன்புரி நன்மைகள் சட்டம், அரசாங்க ஒப்பந்த சட்டம் என்பனவும் உள்ளடங்கும். தனியார் அரசாங்க பங்குடமை தொடர்பில் முறையான ஒழுங்குவிதிகள் எம்மிடம் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனவே தனியார் அரசாங்க பங்குடமைக்கான சிறந்த சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்படும் வரை இடைக்கால ஏற்பாடாக வழிகாட்டல்களை விநியோகிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் சர்வதேச மத்தியஸ்தங்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளுக்காக அரசாங்கம்

பெருமளவில் செலவு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. அவ்வாறான மத்தியஸ்த செயன்முறைகளுக்கான செலவினம் ரூபா 100 மில்லியனாகும். எனவே நீதி அமைச்சின் வழிகாட்டலுடன் சர்வதேச மத்தியஸ்த நிலையமொன்றினை இலங்கையில் தாபிப்பதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். தற்பொழுது இதனைத் தாபிப்பதற்கு தேவையான வளங்களை நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் சர்வதேச மத்தியஸ்த செயன்முறைகளை முடியுமான அளவு தவிர்க்குமாறு அரசாங்க நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

**போக்குவரத்துத் துறை**

461. கௌரவ சபாநாயகர் அவர்களே, போக்குவரத்துத் துறையானது மிக அவசரமான மறுசீரமைப்பினை வேண்டிநிற்கின்றது. எந்தவொரு வாகனப் போக்குவரத்து முகாமைத்துவமும் காணப்படாமையினால் எமது பாதைகள் வாகன நெறிசல்களினால் நிறைந்துள்ளன. இத்துறையின் அபிவிருத்தியுடன் எந்தவொரு ஒழுங்குபடுத்துகை முறைமையும் பின்பற்றப்படவில்லை.

462. முச்சக்கர வண்டிகள், வாடகை வாகனங்கள் மற்றும் பாடசாலை வேன்கள் மற்றும் பொருட்கள் ஏற்றும் வாகனங்கள் உள்ளடங்கலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கு சட்டவாக்க திருத்தங்களை அறிமுகப்படுத்தவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பாதை போக்குவரத்து**

463. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை போக்குவரத்து சபையானது பேரூந்து ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு ஆகக்குறைந்தது ரூபா 4.5 மில்லியனை செலவிட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், போக்குவரத்து சபையின் பழைய அடிச்சட்டங்கள் புதிய பேரூந்துகள் தயாரிப்புக்கான கழிவு இரும்பாக விற்கப்படுகிறது. எனவே புதிய பேரூந்துகளை எம்மால் தயாரிக்க முடியுமாயின், பேரூந்துகள் கொள்வனவுக்கான செலவினத்தினை சேமிக்க முடியும். எனவே உள்நாட்டுக் கம்பனிகளின் பங்களிப்புடன் தொழிற்படுவதற்கு முடியுமான பேரூந்துகளைத் தயாரிப்பதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டறியுமாறு நான் போக்குவரத்து சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன். இச்செயன்முறை மூலம் பேரூந்து ஒன்றுக்கு ஏறக்குறைய ரூபா 1.5 மில்லியனை சேமிக்க முடியும் என்பதுடன் வருடமொன்றுக்கு ரூபா 10,000 மில்லியனை சேமிக்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

464. அரசாங்க சொத்துக்கள் வீண்விரயம் செய்யப்படக்கூடாது என்ற வகையில், கேள்விப்பத்திர முறையின் மூலம் பயன்படுத்த முடியாத அனைத்து வாகனங்களையும் விற்பனை செய்யுமாறு அரச துறை நிறுவனங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

465. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு நாளும் முச்சக்கர வண்டிகளினால் ஏற்படும் விபத்துக்களை நாம் கேள்விப்படுகின்றோம். நாட்டில் மக்கள் போக்குவரத்திற்கு முச்சக்கர வண்டிகள் பங்களிப்புச் செலுத்துகின்றதாயினும், இவற்றை 280 இயந்திரக் கொள்ளளவுடைய நான்கு சக்கர வாகனங்களாக தரமுயர்த்துவதற்கு ஊக்கமளிக்க முடியுமென நான் உறுதியாக நம்புவதுடன் அதற்காக சலுகை அடிப்படையிலான கடன் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

466. கௌரவ சபாநாயகர் அவர்களே, சக்தியினை சேமிப்பதற்கும் சுற்றாடல் மாசடைவதனை குறைப்பதற்கும் முச்சக்கர வண்டிகளினை எரிபொருளிலிருந்து மின்சாரத்திற்கு மாற்றுமாறு அதன் உரிமையாளர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன். இந்நோக்கத்திற்காக கட்டண மாணி பொருத்தப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 150,000 சலுகைக் கடனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்யவும் நான் முன்மொழிகின்றேன்.

467. நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாகனத்திற்கும் மோட்டார் வாகன அடையாள குறியாக்கியினை பொருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இது மோட்டார் வாகனங்களை முகாமை செய்வதற்கு உதவுவதுடன் திருட்டிலிருந்து பாதுகாத்து பாதுகாப்பினை அதிகரிக்கின்றது. இதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**புகையிரத போக்குவரத்து**

468. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் 1,567 கி.மீ புகையிரதப் பாதைகள் காணப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்களவு நீளமான புகையிரதப் பாதைகளில் நாளொன்றுக்கு ஒருசில புகையிரதங்கள் மாத்திரமே பயணிக்கின்றன. எனவே புகையிரதப் பாதைகளை கட்டண அடிப்படையில் பொருட்கள் போக்குவரத்து மற்றும் சுற்றுலா நோக்கங்களுக்காக தனியார் துறையினர் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதற்காக நான் முன்மொழிகின்றேன். இதன்மூலம் பெறப்படும் வருமானம் புகையிரதப் பாதைகளை முகாமை செய்வதற்கும் அதன் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதற்கும் பயன்படுத்தப்படும். கௌரவ சபாநாயகர் அவர்களே, புகையிரதத் துறையானது மிகப் பெருமளவிலான ஆதனங்களைக் கொண்டிருந்த போதிலும் அவை முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை. இந்தவகையில், பயன்பாடு குறைந்த ஆதனங்களின் விளைவினை மேம்படுத்துவதற்கான உபாயங்களைக் கண்டறிவதற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்ட “புகையிரதத் அபிவிருத்தி பேரவை” ஒன்றினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

469. இலங்கை போக்குவரத்து சபை பழைய பேருந்து அடிச்சட்டங்களை மீளப் பயன்படுத்துவதற்கு பின்பற்றுகின்ற அதே வழிமுறையினை இலங்கை புகையிரதத் துறையும் தமது பழைய புகையிரதப் பெட்டிகளை பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன். பாவனையிலிருந்த அகற்றப்பட்ட புகையிரதப் பெட்டிகளை கழிவு இரும்பாக மாற்றுவதன் மூலம் வருடமொன்றுக்கு ரூபா 6,000 மில்லியன்களை சேமிக்க முடியும். மேலும் வெளிநாட்டுச் செலாவணியை இதன் மூலம் சேமிப்பதுடன் உள்நாட்டு புதிய கைத்தொழில் ஒன்றினையும் உருவாக்க முடியும்.

470. சனத்தொகை போக்கினைக் கவனத்திற் கொண்டு களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதை நவீன மயப்படுத்தப்படுவதோடு வேகம் மற்றும் ஆட்களின் கொள்வனவு அளவு அதிகரிக்கப்படுதல் வேண்டும். இதற்காக ரூபா 1,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

471. கௌரவ சபாநாயகர் அவர்களே, புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களில் “Park and Ride” வசதிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் நாட்டில் வாகனப் போக்குவரத்து சிறந்த முறையில் முகாமை செய்யப்படுவதுடன் பிரயாணிகள் சௌகரியமாகவும் குறைந்த செலவிலும் பயணிப்பதற்கான வசதிகள் செய்யப்படும். இதற்காக புகையிரதப் பாதைகள் மேம்பாடு மற்றும் ஜாஎல, அவிஸாவெல்ல, பாணந்துறை, கடவத்தை மற்றும் பிலியந்தலை போன்ற தெரிவுசெய்யப்பட்ட நகரங்களில் பேருந்துப் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சுக்கு ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். “Park and Ride” எண்ணக்கரு தாபிக்கப்பட்டதுடன் நகரத்திற்குள் வருகின்ற வாகனங்கள் குறைந்தது 4 பயணிகளை கொண்டிருக்க வேண்டும் எனக் கேட்கப்படுவதுடன் அவ்வாறல்லாத வாகனங்களுக்கு கட்டணம் அறவிடப்படும். இச்செயன் முறையானது 2016 செப்தெம்பர் இறுதியளவில் பயன்பாட்டுக்கு வரும்.

472. பொருட்கள் போக்குவரத்தினை புகையிரதத்தின் ஊடாக மேற்கொள்வதன் மூலம் போக்குவரத்துச் செலவினை குறைப்பதற்கு நாம் ஊக்குவிப்புகளை வழங்குகின்றோம்.

473. கௌரவ சபாநாயகர் அவர்களே, யாழ்ப்பாணம் புகையிரதப் பாதை, மாகோ மற்றும் வவுனியா பாதைகளின் வேகத்தினை மேம்படுத்துவதற்கும் அதற்காக ரூபா 2,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

474. **மொனோரைல்** - நீர்கொழும்பு, கட்டுநாயக்க மற்றும் கொழும்பு, கொழும்பு மற்றும் கடவத்தை நகரங்களை இணைக்கும் மொனோரைல் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கு தனியார் துறை பங்காளர்களுக்கு அரசாங்கத்துறை ஊக்குவிப்பு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**நீர் மார்க்கங்களில் போக்குவரத்து**

475. கௌரவ சபாநாயகர் அவர்களே, விசேடமாக நீர் மார்க்கங்களின் கிடைப்பனவுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் இந்த வளங்களைப் பயன்படுத்தி போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தனியார் துறையினருக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

476. சுற்றுலாத் துறைக்கு பல்வகைப்படுத்தல் மற்றும் மற்றுமொரு நடவடிக்கையாக மேலதிக ஏற்பாடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நீர்மார்க்கங்களை அடிப்படையாகக் கொண்ட அதிவேகப்படகு நீர்ச்சருக்கு விளையாட்டுத் தேர்வுகளை வழங்குவதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுவர். அவ்வாறான படகுகள் கொழும்பு – சிலாபம் மற்றும் பராக்கிரம சமுத்திரத்தில் தொழிற்படுத்த முடியும்.

477. நாட்டில் நீர்வழிப்போக்குவரத்தினை ஊக்குவிப்பதற்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**கப்பற்தொழில்**

478. கௌரவ சபாநாயகர் அவர்களே, கிழக்கிலிருந்து மேற்கிற்கான கப்பற் போக்குவரத்து பாதையில் மிக அண்மையிலிருக்கின்ற நாடு என்ற வகையில் இலங்கையின் இட அமைவுக்கு முக்கியத்துவம் வழங்கி சமுத்திர முக்கியத்துவம் வாய்ந்த மையமொன்றினை உருவாக்குவது முக்கியமானதாகும்.

479. உலக பெறுமதி தொடரினை நாம் வளர்க்க வேண்டியது முக்கியம் என்பதுடன் சமுத்திர மையமானது பெருமளவிலான வாய்ப்புகளை வழங்குகின்றது. இந்தவகையில் நாட்டிற்குள் கப்பல் உரிமையாளர்களினை கவர்வதற்கான சூழ்நிலையினை உருவாக்குவதுடன் அதன்மூலம் சமுத்திரப் பொருளாதாரமொன்றினை உருவாக்குவதற்கு முடியும்.

480. கப்பற் போக்குவரத்து மையமொன்றினை உருவாக்குவதற்கு கப்பற் தொழிற்துறை மற்றும் கொள்கலன் அல்லாத தொழிற்துறைகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும். இந்தவகையில் 2025 இல் உலகில் முதல் 20 ஆவது கப்பற் போக்குவரத்து துறைமுகமாக மாறுவதற்கு தேவையான உபாயங்களை உருவாக்குவது அவசியமாகும்.

481. கப்பற் தள தொழிலாளர்கள் கப்பல் உரிமையாளர்களில் தங்கியிருக்க வேண்டியதுடன் பொது முதலீட்டின் மூலம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டினை மீளப் பெற்றுக் கொள்வதற்கு இவ் வியாபாரத்தினை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. கப்பல் நிதியளிப்பு, திருத்த வேலை, கப்பல் பதிவு, குதப்படுத்தல், மத்தியஸ்தம் மற்றும் அதனோடு தொடர்பான சேவைகள் புதிய சட்டங்களின் மூலம் நிறுவகிக்கப்படுவதுடன் அவற்றுக்காக அரசாங்கம் ஊக்குவிப்பு வழங்கும். இத்தொழிற் துறைக்கான போட்டித் தன்மை பிராந்தியத்தில் அதிகரித்துள்ளது.

482. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை கடற்படையானது கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஆற்றலினை கொண்டுள்ளது. இந்தவகையில் இலங்கைக் கடற்படையுடன் இணைந்த தொழில்முயற்சிகளுக்கு தனியார் துறையினருக்கு ஊக்கமளிக்க விரும்புகின்றேன்.

**பொருட்கொள்வனவு**

483. இலங்கையினை தொழில் மையமொன்றாக பயன்படுத்துவதற்கான சேவைகளை விரிவாக்குவதற்கு வினைத்திறன், மூலதனம், அறிவு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச கப்பற் சரக்கேற்றல் கம்பனிகள் மீதான வரையறைகளை அரசாங்கம் நீக்குவதுடன் அதன்மூலம் சர்வதேச வர்த்தகத்தின் ஊடாக உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு புதிய மூலதனம், வியாபாரம் மற்றும் தொழில்வாய்ப்பு என்பவற்றினை உருவாக்க முடியும். கப்பற் சரக்கேற்றல் மையத்திற்கான உரித்துரைக்கப்பட்ட பிரதேசங்களை குறிப்பிடுகின்ற ஒழுங்கு விதிகள் விநியோகிக்கப்படுவதுடன் இப்பிரதேசங்கள் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களுக்கு வெளியே அமைந்திருக்கும்

**சரக்கு பொருள் ஏற்றல்**

484. சர்வதேச சரக்கேற்றல் தொழிற்துறையானது வெளிநாட்டு பங்களிப்புடன் ஆகக்கூடியது 75 சதவீதமாகவும், ஆகக்குறைந்தது 5 மில்லியன் ஐ.அ. டொலராகவும் முதலீடு காணப்படும் வகையில் சுதந்திர மயப்படுத்தப்படும். ஆயினும் இக்கம்பனிகள் ஆகக்குறைந்தது 90 சதவீத உள்நாட்டு வேலைவாய்ப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும். சரக்கேற்றல் தொழிலினை துறைமுகங்களுக்கு விரிவாக்குவதற்கு நான் முன்மொழிவதுடன் இலங்கைத் துறைமுக அதிகார சபையுடன் தொழிற்படுதலும் வேண்டும். கப்பற் தொழில் தொடர்பான நடவடிக்கைகளில் திறன்விருத்தி மற்றும் பயிற்சியினை ஊக்குவிப்பதற்கு இத்துறையில் பயிற்சி மற்றும் உபகரணங்களுக்கு வரிச்சலுகை வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

485. கௌரவ சபாநாயகர் அவர்களே, இந்து சமுத்திர அலுவல்கள் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

486. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை துறைமுக அதிகார சபை வளவுக்குள் நுழைகின்ற கொள்கலன் வாகனங்கள் பல்வேறு நடைமுறைகளுக்கு உட்படுகின்றன என்பது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. வாகன நகர்வு செயற்பாடுகளை எவ்விதக் கட்டுப்பாடின்றி திறந்துவிடுவதுடன் வாகனமொன்றுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 100,000 ஆக அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**கைத்தொழிற் பேட்டைகள்**

487. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் 27 கைத்தொழில் பேட்டைகள் காணப்படுகின்றன. இவற்றின் வசதிகள் தரமுயர்த்தப்படாததுடன் கைத்தொழிற் சாலைகளின் செயற்பாடுகள் அதிகரிக்குமளவு தரமுயர்த்தப்படுதல் வேண்டும். எனவே, இந்த தொழிற்பேட்டைகளை தரமுயர்த்தல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளிற்கு தேவையான நடவடிக்கைகளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். இதற்கு மேலதிகமாக ஹம்பாந்தோட்டை, ரைகம், மகா ஓயா மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் கைத்தொழில் அபிவிருத்தி வலயங்களை நாம் தாபிப்பதுடன் கண்டியில் தகவல் மற்றும் விவசாய தொழில்நுட்ப வலயங்களை உருவாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இக்கைத்தொழில் பேட்டைகளில் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்பார்டுகளிற்கு ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**நீர் வழங்கல்**

488. கௌரவ சபாநாயகர் அவர்களே, குழாய்நீர் வசதி நாட்டில் ஏறக்குறைய 44 சதவீதமானோருக்கு மாத்திரம் கிடைக்கப்பெறுகின்றது. 2020 அளவில் குழாய்நீர் கிடைப்பனவினை 60 சதவீதத்தினால் அதிகரிப்பது எமது கொள்கையாகும். அரசாங்கம் நாடுமுழுவதிலும் ரூபா 94

பில்லியன் செலவில் 29 பாரியளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்களினை மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை, ஐந்து பிரதான கழிவுநீரகற்றல் கருத்திட்டங்கள் இத்துறை தொடர்பான வசதிகளை மேம்படுத்துவதற்காக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

489. நாட்டில் அடையாளங் காணப்படாத சிறுநீரக நோய் பரம்பலை தடுப்பதற்கான துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக குழாய் நீர் விநியோகப்பட முடியாத பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் (RO) வழங்கப்படும்.

**பாதை வலையமைப்பு**

490. கௌரவ பிரதமர் அவர்கள் மத்திய அதிவேகப்பாதை நிர்மாணத்திற்கான அடிக்கலலை இவ்வருட ஆரம்பத்தில் நாட்டினார். இப்பாதையின் நான்க பகுதிகளினதும் பணிகள் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்படுவதுடன் ஒரு பகுதிக்கான ஒப்பந்தம் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

491. கௌரவ சபாநாயகர் அவர்களே, ருவன்புர அதிவேகப் பாதை விரிவாக்கல், பாணந்துரை வரைக்குமான கரையோரப் பாதை விரிவாக்கல், தம்புள்ளை, பொலநறுவை, முல்லைதீவு, யாழ்ப்பாணம் இணைப்பு அதிவேகப் பாதை நிர்மாணம், பாமன்கடை, ரத்மலான பாதை விரிவாக்கல், களனி ஆற்றுக்கான புதிய பால நிர்மாணம், 25 பாலங்கள் மீள் கட்டமைப்பு மற்றும் 3 மேம்பாலங்கள் உள்ளடங்கலாக பாதை வலையமைப்பு விரிவாக்கலுக்கு ரூபா 15,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

492. நிர்மாணித்து தொழிற்படுத்தி மாற்றல் BOT அடிப்படையில் கொட்டா பாதையிலிருந்து கடுவல வரைக்குமான மேலுயர்ந்த பாதையினை நிர்மாணிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்காக அரசாங்கப் பங்களிப்பாக ரூபா 10,000 மில்லியனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

493. கொழும்பு கோட்டைக்கான அடைவு வழியினை மேம்படுத்துவதற்கு களனிப் பாலத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான புதிய கோட்டை நுளைவுப் பாதை நிர்மாணிக்கப்படும். அதற்காக 2 வருடத்திற்குள் ரூபா 4,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

**வடகிழக்கு அதிவேகப் பாதையின் மூலம் நாட்டினை இணைத்தல்**

494. கௌரவ சபாநாயகர் அவர்களே, கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய நிலையங்களை இணைக்கும் மத்திய அதிவேகப் பாதை பணிகளை அரசாங்கம் ஆரம்பிக்க உள்ளது என்பதனை நீங்கள் நன்கறிவீர்கள். இந்த அதிவேகப் பாதையானது அரசாங்க தனியார் பங்களிப்பின் ஊடாக தம்புள்ளை, பொலநறுவை, முல்லைதீவு மற்றும் யாழ்ப்பாணத்தினை இணைக்கும் வகையில் மேலும் விரிவாக்கப்படும்.

495. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டின் வளர்ச்சியானது ஒருங்கிணைந்த நடைமுறையொன்றினை வேண்டிநிற்கின்றது. உத்தேச அதிவேகப் பாதை நெடுகிலும் கைத்தொழிற் பேட்டைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம் அதிவேகப் பாதைகளுக்கான பெறுமதி சேர்ப்பு இடம்பெறும். இந்தவகையில் அதிவேகப் பாதைகளில் மருந்துப் பொருட் கம்பனிகள் உள்ளடங்கலான உயிரியல் தொழில்நுட்ப பேட்டைகள், உற்பத்தி வடிவமைப்பு பொறியியல் தயாரிப்பு, தகவல் தொழில்நுட்ப பூங்கா மற்றும் விவசாய, நீரியல் வளங்கள் பூங்கா என்பவற்றினை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

496. அதிவேகப் பாதைக்கான கட்டணம் மாத்திரம் அவற்றினை வர்த்தக ரீதியில் வலுவானதாக மாற்றமாட்டாது. அதற்கு பின்புலமொன்று வழங்கப்படுதல் வேண்டும். அல்லது குறிப்பிடத்தக்க பொருளாதார செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும். அதிவேகப் பாதையென்பது கொழும்பிலிருந்து கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான பாதை என்பதல்ல மாற்றமாக அதிவேகப் பாதைகள் என்பன உத்தேச வர்த்தக மையங்களுடன் இணைந்ததாக நோக்கப்படுதல் வேண்டும்.

உண்மையில், இந்த அதிவேகப் பாதைகள் தொழில்முயற்சி மற்றும் புத்தாக்கத்திற்கான அதிவேகப் பாதைகளாக காணப்படும்

497. உத்தேசக் கம்பனிகளின் பிரதான மூலதனமாக 2016 இல் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். உட்கட்டமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கான உத்தரவாதங்களை வழங்குவதற்கு முன்மொழியப்படுவதுடன் அதிகார சபையானது உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் கடன் நிதி சேகரிப்பில் ஈடுபடமுடியும்.

**நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள்**

498. கௌரவ சபாநாயகர் அவர்களே, உணவில் தன்னிறைவினை உறுதிப்படுத்துவதற்கான எமது கொள்கையில் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவம் என்பன முக்கியத்தும் பெறுவதனை நாம் நன்கு அறிகிறோம். இந்தவகையில், சிறியளவிலான குளங்கள் மற்றும் கால்வாய்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000 மில்லியனுக்கு மேலதிகமாக யான் ஓயா நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினை துரிதப்படுத்துவதற்காக மேலும் ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மின்வலு மற்றும் சக்தி**

499. கௌரவ சபாநாயகர் அவர்களே, மின்சாரத் துறையானது பொருளாதாரத்தில் பாரியளவு முதலீட்டினை வேண்டிநிற்கின்ற துறையாக தொடர்ந்தும் இருந்துவருகின்றது. எனவே மின்னுற்பத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடுகள் எவ்வித வரையறைகளுமின்றி தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

500. கௌரவ சபாநாயகர் அவர்களே, பாரம்பரியமற்ற புதுப்பிக்கக்கூடிய சக்தி கருத்திட்டங்களான காற்றாழை மற்றும் சூரிய சக்தி மின்சாரம் என்பவற்றின் அதிகூடிய ஆற்றலுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் அவ்வாறான வளங்களை பயன்படுத்தி உள்நாட்டு தேவைகளை பூர்த்திசெய்வதுடன் மேலதிகமானதை ஏற்றுமதி செய்யும் வகையில் தனியார் துறை பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மின்சார சபையினைக் கேட்டுக் கொள்கின்றேன். இதன்மூலம் எமது நாடு எண்ணெய்யில் தங்கியிருக்கும் நிலையினைக் குறைப்பதற்கு முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

501. பாரம்பரியமற்ற புதுப்பிக்கக்கூடிய சக்தி கருத்திட்டங்களுக்காக விநியோகிக்கப்பட்ட விருப்புக் கடிதங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஒரு வருடத்திற்கு மேல் பயன்படுத்தப்படாதிருக்குமாயின் அவை தொழிற்பாட்டிலிருந்து நிறுத்தப்படுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மாநகர மற்றும் நகர அபிவிருத்தி**

502. கௌரவ சபாநாயகர் அவர்களே, நகர மற்றும் நகரைச் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான முறையான திட்டமிடல் காணப்படாமை இந்நாட்டில் மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. இப்பின்னணியில் கௌரவ பிரதம மந்திரி மேல் மாகாணத்தினை மாநாகரமாக மாற்றுகின்ற எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தவகையில், அரசாங்கம் மாநாகர அபிவிருத்தி தொடர்பான விரிவான சட்டவாக்கமொன்றினை அறிமுகப்படுத்த உள்ளது. இந்தவகையில் மாநாகர கருத்திட்டங்களுக்கான பிரதான திட்டங்கள் 2016 இல் பூர்த்தியாகும் வரையில் திட்டமிடப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான தரத் திட்டங்கள் தனியார் மற்றும் அரசாங்க பங்களிப்பு அடிப்படையில் செயற்படுத்தப்படும். அத்தகைய நகர் சார்ந்த அபிவிருத்தி, நகர திண்மக்கழிவு முகாமைத்துவம் போன்ற கருத்திட்டங்களுக்காக ரூபா 10,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**நகர அபிவிருத்தி**

503. மேலும், சுத்தமான குடிநீர் கிடைப்பனவினை மேம்படுத்தல், கழிவு நீரகற்றல் ஏற்பாடுகள் மற்றும் நகர அபிவிருத்தி என்பவற்றுக்காக நகர வடிவமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சுக்கு ரூபா 2,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**தெற்கு அபிவிருத்தி**

504. கௌரவ சபாநாயகர் அவர்களே, தென் மாகாணத்திலிருந்து பொருளாதாரத்திற்கான பங்களிப்பு ஏறக்குறைய 15 சதவீதம் மாத்திரமாகும். எனினும் அப்பிரதேசத்தில் முன்னேற்றப்பட வேண்டிய பல விடயங்கள் காணப்படுகின்றன என நான் நம்புகின்றேன். அந்தவகையில் துறைமுகம் மற்றும் விமான நிலைய ஒத்துழைப்பு சேவைகள், விவசாய அடிப்படை கைத்தொழில்கள், விவசாய ஒத்துழைப்பு சேவைகள் மேம்பாடு, நகர வசதி மேம்பாடு, கிராமிய துப்பரவேற்பாட்டு வசதிகள் போன்ற பிரதான துறைகள் தொடர்பில் தெற்கு அபிவிருத்திக்கான முயற்சிகள் கவனத்திற்கொள்ளப்படும். எனவே, ரூபா 1,000 மில்லியனை இதற்காக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**வடமேல் அபிவிருத்தி**

505. கௌரவ சபாநாயகர் அவர்களே, வடமேல் மாகாணத்தில் குடிநீர் கருத்திட்டங்கள், நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தல், மீன்பிடி அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 2,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**புபுதமு பொலநறுவை**

506. கௌரவ சபாநாயகர் அவர்களே, புபுதமு பொலநறுவைக் கருத்திட்டமானது அதிமேதகு சனாதிபதியின் அபிவிருத்தி முன்னெடுப்பொன்றாகும். இது அனைத்து துறைகளிலும் புத்துணர்ச்சியூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டிருக்கின்றது. சுத்தமான நீர் கிடைப்பனவினை விரிவாக்குதல், சுகாதார நல வசதிகளை விருத்தி செய்தல், குளங்களைப் புனரமைத்தல், பாடசாலை உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு மற்றும் சிறந்த விளையாட்டு வசதிகள் போன்ற பல்வேறு விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. கதுருவெல, வைத்தியசாலை நகரம், புதிய நகரம் மற்றும் பொலநறுவை புராதன நகரம் ஆகிய பிரதேசங்களை ஒன்றிணைத்து நவீன நகரமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மின்னேரியாவில் உத்தேச சிறுநீரக வைத்தியசாலைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 2,000 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 10,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**வடக்கு, கிழக்கு அபிவிருத்தி**

507. கௌரவ சபாநாயகர் அவர்களே, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் துயரங்கள் தொடர்பில் எமது அரசாங்கம் மிகவும் கரிசனை கொண்டுள்ளது. கடந்த பல வருடங்களாக அவர்கள் தமது அடிப்படைத் தேவைகளை முன்னேற்றித் தருமாறு கேட்டுவருகின்றனர். அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக குறிப்பிடத்தக்க நிதியினை ஒதுக்கீடு செய்துள்ள அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கில் புனரமைப்பு பணிகளுக்காக இருதரப்பு மற்றும் பல்தரப்பு முகவர்களிடமிருந்து ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்காக 2016 இல் அபிவிருத்திப் பங்காளர்களின் மாநாடொன்றினை நடாத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

508. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோம். எனவே உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக நாம் எடுப்பதுடன் ஏற்கனவே மீள் குடியேறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளையும் அடிப்படைத் தேவைகளையும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக முறையான துப்பரவேற்பாட்டு வசதிகள், சுத்தமான குடிநீர் மற்றும் மின்சாரம் என்பவற்றுடன் மன்னார் மற்றும் முல்லைதீவு மாவட்டங்களில் 20,000 வீடுகளை நிர்மாணிப்போம். நெடுந்தீவு இறங்குதுறை நிர்மாணம், வேலணை – ஊர்காவற்துறை பாதை புனரமைப்பு, சிகிச்சை கழிவு முகாமைத்துவ முறைமையினை தாபித்தல் போன்றன இடம்பெறும். இதற்காக ரூபா 14,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

509. ஒட்டு சுட்டானில் வாழ்வாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக சிவப்புக் களி தொழிற்சாலையொன்றினை தனியார் அரசாங்க பங்குபற்றுதலுடன் ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**தோட்ட உட்கட்டமைப்பு வசதி**

510. கௌரவ சபாநாயகர் அவர்களே, 160,000 இற்கு மேற்பட்ட பெருந்தோட்ட தொழிலாளர் குடும்பங்கள் இன்னும் பழைய லயன் அறைகளில் வாழ்ந்து வருகின்றனர். எமது அரசாங்கம் பெருந்தோட்ட சமூகத்திற்காக குறைந்த செலவில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதுடன் அதற்காக ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்தல்**

511. கௌரவ சபாநாயகர் அவர்களே, உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் பயன்பாட்டிற்காக ரூபா 1,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**விஷேட கருத்திட்டங்கள்**

512. கௌரவ சபாநாயகர் அவர்களே, அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட விஷேட ஒப்படைப்புக்களுக்கான ரூபா 150 மில்லியன்களை நான் ஒதுக்கீடு செய்கின்றேன்.

513. கௌரவ சபாநாயகர் அவர்களே, விஷேடமாக இவ்வரசாங்கமானது தேசிய ஒருமித்த ஒரு அரசாங்கமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஆட்சிப் பொறிமுறையில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்பதே மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினதும் மற்றும் கௌரவ பிரதமர் அவர்களினதும் நோக்காகும். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ரூபா 15 மில்லியன்கள் வீதம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை அதிகரிப்பதற்கு அவர்களும் மிக ஆர்வமாக உள்ளனர். எனவே, இந்நோக்கத்திற்காக ரூபா 3,375 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன் மொழிகின்றேன்.

**கலை மற்றும் கலாச்சாரம்**

514. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாம் எமது எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி எமது கலாச்சார மற்றும் புராதன இடங்களைப் பாதுகாப்பதில் எம்மை அர்ப்பணித்திருக்கின்றோம். அதே வேளை, எமது அரசாங்கமும் உள்நாட்டுக் கலைகள் மற்றும் கைவினைப் பொருட்களை

மேம்படுத்துவதற்கும், அத்திறமைகளை சர்வதேச ரீதியாக காட்சிப்படுத்துவதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

515. பாடகர்கள், நடிகர்கள், போன்ற எமது வாழ்க்கைக்கு மகிழ்ச்சியையும், வர்ணத்தையும் அள்ளித் தருவோர் விஷேடமாக முதுமை அடைந்ததன் பின்னர் மன அழுத்த நிலைமைகளுக்கு உள்ளாவதனை நானும் உணர்ந்திருக்கின்றேன். எமது அரசாங்கம் அவ்வாறான கலைஞர்களுக்காக தனியார் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றினை ஸ்தாபிக்க உள்ளதோடு, இந்நோக்கத்திற்காக ரூபா 15 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கும் முன் மொழிகின்றேன்.

**விளையாட்டுத் துறை**

516. கௌரவ சபாநாயகர் அவர்களே, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் எமது செயலாற்றுகையானது படிப்படியாக சீரழிந்து போயுள்ளது. இன்று, எமது விளையாட்டுத் துறை தொடர்பான நிறுவனங்கள் மற்றும், கழகங்களுக்குள், அரசியல் ஒழுகுவதனால் செயற்பாட்டினை இழந்துள்ளன. எனவே, எமது நாட்டின் விளையாட்டு அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள இந்நிலைமையினை மாற்றுவதில் நாம் எம்மை அர்ப்பணித்திருக்கின்றோம்.

517. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு சிறிய ஒரு நாடாக விளங்கினாலும் கூட, எமக்கு விளையாட்டுக்களில் மகத்தான திறமைகளைக் கொண்ட ஆண்களும், பெண்களும் இருக்கின்றனர். ஆயினும், இளம் வயதினை உடைய திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் இனங் காணபதற்கான பொருத்தமான ஒரு பொறிமுறை இல்லாமையானது எமது துரதிர்ஷ்டமாகும். இவ்வாறான் திறன்களைக் கண்காணிப்பதற்கும், இனங்காண்பதற்கும் ஒரு முறைமையினை அறிமுகப்படுத்தல் வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் சர்வதேச விளையாட்டுக்களில் எமது தேசிய கொடியை உயர்த்தக் கூடிய விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் உருவாக்கக் கூடியதாக இருக்கும். நான் தொடர்புடைய குறிப்பிட்ட பங்கேற்பாளர்களிடம் ஒன்றிணைந்து வருமாறும், இம்மகத்தான பணியை நோக்கி தமது பணியைத் தொடருமாறும் வேண்டிக் கொள்கின்றேன். இம்முயற்சியில், சகல தேசிய பாதை, மற்றும் விளையாட்டுக் களங்கள், மற்றும் சில அங்கீகரிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒரு சில ஏனைய பரப்புகளின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுனர்களுக்கான மொத்தச் செலவீனமும் அரசாங்கத்தினால் ஏற்கப்படும்.

518. பின் தங்கிய பிரதேசங்கள் பயிற்சி உள்ளடங்களாக பயிற்சி வசதிகளை ஸ்தாபித்துக் கொடுக்குமாறு தனியார் துறையை ஊக்குவிப்பதற்கு அரச காணியினையும், சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு முன் மொழிகின்றேன்.

519. விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கு கொடுக்கப்பட்ட எமது அர்ப்பணிப்புக்களுடன், எமது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைப் பயிற்றுவிப்பதற்கும் சர்வதேச தர நியமங்களுக்கு ஏற்ப தமது திறன்களை அடைவதற்கும் வெளிநாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு வெளிநாட்டு அரசாங்கங்களுடன் கலந்துரையாடுமாறு முன்மொழிகின்றேன்.

520. எனவே, விளையாட்டுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரிகளை நீக்கும் அதே வேளை, மேலே கூறப்பட்ட பிரேரணைகளுக்காக ரூபா 1,000 மில்லியன்களை ஒதுக்கீடு செய்கின்றேன்.

**வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்**

521. கௌரவ சபாநாயகர் அவர்களே, நாம் எதிர்வரும் 2 வருடங்களில் பொருளாதாரத்தில் வேலை அதிகரிப்பு ஒன்றினை மேற்கொள்ளவிருக்கின்றோம். அதே போல, எமது திறன்களற்ற மற்றும் அரைத் திறன்களை உடைய புலம் பெயரும் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்தது 300

ஐக்கிய அமெரிக்க டொலர்களை குறைந்த மாதாந்த ஊதியமாகப் பெறுவதற்கு எமது ஊழியர்களுக்கு கேள்வியுள்ள வெளிநாடுகளுடன் கலந்துரையாடுமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தை ஊக்குவிக்கின்றேன்.

522. இலங்கையின் தொழிலாளர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான கேள்வி அந்த நாடுகளில் காணப்படுவதை நான் உணர்ந்திருக்கும் அதே வேளை, திறன் குறைந்த மற்றும் திறனுள்ள தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக அக்கேள்வியில் 20 சதவீதத்தினை மாத்திரம் பூர்த்தி செய்யக் கூடிய நிலையில் இருக்கின்றோம். எனவே, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இவ்வாறான சிறந்த சம்பளங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தமது திறன்களை தரமுயர்த்துவதற்காகத் தொழில்சார் பயிற்சி வசதியளிப்புக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு இளைஞர்களை ஊக்குவிக்கின்றேன்.

523. அதே வேளை, தொழிலாளர் ஒருவருக்கு ரூபா 15,000 ஆக இலங்கை வேலை வாய்ப்புப் பணியகத்தினால் சேகரிக்கப்படும் தொழிலாளி ஒருவருக்கான முகவர் கட்டணத்தினை அதிகரிப்பதற்கும் முன் மொழிகின்றேன். சகல புலம் பெயரும் தொழிலாளர்களும், நாட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் அவர்களைத் தொடர்பு கொள்ள வேண்டிய தகவல்களுடன் வங்கிக் கணக்கு, காப்புறுதி உள்ளடக்கம் ஆகியனவற்றினையும் செயன்முறைப்படுத்த வேண்டும்.

524. புலம் பெயரும் தொழிலாளர்களுக்கு காப்புறுதி செய்வதற்கு வழங்கும் காப்புறுதி முகவர் நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கு வெளிப்படையான, போட்டி விலைமனுச் செயன்முறையொன்றையும் ஏற்குமாறு நான் முன் மொழிகின்றேன்.

525. இந்நாட்டிற்கு மத்திய கிழக்கிற்குப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பங்களிப்பிற்கு மரியாதை செலுத்தும் நோக்குடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தினை கையாள்வதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் “வர்த்தக ரீதியான முக்கியமான ஆட்கள்” என்ற மரியாதையுடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தினை கையாள்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இரு குடி அகழ்வு / குடி வரவு கரும பீடங்களை செயற்படுத்துமாறு நான் முன் மொழிகின்றேன்.

**நிலைபேறான வளர்ச்சிக்கான உறுதியானதொரு ஒழுங்கு முறைச் சட்டகம்**

526. கௌரவ சபாநாயகர் அவர்களே, வர்த்தகத்தினை மேம்படுத்துவதில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படும் அதே வேளை, நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் மற்றும் தரக் குறைவான பொருட்களிலிருந்தும், சேவைகளிலிருந்தும் உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களையும், மற்றும் நுகர்வோரையும் பாதுகாப்பதற்கான தேவையை நாம் கவனத்தில் கொண்டிருக்கின்றோம் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

527. கௌரவ சபாநாயகர் அவர்களே, இறக்குமதி செய்யப்பட்ட அழகு சாதனப் பொருட்கள், இலங்கையில் தயாரிக்கப்படும் அல்லது சந்தைப்படுத்தப்படும் அழகு சாதனப் பொருட்கள் தொடர்பாக தற்போது நாட்டில் எந்த ஒரு நிறுவனமும் ஒழுங்குமுறைகளை மேற்கொள்வதில்லை. எனவே, பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் அல்லது நாட்டிலுள்ள நேர்மையற்ற தயாரிப்பாளர்களினால் தயாரிக்கப்படும் அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்துவதில் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். எனவே, அழகு சாதனப் பொருட்களையும், மற்றும் சாதனங்களையும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு சட்டவாக்கம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நான் முன் மொழிகின்றேன். இடைக்காலத்தில், ஆயுர்வேத அழகு சாதனங்கள் உள்ளடங்கலாக சகல அழகு சாதனப் பொருட்களுக்கும் ஆகக் குறைந்தது ஆங்கில மொழியிலாவது சர்வதேச அழகு சாதன உள்ளீடுகளின் கலைச் சொற்களுக்கேற்ப

(Nomenclature Cosmetics Ingrdients (INCI) பயன்படுத்தும் உள்ளீடுகளின் விபரத்தை மேலுறைகளில் அச்சிடுமாறு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை வர்த்தமாணி அறிவித்தலை வெளியிட வேண்டும்.

528. பால் மா, அழகு சாதன உற்பத்திப் பொருட்கள், சோப்பு மற்றும் சாம்பு போன்ற இன்னோரன்ன இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் நோக்குடன், தொழில்நுட்பப் பதவியணியினரை அதிகரிப்பதன் மூலம் இலங்கைத் தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆராய்ச்சி ஆய்வு கூடங்கள் பலப்படுத்தப்படும். ஆய்வு கூட வசதியளிப்புக்களுக்காக நான் ரூபா 200 மில்லியன்களை ஒதுக்கீடு செய்கின்றேன்.

529. கௌரவ சபாநாயகர் அவர்களே, நியாயமற்ற ஏகபோகங்கள், குவிப்புக்கள், பிரத்தியேக தொடர்புகள், விலை நிர்ணயங்கள் போன்ற வர்த்தகங்களின் போட்டித் தன்மைகளுக்கு எதிரான நடத்தைகளுக்கான சந்தையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான போட்டி அதிகார சபையொன்றினை ஸ்தாபிப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

**இலங்கையின் செயற்கைக் கோள் விண்வெளி**

530. கௌரவ சபாநாயகர் அவர்களே, இது வரை பயன்படுத்தப்படாத எமது செயற்கைக் கோள் விண்வெளியானது, வெளிப்படையான செயன்முறையொன்றின் ஊடாக சர்வதேச ரீதியாக ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்.

**ஆடைகளுக்கான சிறப்பு விற்பனை நிலையம்**

531. கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கைக்கு உரித்தான ஆடைக் கைத்தொழிலானது வர்த்தக இலச்சினையொன்றுடனான கோதா ஒன்றை மேற்கொள்வதன் மூலம் ஒரு சில கம்பனிகளுடன் இலச்சினையுடனான வர்த்தகப் பயணத்தினை ஆரம்பித்துள்ளது. இவ்வர்த்தகப் பயணத்தினை முன்னோக்கி எடுத்துச் செல்லும் நோக்குடன், பெயர் பட்டியலுடனான ஒப்பிடக் கூடிய அளவிலான தரத்தைக் கொண்ட இலங்கையில் தயாரிக்கப்பட்ட இலங்கையின் வர்த்தக இலச்சினையை மாத்திரம் கொண்ட தலையிலிருந்து கால் வரையான சகல பரிமாணங்களையும் உள்ளடக்கிய ஆடைத் தயாரிப்புக்களை வழங்குவதற்குத் தேவையான வசதியளிப்புக்களுடனான தயாரிப்பாளர்களுக்குச் சொந்தமான வர்த்தகச் சாவடிகளைக் கொண்ட நிரந்தரமான கண்காட்சி நிலையம் ஒன்றினை செயற்படுத்தும் தேவையொன்று எழுந்துள்ளது.

532. இந்நிலையமானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கொள்வனவாளர்களுக்கான அந்த இடத்திலேயே கொள்வனவு செய்வதற்கான வசதிகளையும், மற்றும் உள்நாட்டுச் சந்தைகளுக்கான உத்தரவுகளை மேற்கொள்வதற்கான ஒன்று கூடக்கூடிய ஒரு தளமாக விளங்கும். எனவே, அரச தனியார் பங்கேற்பொன்றாக ரூபா 2,500 மில்லியன் செலவில் பிரத்தியேகமாக உள்நாட்டு ஆடை வர்த்தகங்களுக்கான மொத்த மற்றும் சில்லறை சிறப்பு விற்பனை நிலையமொன்றினை ஸ்தாபிப்பதன் மூலம் இவ்வர்த்தகப் பயணத்திற்கு உதவுவதற்கு முன் மொழிகின்றேன். இதற்காக அரசாங்கம் குறைந்தது 400,000 சதுர அடி தளப்பரப்பினைக் கொண்ட சிறப்பு விற்பனை நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான குத்தகை நிலத் துண்டொன்றினை வழங்கும்.

**இயற்கை அனர்த்தங்களுக்கு எதிரான காப்புறுதி**

533. கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த 12 மாத காலப்பகுதியில், புயல்களிலிருந்து வெள்ளங்கள். வெள்ளங்களிலிருந்து நிலச் சரிவுகள் என இயற்கை அனர்த்தங்களை மாத்திரமே நாம் கொண்டிருந்தோம். உயிர்களின் இழப்புக்கள், சொத்துக்களின் சேதங்கள், போன்றன

குறிப்பிடக்கதக்க அளவில் காணப்பட்டன. அரசாங்கம் அவ்வாறான இழப்புக்களுக்கான நட்டஈடாகவும், இம்முயற்சிகளை மீள் கட்டமைப்பதற்கான ஆதரவாகவும், வருடாந்தம் சராசா ரூபா 500 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையை செலவளித்துள்ளது. ஆயினும், இப்பொறிமுறையில், அவ்வனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய நட்டஈடுகள் இன்னும் செலுத்தப்படாமலும், மற்றும் அவ்வாறான நட்டஈடுகளை வழங்கும் செயன்முறைகளிலிருந்த தாமதங்கள் போன்றனவற்றிற்கு வழிவகுத்தன. இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சூறாவளிகள், புயல்கள், கொந்தளிப்புக்கள், வெள்ளம், நிலச்சரிவுகள், நிலநடுக்கம், சுனாமி, மற்றும் ஏனைய இயற்கை அழிவுகள் போன்ற இன்னோரன்ன இயற்கை அனர்த்தங்களுக்கு எதிராக முழு நாட்டையும் பாதுகாப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். இவ்வியற்கை அனர்த்தக் காப்புறுதி மொத்தமாக கூடியது ரூபா 10,000 மில்லியன்கள் வரையிலான சேதங்களை உள்ளடக்குவதோடு, தனிப்பட்டவைகள் கூடியது ரூபா 2.5 மில்லியன்களையும், ஆயுள் காப்புறுதியானது ரூபா 1 மில்லியனையும் உள்ளடக்குகின்றது.

**விலையின் ஸ்திரத்தன்மையை பேணுதல்**

534. கௌரவ சபாநாயகர் அவர்களே, 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் திகதியிலிருந்து இலங்கையின் வரலாற்றில் இதுவரை வழங்கப்படாத மட்டங்களிலான நிவாரணங்களை வழங்குவதன் மூலம் வாழ்க்கைச் செலவுச் சுமையிலிருந்து பாதிப்புக்குள்ளாகிய அநேகமானோருக்கு நிவாரணம் அளித்து அவர்களுக்கு புதிய ஒரு வாழ்வை அளிக்கக் கூடியதாக இருந்தது. இக்குறுகிய காலப்பகுதியில், பால் மா, கோதுமை மா, சீனி உள்ளடங்கலாக 13 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெற்றோல், மற்றும் டீசலின் விலைகள் முன்னர் ஒருபோதும் இல்லாத மட்டத்திற்குக் குறைவடைந்ததோடு, தீர்வையைக் குறைத்ததனால், ஒரு குடும்பத்திற்குப் பொருத்தமான வாகனங்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்தன. இந்நிவாரணங்களை காரணமாகக் கொண்டு நெடுஞ்சாலைகள் வாகனங்களினால் நிரம்பிவளிந்ததனால் சிரமங்களுக்கு முகங்கொடுத்தாலும் கூட, இலங்கையின் குடும்ப மொன்றிற்கு வாகனமொன்றினை கொள்வனவு செய்வதற்காக மகத்தானதொரு வாய்ப்புக் கிடைத்தது. வரலாற்றில் பதியக் கூடிய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, அதிகரிக்கப்பட்ட சமூர்த்தி கொடுப்பனவுகளும் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய நிவாரணங்கள் இலங்கையர்கள் கைகளில் புழங்கக் கூடியபணத்தின் அளவினை அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

535. மேலும், பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்க மொன்றாக மக்களுக்கு வாக்குக் கொடுத்தபடி, தெரிவுசெய்யப்பட்ட 11 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்குநான் முன் மொழிகின்றேன்.

- கௌரவ சபாநாயகர் அவர்களே, அநேகமான உணவுப் பொருட்களின் விலைகள் ஒவ்வொரு வருடமும் ஏனைய மாதங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் உச்சமட்டமொன்றிற்கு காணப்படுகின்றது. இவ்விலை ஏற்றத்தாழ்வுகளை முகாமை செய்வதற்காக கடந்த ஆட்சிக்காலத்தில் ஒழுங்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தாமையினால் இன்று சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் துரித வேகத்தில் உயர்வடைந்துள்ளது. இந்நிலைமையை முகாமை செய்வதன் மூலம் நுகர்வோருக்கு நியாயமான விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதோடு, உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் உருளைக் கிழங்கிற்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள ஒரு கிலோ உருளைக் கிழங்கிற்கான விஷேட வர்த்தகப் பண்டங்களுக்கான வரி 75 /= ரூபாவிற்கும் 85

/=விற்கும் இடையிலான விலையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். அதே போல, ஒரு கிலோ பெரிய வெங்காயத்திற்கு விதிக்கப்பட்டுள்ள விஷேட வரியை 25 ரூபாவினால் குறைப்பதன் மூலம் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தினை 85 ரூபாவிற்கும், 95 ரூபாவிற்கும் இடையிலான விலையொன்றுக்கு நுகர்வோருக்கு வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

- மேலும், பிரதான நுகர்வுப் பண்டமொன்றான உள்நாட்டிலேயே உற்பத்த செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கட்டொன்றின் விலை 295 ரூபா வரை குறைப்பதற்கும், அதன் மூலம் உள்நாட்டு பால் மா உற்பத்தியாளருக்கு ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்வதற்காக அரசாங்கத்தினால் 30 ரூபா மானியமொன்றினை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதே போல, குழந்தைகளின் போசாக்குத் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஒரு கிலோ பால் மாவை 100 ரூபாவினால் குறைப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன்.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, 425 கிராம் தகரத்திலடைக்கப்பட்ட மீன் தகரம் ஒன்றின் விலையை 125 ரூபா வரை குறைப்பதற்கும் நான் முன் மொழிகின்றேன். அதன் பிரகாரம், உள்நாட்டு தகரதத்திலடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்காக 425 கிராம் தகரத்திலடைக்கப்பட்ட மீன் தகரமொன்றிற்கு 15 ரூபா மானியமொன்றினை உள்நாட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன் தயாரிப்பாளர்களுக்கு வழங்குவதற்கும் முன் மொழிகின்றேன். இதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் அளிப்பதோடு, உள்நாட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன் கைத்தொழிலை விருத்தி செய்வதனால் உள்நாட்டு மீனவர்களின் மீன் வளங்களுக்கு உயர்ந்த விலையொன்றினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, மற்றுமொரு அத்தியாவசியமான உணவுப் பொருளான நெத்தலிக் கருவாடுகளை தனிப்பட்டவர்த்தகர்களினால் பெரிய விலை வீச்சொன்றிற்குள் விற்பனை செய்யாததனால் நுகர்வோரினால் உயர்வான விலையொன்றினைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. லங்கா சதொச நிறுவனத்தினால் நெத்தலிக் கருவாடு ஒருகிலோ 380 ரூபாவிற்கு விற்பனை செய்யும் போது, தனிப்பட்ட சில்லறை வியாபாரிகள் நெத்தலிக் கருவாடு ஒரு கிலோவை 800 ரூபா உயர்ந்த விலையொன்றுக்கு விற்பனை செய்கிறார்கள். இவ்வாறு பாரிய அளவிலான இடைத்தரகர்கள் இலாபத்தினை அனுபவிப்பதன் மூலம் நுகர்வோரை கஷ்டத்துக்குள்ளாக்குவதை தடுப்பதற்காக ஒரு கிலோ நெத்தலிக் கருவாட்டுக்கு 410 ரூபாவான உச்ச சில்லறை விலையொன்றினை நிர்ணயிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன்.
- சாதாரண மக்களின் மற்றுமொரு அடிப்படை உணவுப் பொருட்களில் ஒன்றான பருப்புக்கும் இடைத்தரகர்கள் பெரியஒரு இலாபத்தினை வைத்திருப்பதனால் நுகர்வோர் உயர்வான விலையொன்றினை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது. தற்போது ஒரு கிலோ பருப்பின் இறக்குமதிச் செலவு 130 ரூபா மட்டத்தில் காணப்பட்டாலும் திறந்த சந்தையில் ஒரு கிலோ பருப்பு 220 ரூபா அளவிலான உயர்ந்த விலையொன்றுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதன் படி, நுகர்வோருக்கு நியாயமான விலையொன்றுக்கு பருப்பை பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு கிலோ பருப்பை 169 ரூபாவாக உச்ச சில்லறை விலையொன்றை நிர்ணயிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அதற்காக பருப்பு மீது விதிக்கப்பட்டுள்ள விஷேட வர்த்தகப் பண்டங்களுக்கான வரியை சம்பூரணமாக நீக்குவதற்கும் நான் நடவடிக்கையெடுப்பேன்.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, கருவாடு வகைகளில் அதிக அளவிலான கேள்வியொன்று காணப்படும் ஒரு கிலோ கட்டக் கருவாடு 1,100 ரூபா உச்ச சில்லறை விலையொன்றுக்கும், ஒரு கிலோ சாலக் கருவாடு 425 ரூபா உச்ச சில்லறை விலையொன்றுக்கும் நிர்ணயிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். அதன் மூலம் உள்நாட்டு கருவாட்டுத்

தயாரிப்பாளர்களை பாதுகாப்பதற்காக நுகர்வோருக்கு சலுகை அடிப்படையிலான விலையொன்றுக்கு கருவாட்டினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கின்றேன்.

- தற்போது சிறந்த சந்தையில் ஒரு கிலோ கடலையின் சில்லறைவிலை 220 ரூபாவாக உயர்வான ஒரு விலை மட்டத்தைக் கொண்டிருந்தாலும், அதன் இறக்குமதிச் செலவு 160 ரூபாவாக குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது. அதன் படி, நுகர்வோருக்கு நிவாரணத்தினை அளிக்கும் நோக்குடன் ஒரு கிலோ கடலையை 169 ரூபா உச்ச சில்லறை விலையொன்றினை நிர்ணயிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.
- இதற்கு மேலதிகமாக, 12.5 கிலோ கிராம் வீட்டு எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை உடன் அமுல்படுத்தும் வகையில் 150 ரூபாவினால் குறைப்பதற்கு முன்மொழிவதொடு, வறிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன் ஒருலீட்டர் மண்ணெண்ணெய்யின் விலையை 10 ரூபாவினாலும் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இவ்வாறு வறிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன் குறைக்கப்பட்ட ஏனைய எண்ணெய் வகைகளுடன் கலந்து விற்கும் முறையற்ற கதைகளை தடுப்பதற்கு அவசியமான சட்டரீதியான செயற்பாடுகளை எடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.
- கௌரவ சபாநாயகர் அவர்களே, இதற்காக அரசாங்கத்திற்கு ரூபா 3,000 மில்லியன்களை செலவு செய்ய வேண்டியேற்படுவதோடு, அதற்குத் தேவையான ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கும் நான் முன்மொழிகின்றேன். அதே போல அரசாங்கத்தினால், இவ்வாறு வரியைக் குறைத்தல் மற்றும் உயர்ந்த சில்லறை விலையொன்றினை விதிப்பதன் மூலம் நுகர்வோருக்கு வழங்க எதிர்பார்க்கும் நிவாரணத்தினை அவர்களுக்கு அதே மாதிரி பெற்றுக் கொடுப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான தமது கடமைகளையும் வினைத் திறனான முறையிலும், உற்பத்தித் திறனுள்ள வகையிலும் நிறை ஒரு கிலோ கட்டக் கருவாடு 1,100 ரூபா உச்ச சில்லறை விலைக்கு மாற்ற வேண்டியுள்ளதாகவும் இச்சபையில் நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

536. கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் எண்ணுகின்றேன் நீங்கள் என்னுடன் இணங்குவதற்குக் காரணம் இறக்குமதிஉணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பதற்குக் காரணமாக இருப்பது கொள்கை ரீதியற்ற இடைத்தரகர்களும் மற்றும் நிரம்பல் சங்கிலியில் மோசமான போக்குமாகும். இந்நிலைமையினை தீர்ப்பதற்காக சதொச மொத்த விற்பனை பிரிவின் ஊடாக தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தகங்களின் இறக்குமதியாளராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் முன்மொழிகின்றேன். அத்தியாவசியமான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வது மாத்திரமல்லாமல் நாட்டிற்கு அவசியமான தொகையைக் களஞ்சியப்படுத்துவதும் சதொச நிறுவனத்தின் பொறுப்பாக உள்ளது. சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான களஞ்சியக் கட்டடத் தொகுதியில் களஞ்சியப்படுத்தியுள்ள இருப்பை இலாபமான முறையில் தனியார் வர்த்தகர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்ஜ எடுத்தல் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை அத்தியாவசியமான பொருட்களின் விலைகளை 20 சதவீத்தினால் குறைப்பதற்கு பங்களிப்புச் செலுத்தலாம் என நான் நம்புகின்றேன்.

**கருத்திட்ட கண்காணிப்பு**

537. நாட்டின் கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை ஆய்வுகள் முறைமையினை மேம்படுத்துவதனூடாக அபிவிருத்திக் கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் கண்காணிப்புச் செய்வதற்காக, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு ரூபா 200 மில்லியன்களை ஒதுக்குவதற்கு விரும்புகிறேன்.

538. அரச தனியார் பங்கேற்புகளாக மேற்கொள்ளப்படவுள்ள சகல வர்த்தக நடவடிக்கைகளும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ஒருங்கிணைக்கப்படும்.

**கொடுப்பனவுகள்**

539. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கத்தின் வாக்குறுதியொன்றான, அரச துறை ஊழியர்களுக்குக் கிடைக்கக் கூடிய மாதாந்தக் கொடுப்பனவான ரூபா 10,000 ஓய்வூதியக் கொடுப்பனவுக் கணிப்பீட்டின் போது கவனத்தில் கொள்ளப்படும். இந்தக் கொடுப்பனவு மற்றும் முன்பு வழங்கப்பட்ட இரண்டு இடைக்காலக் கொடுப்பனவுகளும் ஓய்வுபெறும்போது ஓய்வூதியக் கொடுப்பனவுக்குக் கருத்திற்கொள்ளப்படும்.

**ஊழல்கள் அற்ற நாடு**

540. கௌரவ சபாநாயகர் அவர்களே எங்களுக்கு புதிய இலஞ்ச ஊழல்கள் ஆணைக்குழு காணப்படுகின்றது. இலஞ்சம், ஊழல்கள் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்படுவது எமது நிருவாகத்தின் பிரதான நோக்கமாகும். இதன்மூலம் நாட்டிலிருந்து ஊழல்களை முற்றாக அழித்தொழிப்பதற்கு உறுதியான அர்ப்பணிப்பை வழங்கியுள்ளது. ஆகவே, நான் இந்நோக்கத்திற்காக ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

**பாராளுமன்ற அலுவல்கள்**

541. கௌரவ சபாநாயகர் அவர்களே எமது நிருவாகம் விசேடமாக மேற்பார்வைக் குழுக்களை உறுதிப்படுத்தி பாராளுமன்ற முறைமையினை சக்தி பெறச் செய்வதற்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளது. இந்நோக்கத்திற்காக ரூபா 250 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.
542. பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக ஜே.ஆர். ஜயவர்த்தன நிலையத்திற்கு ரூபா 50 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

**வரிக்கொள்கை மற்றும் வரி நிருவாகம்**

543. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது கன்னி வரவு செலவுத்திட்டத்தில் மிக முக்கியமான விடயங்களை இதன்பின்னர் குறிப்பிட விரும்புகின்றேன். எனது வரவு செலவுத்திட்ட உரையில் நான் இதுவரை முன்வைத்த முன்மொழிவுகளில் நிதித்துறைக்கு தேவையான வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கான உபாயமுறை அதுவாகும். கௌரவ சபாநாயகர் அவர்களே, நீங்கள் அறிந்தது போன்று, எமது வரி திறமையானது காலாவதியானதுடன் விளங்கிக்கொள்ள முடியாதளவு சிக்கல்கள் நிறைந்ததுமாகும். மேலும் அது முதலீடு மற்றும் வியாபார அபிவிருத்திக்குப் பொருத்தமற்றதாகும். இவை தேவையான வருமானத்தினை உருவாக்குவதற்கோ மக்களின் சேமிப்பினை தூண்டுவதாகவோ இல்லை. பல்வேறு வரிக் கட்டமைப்புகளுடன் கூடிய அளவுக்கதிகமான வரிக் குவிப்பானது வரி முறைமையினையும் வரி நிர்வாகத்தினையும் மேலும் சிக்கலாக்கியுள்ளது. வரி செலுத்துனர்களின் தன்னார்வ இணக்கப்பாடு இதன்மூலம் ஆர்வமிழக்கச் செய்யப்படுகின்றது. கடந்த வருடங்களில் அரசாங்க வருமானத்தின் அபிவிருத்தி 1990 களின் ஆரம்பத்தில் மெ.உ. உற்பத்தியில் 20 சதவீதமாக இருந்ததுடன் 2014 இல் மொ.உ. உற்பத்தியில் 11.3 சதவீதமாக துரித கதியில் குறைந்துள்ளது. இந்த விகிதத்தினை அதிகரிப்பதற்கான அவசரத் தேவைப்பாடானது அரசாங்கத்தினால் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டளவில் வருமானத்தினை மொ.உ. உற்பத்தியில் 17 சதவீதமாக அதிகரிப்பது என்பதனை நாம்

இலக்காகக் கொண்டுள்ளோம். இந்தவகையில், இந்த அரசாங்கம் வரி முறைமையில் முழுமையானதொரு மறுசீரமைப்பு அவசியமென்பதனை உணர்ந்துள்ளது.

**வரி முறைமையினை இலகுபடுத்தல்**

544. தற்பொழுது வரி முறைமையினை சிக்கலாக்கியுள்ள பல்வேறுபட்ட 35 வகையான வரிகள் மற்றும் அறவீடுகளின் மூலம் வரி வருமானம் சேகரிக்கப்படுகின்றது. எனவே எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தினை சேகரிப்பதற்கு முடியாத சில வரிகளினை ஒன்றாக இணைத்து நாட்டின் வரி வருமானத்தினை மேம்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் தற்பொழுது நடைமுறையிலுள்ள எவ்வித தொடர்புமற்ற மக்களுக்கு தொல்லையினைக் கொடுக்கும் சில வரிகளை இல்லாதாக்கி வரி செலுத்துனர்களுக்கும் அதேபோன்று வியாபார சமூகத்திற்கும் நன்மையினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்தவகையில் வரி முறைமையினை இலகுபடுத்துவதற்காக பின்வரும் வரிகளை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

- பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு
- நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு
- சொகுசு மற்றும் அரைச்சொகுசு மோட்டார் வாகன வரி
- சுற்றுலா அபிவிருத்தி அறவீடு

**வருமான வரி**

***நிறுவன வருமான வரி***

545. பல்வேறு மூலங்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்கான விலக்களிப்புகளினை அடிப்படையாகக் கொண்ட நிறுவன மூலங்கள் மாற்றல் விலையிடலுக்கான பிரச்சினையாகக் காணப்படுவதுடன் மயக்க நிலை காணப்படுவதனால் பொருள்கோடலுக்கான வரி திட்டமிடல் மற்றும் காணப்படுகின்றது. எனவே, தற்பொழுது காணப்படும் நிறுவன வருமான வரி விகிதக் கட்டமைப்பினை 30 சதவீத உயர்ந்த மட்டமாகவும் 15 சதவீத தராதர மட்டமாகவும் இரண்டு விகித அளவுகளைக் கொண்டதாக மீள் கட்டமைப்புச் செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். பந்தய மற்றும் சூதாட்டம், மதுபானம், புகையிலை மற்றும் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் குத்தகை கைத்தொழில், வியாபாரச் செயற்பாடுகள் உள்ளடங்கலாக நிதிச் சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானம் மற்றும் இலாபத்திற்கு உயர் வரி விகிதம் ஏற்புடையதாகும். ஏனைய துறைகள் சாதாரண தர விகிதமான 15 சதவீதத்திற்கு உட்படும். எவ்வித கொள்கையுமின்றி வழங்கப்பட்ட நிறுவன, நானாவித மற்றும் ஏனைய விலக்களிப்புகள் போன்ற நீண்டகால வரிச்சலுகைகள் இனங்காணப்பட்டு திருத்தப்படும்.

546. பங்குடமையாளர்கள் அவர்களது முதலீட்டுக்கான நியாயமான பங்கிலாபங்களை பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் பகிரப்படும் ஆகக்குறைந்த பங்கிலாபம் பகிர முடியுமான இலாபத்தில் 15 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

***புகையிலை, மதுபானம் மற்றும் கசினோ மீதான மிகைவரி***

547. கௌரவ சபாநாயகர் அவர்களே, நிறுவன வரி திருத்தங்களின் மூலம் புகையிலை, லிக்கர் மற்றும் கசினோ கைத்தொழில்கள் பெற்றுக்கொள்ளும் எல்லையற்ற பயனைத் தவிர்ப்பதற்கும் புகையிலை, மதுபானம் மற்றும் சூதாட்டம், பந்தய நடவடிக்கைகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கமைவாகவும் இத்துறைக்கான வருமான வரியினை 25 சதவீத மிகை வரியாக விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

***ஆளுக்குரிய வருமான வரி***

548.கௌரவ சபாநாயகர் அவர்களே, வருடாந்தம் ரூபா 750,000 இற்கு அதிக வருமானத்தினைப் பெறும் ஊழியர்கள் முன்னேற்றகரமான வரியொன்றாக உழைக்கும் பொழுது செலுத்தும் வரியினை செலுத்த வேண்டியுள்ளனர். ஆகக்கூடிய வரி விகிதம் 16 சதவீதமாகும். உ.பொ.செ. வரியினை மேலும் இலகுபடுத்தும் நோக்கத்துடன் சிறந்த இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கும் வகையிலும் உ.பொ.செ. வரிக்கு ஏற்புடையதான சட்டத்தினை திருத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். ஊழியர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு வரி விடுவிப்பு வருடாந்த மட்டத்தினை ரூபா 2.4 மில்லியனாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இம்மட்டத்திற்கு அதிகமான உ.பொ.செ வரி 15 சதவீத ஒரு சீரானதாக அறவிடப்படுவதுடன் வரி விதிக்கப்படக்கூடிய வருமானம் எவ்வித விலக்களிப்புகளுமின்றி அனைத்து சம்பாத்தியங்களையும் உள்ளடக்கியிருக்கும். இந்த வரிவிகித முறையானது தற்பொழுது 24 சதவீதமான முன்னேற்றகரமான விகிதமாக காணப்பட்ட போதிலும் தனியாள் வருமானம் உழைப்பவர்களுக்கு இயலுமான வகையில் ஏற்புடையதாக இருக்கும். மேலும் இரண்டாம் நிலை ஊழியத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு எவ்வித விலக்களிப்புமின்றி அதே விகிதத்தில் வரி அறவிடப்படும். கௌரவ சபாநாயகர் அவர்களே, சிறந்த நாணய மற்றும் அரசிறைக் கொள்கைகளை பிரயோகிப்பதன் மூலம் இவ்வருடத்தின் போது குறைந்த வட்டி விகிதத்தை அரசாங்கத்தினால் பேணுவதற்கு முடியுமாக இருக்கும். சிறந்த பெறுபேறுகளை தரக்கூடிய வியாபாரங்களில் முதலிடுவதற்கான குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு இது பெருமளவு உதவியாக இருக்கும். இதனால் வட்டி வருமானத்தினை எதிர்பார்த்து நீண்டகால அடிப்படையில் பணத்தினை வைப்பு செய்தவர்களின் வட்டி வருமானம் குறைவடைந்ததனால் அவர்கள் பாதிக்கப்பட்டனர். எனவே, 2016 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து பண வைப்புகள் மீதான 2.5 சதவீத நிறுத்திவைத்தல் வரியினை இல்லாதொழிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**பொருளாதார சேவைக் கட்டணம்**

549.அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்துவதற்கான அறவீடாக பொருளாதார சேவைக் கட்டணம் அறவிடப்படுகின்றது. தற்பொழுது பொ.சே. கட்டணம் நட்டத்தில் இயங்கும் அல்லது விலக்களிக்கப்பட்ட வியபாரங்களுக்கு மாத்திரம் விதிக்கப்படுகின்றது. வரி சேகரிப்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் பொ.சே. கட்டண விதிப்பனவை நியாயப்படுத்துவதற்கும் இலாபமீட்டுகின்ற வியாபாரங்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்படும். அதேவேளை, ஆண்டொன்றுக்கான ரூபா 120 மில்லியன் ஆகக் குறைந்த வரி விதிப்பனவு மட்டம் நீக்கப்படும். விதிக்கப்படும் வரி விதிப்பானது 0.5 விகிதமாக அமையும். மேலும், முன்கொண்டுவரப்பட்ட மீதிகளுக்கான காலம் 3 வருடங்களாக வரையறுக்கப்படும்.

**பெறுமதி சேர் வரி**

550.இலங்கையில் கடந்த வருடங்களில் அவ்வப்போது எடுக்கப்பட்ட எழுந்தமான கொள்கைகள் பின்பற்றப்பட்டதனால் பெறுமதி சேர் வரி வருமானம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிகளுக்கு குறை பெறுமதி விலையிடுதல், பெறுமதி சேர்ப்பில் கையாடல்கள் மற்றும் நீண்ட விலக்களிப்பு பட்டியல் என்பவற்றினால் எதிர்பார்க்கப்பட்டதனை விட குறைந்த வருமானம் பெறப்பட்டது. கௌரவ சபாநாயகர் அவர்களே, வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கத்துடன் சில விலக்களிப்புகளை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். தற்பொழுது காணப்படும் ஒற்றை வரி விகிதம் 3 மட்டங்களில் 0 சதவீதமாகவும், நிலையான விகிதம் 8

சதவீதமாகவும் சேவைகள் துறை 12.5 சதவீதமாகவும் பெறுமதி சேர் வரிக்கான ஆகக்குறைந்த மட்டம் வருடமொன்றுக்கு ரூபா 12 மில்லியனாக இருக்கும். மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் பெறுமதி சேர் வரியிலிருந்து நீக்கப்படும்.

**தேசக் கட்டுமான வரி**

551.கௌரவ சபாநாயகர் அவர்களே, பெறுமதி சேர் வரிக்கேற்ப தேசக் கட்டுமான வரி மட்டத்தினை குறைப்பதற்கும் வரி விதிப்பு விகித்தினை 4 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் சில விலக்களிப்புகளை நீக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். விகித அதிகரிப்பின் மூலம் பெறப்படும் வருமானம் திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

**பந்தய மற்றும் சூதாட்டம்**

552.கடந்த வரவு செலவுத்திட்டத்தில் விதிக்கப்பட்ட கசினோ அனுமதிக் கட்டணம் நீக்கப்படுவதுடன் சூதாட்ட வியாபாரத்திற்காக விதிக்கப்பட்ட வருடாந்த அறவீடு ருஜினோ வியாபாரம் தவிர்ந்த ஏனையவற்றுக்கு 400 மில்லியனாக அதிகரிக்கப்படும்.

553. இடைக்கால வரவ செலவுத்திட்டத்தில் அறிமகப்படுத்தப்பட்ட கெசினோ கைத்தொழில் அறவீட்டுக் கொடுப்பனவை செலுத்தத் தவறும் சந்தர்ப்பத்தில் பணிப்பாளர்களும், பங்குடமையாளர்களும் அதற்கான பொறுப்பை ஏற்கும் வகையில் நிதிச்சட்டத்தினைத் திருத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

**வரி ஊக்குவிப்பு**

554.பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட எழுந்தமானதும் உற்பத்தி திறனற்ற வரிச் சலுகைகளை அவை, தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் போட்டித் தன்மையற்ற நிலையொன்றினை உருவாக்கியுள்ளது என்றவகையில் அவற்றை நீக்கிவிடுவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. அரசாங்கத்தின் பொதுவான அரசிறைக் கொள்கைக்கு பொருத்தமற்றதான வரிச் சூழலொன்றினை இது உருவாக்கியுள்ளது. எனவே, ஏதேனும் முதலீட்டுக்காக வழங்கப்பட்ட சலுகைகள் நிதி அமைச்சின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டுமென்பதுடன் அமைச்சினால் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளினால் நிர்வகிக்கப்படுதலும் வேண்டும்.

**மோட்டார் வாகன வரிகளுக்கான திருத்தங்கள்**

555.கௌரவ சபாநாயகர் அவர்களே, நாட்டில் இன்று 6 மில்லியனுக்கு மேற்பட்ட வாகனங்கள் சேவையிலுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதனால் வீதி விபத்துகளும் அதிகரிக்கின்றன. எனவே நாம் பயணிகளின் பாதுகாப்பினை கவனத்திற்கொள்ள வேண்டுமென்பதுடன் வாகனங்கள் பற்றிய சுற்றாடல் கரிசணையினையும் கவனத்திற்கொள்தல் வேண்டும்.

**வாகனங்களுக்கான உற்பத்தி வரி மீதான அலகு விகிதம்**

556.கௌரவ சபாநாயகர் அவர்களே, வரி நோக்கங்களுக்காக மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி மதிப்பீடுகளை குறைத்துக் காட்டுவதன் மூலம் வரி மோசடி செய்யப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளதன் காரணமாக, முழு வசதிகளுடன் கூடிய தயாரிப்புக்கான விலைகளை வரி அடிப்படையாகக் கொண்டு அண்மையில் புதிய மதிப்பீட்டு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. முறையாக வரி செலுத்துவதன் மூலம் வருமான சேகரிப்புச் செயன்முறையினை மேலும் உறுதிப்படுத்துவதற்கு கன சென்றி மீற்றரினை அடிப்படையாகக்

கொண்டு உற்பத்தி தீர்வையின் விகிதத்தினை இலகுவான அலகொன்றாக அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

**சுற்றாடல் நட்பு வாகனங்களுக்கான வரி ஊக்குவிப்புகள்**

557. நாட்டில் தூய்மையான சுற்றாடல் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. சூரிய சக்தி, ஹைற்றஜன் அல்லது ஹீலியம் மூலம் முழுமையாக தொழிற்படும் வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வையினை 2.5 சதவீதத்தினால் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மோட்டார் வாகன உரித்துச் சான்றிதழ்**

558.கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வருடம் சனவரி 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டவாறு வியாபார நோக்கங்களுக்காக மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களுக்கான மோட்டார் வாகன இறக்குமதிப் பதிவு அனுமதிப்பத்திரக் கட்டணத்தினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். எவ்வாறாயினும் இது ஒரு சீரான வரி என்பதனால் பெருமளவிலான வாகனங்களின் இறக்குமதியின் போது மிக அதிகளவான நன்மையினைப் பெற்றுக் கொள்ள முடியும். குறித்த உரித்துக் கட்டணம் காணப்பட்ட போதிலும் ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன உரித்துச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான வாகன இறக்குமதி கட்டணம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இச் சான்றிதழானது உள் நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்படுவதுடன் வாகனம் ஒன்றினை இறக்குமதி செய்வதற்கு கடன் கடிதம் ஒன்றினை திறப்பது அவசியமாகும். மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 2,000, மோட்டார் கார்களுக்கு ரூபா 15,000 ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் ரூபா 10,000 ஆக வாகன உரித்து சான்றிதழ் கட்டணத்தினை அறவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**வருமான உரிமம் மற்றும் புகைப் பரிசோதனை**

559.மாகாண சபைகளின் வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கத்துடன் பாதைப் பராமரிப்புச் செலவு மற்றும் சுற்றாடல் செலவு என்பவற்றுக்கு அமைவாக காலத்திற்கு காலம் வருமான உரிமக் கட்டணம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இதற்கமைவாக 100 முதல் 200 சதவீதத்திற்கு இடையிலான மோட்டார் வாகனங்களுக்கான வருமான உரிமக் கட்டணத்தினை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். புகைப் பரிசோதனை சான்றிதழுக்கான கட்டணம் ரூபா 5,000 இனால் அதிகரிக்கப்படுதல் வேண்டும். வாகன புகைச் சான்றிதழ்களை வழங்குவது அதிகமான சேவை வழங்குநர்கள் உள்வரும் வகையில் போட்டித் தன்மைக்காக திறந்து விடப்படுதல் வேண்டும்.

**பதிவு செய்யப்படாத வாகனங்களைப் பதிவு செய்தல்**

560.உள் நாட்டில் பொருத்தப்படும் சில வாகனங்கள் பல்வேறு காரணங்களுக்கான மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதில்லை என்பது எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அத்தகைய வாகனங்களை வர்த்தக வாகனங்களாயின் ரூபா 750,000 மற்றும் மோட்டார் கார்களுக்கு ரூபா 1 மில்லியன் செலுத்தி 2016 மார்ச் 31 ஆந் திகதியளவில் தமது வாகனங்களை பதிவு செய்து கொள்ளுமாறு வாகன உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

561. வெளிநாட்டுச் செலாவணியினை சம்பாதிப்பதற்கும் நாட்டில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களைக் குறைப்பதற்கும் அத்தகைய வாகனங்களை மீள் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் ஏற்றுமதி செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். அதே போன்று, இதன் மூலம் மோட்டார் வாகனத் திருத்தம் தொடர்பான புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஏற்றுமதியாளரினாலும் ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு 20 வாகனங்களுக்கும் 50 சதவீத வரி விதிப்பனவினை ஒவ்வொரு மோட்டார் கார் இறக்குமதியின் போதும் வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்வதற்கான சாத்தியங்களை கண்டறியுமாறும் அவற்றினை மீளப்புதுப்பித்தலின் பின்னர் ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் தனியார் துறையிடம் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

562. ஏல விற்பனை செய்யப்பட முடியுமான விசேட வாகன இலக்கத் தகடுகளை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**சலுகை அடிப்படை அனுமதிப்பத்திரத் திட்டம்.**

563.கௌரவ சபாநாயகர் அவர்களே, சலுகை அடிப்படையில் வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டதுடன் பிழையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வருடம் ஒன்றுக்கு 80 பில்லியனுக்கு அதிகமான வருமான இழப்பினை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்களாக பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரங்கள் அனைத்தையும் இல்லாதாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் இத்திட்டம் 2016 சனவரி 1 ஆந் திகதிக்கு பின்னர் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கு ஏற்புடையதாக மாட்டாது. அரசாங்கத்துக்காக கொள்வனவு செய்யப்படும் அனைத்து வாகனங்களும் வரி விதிப்பனவுகளுக்குட்படுவதுடன் அதற்கான ஒதுக்கீடுகள் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

**கடன் அட்டைகளுக்கான முத்திரைத் தீர்வையினைக் குறைத்தல்**

564.கடன் அட்டையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கொள்வனவுக்காக தற்பொழுது 1.5 சதவீத முத்திரைத் தீர்வை அறவிடப்படுகிறது. உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் கொள்வனவுக்கான கடன் அட்டைகள் மீதான முத்திரைத் தீர்வையினை நீக்குவதற்கு நான் முன்மொழிவதுடன் வெளிநாட்டுக் கொள்வனவுக்கான முத்திரைத் தீர்வை 2.5 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

**மாளிகை வரி**

565.இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாளிகை வரி தொடர்பான ஏற்பாடுகள் கூட்டாதனங்கள் நீங்களாக தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

**சுங்கத்தீர்வைக் கட்டமைப்பினைக் குறைத்தல்**

566.தற்பொழுது சுங்கத்தீர்வையாக 4 அறவீட்டு மட்டங்கள் காணப்படுகின்றன. அவை 0 சதவீதம், 7.5 சதவீதம், 15 சதவீதம், 25 சதவீதம் மற்றும் நிலையான உயர் விகிதம் என்பனவே அவையாகும். ஏறக்குறைய 7,000 இயைபு முறைக் குறியீடுகளில் 50 சதவீதமான பொருட்கள் 0 சதவீதமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் 2 சதவீதம் மாத்திரம் 7.5 சதவீதமாக காணப்படுகின்றன. வரிக்கட்டமைப்பினை மேலும் இலகுபடுத்துவதற்கு 7.5 சதவீத மட்டத்தினை நீக்குவதற்கும் 25 சதவீத மட்டத்தினை 30 சதவீதமாக அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். அந்த வகையில் இலங்கை 0 சதவீதம், 15

சதவீதம் மற்றும் 30 சதவீதம் ஆகிய 3 சுங்கத்தீர்வை கட்டமைப்பினை மாத்திரம் கொண்டிருக்கும்.

**துறைமுகம் மற்றும் விமான நிலைய அறவீடு**

567.நிர்மாணம், பாற்பண்ணை மற்றும் விவசாயக் கைத்தொழில்களுக்காக பயன்படுத்தப்படும் பொறித் தொகுதி மற்றும் இயந்திரங்கள் தவிர ஏனையவற்றுக்கான துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டினை 5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**மதுபானம் மீதான வரிகள்**

568.கௌரவ சபாநாயகர் அவர்களே, மதுபான வரியிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2015 ரூபா 100 பில்லியனாகக் காணப்பட்டது. சட்ட ரீதியற்ற மற்றும் கள்ளச் சாராயங்களின் மூலமும் உற்பத்தி வருமானத்தினை அளவிடுவதில் காணப்படும் தவறுகள் காரணமாகவும் இவ்வாறான தொகையொன்று அரசாங்கத்துக்கு கிடைக்காமல் போனது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானத்திற்கு ஏற்புடையதான அதே நடைமுறையினை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்திற்கும் பிரயோகிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இப்போக்கினை ஓரளவுக்கு வெற்றி கொள்ள 2005 இல் எம்மாள் முடியுமாக இருந்தது. அத்தகைய சட்ட ரீதியற்ற மதுபான பாவனையினை எம்மால் குறைக்க முடியுமாக இருந்தது என்ற வகையில் மேலும் ரூபா 100 பில்லியனைச் சேகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்த முடியும். இந் நோக்கத்திற்காக பின்வரும் விடயங்களை நான் முன் மொழிகின்றேன்.

**விசேட ஸ்ரிக்கர்**

569.கௌரவ சபாநாயகர் அவர்களே, வரி செலுத்தப்பட்ட ஒவ்வொரு மதுபான போத்தலுக்கும் விசேட ஸ்ரிக்கர்கள் ஒட்டுவதன் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படும். வரி செலுத்தப்பட்ட மதுபான போத்தல்களை இணங்கான்பதற்கு மதுவரி அலுவலர்களுக்கு இது உதவியாக இருக்கும். இந்த ஸ்ரிக்கர் தயாரிப்பாளர்கள் அரசாங்கத்தின் கொள்வனவு நடவடிக்கைகளை பின்பற்றுவதன் ஊடாக சர்வதேச கேள்விப்பத்திரம் கோருவதன் மூலம் தெரிவு செய்யப்படுவர். இந்த வெளிப்படையான நடவடிக்கையினை அமுல்படுத்துவதன் மூலம் ஒழுங்கு விதிகளுக்குட்படாத சட்ட ரீதியற்ற மதுபானங்கள் நுகர்வோருக்கு செல்வதனை தடுக்க முடியும்.

**மதுபான தயாரிப்பு உரிமைக் கட்டணத்தினை அதிகரித்தல்**

570.வடிசாலை ஒன்றுக்கான வருடாந்த தயாரிப்பு உரிமைக் கட்டணத்தினை ரூபா 150 மில்லியனாக அதிகரிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். மேலும் தற்பொழுது காணப்படும் போத்தல் ஒன்றுக்கான உரிமைக் கட்டண முறையானது சிக்கலாகக் காணப்படுவதனால் மதுபானத் தயாரிப்பாளர்களுக்கான வருடாந்த உரிமைக் கட்டணத்தினை ரூபா 150 மில்லியன் என்ற ஒற்றை கட்டண முறையொன்றினை விதிப்பதற்கு நான் முன் மொழிகின்றேன். மதுபானத்திற்கான உற்பத்தித் தீர்வை இன்று நல்லிரவிலிருந்து திருத்தப்படும்.

**உரிமம் வழங்கல் திட்டத்தினை இலகுபடுத்தல்**

571.தற்பொழுது காணப்படும் சிக்கலான உரிமம் வழங்கும் திட்டம் இலகுபடுத்தப்படுவதுடன் சில போது விற்பனைக்கு ஏற்புடையதான வரையறைகள் நீக்கப்படும்.

**செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த மதுவரி**

572.வடிசாலைகள் மற்றும் மதுபானத் தயாரிப்பாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது ரூபா 200 மில்லியனை மதுவரியாக சேகரிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு வசதியாக மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

**மதுபானம் மீதான இறக்குமதித் தீர்வையினை அதிகரித்தல்**

573.இவ்வருடத்தின் செப்தெம்பர் மாதத்தில் மதுபானத்திற்கான விலை போத்தல் ஒன்று ரூபா 40 - 60 இனால் அதிகரித்தது. அத்தகைய அதிகரிப்பினை ஒத்ததாக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் மீதான வரியும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். இந்த வகையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானத்தின் விலை அதிகரிப்புக்கேற்ப வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட ஈதையில் மதுபானம் அனைத்திற்குமான வரிகளை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபான உரிமம்**

574.தற்பொழுது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானம் 10 தொகை லீற்றர்கள் மாத்திரம் எடுத்துச்செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களை எடுத்துச் செல்வதற்கு எவ்வித வரையறையும் அமுல்படுத்தப்படவில்லை. எனவே இவ்விடயத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுபானத்திற்கு ஏற்புடையதான அதே நடைமுறையினை இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்திற்கும் பிரயோகிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

**பீடி இலைகள் மீதான சுங்கத்தீர்வை**

575.கௌரவ சபாநாயகர் அவர்களே, 1990 களின் ஆரம்பத்தில் வருடாந்த உள்நாட்டு சிகரட் நுகர்வு 5,500 மில்லியனுக்கு மேற்பட்டதாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் காலத்திற்கு காலம் சிகரட் விலை அதிகரித்ததுடன் சுகாதாரத்திற்கு ஏற்படும் ஆபத்துத் தொடர்பான விழிப்புணர்வு பொது மக்களிடத்தில் அதிகரிப்பதனாலும் தற்பொழுது வருடாந்த சிகரட் பாவனை 3,000 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு மாற்றமாக பீடி இலைகளின் இறக்குமதி பீடி உற்பத்தியில் வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்தியுள்ளது. சிகரட் விலைகள் ஒவ்வொரு வருடமும் அதிகரித்த போதிலும், பீடி விலை அதிகரிக்கப்படவில்லை. புகையிலைப் பாவனையினை ஊக்கம் குன்றச்செய்யும் வகையிலும் ஆகக் குறைந்த விலையினை தாபிப்பதற்கும் பீடி விலைகள் மீதான சுங்கத் தீர்வையினை அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். மேலும் பீடி தயாரிப்பு அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 1,500 இலிருந்து ரூபா 5,000 ஆக அதிகரிக்கப்படும்.

**பயணிகள் அறவீட்டினை அதிகரித்தல்**

576.கௌரவ சபாநாயகர் அவர்களே, பயணிகள் அறவீட்டினை 25 ஐ.அ.டொலரிலிருந்து 30 ஐ.அ.டொலராக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இது கப்பல் மற்றும் விமானப் பயணிகளுக்கும் ஏற்புடையதாக இருக்கும். திரட்டு நிதியத்திற்கான பயணிகள் அறவீட்டு வருமானத்தின் பங்களிப்பினை தற்பொழுது காணப்படும் மூன்றில் ஒன்றினை மூன்றில் இரண்டாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### கடவுச்சீட்டுக் கட்டணம்

577.கடவுச்சீட்டுக் கட்டணம் அண்மைக் காலத்தில் திருத்தப்படவில்லை. ஆயினும் கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கான செலவினம் அதிகரித்துள்ளது. இதற்கமைவாக ஒரு நாள் சேவை விண்ணப்பத்திற்கான கட்டணத்தினை ரூபா 7,500 இலிருந்து ரூபா 10,000 ஆக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் இரட்டைப் பிரசா உரிமைக்கான விண்ணப்பக் கட்டணத்தினை ரூபா 250,000 இலிருந்து ரூபா 300,000 ஆக அதிகரிப்பதற்கும் தெற்காசிய நாடுகளுக்கான வீசாக் கட்டணத்தினை 20 ஐ.அ. டொலராக அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### வதிவிட வீசாவினை அறிமுகப்படுத்தல்

578.வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக மூன்று வருட காலப்பகுதிக்கு வதிவிட வீசாவினை வழங்குவதற்கு 250,000 ஐ.அ. டொலரினை கட்டணமாக அறவிடுவதற்கு நான் முன்மொழிவதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வெளிநாட்டவர்களுக்கான நிரந்தர வதிவிட வீசாவினை வழங்குவதற்கு 5 மில்லியன் ஐ.அ. டொலரினை அறவிடுவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### தொலைத்தொடர்புகள் தொழில் மீதான வரி

579.கௌரவ சபாநாயகர் அவர்களே சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குனர் கட்டணமானது உள்வரும் சர்வதேச அழைப்புக்கள்மீது நிமிட அடிப்படையில் ஒரு நிமிடத்திற்கு ஐ.அ. டொலர்கள் 09 சதங்கள் கட்டணமாக அறவிடப்படும். அத்தொகையின் ஒரு நிமிடத்திற்கான ஐ.அ.டொலர் 03 சதங்களை மாத்திரமே இயக்குனர்கள் திரட்டிய நிதிக்கு வழங்குகின்றனர். சர்வதேச தொலைத் தொடர்புகள் இயக்குனர் கட்டணத்தை ஐ.அ.டொலர் 09 சதத்திலிருந்து 12 சதங்களாக அதிகரிப்பதற்கும், அவ்வதிகரிக்கப்பட்ட முழுத்தொகையையும் திரட்டிய நிதியத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### ஏற்றுமதிக் கம்பனிகளின் உள்நாட்டுச் சந்தை விற்பனை

580.ஏற்றுமதியினை மையமாகக் கொண்ட முதலீட்டு ஊக்குவிப்புச் சபைக் கம்பனிகள் அவற்றின் மொத்த உற்பத்தியில் 5 சதவீதத்தினை மாத்திரம் உள்நாட்டுச் சந்தையில் வழங்கல் செய்வதற்கு அனுமதிக்கப்படும்.

### கம்பனிப் பதிவுக் கட்டணத்தை அறிமுகப்படுத்தல்

581.பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான கம்பனிகள் தொழிற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய கம்பனிகளை தொழிற்படக் கூடியனவாக மாற்றுவதற்கு, பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் அனைத்தும் மாதம் ஒன்றுக்கு பதிவாளரினால் அறவிடப்படும் கட்டணமாக 7,500 ரூபாவினை செலுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். மேலும் தன்னார்வக் கலைப்பினை தூண்டாதிருப்பதற்காக கம்பனிகளின் தன்னார்வக கலைப்பின் மீது ரூபா 500,000 இனை அறவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

582.2016 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழில் முயற்சிகளும் தமது உள்ளூராட்சி சபைகளுடன் வருடமொன்றுக்கு 100 ரூபா என்ற சாதார கட்டணத்தினை செலுத்தி பதிவு செய்தல் வேண்டும். புதிய வியாபார தொழில் முயற்சிகள் மின்சாரம் மற்றும் நீர் இணைப்புகள், வங்கிகளிலிருந்து கடன் வசதிகளினை பெறல் என்பவற்றுக்கு இப் பதிவானது முன் தேவைப்பாடாக கொள்ளப்படும்.

**தொலைக்காட்சி நாடக அறவீடு**

583.இலங்கையில் ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற வகையில், தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பு ஆங்கில தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்களுக்கும் விலக்களிக்கப்படும் வகையில் விரிவாக்கப்படும்.

**வரி நிர்வாக மறுசீரமைப்புகள்**

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

584.நாட்டில் காணப்படும் வரி நிர்வாகத்தின் தற்போதய நிலையினைக் கவனத்திற் கொண்டு, வரி நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் தேவையான நவீன மயப்படுத்தல் நடைமுறைகள் என்பவற்றுக்கு வரிக்கொள்கை மறுசீரமைப்பாக வரிமுறைமை இலகுபடுத்தப்பட வேண்டியுள்ளது. இப் பின்னணியில், விபரத் திரட்டுக்களினை பூரணப்படுத்துதல், வரிக் கொடுப்பனவுகள் போன்ற சேவைகளை தன்னியக்க இணைய வசதிகளின் மூலம் மேற்கொள்வதற்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையின் (RAMIS) முதற்கட்டம் 2016 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

585.வரி சேகரிப்பினை அதிகரிப்பதற்காக அனைத்து வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களிலும் வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) அல்லது வியாபார பதிவு இலக்கம் (BRN) என்பவற்றினை கட்டாயமாக உள்ளடக்க வேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

586.வரி விதிப்பனவு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்படுவதுடன் நடைமுறையினை இலகுபடுத்துதல், விரிவான வரி அடிப்படையினை இலக்காகக் கொண்ட குறைந்த வரி விகிதங்களின் பிரயோகம் என்பன மீளாய்வு செய்யப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

587.நாட்டின் எல்லைகளுக்கிடையில் சட்டரீதியற்ற வியாபார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக, தள அரிப்பு மற்றும் இலாபமாற்றல் (BEPS) காரணமாக நாட்டிற்கு சட்டரீதியாகக் கிடைக்க வேண்டிய வருமானத்தினை பாதுகாக்கும் சவாலினை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மாற்றல் விலையிடல் பிரிவு பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்கள், தரவுத் தளம் மற்றும் மாற்றல் விலையிடல் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான ஏனைய விடயங்களையும் கொண்டிருக்கும். தேவையற்ற வீண் விரயங்களைத் தவிர்ப்பதற்கு உள்நாட்டு மாற்றல் விலையிடலினை நிர்வகித்தல் இலகுபடுத்தப்படும்.

588.பிரதேசய செயலக மட்டத்தில் வருமான சேகரிப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

589.ஆண்டொன்றுக்கு ரூபா 25 மில்லியனுக்கு அதிகமான வரி செலுத்தும் தனிப்பட்ட வரி செலுத்துநர்களுக்கு, விமான நிலையத்தில் விசேட பிரமுகக் கருமபீடம், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் முன்னுரிமைக் கவனிப்பு, அரச நிகழ்வுகளுக்கான விசேட அழைப்பிதழ்கள், கௌரவ சனாதிபதி மற்றும் கௌரவ பிரதமருடன் வருடத்திற்கு ஒருமுறை பாராட்டு நிகழ்வுகள் போன்ற விசேட சலுகைகள் வழங்கப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வரி செலுத்துநர்களுக்கு மதியுரை சேவைகள் வழங்கப்படுவதுடன் திறமையான அலுவலர்களின் மூலம் சிறந்த உதவிக் கருமபீடங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

590.வருமான வரி விபரத்திரட்டு ஒருபக்க ஆவணமாக இலகுபடுத்தப்படுவதுடன் வரி செலுத்துநர்களுக்கு இலகுவான முறையில் பூரணப்படுத்துவதற்கு முடியுமாக இருத்தல் உயர்ந்த வரி இணக்கப்பாட்டுக்கு காரணமாக அமையும்.

591.வரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் பிழையான பொருள்கோடல் என்பவற்றினை தவிர்க்கும் வகையிலான சட்ட ஏற்பாடுகள் தேவையான வரிச் சட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படும்.

- முகாமைத்துவக் கட்டணம் காப்புறுதித் தொழிற்துறைக்கு வரையறுக்கப்படுவதுடன் திறத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட முகாமைத்துவக் கட்டணம் புறக்கணிக்கப்படுதலும் வேண்டும்.

- வரிசேகரிப்பு மற்றும் வரி செலுத்துநர் இணக்கப்பாடு மற்றும் வரி உத்தியோகத்தர்களை வலுப்படுத்தும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் தற்பொழுது காணப்படுகின்ற குற்றவியல் தொடர்பான கட்டமைப்பு கவனத்திற் கொள்ளப்படும் வகையில் தேவையான இடங்களில் திருத்தங்களும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களில் மூன்று மடங்கு குறைப்பானது தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் விளைவு அபிவிருத்தி காணப்படுமாயின் மாத்திரம் அனுமதிக்கப்படும்.

- வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டி விலக்களிப்பு வெளிநாட்டு வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களின் வட்டிமீது வரையறுக்கப்படும்.

- வரி விடுமுறைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் பங்கு லாபம் மீதான சில விலக்களிப்புகள் நீக்கப்படும்.

- ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு மீளளிப்புக் கோரிக்கை காணப்படுமாயின், அது தொடர்பில் மூன்று வருடங்களுக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல் அத்தொகையானது எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய வரிக் கொடுப்பனவுக்கெதிராக பதிவளிப்பு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

**வரிச் சட்டங்களின் மீள்வரைவு**

592.நாட்டில் தற்பொழுது காணப்படும் வரிச் சட்டங்கள் பாரம்பரிய பிரித்தானிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட எளிதில் கையாளமுடியாத சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இலங்கையில் வரிக்கொள்கை ஒன்றினை செயற்படுத்துவதற்கான தடைகளாக சிக்கல் நிறைந்த வரிச் சட்டங்கள் இனங்காணப்பட்டள்ள. இது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதுடன் வரிக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கின்றது. எனவே, தெளிவானதும் முரண்பாடற்றதுமான இலகுவான வரிச் சட்டங்களை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் வரிச் சட்டங்களை மீள வரைய வேண்டிய தேவை காணப்படுகின்றது. நவீன வரிமுறைமைக்கு தேவையான விடயங்களைக் கொண்டதான இச் சட்ட மறுசீரமைப்பு வரி செலுத்துநர்கள் இலகுவாக விளங்கிக் கொள்வதற்கு உதவியாக இருப்பதுடன் சட்டங்களில் காணப்படும் மயக்க நிலைமையினால் உருவாக்கப்பட்டுள்ள ஓட்டைகளை இல்லாதாக்கும் அதேவேளை வரி நிருவாகத்தினையும் வலுப்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும். இந் நோக்கத்துக்காக சர்வதேச நாணய நிதியத்திலிருந்து தொழில்நுட்ப உதவிகளை நாம் பெற்றுக்கொள்வதுடன் 2016 இன் இறுதியளவில் இக் கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

**வரிமேன்முறையீட்டு ஆணைக்குழு**

593.வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவின் சுயாதீனத்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மேன்முறையீட்டு நடவடிக்கைகள் இயற்கை நீதிக் கோட்பாட்டினை பின்பற்றும் வகையில் அமைந்திருக்கும்.

**இலங்கைச் சுங்கம்**

594.கௌரவ சபாநாயகர் அவர்களே, நீங்கள் அறிந்து கொண்டதற்கிணங்க இலங்கைச் சுங்கமானது மொத்த அரச வருவாயில் 60 சதவீதத் தை சேகரிக்கிறது. எனவே சுங்கத் திணைக்களத்தைப் பலப்படுத்துவது பிரதான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அத்தோடு இலங்கைச் சுங்கம் சர்வதேச வர்த்தகத்துக்கு வசதியளிப்பதில் பிரதான நடிபங்கை வகிக்கிறது. இந்த அடிப்படையில் ஏற்கனவே இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் 24 மணி நேர சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

595.ஏறக்குறைய 80 சதவீதமான எமது இறக்குமதிப் பொருட்கள் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட உள்நாட்டுக் கைத்தொழிலுக்கான உள்ளீடுகளாகும். இவ்வாறான முதலீட்டாளர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்வாய்ந்த முறைமைகளைக் கருத்திற்கொண்டு பொருட்களையும் உபகரணங்களையும் ஏனைய கருவிகளையும் இறக்குமதி செய்யும்போது ஒரே கூறையின்கீழ் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றை அமைத்து அதனூடாக தேவையான அனுமதிகள், விடுவிப்புகள், ஒப்பந்தங்கள் அனைத்தையும் அவற்றினூடாகச் செய்து கொடுப்பதற்கான ஒற்றை வரைவுத் தளங்கள் நிறுவப்படும். இக் கருமங்களை விரைவுபடுத்துவதற்காக உரிய திணைக்களங்களின் தகவுடைய அதிகாரிகள் அதாவது ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கைக் கட்டளைப் பணியகம், நுகர்வோர் அதிகாரசபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், வர்த்தகத் திணைக்களம், கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் போன்றவை ஒரே கூறையின் கீழ் நிறுவப்படும்.

596.மேலும் சுங்கத் திணைக்களத்தில் இருந்து பொருட்களை விடுவிக்கும் போது ஏற்படும் சேதங்களைக் குறைத்து செயற்றிறனை மேம்படுத்துவதற்காக புதிய ஸ்கான் இயந்திரங்கள் சுங்கத் திணைக்கள விடுவிப்பு பகுதிகளில் பொறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சுங்கத் திணைக்களத்தின் நம்பகத் தன்மையை மேம்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

597.2016 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இருந்து சுங்க நடவடிக்கைகளில் மனித ஈடுபாட்டினைக் குறைப்பதற்காகவும் வர்த்தக வசதிகளை மேம்படுத்துவதற்காகவும். இறக்குமதிச் சுங்கப் பிரகடனங்கள் இலத்திரனியல் ஊடாகச் செயற்படுத்தப்படும். 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தகவு வழங்கும் அரச முகவராண்மைகள் நேரடியாக இலங்கைச் சுங்கத்துடன் தொடர்பு படுத்தப்படும்.

598.அனைத்து சுங்க விடுவிப்பு மையங்களிலும் ஊஊவுஏ கமராக்கல் பொருத்தப்பட்டு அதனூடாக வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதோடு ஊழல் மோசடிகளையும் ஒழிக்க முடியும். 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் பிணைக்குட்பட்ட களஞ்சியசாலைகள் குறைந்தது 50,000 சதுர அடிகளைக் கொண்டதாகக் காணப்படல் வேண்டும். தற்போது பேணப்படும் களஞ்சியசாலைகள் மேற்படி தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வியாபிக்கப்படல் வேண்டும்.

599.2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் வகையில் புதிய மதிப்பீட்டு முறையொன்றை நடைமுறைப்படுத்தி அதனூடாக வாகன உதிரிப்பாகங்களையும் ரயர்கள், தரையோடுகள் போன்றவற்றின் பெறுமதியை முறையாக மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

600.2016 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரம் குறைந்த பொருட்களை இறக்குமதி செய்யும் இடமாக (னுரஅிபெை பசழரனெ) மாறுவதனைத் தடுப்பதற்காக பாவிக்கப்பட்ட சலவை இயந்திரங்கள், பாவிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் பாவிக்கப்பட்ட கைத்தொலைபேசிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதிலிருந்து முற்றாகத் தடை செய்யப்படும்.

601.2016 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து சுங்கத் திணைக்கள நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவும் வருவாயைத் தக்கவைத்துக் கொள்ளவும் அனைத்து வளமையான இறக்கமதியாளர்களும் சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

602.தீர்வையற்ற கடைத்தொகுதிகளை துறைமுகங்களிலும் விமான நிலையங்களிலும் நடாத்துவோர் வெளிநாட்டுப் பங்காளருடன் சேர்ந்து அவற்றைக் கொண்டு நடாத்துதல் வேண்டும். அதன்படி உள்நாட்டு வர்த்தகர்கள் இவ்வாறான வியாபாரத்தில் ஈடுபட விரும்பின் வெளிநாட்டுப் பங்காளருடன் சேர்ந்தும் வெளிநாட்டவர்கள் உள்நாட்டு பங்காளருடன் சேர்ந்தும் செயற்படுதல் வேண்டும்.

603.ஏற்றுமதி மற்றும் கொள்கலன் மாற்றிஏற்றல் வியாபாரத்திலும் ஈடுபடுவோரின் வசதிகளை ஊக்குவிப்பதற்காக பாதுகாப்பான, விரைவான, முறையான வசதிகளை அதிகரிப்பதற்காகவும் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் சுங்க அதிகாரிகளை எமது சுங்க அதிகாரிகளோடு கைகோர்த்து செயற்படுமாறும் நான் அழைப்பு விடுக்கின்றேன். இதன் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கான ஏற்றுமதியும் கொள்கலன் மாற்றி ஏற்றும் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படும்.

604.இன்றைய சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளின் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு நடைமுறையிலுள்ள சுங்கக் கட்டளைச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சுங்கச் சட்டமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### வீதி விபத்துக்களுக்கான கட்டணங்கள்

605.வீதி ஒழுக்கம் மிகவும் முக்கியமானதாகும். வீதி விபத்துக்களின் ஊடாக ஏற்படும் உயிர் இழப்புகளும் சொத்து இழப்புகளும் நாட்டுக்கு மீளளிக்கப்படாத பல பில்லியன் ரூபாய்களை கிரயமாகக் கொண்டுள்ளது. இந் நிலையில் வீதி விபத்தொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கான நட்டஈட்டுக்கு மேலதிகமாக 10,000 ரூபாவினை தண்டப்பணமாக விதிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### முதன்மை உற்பத்திகளுக்கான ஊக்குவிப்புகள்

606. 2018 ஆம் ஆண்டினை எஸ்பெஸ்ரஸ் கூறைத் தகடுகளை முற்றாகத் தடுக்கும் ஆண்டாக அதிமேதகு சனாதிபதி ஏற்கனவே பிரகடனப்படுத்தியுள்ளார். எனவே 2018 ஆம் ஆண்டாகும் போது சுற்றாடல் நட்புக் கூறைத்தகடுகளைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். எனவே சிவப்பு களிமண் ஓடுகளைத் தயாரிக்கும் தொழிற்துறைக்கு அரைவாசி வரிவிடுமுறை மூன்றுவருட காலத்திற்கு வழங்கப்படும்.

### தைத்த ஆடைகள் மற்றும் பாதணிகளுக்கான இறக்குமதி வரி

607.வர்த்தக நாமம் பேணப்படும் உற்பத்திகளுக்கும் உள்நாட்டு உற்பத்திகளுக்குமிடையில் சமநிலையைப் பேணுவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படும் தைத்த ஆடைகள் மற்றும் பாதணிகளுக்கு உள்நாட்டு ஏற்றுமதி நோக்கிய கம்பனிகளுக்கு பொதுவானதொரு வரிவிகிதம் ஏற்புடையதாகும்.

**விஷேட நுகர்வுப் பொருள் அறவீடு**

608. உள்நாட்டு தயாரிப்புக் கைத்தொழிலை பாதுகாக்கும் நோக்குடன் மரக்கறி எண்ணெய்க்கு ஏற்புடையதான விஷேட நுகர்வுப் பெருள் அறவீட்டு வரி குறைக்கப்படும்.

**பன்முகப் பணியிலீடுபடும் அலுவலர்கள்**

609.பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பட்டதாரிகள் பன்முகப்பணியில் ஈடுபடும் அலுவலர்களாக பணிக்கமர்த்தப்படுவர். அவர்கள் பிரதேச செயலக மட்டத்தில் அரசாங்க வரி சேகரிப்பாளர்களாக விசேட பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

**கடன் பெறுகைகளின் வரையறைகள்**

610. அவசியமான அரசிறைச் சட்டக இணைப்பு IV இல் காட்டப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் காட்டப்பட்டுள்ள 2016 ஆண்டின் நிதியாண்டுடன் தொடர்புடைய கடன் பெறுகைகளின் வரையறைகள் இணைப்பு II இல் காட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை**

611.எமது நாட்டில் உருவான தேசிய ஐக்கிய அரசாங்கத்தின் கன்னி வரவு செலவுத்திட்ட உரையானது நல்லாட்சி மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றின் அடிப்படையில், தேசிய பொருளாதாரக் கொள்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எமது நோக்கங்கள் எதிர்காலத்தில் உயர் நடுத்தர வருமானப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதற்கான எதிர்காலக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தவையாகும். இந்த முன்மொழிவுகளின் நலன் ஒரு சிலருக்கு மாத்திரமன்றி இலங்கை மக்கள் அனைவருக்கும் பரந்து செல்லும் என நான் உறுதியாக நம்புகின்றேன். சனவரி 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட “நூறு நாள் புரட்சி” முன்மொழிவானது மேலும் எமக்கு கௌரவத்தை சேர்த்துள்ளதுடன் குறிப்பிடத்தக்க அடைவுகளையும் எட்டியுள்ளது.

612.நாம் கடந்த காலத்தில் நடந்தவற்றை மறந்துவிட்டு எதிர்காலத்தினை நோக்கி பயணிக்க வேண்டியுள்ளோம். புதிய பரிணாமங்களுடனும் உத்வேகத்துடனும் நாம் எமது தேசத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

613.அவ்வாறு செய்வதற்கான தூர நோக்கினை நாம் கொண்டிருக்கின்றோம். தேசத்தினைக் கட்டியெழுப்புகின்ற தூர நோக்கானது ஒரே சீரானதாகும். அது பரந்துபட்டதல்ல. எமது முயற்சிகள் நாளைய எதிர்காலத்தினை சமைப்பதாக இருத்தல் வேண்டும். அதிதேகு சனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேன, கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எனது அமைச்சரவை சக நன்பர்கள் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆா.எச்.எஸ். சமரதுங்க மற்றும் அவரது அலுவலர்கள் மற்றும் இந்த வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளினை நிறைவு செய்வதற்கு பங்களிப்புச் செய்த ஏனைய அனைவருக்கும் நான் எனது நன்றி பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த முன்மொழிவுகள் சமூகத்திலுள்ள அனைத்து துறையினருக்குமான நன்மைகளையும் வாய்ப்புகளையும் தரக்கூடிய இதற்கு

முன்னர் என்றுமில்லாதவாறான புத்தாக்கக் கொள்கைகளை கொண்டுள்ளது. பல்வேறுபட்ட தனியாட்கள் மற்றும் நிறுவனங்களினால் அனுப்பி வைக்கப்பட்ட பல்வேறு பெறுமதியான முன்மொழிவுகளினை நாம் இத்துடன் இணைத்துள்ளோம். அத்துடன் அவர்கள் இதற்குக் காட்டிய சாதகமான அக்கறைக்கு நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்பொழுது நாம் இந்த முன்மொழிவுகள் செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியுள்ளது.

614.மேலும் அதிமேதகு சனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ சபாநாயகர், எனது அமைச்சரவை சக நண்பர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இப்பாராளுமன்றத்தில் இன்றைய தினம் சமூகமளித்ததற்காக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***எமது தாய் நாட்டிற்கு மும்மணிகளினதும் ஆசீர்வாதம் உண்டாவதாக.!***

வருமானமுன்மொழிவுகள் - 2016

| முன்மொழிவுகள் | | ரூபா.மில். |
|---|---|---|
| 1 | பங்குப் பறிமாற்றல்' அறவீட்டினை இல்லாதொழித்தல் | (2,500) |
| 2 | நிர்மானகைத்தொழில் உத்தரவாதநிதியஅளவீட்டினை இல்லாதொழித்தல் | (1,800) |
| 3 | உழைக்கும் போதுசெலுத்தும் வரிமற்றும் தனிநபர் வருமானவரியினைத் திருத்தல் | (4,000) |
| 4 | தாபனவரியினைத் திருத்தல் | (6,000) |
| 5 | வட்டிமீதானபிடிவரியினைநீக்குதல் | (8,000) |
| 6 | முத்திரைவரியினைதிருத்தல் | (3,500) |
| 7 | பெ.சே. வரியினைதிருத்தல் | (25,000) |
| 8 | தே.க. வரியினைதிருத்தல் | 90,000 |
| 9 | கட்டணங்கள் மற்றும் அறவீடுகளைவிதித்தல்/திருத்தியமைத்தல் | 75,000 |
| 10 | சொகுசுமற்றும் அரைச் சொகுசுவாகனவரியினை இல்லாதொழித்தல் | (1,500) |
| 11 | து.வி.ந.அ. அறவீட்டினைத் திருத்தல் | 30,000 |
| 12 | சுங்கத் தீர்வைமற்றும் செஸ் வரியினைத் திருத்தல் | 10,300 |
| 13 | மதுபானத் தயாரிப்புஉரிமம் கட்டணத்தினைத் திருத்தல் | 3,000 |
| 14 | மோட்டர் கார்களுக்கானஉற்பத்திதீர்வையில் அலகுவிகிதங்களைஅறிமுகப்படுத்துதல் | 20,000 |
| 15 | விமானமேறல் அறவீட்டினைத் திருத்துதல் | 2,000 |
| 16 | தொலைத் தொடர்புஅறவீட்டினைத் திருத்துதல் | 4,000 |
| 17 | மின்சார,மின்னியல் பொருட்கள் மற்றும் இயந்திரசாதனங்களுக்காகது.வி.அ.அறவீட்டினைக் குறைத்தல். | (2,000) |
| 18 | மோட்டார் வாகனங்களுக்காக புகை வெளியிடுதல் கட்டணமொன்றினைஅறிமுகப்படுத்துதல் | 18,000 |
| 19 | மதுசாரம்,புகையிலைமற்றும் கெசினோ என்பனவற்றிற்காக 25 %அதியுயர் வரியொன்றினைவிதித்தல். | 2,000 |
| 20 | பொருளாதாரசேவைக் கட்டணத்தினைத் திருத்துதல் | 7,000 |
| 21 | மதுபானம் மீதானஉற்பத்திவரிதீரடவையினைத் திருத்துதல் | 16,000 |
| **மொத்தம்** | | **223,000** |

*மூலம் :அரசிறைத் திணைக்களம்*

## செலவினமுன்மொழிவுகள் - 2016

| | முன்மொழிவு | ரூபா.மில் |
|---|---|---|
| 1 | விதை உற்பத்தியினை மேம்படுத்துதல் | 1,000 |
| 2 | சிறிய குளங்கள் ,நீர்பாசன கால்வாய்களை புனரமைத்தல் | 2,000 |
| 3 | களஞ்சியசாலைகளை கட்டுதல் | 1,000 |
| 4 | குளிரூட்டி அறைகளை நிர்மாணித்தல் | 2,000 |
| 5 | மீன்பிடி துறைமுகங்களை விரிவுபடுத்துதல் | 750 |
| 6 | விவசாய கால்நடைகள் மற்றும் மீன் பதனிடல் நிலையம் | 100 |
| 7 | உள்நாட்டு பால் மா தயாரிப்பாளர்களுக்கு வசதிகளை வழங்கல் | 1,000 |
| 8 | மீன் வளர்ப்பு நிலையங்களைக் கட்டுதல் | 100 |
| 9 | மீன் வளர்ப்பு வசதிகளை அதிகரித்தல் | 100 |
| 10 | லக் சதேச ஊடாக தகரத்தில் அடைக்கப்பட்ட மீனினை சலுகை விலையில் வழங்குதல் | 300 |
| 11 | இறப்பருக்கான பிரதான திட்டத்தினை செயற்படுத்துதல் | 100 |
| 12 | தெங்குச் செய்கையினை மறுசீரமைத்தல் | 250 |
| 13 | தேயிலை, இறப்பர், தெங்கு ஆராய்ச்சி நிறுவனங்களை பலப்படுத்தல் | 200 |
| 14 | சீனி மற்றும் பனை ஆராய்ச்சி நிறுவனங்களை பலப்படுத்தல் | 100 |
| 15 | வாசனைப் பொருட்களைத் தரப்படுத்துதல் | 150 |
| 16 | கறுவா ஆராய்ச்சி அலகு | 50 |
| 17 | கறுவா அபிவிருத்தி அதிகாரசபை | 50 |
| 18 | கறுவா பயிற்சிப் பாடசாலை | 50 |
| 19 | தேசிய விஞ்ஞான மன்றம் | 50 |
| 20 | 2500 கொத்தணிக் கிராமங்கள் நிகழ்ச்சித திட்டம்.( பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு ஒதுக்கீடு உள்ளடங்கலாக) | 21,000 |
| 21 | பொருளாதார வலயங்களைத் தாபித்தல். | 200 |
| 22 | தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 2,000 |
| 23 | வன சீவராசிகள் பாதுகாப்பு | 1,000 |
| 24 | நுண், சிறிய மற்றும் நடுத்தரதொழில் முயற்சியாளர் கடன் உத்தரவாத நிதியம் | 500 |
| 25 | முதன்மைக் கைத்தொழில்கள் | 2,000 |
| 26 | பொருளாதாரத்தினை டிஜிடல் மயப்படுத்துதல் | 10,000 |
| 27 | நில வங்கியினை தாபித்தல் | 500 |
| 28 | கிராமிய வீடமைப்பு | 4,500 |
| 29 | கைத்தொழில் திறன் அபிவிருத்தி நிர்மாணம் | 500 |
| 30 | சுற்றுளா திறன் அபிவிருத்தி | 100 |
| 31 | எம.ஐ.சீ.ஈமாநாட்டு மண்டபம் | 3,000 |
| 32 | பாரம்பரிய நகரம் என்ற வகையில் காலி கோட்டையினை அபிவிருத்தி செய்தல் | 500 |
| 33 | நிதி நிறுவன மீள்கட்டமைப்பு நிறுவனத்திற்கான சம பங்கு மூலதனம் | 10 |
| 34 | சிரேஷ்ட பிரசைகளுக்கான வட்டி மானியம் | 1,500 |
| 35 | இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் நாணய சபையினை பலப்படுத்துதல் | 100 |
| 36 | முறி விடுவிப்பு நிலையமொன்றினைத் தாபித்தல் | 500 |
| 37 | ஆசிரியர் பயிற்சிநிகழ்ச்சித் திட்டம். | 1,000 |
| 38 | ஆசிரியர்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 2,000 |
| 39 | பாடசாலைகளுக்கான துப்பரவேற்பாட்டு வசதிகள் | 4,000 |
| 40 | பாடசாலைகளுக்கு மின்சாரம் வழங்குதல் | 2,000 |
| 41 | ஆரம்பப் பாடசாலைகளை தரமுயர்த்துதல் | 10,000 |
| 42 | 1000 இரண்டாந் தரப் பாடசாலைகளுக்காக வசதிகளை வழங்குதல் | 15,000 |
| 43 | 1360 பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல். | 30,000 |
| 44 | பெருந்தோட்டப் பாடசாலைகள் 25 இனை தரமுயர்த்துதல் | 250 |
| 45 | பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியினை மேம்படுத்தல் | 450 |
| 46 | பற் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் | 250 |
| 47 | மஹாபொல பல்கலைக்கழகத்தினைத் தாபித்தல் | 3,000 |
| 48 | Wifi வசதிகள் மற்றும் மடிக்கணணி கொள்வனவுக்கான உதவி | 300 |
| 49 | பௌத்த,பாலி பட்ட மேற்படிப்பு நிறுவகம் | 500 |
| 50 | பல்கலைக்கழக உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 6,000 |
| 51 | கணக்காய்வியல் திறன் அபிவிருத்தி | 30 |
| 52 | தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | 3,000 |
| 53 | இளைஞர்களை வலுவூட்டுதல் | 3,000 |
| 54 | குருதி சுத்திகரிப்பு நிலையங்கள் | 6,500 |
| 55 | பொலன்நறுவையில் சிறுநீரக மருத்துவமனை | 2,000 |
| 56 | 03 புற்றுநோய் மருத்துவமனைகளைத் தாபித்தல் | 3,000 |
| 57 | அநுராதபுர,யாழ்பாணம் மற்றும் குருணாகல மருத்துவமனைகளை தரமுயர்த்துதல் | 3,000 |
| 58 | சுகாதார உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் | 250 |
| 59 | ஜயவர்தனபுர மருத்துவமனையினை திருத்தியமைத்தல் | 1,500 |
| 60 | ஜயவர்தனபுர மருத்துவமனை தாதியர் படசாலையினை மேம்படுத்தல் | 2,500 |

| | முன்மொழிவு | ரூபா.மில் |
|---|---|---|
| 61 | பக்கவாத நோய் சிகிச்சையளிப்பு நிலையங்களை அமைத்தல் | 5,000 |
| 62 | புற்றுநோய், சிறுநீரக நோய் மற்றும் டெங்கு தெடர்பான ஆராய்ச்சி | 250 |
| 63 | புத்தாக்க முடுக்கியினை உருவாக்கல் | 100 |
| 64 | நுனசல நிலையங்களைத் தரமுயர்த்துதல் | 100 |
| 65 | புலமைச் சொத்து உரிமைகள் | 100 |
| 66 | முதியோருக்கான தேசிய பேரவை | 10 |
| 67 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | 100 |
| 68 | சிறுவர பராமரிப்பாளர் பயிற்சகளை அங்கீகரித்தல் | 50 |
| 69 | பொலிஸ் நிலையங்களைத் தாபித்தல் | 1,000 |
| 70 | போக்குவரத்துப் பொலீஸாருக்கான பயிற்சிகள் | 100 |
| 71 | பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகள் நீக்குதல் | 3,000 |
| 72 | வலையமைப்பு தொடர்பாடல்கள் பொலிஸாருக்கு வழங்குதல் | 250 |
| 73 | லக் சதேச விநியோக வலைப்பின்னலினை மேம்படுத்தல் | 1,000 |
| 74 | உள்நாட்டு இறைவரி,மதுவரி,தபாற் திணைக்களம் மற்றும் தேசிய லெத்தர் சபை என்பனவற்றிற்காக புதிய கட்டடம் | 2,000 |
| 75 | ஆரச துறை கணக்காளர்களுக்கு தொழிற்தகைமைகளைவழங்குதல் | 50 |
| 76 | விசேட செயற்பாடுகள் தொடர்பான அமைச்சுக்கான ஒதுக்கீடு | 150 |
| 77 | வெளிநாட்டு தூதுவராண்மை சேவையிலுள்ள உத்தியோகத்தரகளது பிள்ளைகளின் கல்விக்கு வசதியளித்தல் | 150 |
| 78 | யூலை வேலைநிறுததற்காரர்களுக்கான ஒட்டுமொத்தக் கொடுப்பனவு | 500 |
| 79 | நீதிமன்ற நிருவாகத்தினை மேம்படுத்தல் | 500 |
| 80 | சட்ட மறுசீரமைப்புக்கள் | 500 |
| 81 | நீதித்துறை பயிற்சி நிருவனங்களை வலுப்படுத்துதல் | 500 |
| 82 | தகவல் தொழில்நுட்பத்தினை தரவகைப்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டம் | 100 |
| 83 | முச்சக்கர வண்டிகளை எரிபொருள் பாவனையிலிருந்து மின் பாவனைக்கு நிலைமாற்றுவதற்கான வட்டி மானியம் | 50 |
| 84 | போக்குவரத்து குறியீடாக்கிகளை அறிமுகப்படுத்துல் | 500 |
| 85 | கொழும்பு-அவசாவெள்ள புகையிரதப் பாதை | 1,500 |
| 86 | பஸ் மற்றும் புகையிரதப் போக்குவரத்தினை விரிவுபடுத்துதல், | 1,000 |
| 87 | யாழ்ப்பாண புகையிரதப் பாதையினை மேம்படுத்தல் | 200 |
| 88 | இந்து சமுத்திர கடல் விவகார கூட்டுத்தாபனம் | 50 |
| 89 | கைத்தொழிற் பேட்டைகள் மற்றும் விவசாய தொழில்நுட்பவியலினை மேம்படுத்தல் | 500 |
| 90 | வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல் | 15,000 |
| 91 | கோட்டா - கடுவலை வீதியினை உயர்த்தப் பெற்ற வீதியாக்கல் | 10,000 |
| 92 | கோட்டை நுளைவு வீதி | 4,000 |
| 93 | வடக்கு-கிழக்கு நெடுஞ்சாலை | 1,000 |
| 94 | நீர் வழிப் போக்குவரத்து | 250 |
| 95 | யான் ஓயா கருத்திட்டம் | 1,000 |
| 96 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி | 10,000 |
| 97 | நகர்புற அபிவிருத்தி | 2,500 |
| 98 | தென் மாகாண அபிவிருத்தி | 1,000 |
| 99 | வடமேல் மாகாண அபிவிருத்தி | 2,500 |
| 100 | புபுதமு பொலன்நறுவை நிகழ்ச்சித் திட்டம் | 10,000 |
| 101 | வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தி | 14,000 |
| 102 | தோட்ட உட்கட்டமைப்பு அபிவருத்தி | 1,000 |
| 103 | உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்தல் | 1,500 |
| 104 | கலைஞர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான ஆரம்ப மூலதனம் | 25 |
| 105 | எக்ஸிம் வங்கிக்கான ஆரம்ப மூலதனம் | 50 |
| 106 | விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்தல் | 1,000 |
| 107 | இலங்கை தராதரங்கள் நிறுனம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பவற்றை பலப்படுத்தல் | 200 |
| 108 | இயற்கை அனர்த்தங்களுக்கெதிரான காப்புறுதி | 300 |
| 109 | கொள்கை வகுப்பு மற்றும் பகுப்பாய்வு | 200 |
| 110 | இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கான வசதிகள் | 500 |
| 111 | கைத்தெழில் வலயங்களை அபிவிருத்தி செய்தல் | 700 |
| 112 | நட மாடும் மருத்துவமனைகள் | 200 |
| 113 | ஜே.ஆர் ஜயவர்தன மத்திய நிலையம் - கொள்திறன் அபிவிருத்தி | 50 |
| 114 | பாராளுமன்ற அலுவல்களை மீள்கட்டமைப்பு செய்தல் | 250 |
| | மொத்தம் | 253,325 |

*ஆக்கம் - தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்*

பின்னிணைப்பு III

## மொத்தகடன்பெறுகைதேவைப்பாடுகள் - 2016

## (கணக்கீட்டுகொடுக்கல்வாங்கல்களுக்கானஏற்பாடுகள்)

| விடயம் | ரூபா.பில். |
|---|---|
| மொத்தவருமானபெறுகைதேவைப்பாடுகள் - 2016 | 2,005 |
| மீள் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாகமொத்தகொடுப்பனவுகள் | 3,389 |
| முற்பணக் கணக்குதொழிற்பாடுகளுக்கானஏற்பாடுகள் | 5 |
| பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளில் கணக்குவேறுபாடுமீதானஆபத்துஏற்பாடு | 80 |
| அரசஉடமைதொழில் முயற்சிஐந்தொகைமீள்கட்டமைப்புக்கானமுறிகள் வழங்கல் | 120 |
| எதிர்பாராப் பொறுப்புக்கள் | 30 |
| அரசாங்கப் பிணையங்களின் புத்தக/காசுப் பெறுமதிதிருத்தம் | 80 |
| அரசாங்ககணக்குகளில் பதியப்படவேண்டியமொத்தகடன் தேவைப்பாடு | 1,699 |
| அவற்றின் மொத்தபடுகடன் கொடுப்பனவு | 649 |

*மூலம் - தேசியவரவுசெலவுத்திட்டதிணைக்களம் மற்றும் திறைசேரிசெயற்பாடுகள் திணைக்களம்*

## வரவுசெலவுத்திட்டசுருக்கம் (2012-2016)[1,2]

ரூபா.பில்.

| விடயம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 வ.செ.திட்டம் |
|---|---|---|---|---|---|
| **மொத்தவருமானமும் மானியங்களும்** | **1,118** | **1,204** | **1,264** | **1,478** | **2,047** |
| **மொத்தவருமானம்** | **1,102** | **1,188** | **1,254** | **1,468** | **2,032** |
| **வரிவருமானம்** | **909** | **1,006** | **1,050** | **1,284** | **1,584** |
| வருமானவரி | 173 | 206 | 198 | 249 | 233 |
| பொருட்கள் சேவைகள் மீதானவரி | 520 | 572 | 616 | 786 | 993 |
| வெளிநாட்டுவர்த்தகம் மீதானவரி | 217 | 228 | 236 | 248 | 358 |
| **வரியல்லாதவருமானம்** | **143** | **132** | **145** | **126** | **378** |
| **மாகாண சபை வரிபங்குகளும் வருமானமாற்றல்களும்** | **50** | **51** | **59** | **58** | **70** |
| **மானியங்கள்** | **16** | **16** | **9** | **10** | **15** |
| **மொத்தசெவினம்** | **1,607** | **1,720** | **1,855** | **2,153** | **2,787** |
| **மீண்டெழும்** | **1,181** | **1,256** | **1,382** | **1,648** | **1,928** |
| மா.சபைகள் உள்ளடங்களாகசம்பளங்களும் கூலிகளும் | 386 | 432 | 486 | 615 | 658 |
| மா.சபைகள் உள்ளடங்களாக ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 135 | 104 | 141 | 163 | 313 |
| வட்டி | 408 | 444 | 436 | 492 | 520 |
| உதவுதொகைகளும் மாற்றல்களும் | 251 | 276 | 318 | 378 | 437 |
| **அரசாங்கமுதலீடு** | **444** | **481** | **487** | **517** | **868** |
| கல்வியும் சுகாதாரமும் | 46 | 56 | 78 | 98 | 210 |
| உட்கட்டமைப்பு | 398 | 425 | 408 | 419 | 658 |
| ஏனைய | -18 | -17 | -14 | -12 | -9 |
| **வருமானமிகை(+)/பற்றாக்குறை(-)** | **-80** | **-68** | **-128** | **-180** | **104** |
| **ஆரம்பமிகை (+)/பற்றாக்குறை(-)** | **-80** | **-72** | **-155** | **-183** | **-220** |
| **வ.செ.தி.மிகை(+)/பற்றாக்குறை (-)** | **-489** | **-516** | **-591** | **-675** | **-740** |
| **மொத்தநிதியளிப்பு** | **489** | **516** | **591** | **675** | **740** |
| **மொத்தவெளிநாட்டுநிதியளிப்பு** | **181** | **68** | **212** | **156** | **183** |
| **வெளிநாட்டுபெறுகைகள் தேறிய** | **365** | **179** | **329** | **453** | **519** |
| கருத்திட்டமற்றும் நிகழ்ச்சித்திட்டகடன்கள் | 235 | 187 | 246 | 258 | 309 |
| வெளிநாட்டுவர்த்தகம் | 130 | -8 | 83 | 195 | 210 |
| படுகடன் மீள்கொடுப்பனவு | -184 | -111 | -118 | -297 | -336 |
| **மொத்தஉள்நாட்டுநிதியளிப்பு** | **308** | **448** | **380** | **519** | **557** |
| வங்கியில்லாதநிதியளிப்புகள் | 71 | 95 | 252 | 110 | 275 |
| தி.முறிகள்,தி.உண்டியல்,வெளிநாட்டுமுதலீடு | 106 | 56 | 1 | 90 | 100 |
| வங்கிகடன் பெறுகைகள் | 132 | 297 | 127 | 319 | 182 |
| **வருமானம் மற்றும் மானியம்/மொ.உ.உ.(%)** | **12.8** | **12.6** | **12.3** | **13.1** | **16.4** |
| மொத்தவருமானம்/மொ.உ.உ. (%) | **12.6** | **12.4** | **12.2** | **13.0** | **16.3** |
| வரிவருமானம்/மொ.உ.உ. (%) | 10.4 | 10.5 | 10.2 | 11.4 | 12.7 |
| வரியில்லாவருமானம்/மொ.உ.உ. (%) | 1.6 | 1.4 | 1.4 | 1.1 | 3.0 |
| மா.ச.வருமானபகிர்வுமாற்றப்பட்டவருமானம்/மொ.உ.உ. (%) | 0.6 | 0.5 | 0.6 | 0.5 | 0.6 |
| **மானியம்/மொ.உ.உ.(%)** | **0.2** | **0.2** | **0.1** | **0.1** | **0.1** |
| **செலவினம்/மொ.உ.உ. (%)** | **18.4** | **17.9** | **18.0** | **19.1** | **22.3** |
| நடைமுறைச் செலவினம்/மொ.உ.உ. (%) | 13.5 | 13.1 | 13.4 | 14.6 | 15.4 |
| வட்டியில்லாதவை/ மொ.உ.உ. (%) | 8.8 | 8.5 | 9.2 | 10.2 | 11.3 |
| வட்டி/ மொ.உ.உ.(%) | 4.7 | 4.6 | 4.2 | 4.4 | 4.2 |
| அரசாங்கமுதலீடு/மொ.உ.உ.(%) | 5.1 | 5.0 | 4.7 | 4.6 | 6.9 |
| வருமானமிகை(+)/பற்றாக்குறை(-)/மொ.உ.உ.(%) | -0.9 | -0.7 | -1.2 | -1.6 | 0.8 |
| ஆரம்பமிகை (+)/பற்றாக்குறை(-)/மொ.உ.உ. (%) | -0.9 | -0.8 | -1.5 | -1.6 | -1.8 |
| **வ.செ.தி.மிகை(+)/பற்றாக்குறை(-)/மொ.உ.உ. (%)** | **-5.6** | **-5.4** | **-5.7** | **-6.0** | **-5.9** |

*மூலம் : அரசிறைத் திணைக்களம்*

1. மாகாணசபைகளுக்கானமாற்றல் வருமானங்களும் செலவினங்களும் உள்ளடங்கலாக.
2. உத்தேசவருமானம் மற்றும் செலிவனம் உள்ளடங்கலாக.

**தொழில்நுட்பக் குறிப்புகள்**

**வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் 2016 – வரி நடைமுறை**

**வருமான வரி ( 2006ம் ஆண்டு 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்)**

**சலுகை வீத வரி**

**1.1.1 விவசாயம்**

**கம்பனியினால் மேற்கொள்ளப்படும் விதைகள் மற்றும் நாற்றுக்களின் அபிவிருத்தி :**

உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட விதைகள் மற்றும் நாற்றுக்களில் இருந்தான இலாபங்களின் மீது செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு5 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

*[ பிரிவு 16 ஆ திருத்தப்படும்]*

**சொட்டு நீர்ப்பாசனம், பச்சைய வீட்டுத் தொழில்நுட்பம் மற்றும் உயர் விளைச்சல் விதைகள்:**

சொட்டு நீர்ப்பாசனம், பச்சையவீட்டுத் தொழில்நுட்பம்மற்றும் **உயர் விளைச்சல் விதைகளைப்** பயன்படுத்தும் கமபனிகளின் விவசாய இலாபத்தில் இருந்து செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு 5 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

இந்நோக்கத்திற்காக பச்சையவீட்டுத் தொழில்நுட்பம், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் உயர் விளைச்சல் விதைகள் வரைவிலக்கணப்படுத்தப்படும்.

**பழங்கள் மற்றும் மரக்கறிக் கைத்தொழில்** :

பழங்கள் மற்றும் மரக்கறிகளை தகரப் பொதிப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரம் தொடர்பில் முற்படுத்தப்பட்ட தேய்மான விடுதொகை வழங்கப்படும்.

பிரிவு 25 மற்றும் 34 திருத்தப்படும்.

**1.1.2 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சிகளின் அபிவிருத்தி**

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிச் சபையில் பதிவுசெய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளைமேம்படுத்தம் பொருட்டு வர்த்தகத்தைக் கொண்டு நடாத்தும் மட்டம் வரையில் நிதி வழங்கும் தனியார் உரிமைப் பங்கு நிதியம் அல்லது கூட்டு முயற்சி மூலதனக் கம்பனிகளுக்கு அந்நிதி வழங்களில் இருந்தான இலாபங்களில் இருந்து செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு 5 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்ளுகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான (தற்போழுது இருக்கும் கம்பனியைப் பிரிக்காது அல்லது மீட்கட்டமைப்பு செய்யாது) கொத்தணியை உருவாக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் செயற்பாடுகளில் இருந்து வரும் இலாபங்களின் மீது செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு 3 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

இந்நோக்கத்திற்காகசிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி மற்றும் 'கூட்டு முயற்சி மூலதனக் கம்பனிகள் மற்றும் உரிமைப் பங்கு நிதியத்தின் செயற்பாடுகளை அடையாளம் காணல்'குறித்துரைக்கப்படும்.

1.1.3 **உந்துகைக்குரிய கைத்தொழில் ஊக்குவிப்பு:**உள்ளூரில் தயாரிக்கப்படும் செம்மண் கூரை ஓடுகளில் இருந்தான இலாபங்களின் மீது செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு 3 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

1.1.4 **ஏனைய துறைகளுக்கான சலுகைகள்**

யாரேனும் நபரொருவரினால் கீழ்வரும் செயற்பாடுகள் கொண்டு நடாத்தப்படும் பொழுது அதிலிருந்து எழும் இலாபத்தின் மீது செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு 5 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

i. முதியோர் அல்லது குழந்தைப் பராமரிப்பைநோக்கிற் கொண்டு சர்வதேச சான்றழிக்கப்பட்ட கற்கை நெறிகளை அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்ற ஏதேனும் கல்வி நிறுவனங்களாக இருத்தல்.

ii. முதியோருக்கான வீட்டு வசதிகள் கட்டுமானத்தில் ஈடுபடுபவர்கள்

iii. அரச சேவையாளர்களுக்கு, அரசுடன் இணைந்து வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

கூட்டங்கள், ஊக்குவிப்புகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் (MICE) என்பவற்றுக்காக விசேடமாக கூட்டிணைக்கப்பட்ட யாதேனும் கம்பனியொன்றினால் அத்தகைய நடவடிக்கையிலிருந்து ஈட்டப்படும் இலாபங்களின் மீது செலுத்தத்தகு வரியில் 50% குறைப்பு, அக்குறித்த கம்பனியின் வணிகச் செயற்பாடு ஆரம்பித்ததில் இருந்து 3 வருட காலங்களுக்கு வழங்கப்படும்.

ஏலவேயுள்ள தொழிற்சாலையை நவீனமயப்படுத்தல் ஊடாக ஏற்படும் விரிவாக்கத்தின் காரணமாக 1.4.2016ம் திகதியில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய கம்பனிகளுக்கு, அந்த இயைபான இலாபப்பகுதி மூன்று வருடகாலத்திற்கு அரைவாசி வரி விகிதத்தில் வரி விதிக்கப்படும்.

இந்நோக்கத்திற்காக வரையறைகள் குறித்துரைக்கப்படும்

எமது தேசிய பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சியில் பங்குபற்றுவதற்கு வழங்கப்பட்ட அறக்கொடைகள் ஊடாக,நாட்டின் உயர் கல்வியில் புரட்சியை ஏற்படுத்துவதில் பங்காளியாவதற்குஆட்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணப்படும் முக்கழிப்பனவுகள் எமது தேசிய பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் அறக்கொடைகளுக்கும் நீடிக்கப்படும்.

**நிர்மாணக் கைத்தொழில்** நடைமுறையில் உள்ள தேய்மான விடுதொகைக்கு மேலதிகமாக கடல் மண்ணை தூய்மைப்படுத்துவதற்கு அவசியமான இயந்திரத்தின் கைக்கொள்ளல் கிரயச் செலவானது, தகமைக்கொடுப்பனவாக அனுமதிக்கப்படும்.

முதலீட்டு ஊக்குவிப்பு

**1.2.1 புதிய அந்நியச் செலாவணி முகாமைத்துவச் சட்டம்:**

வெளிநாட்டு மூலதனங்களை வசதியளிக்கும் பொருட்டு புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். தேவையானவிடத்து உள்நாட்டு இறைவரிச் சட்டம், அம்முதலீடுகளுக்கும் மற்றும் வெளிநாட்டு அந்நியச் செலவாணி உள்வருவதற்கும் வருமான வரி விலக்களிப்பு வழங்குவதற்கு வசதியளிக்கும் பொருட்டு திருத்தப்படும்.

1.2.2 பிரஜை அல்லாதவர்களினால் அல்லது வெளிநாட்டுக் கம்பனிகளினால் உள்வரவு அனுப்புகையின் ஊடாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளில் இருந்து பெறப்படும் பங்கிலாப வருமானங்கள் வரி விலக்களிப்புக்குட்படும்.

1.2.3 **பின்தங்கிய பிராந்தியங்களுக்கான முதலீட்டுச் சலுகை** :

2015ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய சலுகைகளுக்குப் பதிலாக புதிய சலுகைகள் அறிமுகப்படுத்தப்படும்;

குறைந்தபட்சம் அமொிக்க டொலர் 10 மில்லியனை முதலீடாகக் கொண்ட அல்லது 500 புதிய தொழில்வாய்ப்புகளை (புதிய ஊ.சே.நி இலக்கங்களுடன்) உருவாக்கக்கூடிய உற்பத்தியில் (மதுபானம் அல்லது புகையிலை தவிர்ந்த) அல்லது சேவை வழங்குதலில் ஈடுபடும் ஓர் புதிய கம்பனி (தற்போழுது இருக்கும் கம்பனியைப் பிரிக்காது அல்லது மீட்கட்டமைப்பு செய்யாது) பின்தங்கிய பிராந்தியத்தில் உருவாக்கப்படுமாயின், அதன் வியாபார நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து 5 வருட காலப்பகுதிகளுக்கு செலுத்தத்தகு வரியில்

50% குறைப்பனவு செய்யப்படும்.

மேலும் தொழில்வாய்ப்பு 800ஐ விஞ்சுமாயின் குறித்த சலுகை 8 வருடங்களுக்கும்,அது கருத்திட்ட பூங்காவாயின் 10 வருடங்களுக்கும் நீடிக்கப்படும்.

*[பிரிவு 59ஐ, 59ஓ மற்றும் 59ஓ வின் கீழ் வழங்கப்பட்டுள்ள வரி சலுகைகள் வரித் திருத்தம் காரணமாக அவசியமற்றவையினால் நீக்கப்படும்.].*

**1.2.4**

பங்கு பரிவர்த்தனை சபையில் பட்டியலிடுவதற்கு, உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் காணப்படும் 50% குறைப்பு தொடர்பாக தற்போதுள்ள இறுதித்திகதியான 01 ஏப்பிரல் 2017 கீழ்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது. :

(i) கொழும்பு பங்குப்பரிவர்த்தனை சபையில் பட்டியலிடுவதற்கு 2 வருடங்கள்; அல்லது
(ii) வெளிநாட்டு பங்கு பரிவர்த்தனை சபையில் பட்டியலிடுவதற்கு 3 வருடங்கள் *[பிரிவு 59ஈ திருத்தப்படும்]*

**1.2.5** அரச பங்குகள் காணப்படும் பெருந்தோட்டக் கம்பனிகளின் தேயிலை அல்லது இறப்பர் பயிற்செய்கையில் இருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம் 01.04.2016ம் திகதியில் இருந்து 2 வருட காலப்பகுதிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

**1.2.6** **வரி விடுதலையும் விலக்களிப்புகளும்**

உபாயமார்க்க அபிவிருத்திச் சட்டமானது, அத்தகைய சட்டத்தின் கீழ் சலுகைகள் காணப்படுகினற தற்போதைய கம்பனிகளுக்கு பயனுறுதிவாய்ந்த வகையில் தொடரும். புதிய முதலீடுகள் தொடர்பில் உபாயமார்க்கச் சட்டத்திற்குப் பதிலாக 'புதிய முதலீட்டுச் சட்டம்' இயற்றப்படும்.

ஏதேனும் முதலீடுகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் நிதி அமைச்சரின் மேற்பார்வைக்கும் கண்காணிப்புக்கும் மிகத்தீவிரமாக உட்படுவதுடன், அமைச்சினால் விநியோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் பரிபாலிக்கப்படும். முதலீட்டுச் சபை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பன வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் அமுலாக்கம் மற்றும் வசதியளித்தல் என்பன தவிர புதிய வரி விடுமுறைகளை வழங்கமாட்டாது.

**ஏனைய மாற்றங்கள் / திருத்தங்கள்:**

**1.3.1** காப்புறுதி கைத்தொழிற்துறைக்கும் முகாமைத்துவக் கட்டணம் வரைவிலக்கணப்படுத்தப்படும்.

**1.3.2** ஆய்வு மற்றும் அபிவிருத்தி செலவுக்கான முக்கழிப்பனவு தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் விளைச்சல் அபிவிருத்தி என்பன நிருபிக்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அனுமதிக்கப்படும்.

*[பிரிவு 25 மற்றும் 92 என்பன திருத்தப்படும்]*

**1.3.3**

வெளிநாட்டுக் கடன்களின் மீதான வட்டி விலக்களிப்பானது, வெளிநாட்டு வங்கிகளில் அல்லது நிதி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட கடன்களுக்கு மாத்தரம் வரையறுக்கப்படும்.

*[ பிரிவு 9 திருத்தப்படும்]*

**1.3.4**

வரி விடுதலைக் காலத்தின் பின்னரான பங்கிலாபம் மீதான சில வரி விலக்களிப்புகள் நீக்கப்படும்.

*[ பிரிவு 10 திருத்தப்படும்]*

**1.3.5**

01 ஏப்பிரல் 2016ம் திகதியில் ஆரம்பிக்கும் யாதேனும் வரி மதிப்பாண்டுக்கான வரி மீளளிப்புக் கோரிக்கையானது குறித்த மீளளிப்பு கோரிக்கையில் இருந்து 3 வருட காலப்பகுதிக்குள் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்விதம் இறுதித் தீர்மானம் எட்டப்படாதவிடத்து குறித்த மீளளிப்பு எதிர்கால குறித்த வரிப் பொறுப்புக்கு எதிராக எதிரீடு செய்யப்படும்.

[சட்டத்தின் உரிய ஏற்பாடுகள் திருத்தப்படும்*]*

**1.3.6**

- வரி செலுத்துனர்கள் மற்றும் வரித் தொழில்புரியுனர்களின் வரி சேகரிப்பு மற்றும் வரி இணக்கப்பாடு என்பவற்றை பலப்படுத்தவதற்காகவும்: மற்றும்
- 'மாற்றல் விலை' உரிய அமுலாக்கத்திற்காகவும்

தண்டனை ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும்.

**1.3.7** வருமான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையை அமுல்படுத்தவதற்கு உரிய திருத்தங்கள் (அவசியமான இடங்களில்) கூட்டிணைக்கப்படும்.

**1.3.8**

AAT உறுப்பினர்களைச் சேர்த்ததன் மூலம்பிரிவு 107இன் தேவைக்காக விரிவாக்கப்பட்ட 'அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்' எனும் பதம் 'ரூபா 100 மில்லியனை விஞ்சாத புரள்வு' என கணக்காய்வு பரப்பெல்லையை வரையறுப்பதன் மூலமும் அத்துடன், நடைமுறையில் உள்ள பொருத்தமான ஒழுங்குபடுத்தல் முறைமையுடன் ஒத்திசைவாக, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் பணிகளை முன்னெடுத்தச் செல்வதற்கு அவசியமான புலமையை தொடர்புடைய அத்தனிநபர் பெற்றுக்கொண்டார் என திருப்திப்பட்டவாறாக உள்நாட்டு ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் மீள்நோக்கப்படும்.

*[ பிரிவு 107 திருத்தப்படும்]*

**1.3.9** உள்நாட்டுகொடுக்கல் வாங்கல்கள் மீதான மாற்றல் விலை நிர்வாகம் இலகுபடுத்தப்படுவதுடன்,இணைந்த செலவுகள் இடம்பெற்றுள்ளமையை கவனத்தில் கொண்டு பரப்பெல்லையை வரையறுத்துவிடயங்கள் குறித்துரைக்கப்படும்.

*[ பிரிவு 104 மற்றும் 104 அ திருத்தப்படுவதுடன், உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்.]*

**1.3.10** ரூபா 25 மில்லியன் அல்லது அதற்கு மேல் வரி செலுத்தும் தனிநபர்களுக்கு விசேட வரப்பிரசாதங்கள் வழங்கப்படும். அவ்வரிப்பிரசாதங்கள் தொடர்பில் ஓர் வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ஒழுங்குபடுத்தப்படுவதுடன், தேவையான சட்ட ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்படும்.

**1.3.11** வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புச் செயன்முறையின் கீழ், கழிப்பனவு ஏற்கனவே செலவாக காணப்படுகின்றமையால், வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் கைக்கொள்ளல் அல்லது இணைவுக் கிரயத்துடன் தொடர்புடைய ஆகுசெலவுகள் மீது தகைமைக் கொடுப்பனவு நிவாரணம் அறிமுகப்படுத்தப்பட்டமையானது நீக்கப்படுகின்றது.

*[பிரிவு 34 பின்னோக்கித் திருத்தப்படும்.]*

**வருமான வரி நடைமுறையை இலகுபடுத்தல்**

வருமான வரிக் கட்டமைப்பை இலகுபடுத்தும் பொருட்டு கீழ்வரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**(i)** வரி வீதக் கட்டமைப்பானது இரு வரி வீதங்களுக்கு வரையறுக்கப்படுவதுடன் நியம வீதம் 15% வீதமாகவும் மற்றும் உயர் வீதம் 30% வீதமாகவும் மாற்றியமைக்கப்படுகின்றது.

(அ) பின்வரும் இலாபங்கள் மற்றும் வருமானம் மீது உயர் வரி வீதம் (30%) பிரயோகிக்கத்தக்கது,:

- பந்தய மற்றும் சூதாட்டம்
- மதுபானம்
- புகையிலை
- காப்புறுதி, நிதிக் குத்தகை மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் உட்பட வங்கியியல் மற்றும் நிதித்துறை.
- தயாரிப்பு அல்லது சேவை வழங்கல் தவிர்ந்த மொத்த மற்றும் சில்லறை வியாபரம்

ஏனைய அனைத்துத்துறைகளும் நியம வீதமான 15% வீத வரிக்குட்படும்;

(ஆ) வரி விடுதொகை வருடமொன்றிற்கு ரூபா 2.4 மில்லியனாக (மாதாந்தம் ரூபா 2,00,000) அதிகரிக்கப்படுவதன் காரணமாக தனிநபர் மீது பிரயோகிக்கப்படக்கூடிய விருத்திமுறை வரி நீக்கப்படும். அத்துடன், மிகுதித் தொகையின் மீது நியம வரி வீதமான 15% வீதம் பிரயோகிக்கப்படும்;

(இ)மேற்குறிப்பிட்ட வரி முறைமை உழைக்கும் பொழுது செலுத்தும் வரியை செலுத்துவதற்குரிய ஊழியர்களுக்கும் மற்றும் சுயதொழிலாளர்களுக்கும் பிரயோகிக்கப்படும்.

(ஈ) புதிய வரி விடுதொகை குறுமட்டத்தைக் கருத்தில் கொண்டு, தனிநபர்கள், தர்ம தாபனங்கள் என்பவற்றின் நியதிச் சட்ட வருமானம் மற்றும் வரிமதி வருமானம் என்பனவற்றில் இருந்து மேற்கொள்ளப்படும் கழிப்பனவுகள் நீக்கப்படுகின்றன. எனினும், வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றில் ஏற்படும் நட்டங்கள் வரையறைக்குட்பட்டதாக கழிப்பதற்கு அனுமதிக்கப்படும்;

(உ) பின்வருவனவற்றைத் தவிர்ந்த உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இலாபங்கள் மீதான வரி விலக்களிப்பு நீக்கப்படுகின்றது:

- அரசாங்க ஊழியர்களுக்கு திரட்டிய நிதியத்தில் இருந்து வழங்கப்படும் இளைப்பாற்றல் நன்மைகள் மற்றும் ஒய்வூதியக் கொடுப்பனவுகள்;
- வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் ஈட்டப்படும் அந்நியச் செலவாணியிலான உழைப்பு. அது இலங்கைக்கு அனுப்பபப்படுமாயின் மாத்திரம்;
- வெளிநாட்டு துாதரகங்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான விலக்களிப்பு;
- இளைப்பாறலின் போது விடுவிக்கப்படும் சேமலாப நிதி மீதி.
- நிபந்தனைகளுக்குட்பட்டதாக தொழில் இழப்பு நட்டஈடு

ஏனைய அனைத்து பணம் மற்றும் பணமல்லாத நன்மைகள (ஊழிய நன்மைகளாக கருதப்பட்டவை) வரியற்ற விடுதொகையை விஞ்சுமாயின் வருமான வரிக்குட்படும்.

(ஊ) ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியதருநரின் கீழ் தொழில்புரியும் ஊழியர்களின் அம்மேலதிக ஊழிய வருமானம் 15% வீதத்தில் வரி விதிப்புக்குட்படும்.

(எ) பங்குடமையாளர் மீதான வரியும் இதற்கமைவாக சீராக்கப்படும்.

(ஏ) தற்போது வங்கி அல்லது நிதியில் நிறுவனங்களினால் பண வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி மீது அறவிடப்படும் 2.5% வீத நிறுத்தி வைத்தல் வரி அகற்றப்படுவதுடன், அது அந்நபர்களின் நியதிச்சட்ட வருமானமாகக் கருதப்படும்.

(ஐ) சிரேஸ்ட பிரஜைகளுக்கு(60 வயதிற்கு மேல்) வங்கி அல்லது நிதியில் நிறுவனங்களினால் பண வைப்புக்களின் மீதான வட்டிக்கு வழங்கப்பட்ட வரி விலக்கு மாற்றமின்றிக் காணப்படும்

(ஒ) சட்டத்தின் பிரிவு 95ன் படி நாட்டிற்கு வெளியேயான

தனிநபர்களது வைப்பில் இருந்தான வட்டி வருமானத்தின் மீது 15% வீத நிறுத்தி வைத்தல் வரி பிரயோகிக்கப்படும். எவ்வாறாயினும் , இலங்கை அரசுடன் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று காணப்படின் அவ்வொப்பந்த வீதம் பிரயோகிக்கப்படும்.

**(ii)** பிரிவு 7இன் கீழ் சில அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வரி விலக்குகள் மற்றும் பிரிவு 13இன் கீழான பல்லின வரி விலக்களிப்புகள் நீக்கப்படும்.

**நிறுவன ரீதியான வரி விலக்களிப்புகளை அகற்றுதல்:**

- சர்வதேச நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வரி விலக்களிப்பு ஏதேனும் கட்டண அறவீடு அல்லது ஏதேனும் வேறு வகையிலான பொது மக்களின் பங்களிப்பு என்பவற்றில் இருந்து எழும் மூலங்களில் இருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் தவிர்ந்த ஏனைய இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு மட்டுப்படுத்தப்படும்.;

- அரச திணைக்களங்கள், வெளிநாட்டு அரசுகள், பல்கலைக் கழகங்கள், கூட்டுறவுச்சங்கங்கள், நாணயச் சபை உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கி, தர்ம தாபனங்கள் (நிபந்தனைகளுக்கு அமைய) மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய உள்நாட்டு நிறுவனங்களுக்கு தற்போது பிரயோகிக்கப்படும் வரி விலக்களிப்பானது நீக்கப்படும்.;

**பல்லின விலக்களிப்புகளின் நீக்கல்:**

கீழ்வரும் விலக்களிப்புகள் நீக்கப்படும்:

- இலங்கையினுள் ஏதேனும் துறைமுகத்தை நிர்மாணிக்கும் ஏதேனும் தொழில்முயற்சியொன்றினை உருவாக்கும் தொழிலில் இருந்து ஒரு ஆளுக்கு எழும் இலாபம் மற்றும் வருமானம்.

- ஏதேனும் ஒரு ஆளுக்கு விளையாட்டு மைதானம், அரங்கம் அல்லது விளையாட்டுப் பல்தொகுதி என்பவற்றின் நிர்வாகத்தில் இருந்து எழும் இலாபம் மற்றும் வருமானம்.

- யாதேனும் இலாபங்களுக்கு இரட்டை வரி விதிப்பு நிவாரணத்தை வழங்குகின்ற, இரட்டை வரித் தவிர்ப்பு ஒப்பந்தத்தை இலங்கைக்கும் மற்றைய நாட்டுக்கும் இடையில் அந்த மற்றைய நாட்டில் செலுத்தத்தகு வரியின் மீது அல்லது அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானத்தில் அம்மற்றைய நாட்டில் வரியைச் செலுத்த தேவையற்ற, வலுவில் கொண்டிராதஇலங்கைக்கு வெளியே இருந்து ஏதேனும் ஒரு கம்பனி, பங்குடமை அல்லது ஆட்கள் குழுமம் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர் லயனஸ் அல்லது வரையறுக்கப்பட்ட மிகின் லங்கா தனியார் நிறுவனம் என்பவற்றின் விசேட வேண்டுகோளுக்கு அமைய அத்தகைய நிறுவனங்களுக்கு யாதேனும் கணணி மென்பொருள்

பயன்படும் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட யாதேனும் கொடுப்பனவில் இருந்து எழும் இலாபம் அல்லது வருமானம்.

- இலங்கையில் உள்ள ஏதேனும் துறைமுகத்தினுள், யாரேனும் ஆள் அல்லது பங்குடமையால் ஏதேனும் வியாபாரத்தை அத்தகைய துறைமுகத்தினுள்கொண்டு நடத்தும போது, வழங்கப்படும் ஏதேனும் சேவையில் இருந்தான இலாபம் மற்றும் வருமானம்.

- இலங்கையின் ஏதேனும் துறைமுக முனையின் செயற்பாட்டுக்கான ஏதேனும் தொழில்முயற்சியில் இருந்து யாரேனும் ஆளொருவருக்கு எழும் இலாபம் மற்றும் வருமானம்.

**பெறுமதி சேர் வரி (2002ம் ஆண்டு 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத் திருத்தங்கள்)**

தற்போது நடைமுறையில் உள்ள ஒற்றை வரி வீதம் கீழ்வருமாறு 3 வரி கட்ட வீதங்களுக்கு மாற்றப்படும்.பூஜ்ஜிய வீதம்0%, நியம வீதம் 8%, உயர் வீதம்12.5%.

பொருள் ஏற்றுமதி, வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் நாட்டுக்கு வெளியேயான சேவைகளுக்கான ஏற்பாடு– 0%

சேவைத்துறை – 12.5%

பண்டத் தயாரிப்பு அல்லது இறக்குமதி - 8% (8% வீத உள்ளீட்டு வரி

வரையறுத்தலுடன்)

தொலைதொடர்பாடல் உபகரணங்கள், இயந்திரங்கள், செம்பு வடம் உள்ளடங்கலாக தொலைதொடர்பாடல் துறைக்கான உயர்தொழில்நுட்ப உபகரணங்கள் இறக்குமதி செய்தல் தொடர்பில் தற்போது நடைமுறையில் வரி விலக்களிப்பு நீக்கப்படுகின்றது.

மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் (தயாரிப்பாளர் அல்லது இறக்குமதியாளர் தவிர்ந்த)பெறுமதி சேர் வரியில் இருந்து தவிர்க்கப்படும்.

குறுமட்டானது ஓர் காலாண்டுக்கு ரூபா 3 மில்லியன் அல்லது ஒரு வருடத்திற்கு ரூபா 12 மில்லியனாக மீள்திருத்தப்படும்.

**தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி [2009ம் ஆண்டு 09ம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் திருத்தங்கள்]**

3.1 தற்போது நடைமுறையில் உள்ள தேசததைக் கட்டியெழுப்பும் வரி 4% வீதமாக மீள்திருத்தப்படும்.

3.2 கீழ்வருவரும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் தற்கொழுது காணப்படும் விலக்களிப்புகள் நீக்கப்படும்

- தொலைதொடர்பு சேவைகள்
- மின்சார வழங்கல்
- உராய்வு நீக்கி எண்ணெய்
-

3. தற்போதுள்ள குறுமட்டம் ரூபா 3 மில்லியனாக மீள்திருத்தப்படுவதுடன், உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விற்பனைக்கு தயார்படுத்தப்படும் விவசாய உற்பத்தி தவிர்ந்த தற்போது ஏனையவற்றுக்கு வழங்கப்பட்ட விலக்களிக்கப்பட்ட

3 காலாண்டுக்கான குறுமட்டமான ரூபா 25 மில்லியன் நீக்கப்படுகின்றது.

**பங்குப் பரிவர்த்தனை வரி [ 2005ம் ஆண்டு 5ம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II திருத்தப்படும்]**

01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து பங்கு பரிவர்த்தனை வரி நீக்கப்படும்.

**நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி [2005ம் ஆண்டு 5ம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி III திருத்தப்படும்]**

01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதியக் வரி நீக்கப்படும்.

**சொகுசு மற்றும் அரைச் சொகுசு வாகன வரி [1995ம் ஆண்டு 16ம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II திருத்தப்படும்]**

01 ஏப்பிரல் 2016ம் திகதியில் இருந்து சொகுசு மற்றும் அரைச் சொகுசு வாகன வரி நீக்கப்படும்.

**பந்தய மற்றும் சூதாட்ட வரி (1988ம் ஆண்டு 40ம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட வரித் திருத்தங்கள்)**

**(i)** கசினோ களியாட்ட விடுதிக்குள் நுழையும் போது தற்போது செலுத்த வேண்டிய தனிநபருக்கான நுழைவுக் கட்டணம் அமெரிக்க டொலர் 100 நீக்கப்படும்.

**(ii)** ரூஜினோ விளையாட்டு வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகையில் தற்போது வருடமொன்றுக்கான விதிப்பனவு ரூபா 200 மில்லியன் ரூபா 5 மில்லியனாக குறைக்கப்படுகின்றது.

**(iii)** கசினோ வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகையில் தற்போது வருடமொன்றுக்கான விதிப்பனவு ரூபா 200 மில்லியன் ரூபா 400 மில்லியனாக அதிகரிக்கப்படுகின்றது.

**(iv)** இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் விதிக்கப்பட்ட ஒரு தடைவ மாத்திரம் செலுத்தப்பட வேண்டியிருந்த கெசினோ கைத்தொழில் வயினைச் செலுத்தாமை அல்லது செலுத்த தவறுகை தொடர்பில் ஏதேனும் செயற்பாடொன்று தொடர்பில் அவ்வியாபாரத்தின் இயக்குநர்கள் அல்லது பங்குதாரர்களை தனிப்பட்ட முறையில் பொறுப்பின் கீழ் கொண்டுவருவதற்காக நிதிச் சட்டத்தினைத் திருத்துதல

**பொருளாதாரச் சேவைக் கட்டணம் [2006ம் ஆண்டு 13ம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணத்திற்கான திருத்தங்கள்]**

**(i)** இலாபமீட்டும் வியாபாரங்களுக்கான தற்போது வழங்கப்பட்டுள்ள வரித் தவிர்ப்பு நீக்கப்படுகின்றது.

**(ii)** தற்போதைய வருடத்திற்கான உயர்ந்தபட்ச பொறுப்பான ரூபா 120 மில்லியன் நீக்கப்படும்.

**(iii)** வரி வீதம் 0.25% வீதத்தில் இருந்து 0.5% வீதமாக அதிகரிக்கப்படும்.

**(iv)** 01 ஏப்பிரல் 2016ம் திகதியில் இருந்து ஏதேனும் வருமான வரிக்கு எதிராக எதிரீடு செய்யப்படுவதற்கான பொருளாதார சேவைக் கட்டணத்தை முன்கொண்டு செல்லல் காலமானது 5 வருடங்களில் இருந்து 3 வருடங்களாக குறைக்கப்படுகின்றது.

*[ பொருளாதார சேவைகள் கட்டணத்தின் உரிய ஏற்பாடுகள் திருத்தப்படும்.*

**மதுவரித் தீர்வை**

மதுபான தயாரிப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தீர்வை வீதங்கள் மீள்திருத்தப்படும்.

**மதுவரித் (விசேட தீர்வைகள்) தீர்வை**

சலுகைகள் மற்றும் வரிகைகள் மீள்திருத்தப்படும்.

**சுங்கத் தீர்வை**

தற்போதைய 4 அலைவரிசை இறுப்பனவுக் கட்டமைப்பான 0%, 7.5%, 15% மற்றும் 25% என்பன 0%, 15% மற்றும் 30% ஆக திருத்தப்படும்.

கீழ் வரும் விடயங்களுக்காக சுங்கத் தீர்வை திருத்தியமைக்கப்படும்:

- பீடி இலைகள், பீடி, தைத்த ஆடைகள், பாதணிகள், பியர், வைன், விஸ்கி மற்றும் எதனோல்
- விவசாய மற்றும் பாற்பண்ணை கைத்தொழிற்துறை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்,மற்றும் மீன்பிடி வலை
- விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சங்கீத உபகரணங்கள்
- உல்லாசத் தோணி, கவிகை வண்டி, கடல் சறுக்கல் உபகரணங்கள் மற்றும் உல்லாசப் பயணப் படகுகள்.

மறை பட்டியலில் உள்ள சில பொருட்கள் (தரையோடு, வெண்களி பொருட்கள் மற்றும் குளியலறை மற்றும் மலசலகூட சாதனங்கள்) ;

தென்னாசி யாவின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் தீர்வை வரி விலக்களிப்பு முதற்கட்டம் இலங்கையினால் 2015 நவம்பர் மாதம் 21 ஆந் திகதி முதல் பூரணப்படுத்தப்படவுள்ளது

தென்னாசி யாவின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில்இலங்கை2015 நவம்பர் மாதம் 21 ஆந் திகதி வரை மேற்கொள்ள வேண்டிய தீர்வை வரி விலக்களிப்பு இரண்டாம் கட்டம் 2015 நவம்பர் மாதம் 21 ஆந் திகதி முதல் பூரணப்படுத்தப்படவுள்ளது

(20 நவம்பர் 2016ம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் வீத மாற்றங்கள் குறித்துரைக்கப்பட்டு உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்).

**துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திக் கட்டணம் [ 2011ம் ஆண்டு 18ம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திக் கட்டணச் சட்டத் திருத்தங்கள்]**

**(i)** துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திக் கட்டணம் 5% வீதத்தில் இருந்து 7.5% வீதமாக அதிகரிக்கப்படும்.

(ii) உல்லாசப் பயணிகளின் செலவு செய்தலை ஊக்குவிப்பதற்கு சில மின்னியத்திரனியல் மற்றும் மின்சாரப் பொருட்களின் வரி வீதங்கள் 5% இருந்து 2.5% வரை குறைக்கப்படும்.

(iii) சில இயந்திர சாதனங்களுக்காக தற்போது பயன்பாட்டிலுள்ள 5%நீக்கப்படும்.

குறித்துரைக்கப்பட்ட வரி வீத மாற்றங்கள் தொடர்பான உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்

**சுற்றுலாஅபிவிருத்தி வரி** நீக்கப்படுகின்றது. அத்துடன், ஹோட்டகளின் வகைப்படுத்தலின் அடிப்படையில் தீர்வையொன்று 1% வீதத்தில் இருந்து 3% வீதத்திற்கு அந்த ஹோட்டல்களின் புரள்வில் விதிப்பனவு செய்யப்படும்.

**விசேட நுகர்வுப் பண்டங்கள் வரி**

உள்ளூர் கைத்தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் மற்றும் மீன் உற்பத்திகள் இறக்குமதி மீது விசேட நுகர்வுப் பண்ட வரி விதிக்கப்படும்.

சில குறிப்பிடப்பட்ட நுகர்வுப்பொருட்களுக்கான வரி வீதம் மீள்திருத்தப்படும்.

குறித்துரைக்கப்பட்ட வரி வீத மாற்றங்கள் தொடர்பான உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்

**செஸ்**

**செஸ் வரியை நீக்கல்:** பெறுமதி சேர் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக கறுவா, மிளகு, ஏலம் மற்றும் சாதிக்காய் என்பவற்றின் 'ஏற்றுமதி செஸ்' நீக்கப்படும்.

**செஸ் விதிப்பனவு:** உள்நாட்டு கைத்தொழிற்துறையை ஊக்குவிப்பதற்காக ஆபரண இறக்குமதி மீது 10% வீத செஸ் வரி விதிக்கப்படும்.

**காணி கையகப்படுத்தல்**

சில அடையாளம் காணப்பட்ட மூதலீடுகளுக்கான காணி உரிமை மாற்றல் கட்டுப்பாடு நீக்கப்படும்.

காணி குத்தகை மீதான வரி நீக்கப்படும்.

[2014ம் ஆண்டு 38ம் இலக்க காணி கையகப்படுத்தல் சட்டத்தின் உரிய ஏற்பாடுகள் திருத்தப்படும்.]

**முத்திரைத் தீர்வை [2007ம் ஆண்டு 12ம் இலக்க சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்)]**

(i) உள்நாட்டு கடன் அட்டைப் பயன்பாட்டைக் கருத்தில்கொண்டு, கடன் அட்டைப் பயன்பாடு மீதான தற்போதைய 1.5% முத்திரைத் தீர்வை (ஒவ்வொரு ரூபா 1000ற்கும் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 15/-) நீக்கப்படும்.

(ii) வெளிநாட்டில் மேற்கொள்ளப்படும் கடன் அட்டைப் பயன்பாடு மீதான முத்திரைத் தீர்வை (ஒவ்வொரு ரூபா 1000ற்கும் அல்லது அதன் பகுதிக்கு ரூபா 25/-) 2.5% வீதமாக அதிகரிக்கப்படும்.

(iii) 01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து 'பங்குச் சான்றிதழ்' விலக்களிக்கப்படும்.

*[ உரிய வரி வீத மாற்றங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் 01 ஜனவரி 2016ம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிரயோகிக்கப்படுமாறு உரிய வரி வீத மாற்றங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும்]*

**மாளிகை வரி [ 2015ம் ஆண்டின் 10ம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி VIII திருத்தப்படும்]**

(i) கூட்டாதன அலகுகள் மீது பிரயோகிக்கத்தகு மாளிகை வரி அகற்றப்படும்.

மாளிகை வரியின் முதலாம் தவணைக் கட்டணம் 31 மார்ச் 2016ம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

*[*2015ம் ஆண்டின் 10ம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி VIII திருத்தப்படும்*]*

**தொலைத்தொடர்பாடல் விதிப்பனவுகள்**

**(i)** உள்வரும் அழைப்புகள் மீதான சர்வதேச தொலைத்தொடர்பாடல் இயக்குனர்கள் விதிப்பனவுகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 9 இல் இருந்து ஐக்கிய அமெரிக்க டொலர் 12ஆக அதிகரிக்கப்படுகின்றது.

**(ii)** ஒரு தொலைதொடர்பு கோபுரமொன்றுக்கு வருடமொன்றிற்கு ரூ 50,000/-**சுற்றாடல் கட்டணம்** அறவிடப்படும்.

**(iii)** அனைத்து தொலைதொடர்பு பயன்பாட்டிலும் ஒளி அலைக் கட்டளைக் கட்டணம் 10% வீதமாக அதிகரிக்கப்படுகின்றது.

**(iv)** சர்வதேச தொலைதொடர்பு பரிவர்த்தனை அழைப்புக் கட்டணமான 2% வீத **செஸ்** கட்டணம் விலக்களிக்கப்படுகின்றது.

**(v)** கேபிள் தொலைக்காட்சிக் கட்டணம் 30% வீதமாக மீள்திருத்தப்பட்டது.

01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும்.

**ஏனைய விதிப்பனவுகளும் கட்டணங்களும்**

**(i)** பீடி தயாரிப்புக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 1,500/- இருந்து

ரூபா 5,000/-மாக அதிகரிக்கப்படும்.

**(ii)** விமான நிலையத்திலிருந்து வெளியேறுகை கட்டணம் ஐ.அமெ.டொலர் 25 இருந்து ஐ.அ.டொ 30-ஆக அதிகரிக்கப்படும்.

**(iii) xx**

கடவுச்சீட்டுக் கட்டணம் மீள்நோக்கப்படும்.

- ஒரு நாள் சேவை – வயது வந்தவர் ரூபா 10,000/-
- ஒரு நாள் சேவை – சிறுவர் - ரூபா 5,000/-
- வழமையான சேவை – வயது வந்தவர் ரூபா 3,000/-
- வழமையான சேவை – சிறுவர் ரூபா 2,000/-

01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும்.

**(iv)** இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பக் கட்டணம் ரூபா 250,000 இருந்து ரூபா 300,000மாக அதிகரிக்கப்பட்டதுடன், சார்க் (SAARC) நாடுகளுக்கான விசா கட்டணம் ஐ.அமெ.டொலர் 10 இருந்து ஐ.அ.டொ 20ஆக அதிகரிக்கப்படும்.

**(v)** வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டவர்களுக்கு புதிய வதிவிட வீசா கடடணம் அறிமுகப்படுத்தப்படும்:

- 3 வருட காலத்திற்கான வதிவிட வீசா கட்டணம் ஐ.அ.டொலர் 250,000 மில்லியன் ஆகும். மற்றும்
- நிரந்தர தங்குமிட வீசா கட்டணம் ஐ.அ.டொலர் 5 மில்லியன் ஆகும்.

**(vi)** **கம்பனி பதிவுக் கட்டணம்:** கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு கம்பனியும் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்குட்படுவதுடன், இக்கொடுப்பனவு கம்பனி பதிவாளர் நாயகத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

- தனியார் கம்பனி ரூபா 60,000
- பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனி ரூபா 500,000
- ஏனையவை ரூபா 100,000
  ( இயக்கத்தில் இல்லாத கம்பனிகள் உட்பட) மற்றும்

**(vii)** **கம்பனி பதிவுக் கட்டணம்:** 01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் தற்போதைய வீதம் மீள்திருத்தப்படும்.

**(viii)** **கம்பனியின் சுய கலைப்பு** : கம்பனியின் சுய கலைப்பின் மீது ரூபா 250,000 விதிப்பனவு மேற்கொள்ளப்படும்.

**(ix)** உரிய உள்ளூராட்சி சபைகளில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வியாபார நிறுவனங்களுக்கும் வருடாந்த பெயரளவிலான கட்டணம் ரூபா 100 விதிக்கப்படும்.

(x) **மிகைவரி:** ஏலவே 40% வீதம் வருமான வரி விதிக்கப்பட்டிருந்த புகையிலை, மதுபானம் மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்டம் வியாபாரத்தில் இருந்து வரும் இலாபத்தின் மீதான வருமான வரிப் பொறுப்பின் மீது 25% மிகைவரி 01 ஏப்பிரல் 2016ம் திகதியில் இருந்து ஆரம்பிக்கும் ஏதேனும் வரி மதிப்பாண்டில் இருந்து விதிக்கப்படும்.

(xi) **வீதி விபத்துகளுக்கான அபராதக் கட்டணம்:** வீதி விபத்துகள் தொடர்பில் வீதி விபத்துக்கு பொறுப்பான நபர் மீது ரூபா 10,000 அபராதக் கட்டணம் விதிக்கப்படும். அத்துடன் அரச உடமைக்கு (யாதேனும்) சேதம் விளைவித்திருப்பின் அதற்கு மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(xii) **வாகன மதிப்பீட்டுச் சான்றிதழ் கட்டணம்:** 01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து,நிதி வசதியளித்தலுக்கான மதிப்பீட்டுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டணம்

- முச்சக்கர வண்டி/ மோட்டார் சைக்கில் - ரூபா 5,000/-
- ஏனைய வாகனங்கள் - ரூபா 25,000/-

(xiii) **பதிவுசெய்யப்படாத வாகனங்களை 31.03.2016ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்வதற்கு:** அத்தகைய வாகனங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு கீழ்வரும் வகையில் கொடுப்பனவு செய்வதன் மூலம் பதிவுசெய்ய முடியும்.

- கார்/வேன் - ரூபா 1 மில்லியன்
- ஏனைய வாகனங்கள் - ரூபா 0.75 மில்லியன்

(xiv) **வாகன உரிமை வழங்கல் கட்டணம்:** மோட்டார் வாகன இறக்குமதியாளர் பதிவுக் கட்டணத்திற்குப் பதிலாக 01 ஜனவரி 2016ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில், கடன்வரவு ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், உள்நாட்டு ஆணையாளர் நாயகத்திற்கு கட்டணமொன்று பின்வரும் வீதங்களில் விதிக்கப்படும்.

| வகை | வாகனத்திற்கான கட்டணம் |
|---|---|
| - முச்சக்கர வண்டி/ மோட்டார் சைக்கில் | - ரூபா 2,000/- |
| - ஏனைய வாகனங்கள் | - ரூபா 15,000/- |

(xv) **இலக்கத் தகட்டை ஏலமெடுத்தல்:** தனித்துவமான வாழ்நாள் முழுவதற்குமான இலக்கத்தகட்டுக்கான ஒரே முறைக் கட்டணம் ரூபா 2.50 மில்லியன்.

(xvi) **வாகனப் புகை வரி –**

3 வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்த ஒவ்வொரு வாகனத்தின் வருடாந்த அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பித்தலின் போது பிரதேச செயலகத்தில் ரூபா 5000 செலுத்தத்தக்கதாகும்.

(xvii) **01 ஜனவரி 2016ம் திகதி முதல் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம் மீள் திருத்தப்படும்.**

**(xviii)** **தைத்த ஆடைகள் மற்றும் பாதணி மீது இறக்குமதி வரிகள்**

**(i)** ஏற்றுமதிசார் கம்பனிகள் (பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 22(1)வை பார்க்க) மூலம் உள்ளூர் சந்தைகளுக்கு விற்பனை செய்யப்படும் தைத்த ஆடைகள் மீது சுங்க வாயிலில் தற்போது விதிக்கப்படும் இணைந்த வரி துண்டொண்றிற்கு ரூபா 200/- ஆக அதிகரிக்கப்படும்.

**(ii)** ஏற்றுமதிசார் கம்பனிகள் மூலம் உள்ளூர் சந்தைகளுக்கு விற்பனை செய்யப்படும் பாதணி மீதும் அதே வீதம் பிரயோகிக்கப்படும்.

**(iii)** துணி மற்றும் வெட்டுத் துணிகளுக்கு தற்போது காணப்படும் விற்பனை வீதம் அவ்விதமே காணப்படும்.

**(iv)** ஏற்றுமதி சார் முதலீட்டுச் சபை கம்பனிகளினால் உள்ளூர் சந்தைகளுக்கான ஏற்றுமதித் தரத்திலான பொருட்களின் விற்பனவுவானது மொத்த விற்பனவில் 5% வீதத்திற்கு வரையறுக்கப்படுவதுடன், மேலே குறிப்பிடப்பட்ட வரி வீத விடயத்திற்குட்படும்.

**(xix)** விமான பயணியொருவருக்கு சர்வதேச விமானச் சீட்டு விற்பனையின் போது விமானச் சேவை மீது ஐ.அ.டொலர் 2 விதிக்கப்படும்.

**தொழில்நுட்ப தவறுகைகளைத் திருத்துதலும் மற்றும் நிர்வாக ஏற்பாடுகளும்**

2006ஆம் ஆண்டு 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம், 2002ஆம் ஆண்டு 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம், 2009ஆம் ஆண்டு 9ம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம், 2006ஆம் ஆண்டு 13ம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டம், நிதி மற்றும் நிதி (திருத்தம்) சட்டங்கள், 1988ஆம் ஆண்டு பந்தய மற்றும் சூதாட்ட வரிச் சட்டம், 2010ஆம் ஆண்டு 16ம் இலக்க தவறுகையில் உள்ள வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 2011ஆம் ஆண்டு 21ம் இலக்க தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டம், 2011ஆம் ஆண்டு 18ம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம், 2011ஆம் ஆண்டு 23ம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம், 1969ம் ஆண்டின் 1ம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டம், 2014ம் ஆண்டு 38ம் இலக்க காணி ( பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்படுத்தல்கள்) 2008ஆம் ஆண்டு 14ம் இலக்க உபாயமார்க்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டம் போன்ற சட்டங்களின் தொடர்புடைய ஏற்பாடுகளில் உள்ள தெளிவின்மைகள் மற்றும் எதிர்பாரா விளைவுகள் (மொழிபெயர்ப்பு வேறுபாடுகள் உட்பட) முதலியவற்றை சரிசெய்வதற்கும் இறைவரி நிர்வாகத்தை சீராக்கும் நோக்கிலும் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

முன்மொழிவுகளின் பயன்வலுத் தினங்கள்

வேறு வகைகளில் குறிப்பிடப்படவில்லை எனில் முன்மொழிவுகள் கீழே உள்ளவாறு செயற்படுத்தப்படும்:-

வருமான வரி மற்றும் பொருளாதாரச் சேவைகள் கட்டணம் 2016 ஏப்பிரல் 1ம் திகதியில் இருந்து பயனுறுதிபெறும்.

பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி,**பந்தயம் மற்றும் சூதாட்ட வரி** மற்றும் காணி (பாராதீனப்படுத்தல் மீதான மட்டுப்படுத்தல்கள்) 2016 ஜனவரி 1ம் திகதியில் இருந்து பயனுறுதிபெறும்.

செஸ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு, சுங்கத் தீர்வை, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) மற்றும் விசேட நுகர்வுப் பொருள் அறவீடு என்பன உடனடியாக அமுலுக்கு வரும்.